SOUTHERN LANGUAGES BOOK TRUST

ரூ. 1.95

# பொதுமக்களும் பொருளாதாரமும்

மூல ஆசிரியர்கள்

வி. கே. நரசிம்மன்
பேராசிரியர் கே. வாசுதேவன்

பிரசுரம்
அவர் இந்தியா டைரக்டரீஸ் &
பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்
53 வாலாஜா ரோட்
சென்னை 2

# பொதுமக்களும் பொருளாதாரமும்

மூல ஆசிரியர்கள்

வி. கே. நரசிம்மன்

பேராசிரியர் கே. வாசுதேவன்

மொழிபெயர்ப்பு

எம். எஸ். சிவஸ்வாமி

அவர் இந்தியா டைரெக்டரீஸ் அண்ட் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்
சென்னை - 2.

TAMIL
First Edition : 5,000
*November, 1960.*

# PODUMAKKALUM PORULADARAMUM

[*Translated Version of*—A Layman's Introduction to Economics]

*By*

**V. K. Narasimhan & K. Vasudevan**

*Translated by*

**M. S. Sivaswami**

**PRICE Rs. 1·95 nP**

PUBLISHED UNDER THE AUSPICES OF THE
SOUTHERN LANGUAGES BOOK TRUST,
MADRAS.

TAMIL: 81

*Published By*

OUR INDIA DIRECTORIES & PUBLICATIONS
PRIVATE LTD.,

**53, Wallajah Road :: Madras-2.**

Metropolitan Printers, Madras-2.

# அணிந்துரை

டாக்டர் ஏ. எல். முதலியார்,

துணைவேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்

தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்டு, தன்னுடைய முன் அனுபவங்களாலும், பொது மக்களைக் கவர்வனவாயும் அதனோடு அவர்களுக்கு நற்பயன் அளிப்பனவாயும் உள்ள நூல்களை வெளியிட்டதால் பெற்ற அறிவின் திறத்தாலும், இரண்டாம் வரிசை நூல்களை வெளியிடத் தலைப்பட்டுள்ளது. அவற்றைத் திராவிட மொழிகள் அனைத்திலும் ஆக்கி அளிக்கவும் அது கருதுகின்றது. இந்த நூல்களெல்லாம் மிக்க கவனத்தோடும், படிப்பவர்களின் பல திறப்பட்ட சுவைகளுக்கு ஏற்பவும் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளன. வாழ்க்கையின் பலவகைக் கூறுபாடுகளையும் பற்றிய பலபல பொருள்கள் அடங்கிய நூல்களை வெளியிட இந்தப் புத்தக டிரஸ்டு இயற்கையாகவே ஈடுபடத் தொடங்கியுள்ளது. இந்தியப் பெருந் தலைவர்களுள் சிலருடைய வாழ்க்கை வரலாறுகளையும் அவர்கள் சாதித்தவைகளையும் விரித்துரைப்பதற்கென ஒரு பகுதியும் இதில் தனியாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. நாட்டின் நலன்களில் அக்கறைகொண்டு, மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடவும், நாட்டின் மதிப்பையும் செல்வாக்கையும் வலுப்படுத்தவும் அரும்பணி ஆற்றிய இப்பெருந் தலைவர்களுக்குத் தாங்கள் எவ்வளவு கடமைப் பட்டவர்கள் என்பதை வருங்கால மக்கள் அறிந்து கொள்வது நல்லது.

தத்துவம், சமயம், விஞ்ஞானம், பேரிலக்கியங்கள் பொருளாதாரம் என்பனவும் இவ் வரிசையில் இடம் பெற்றுள்ளன. சிறு கதைகளுக்கும் பண்டையக் கலைகளைப் பொது மக்க

ளிடையே பரப்புவதற்கும் இதில் இடம் வகுக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிந்துகொள்வது நலமாகும். நடன நாடகக் கலைகள், சிற்ப சாஸ்திரங்கள், தொல் பொருள் ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மைகள், என்றென்றும் வியத் தகு பொருள்களாய் விளங்கும் தென்னிந்தியப் பெருங் கோயில்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவையும் இதில் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்போது வெளியிடப்பெறும் இந்த நூல் வரிசை படிப்பவர்க்குச் சுவையூட்டும் பல்வேறு வகைப்பட்ட பொருள்களை வழங்கும் என்பது என் துணிபு. பொது முறைக் கல்விக்குரிய பொருள்களைக் கொண்ட இத்தகைய வெளியீடு கள், மேன்மேலும் பெருகும் பெருந்தொகையின ராகிய வாசகர்களைக் கவர்ந்து கொள்ளும் என்ப தில் ஐயமில்லை.

இந்த நூல் வெளியீட்டுத் திட்டத்தில், தென்னிந்திய மொழி நூல்களுள் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மொழி பெயர்க்கும் அம்சம், பாராட் டத் தகுதியுடையதாகும். இவ் வரிசை முற்றுப் பெற்றதும், எழுதப் படிக்க மட்டும் தெரிந்த ஏராளமான மக்களைத் தங்கள் அறிவைப் பெருக் கிக்கொள்ள உண்மையான ஆர்வம் கொள்ளும் படி செய்து, அவர்களைப் பழக்கமாகப் படித்து வரும் தொகையினருடன் இணைத்து, இவ்வாற் றால் அவர்கள் தாங்களாகவே மிக்க திறம் உடையவர்களாவதற்கு இவைகள் உறுதுணை ஆகும் என்பது என் துணிபு. தென்னிந்திய மொழிகளின் புத்தக டிரஸ்டு எந்த உயரிய நோக்கங்களோடு தொடங்கப் பெற்றதோ அந் நோக்கங்கள் அஃது ஆற்றிவரும் அரும் பணியால் மேன்மேலும் நிறைவேறி வரும் என்று நான் நம்புகிறேன்.

ஏ. எல். முதலியார்,

சென்னை, துணைவேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்.

# முகவுரை

பரந்த நமது பாரத நாட்டின் பொருளாதாரப் பிரச்னைகள் பல; சமீப காலத்தில் ஐந்தாண்டுத் திட்டங்களின் வேகத்தினுல், பொருளாதாரத் துறையில் முன்னேற்றங்கள் மிகவேகமாகவே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசாங்கமும் மக்களும் இணைந்து முன்னேற்றத்திற்காகத் தீவிர முயற்சிகள் செய்து பணிகளாற்றி வந்தாலும் இன்னும் செய்யவேண்டியவை கணிச மாகவே இருக்கின்றன. இம்முயற்சிகள் அனைத்தும் முழுப் பலனை அளிக்க வேண்டுமானுல், இம்முயற்சிகள் குறிப்பிட்ட லட்சியங்களை அடையப் பூரணமாக உபயோகப்பட வேண்டு மானுல், சாதாரணமக்களுக்குப் பொருளாதாரப் பிரச்னைகளின் தன்மையைப் பற்றியும், அபிவிருத்தித் துறையில் மேற்கொள் ளப்படும் முயற்சிகளின் தன்மையைப் பற்றியும் அடிப்படை யான அறிவு இருக்கவேண்டியது அவசியம். இத்தகைய ஆதார அறிவு இல்லாவிட்டாலோ, அல்லது அவ்வப்போது மாறிக் கொண்டே வரும் சூழ்நிலை, சந்தர்ப்பங்களை உணர்ந்து கொள் ளும் சக்தி இல்லாவிட்டாலோ அவர்களுடைய ஒத்துழைப்பைப் பூரணமாகப் பெற முடியாது. முயற்சிகளில் வெற்றி காண்பதி லும் காலதாமதமாகும். பொருளாதாரப் பிரச்னைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளுவதற்குப் பொருளாதார சாஸ்திரத்தின் அடிப் படைத் தத்துவங்களை நன்ருகப் புரிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.

திரு. வி. கே. நரசிம்மனும், பேராசிரியர் கே. வாசு தேவனும் இந்தச் சிறிய புத்தகத்தில், நாட்டு மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், எளிய நடையில் பொருளாதார சாஸ்திரத்தின் தத்துவங்களையும் அடிப்படைக் கருத்துக்களையும் விளக்கியிருக்கிருர்கள். இதை அவர்கள் மிகவும் வெற்றிகர மாகவே செய்திருப்பதைக் காண நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பொருளியல் இப்போதெல்லாம் சிக்கல் மிகுந்த ஒரு கலையாக வளர்ந்து விட்டது. இதை எளிய நடையில், குறுகிய நூலில், பாமரர்களும் புரியும்படி விளக்குவது எளிதான காரியமல்ல. ஆனால் இந் நூலாசிரியர்களிருவரும் எளிய முறையில் தெளிவுடன் எடுத்துக் கூறுவதில் நல்ல திறமை காட்டியுள்ளார்கள். பொருளியலைக் கற்க விரும்பும் ஒவ்வொரு மாணவனும், இதைப் படிக்கும் சாதாரணமக்களும், இந்நூலாசிரியர்கள் ஒரு கடினமான முயற்சியை வெற்றிகரமாக முடித்திருப்பதைக்கண்டு அவர்களைப் பாராட்டுவார்கள். பொருளியல் அறிவைப் பொது மக்களுக்கு அளிக்க எடுத்துக் கொண்ட இத்தனை முயற்சிக்கு அவர்களுக்கு நன்றி செலுத்த மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள். தென்மொழிகள் புத்தகடிரஸ்டு இவ்வரிய நூலைத் தென்னிந்திய மொழிகளில் மொழிபெயர்த்துப் பெருவாரியான மக்களுக்கு, முக்கியமாகக் கிராமப் புறங்களில், வழங்க ஏற்பாடு செய்திருப்பதனால் இந் நூலின் பயன் பன்மடங்கு அதிகரிக்கிறது. இதைச் சாத்தியமாகும்படிச் செய்ததற்கு தென்மொழிப் புத்தகடிரஸ்டுக்கு நம்நாட்டு மக்களின் நன்றி உரித்தாகும்.

இந்தப் புத்தகத்தைப் படித்தபின் அதில் விளக்கியுள்ள தத்துவங்களைப் பற்றி அதிகமான விஷயங்களை அறிய வேண்டுமென்ற ஆவல் வாசகர்களிடையே உண்டாகும் என்பது என் மனமார்ந்த நம்பிக்கை.

**எம். எச். கோபால்**

சென்னைப் பல்கலைக் கழகம்
*15—11—1960*

பொருளியல் பேராசிரியர்
போர்ட் ஸ்தாபனம்

# நூலாசிரியர்களின் முகவுரை

தென்னாட்டிலுள்ள சாதாரண மக்களுக்குப் பயன் படுவதற்காகப் "பொது மக்களும் பொருளாதாரமும்" என்னும் இச்சிறு நூலை எழுதி யளிக்கவேண்டுமென்று எங்களுக்கு வாய்ப்பு அளித்ததற்கு தென்மொழிகள் புத்தக டிரஸ்டுக்கு நாங்கள் முதன் முதலில் நன்றி செலுத்த வேண்டும். பொருளாதாரச் சம்பந்தமான விஷயங்கள் மிகவும் சிக்கல் மிகுந்து விரிவாக வளர்ந்துவிட்ட இக்காலத்தில் இம்மாதிரி ஒரு பணியை மேற்கொண்டு நிறைவேற்றி வைப்பது சுலபமல்ல. எனினும் சாதாரண மக்களுக்குப் பொருளாதாரத்தைப்பற்றிய சாமானிய அறிவும், தொழில் துறை, மூலதனம் இவை சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள் இயங்கும் விதமும் அதன் அறிவும் ஓரளவுக்கேனும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். அப்போதுதான் பொருளாதாரக் கொள்கைகளையும், திட்டங்களையும், நடைமுறை செயல்களையும் நடவடிக்கைகளையும் ஊக்கத்துடன் கவனிக்கவும் புரிந்துகொள்ளவும் அவர்களால் முடியும். இத் தேவையைப் பூர்த்தி செய்விக்க இச்சிறு நூலில் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு நாங்கள் முயன்றிருக்கிறோம். எவ்வளவு தூரம் நாங்கள் இம்முயற்சியில் வெற்றியடைந்துள்ளோம் என்பதை வாசகர்களே முடிவு செய்யவேண்டும். இவ்விஷயங்களைப்பற்றி மேலும் விரிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற உற்சாகத்தை வாசகர்களிடையே

இந்நூல் உண்டாக்கினுலே எங்களுடைய நோக்கம் நிறைவேறியது என்று திருப்தியடைவோம்.

இந்நூலை மனமுவந்து பாராட்டி முன்னுரை எழுதியளித்த டாக்டர் எம். எச். கோபால் அவர்களுக்கு எங்களுடைய நன்றி உரியது.

இந்நூலை மிகவும் நேர்த்தியாகவும் தெளிவாகவும் மொழிபெயர்ப்பு செய்த திரு சிவஸ்வாமி அவர்களுக்கு எங்களுடைய நன்றியைக் கூறுகிறோம்.

வி. கே. நரசிம்மன்.
கே. வாசுதேவன்.

# மொழிபெயர்ப்பு ஆசிரியரின் முன்னுரை

பொருளியல் தத்துவங்களைப் பொது மக்களுக்கு விளக்கி வைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதப் பட்டது இந்நூல். கல்லூரி மாணவர்களுக்கும், முக்கிய மாகப் புகு முக வகுப்பு மாணவர்களுக்கும், பயன்படக் கூடியதாயினும் சாதாரண மக்களையே உத்தேசித்து எழுதப்பட்டுள்ளது. ஆகவே, ஆங்கிலத்தில் எழுதப்பட்ட மூலத்தை யொட்டியே மொழிபெயர்ப்பு இருக்கவேண்டு மென்ற நிர்ப்பந்தத்துக்கிடையிலும், சாதாரண மக்களுக்குப் புரியவேண்டும் என்பதற்காக ஆங்காங்கே விரிவுபடுத்தவே மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. வழக்கிலுள்ள சாதாரண பதங்களே கூடுமான வரையில் உபயோகிக்கப் பட்டுள்ளன, எளிய நடையில் கருத்துச் சிதைவு இல்லாமல். மொழிபெயர்ப்பு என்று தோன்ருதபடி முதல் நூல் போலவே இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் மொழிபெயர்ப்பு ஆக்கப்பட்டிருக்கிறது. இதில் எவ்வளவு தூரம் வெற்றி கிடைத்துள்ளது என்பதை வாசகர்கள் தான் முடிவு செய்யவேண்டும்.

ஆங்கில மொழி அறிவு இல்லாதவர்களையே முக்கிய மாகக் கருத்தில் வைத்து மொழிபெயர்ப்பு செய்யப்பட் டிருப்பதால், கலைச்சொற்களின் உபயோகத்திலும் பொது வழக்கை அனுசரித்தே அவை கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, "உற்பத்திக் காரணி"களை உற்பத்தி சாதனங்கள் என்றும், "சந்தை" அல்லது "பேரச்சாலை" என்பதை "மார்க்கெட்" என்றும், பொருள் வழங்குதலைச் "சப்ளை" என்றும் மொழிபெயர்ப்பில் குறிக்கப்பட்டிருக் கின்றன. "சப்ளை" என்பதற்கு மாற்றுப்பதம் கொடுத் தாலும் கருத்தை இந்தப் பதம் விளக்கிவைப்பதுபோல்

அவ்வளவு எளிமையாக மற்ருெரு பதம் விளக்கிவைக்கக் கூடுமா என்பது சந்தேகம். அதேபோல "பாடு" என்னும் பதம் "உழைப்பை"யும், "உழைப்புச் சக்தி"யையும் உணர்த்துகிறதென்ருலும், எளிதில் புரியக்கூடியது என்ப தற்காக "உழைப்பு" என்ற சொல்லே கையாளப்பட் டிருக்கிறது. "உற்பத்திப் பொருள்கள்" கூட "விலே பொருள்கள்", அல்லது "பண்டங்கள்", அல்லது "பொருள் கள்", என்று சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உபயோகிக்கப் பட்டுள்ளன. "சரக்கு" என்னும் சொல் வியாபார ரீதியில் வழக்கில் இருந்தாலும் சிற்சில சந்தர்ப்பங்களில் இதா பதங்களும் கையாளப்பட்டுள்ளன. சில ஆங்கில வார்த்தை களுக்குத் திருப்திகரமான தமிழ்ப் பதம் கிடைக்காத இடங்களில் ஆங்கில பதமே கொடுக்கப்பட்டுள்ளது. "டொடேலிடேரியன்" முறைகளுக்கு "ஏகக்கட்சி நிர்வாக முறைகள்" என்பது பொதுவாக வழக்கிலிருந்தாலும், ஆங்கிலப் பதமே கையாளப்பட்டிருக்கிறது. தெரிந்தே இவ்விதம் கொடுக்கப்பட்டிருப்பதால் இதை ஒரு குறை என்று வாசகர்கள் கருதமாட்டார்கள் என்று எண்ணு கிறேன். இதுவரையில் அதிகமான புத்தகங்கள் வெளி வராத ஒரு துறையில் பொது மக்களின் சாமானிய அறிவை வளர்ப்பதற்காக இந்நூல் எழுதப்பட்டதே தவிர இது ஒரு இலக்கிய நூல் அல்ல என்பதை நினைவில் இருத்தி இதைப் படிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள் கிறேன். கலைச்சொற்களின் அறிவு வளர வளர, வழக் கிலும் அவை பரவி, தினசரி உபயோகத்தில் பழக்கப்படும் ஒரு நிலை வரத்தான் வேண்டும். அந்நிலையில் இப்போது உபயோகிக்கப்பட்டுள்ள பல பதங்களை மாற்றிக்கொள்ள வேண்டுமானல் மாற்றிவிடலாம். அல்லது இதே பதங்கள் நிலைத்துவிடவும் கூடும்.

சென்னை–17. எம். எஸ். சிவஸ்வாமி.

அத்தியாயம்—1.

# பொருளியலின் நோக்கங்கள்

## பொருளியலின் முக்கியத்வம்

இக்கால உலகவாழ்வில் பொருளாதார சரஸ்திரத்தைப் பற்றிய அறிவு சாமானிய அறிவும் ஆற்றலுமுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் மிகவும் இன்றியமையாததாக ஆகிவிட்டது. இதற்குப் பல காரணங் கள் கூறலாம். எல்லாவற்றையும் விட முக்கியமானது நம்முடைய வாழ்க்கை இப்போதெல்லாம் சிக்கல் மிகுந்ததாக இருப்பதே. நாம் வாழும் உலகில் எல்லா அம்சங்களும் அதிகமான அளவுக்கு ஒன்ருெடொன்று இணைந்து சார்புள்ளதாகவே இருக்கின்றன, உலகத்தின் ஒரு மூலையிலுள்ள இந்தோனிஷியா, மெக்ஸிகோ போன்ற சின்னஞ்சிறு நாடுகளில் நிகழும் சம்பவங்கள் கூட மற்றப் பகுதிகளில் வசிக்கும் பல மக்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கின்றன. உதாரணமாக, போர்க்காலத்திலும், போருக்குப் பிந்திய ஆண்டுகளிலும் இந்தோனிஷியாவிலிருந்து சாதாரணமாகக் கிடைத்துக் கொண்டிருந்த மிளகு அமெரிக்காவுக்குக் கிடைக்கவில்லை. இந்தத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க இந்தியாவிலிருந்து மிளகு வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதன் விளைவாக அமெரிக்காவில் இந்திய மிளகின் விலை யுத்த காலத்திற்கு முன்பு இருந்த விலையைக் காட்டிலும் நாற்பது மடங்கு அதிகமாக

உயர்ந்துவிட்டது. இந்தோனிஷியாவிலிருந்து பழையபடி மிளகு கிடைக்க ஆரம்பித்ததும் இந்திய மிளகின் விலை குறைய ஆரம்பித்தது.

பொருளாதாரத் துறையில் இவ்வாறு வெவ்வேறு நாடுகள் பிணைக்கப்பட்டுள்ள தொடர்புகள் மட்டுமே நமது வாழ்க்கை சிக்கல் மிகுந்ததாக ஆகிவிட்டதற்குக் காரணம் அல்ல. விஞ்ஞான அறிவும், தொழில் நுட்ப வளர்ச்சியும் நவீன காலத்தில் அமோகமாக வளர்ச்சியடைந்து விட்டன. இன்னும் வளர்ந்து கொண்டே போகின்றன. இவற்றின் விளைவாகப்பொருள்களின் உற்பத்தியிலும், மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதிலும் புதுப்புது மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இவையெல்லாம் மக்களின் வாழ்க்கையில் மாறுதல்களை உண்டாக்குகின்றன இம்மாதிரி மாறுதல்கள் உலகத்தில் ஒவ்வொரு நாட்டிலும் நிகழ்ந்து கொண் டிருக்கின்றன. அமெரிக்காவையும், ஐரோப்பிய நாடுகளையும் போன்ற சில நாடுகளில் இம்மாறுதல்கள் வெகு வேகமாக நிகழ்கின்றன. இந்தியாவிலும் மற்ற ஆசிய, ஆப்பிரிக்கா நாடுகளிலும் இவை சற்று மெதுவாகவே நடை பெறுகின்றன. வேகமாகவோ, தாமதமாகவோ, மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன என்பதுதான் கவனிக்கத்தக்கது. நிலக்கரி, மின்சாரம் போன்ற புது சக்தி சாதனங்கள்; ரெயில், மோட்டார், லாரி, பஸ் போன்ற புது முறைப் போக்கு வரத்துச் சாதனங்கள்; நுட்பம் மிகுந்த யந்திர சாதனங்களைக் கொண்டுப் புதுப்புது முறைகளில் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்புகள்; — இவையனைத்தும் உலகமனைத்திலும் மக்களின் வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொண்டே வருகின்றன. இவ்விதத் தொழில் நுட்ப மாறுதல்களினால் பொருளாதார அமைப்புகளும், அரசியல் அமைப்புகளும் அவற்றின் முறைகளுங்கூட மாறுதலடைந்து வருகின்றன.

சாமானிய அறிவும் விவேகமும் உள்ள எந்தப் பிரஜையும் தன்னுடைய நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், வெளி உலக நடப்புகளையும் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால், பொருளாதாரத் துறையில் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களைப் பற்றிய அறிவும், பொருளாதார விவகாரங்கள் எந்தத் தத்துவரீதியில், எந்த அடிப்படையில் நிகழுகின்றன என்ற அறிவும், தன்னைச் சுற்றியுள்ளப் பொருளாதாரச் சூழ்நிலை எவ்வாறு இயங்குகிறது என்ற அறிவும் அவசியம் வேண்டும்.

இந்தியப் பிரஜைகளாகிய நமக்கு இவ்விதப் பொருளியல் அறிவைப் பெருக்கிக் கொள்ளுவதற்கு மேலே கூறிய பொதுக் காரணங்களைத் தவிர, அதிகப் படியான ஒரு காரணம் உண்டு. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரையில் நம்நாடு சுதந்திர நாடாக இருக்கவில்லை. சுதந்திரத்திற்காகப் போராடிய தேசத்தலைவர்களெல்லாம் அரசியல் சுதந்திரமில்லாமல் நாட்டின் பொருளாதார முன்னேற்றமோ, மக்களின் வாழ்க்கையில் வளமோ ஏற்படாதென்று அடிக்கடி வற்புறுத்தி வந்தது நமக்குத் தெரிந்ததே. இப்போது நமக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டது. ஜனநாயக முறையில் நம்முடைய அரசியலையும் நாம் வகுத்துக் கொண்டு விட்டோம். நாட்டின் செல்வத்தை அபிவிருத்திசெய்து, தொழிலை வளர்த்து, மக்களின் வறுமையைப் போக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டிய நடவடிக்கைகளில் நாம் இப்போது ஈடுபட்டிருக்கிறோம். ஆகையால் இத்துறையில் நமது அறிவு வளர வேண்டும். இதில் மற்றொரு விசேஷமும் உண்டு. இதர நாடுகளில் பொருளியல் அறிவு வளர ஆரம்பித்த காலத்தில், இத்துறையில் என்ன தத்துவங்கள் எந்த அடிப்படையில் இயங்குகின்றன என்று விளக்கி, தினசரி நடப்புகளையும் இத்தத்துவ ரீதியில் விளக்கி வைத்தால் போதும் என்ற நிலைமை இருந்தது. அப்படித்தான் மேல் நாடுகளில்

பொருளாதார சாஸ்திரமே உருக்கொண்டது. ஆனால் நமது பாரதத்தில் இப்போது வாழும் நமக்கு குறிப்பிட்ட ஒரு நிலையில், குறித்த ஒரு காலத்தில் செயல்படும் பொருளாதாரத்தத்துவங்களை மட்டும் புரிந்து கொண்டால் போதாது. நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்கு எந்த மாதிரி முறைகளை மேற்கொள்ளவேண்டும், எம்மாதிரி தத்துவ அடிப்படையில் நடவடிக்கைகள் இருக்கவேண்டும், என்பதையும் கூட நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சமீபகாலத்தில் அயல் நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் பொருளாதார வளர்ச்சி, அதன் தத்துவங்கள், அதன் முறைகள் முதலிய விஷயங்களைப் பற்றி விரிவாக ஆராயத் தொடங்கியுள்ளார்கள். இவ்வாராய்ச்சியின் ஒரு அம்சம்தான் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் தங்களுடைய செல்வத்தைப் பின் தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஏற்றவாறு பயன்படுத்தலாம் என்பது. உண்மையில், யுத்த பிற்காலத்தில் ஐக்கிய நாடுகள் போன்ற ஸ்தாபனமும், அதனுடன் சம்பந்தப்பட்டப் பல்வேறு தனிஸ்தாபனங்களும் பொருளாதார முன்னேற்ற மடையாத பல நாடுகளுக்கு நிதிவசதிகளையும் தொழில் நுட்ப அறிவையும் மிகவிரிவான முறையில் வழங்கி அவர்கள் அபிவிருத்தியைப் பெருக்குவதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றன. இத்துறையில் ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சோவியத் ருஷ்யா போன்ற முன்னேற்ற நாடுகள் காட்டும் ஆர்வம் மிகவும் போற்றுதற்குரியது. சமீப காலத்தில் உலகப் பொருளாதாரத் துறையில் காணப்படும் இந்த அம்சம் இந்தியாவைப் போன்ற பின்தங்கிய நாடுகளுக்கு மிகவும் உற்சாக மூட்டக் கூடியது.

### பொருளாதார அபிவிருத்திக்கான கரணங்கள்

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் எல்லாம் முடிவில் பார்க்கப் போனால் அந்த

நாட்டின் சொந்த முயற்சியினுல் மட்டுமே நடைபெற வேண்டும் என்பது விளங்கும். அயல் உதவி கிடைத்தாலும்; அதைப் பூரணமாகப் பயனுள்ள தாகச் செய்து கொள்ள சொந்த முயற்சிகள் அவசியம். மக்கள் மேற்கொள்ளும் சொந்த முயற்சிகளும் நாட்டின் இயற்கை வளங்களையும் அமைப்புகளையும் பொறுத்திருக்கின்றன, ஒரு நாட்டின் முன்னேற்றத்தைத் தூண்டிவிடக் கூடிய அம்சங்கள் யாவை? முன்னேற்றத்துக்குத் தடை போலிருக்கும் அம்சங்கள் யாவை? என்று ஆராயப்புகின் ஒரு நாட்டின் இயற்கைச் செல்வங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைப் பொறுத்தே அந்நாட்டின் அபிவிருத்தி ஏற்படும் என்பது விளங்கும். உதாரணமாக, அந்நாட்டின் நிலப் பரப்பு எவ்வளவு இப்பரப்பில் உபயோகப்படக் கூடிய விஸ்தீரணம் எவ்வளவு, ஆறுகள், காடுகள், தாதுப் பொருள்கள் முதலியன எவ்வளவு இருக்கின்றன—இவையெல்லாம் முக்கியமான அம்சங்கள். பெர்ஷியவிரிகுடா ஓரத்திலுள்ள குவைட் (Kuwait) என்ற பிராந்தியம், பரப்பில் மிகச் சிறியதாக இருந்தாலும் அம்மக்களின் தேசீய வருமானமும் வாழ்க்கைத் தரமும் மிகவும் உயர்ந்திருக்கின்றன. அதற்குக் காரணம் உலக திலேயே வேறு எங்கும் காணப்படாத எண்ணெய் ஊற்றுகள் அங்கே இருப்பது. தான். இது அந்நாடு பெற்றுள்ள இயற்கைச் செல்வம் பொருளாதாரத்தில் இன்றியமையாத இந்த இயற்கை செல்வத்தை முதல் காரணமாகப் பொருளியல் நூல்கள் கூறுகின்றன. ''நிலம்,'' ''நிலவளம்,'' என்று பொதுப் படையாக இது குறிக்கப்படும். ஆனுல் இதில் ஒரு நாட்டின் இயற்கைச் செல்வங்கள் எல்லாமே அடங்கியுள்ளன.

நிலத்தைப் போலவே ஒரு நாட்டின் உழைக்கும் மக்களின் எண்ணிக்கையும் உழைப்பின் தரமும் முக்கியமான மற்ருெரு உபகரணமாகும். இதைப் பொருளியல் நூல்

களில் சுருக்கமாக "உழைப்பு," என்ற தலைப்பில் பாகுபாடு செய்யப்பட்டிருக்கும். மற்றொரு உபகரணம் "மூலதனம்" தொழிலில் முதலீடு செய்யப்படும் நிதியும் அத்தொழில் அமைப்பிற்கு அவசியமான கட்டிடங்கள், யந்திரசா தனங்கள், யந்திர சக்தி நிலையங்கள், ரெயில்வே அமைப்பு கள், ரஸ்தாக்கள் முதலிய யாவும் "மூலதனம்" என்ற உபகரணத்தில் அடங்கியவை. இவ்வாறு தனித்தனியே உள்ள நிலவளம் உழைப்புச் செல்வம், மூலதனம் ஆகிய மூன்று உபகரணங்களையும் ஒன்று சேர்த்துப் பயனுள்ள பல்வேறு தொழில்களில் அவற்றை ஈடுபடுத்தி, தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து இயக்கும் தொழில் அறிவும் ஆற்றலும் சிலருக்குத்தான் உண்டு. தனித்து இருக்கும் போது பயனற்றதாக உள்ள செல்வத்தை இணைத்துப் பயனுள்ளதாகச் செய்யும் ஆற்றலைத் "தொழில் ஆர்வம்" என்று நான்காவது உபகரணமாக நூல்கள் விவரிக்கின்றன. ஆகவே உற்பத்தி முறையில் நிலவளம், உழைப்புச் செல லும், மூலதனம், இணைப்பு ஆர்வம் ஆகிய இந்நான்கு சாதனங்களும் முக்கியமான உபகாரணங்களாகக் கூறப்படு கின்றன. இந்நான்கு உபகரணங்களையும் நுட்பமாக ஆராய்ந்து ஒரு நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது, உபகரணங்களில் மாறுதல்கள் ஏன் இவ் விதம் நிகழுகின்றன, அம்மாறுதல்களினால் உற்பத்தி எவ் வாறு பாதிக்கப்படுகிறது, அவற்றை எப்படிக் கட்டுப் படுத்தி இவ்வுபகாரணங்களைச் சிக்கனமாக உபயோகப் படுத்திப் பெரும் பயன் அடையலாம் என்பதை யெல்லாம் நிபுணர்கள் ஆராய்ந்து முடிவு கூறுகின்றனர்.

## தேர்வுதான் பொருளாதாரத்தில் அடிப்படைப் பிரச்னை

உற்பத்திக்கு இன்றியமையாத உபகரணங்களைப் பற் றிச் சொல்லும் போதே இந்நான்கில் ஏதேனும் ஒன்றோ, அல்லது எல்லாமோ, போதிய அளவு ஒரு நாட்டில்

கிடைக்கா விட்டால் என்ன செய்வது என்ற கேள்வி எழு கிறது. பொருளாதார சாஸ்திரத்திலேயே இது ஒரு முதற்கேள்வி; ஆரம்பப் பிரச்னை என்று கூடச் சொல்ல லாம். எந்த ஒரு பொருளையும் உபயோகிக்கும் போது இரண்டு விஷயங்கள் அதைப் பற்றிப் பொதுவாகக் கவனிக் கப்படுகின்றன. என்ன முயற்சி செய்தாலும் அப்பொருளின் அளவையோ எண்ணிக்கையையோ அதிகரிக்க முடியுமா முடியாதா என்பது ஒன்று. உதாரணமாக நிலவளம். நிலப் பரப்பைத் தேவைக்குத் தக்கவாறு அதிகரிக்க முடி யாது. உள்ளதைக் கொண்டே திருப்தியடைய வேண்டும். ஆனால் உள்ள நிலப்பரப்பைப் பல்வேறு காரியங்களுக்குப் பயன் படுத்தலாம். நெற்பயிர் செய்யலாம்; கரும்புச் சாகுபடியும் செய்யலாம்; புகையிலையும் வேண்டுமானல் பயிரிடலாம். மாறுபட்ட உபயோகங்களுக்குப் பயன் படுத்தக் கூடிய நிலத்தில் என்ன பயிர் செய்வது, ஏன் அதைத்தான் செய்யவேண்டும் என்பதை எப்படி நிச்சயிப்பது? பொருளாதார ரீதியில் ஒரு வகையில் உபயோகிப்பது நல்லது என்று தோன்றக்கூடும். பொருளாதாரக் காரணம் ஒன்று. மற்றக் காரணங்கள் மாறுபட்ட முடிவைக் குறிக்கலாம். கரும்பு பயிரிட் டால் அதிக வருமானம் கிடைக்கலாம் என்று பொருளா தார ரீதியில் காரணம் காட்டினாலும், மக்கள் உணவு முக் கியமானதால் நெற்பயிர் சாகுபடியைத்தான் மேற் கொள்ள வேண்டுமென்று இதர காரணங்களால் நிச்சயிக்கக்கூடும். அதே போல் மூலதனத்தை முதலீடு செய்வதிலும் உழைப் புச் சக்தியைத் தொழிலில் ஈடுபடுத்துவதிலும், மாறுபட்ட இனங்கள் காணப்படும்போது, இவற்றில் எந்த இனத்தைத் தேர்ந்தெடுப்பது என்பது முக்கியமாகிறது. பொருளா தார நிபுணர்கள் பொருளாதார ரீதியில், இப்படிப்பட்ட மாற்று உபயோகங்களுள்ள சமயங்களில் மக்கள் சாதா ரணமாக எவ்வாறு எந்தக் காரணத்தைக் கொண்டு தேர்வு

செய்கின்றனர் என்பதைப் பரிசீலனை செய்து கூறுகின்றனர்.

## பொருளியலின் இலக்கணம்

மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்விப்பதற்காக மேற் கொள்ளப்படும் நடவடிக்கையைப் பொருளாதார ரீதியில் நிகழும் ஒரு நடவடிக்கை எனலாம். மனிதனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்விப்பதற்காகவே பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பலவித சாதானங்கள் பராமரிக்கப்படுவதும், வழங்கப்படுவதும் அவற்றை விரும்பிப் பய்ன் படுத்திக் கொள்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே பொருளாதார நடவடிக்கைகள் ஏற்பட்டன என்று கூறுவது பொருத்தமே ஆகும். மனிதர்களின் பல்வேறு தேவைகளின் தன்மை எத்தன்மையது என்பதையும் அவற்றை மக்கள் எவ்வாறு பூர்த்தி செய்து கொள்ள முற்படுகின்றனர் என்பதையும் ஆராய்கிறது பொருளியல் என்னும் பொருளாதார சாஸ்திரம்.

தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதைப் பற்றிச் சொல்லும் போது எல்லோருடைய மனத்திலும் "பணத்தைக் கொண்டு, அல்லது அவரவர் சம்பாதித்த பொருளைக் கொண்டு பூர்த்தி செய்து கொள்ளுகின்றனர்", என்ற எண்ணம் எழுகின்றதல்லவா? இதிலிருந்து தான் மக்கள் தங்கள் வருவாயை எவ்விதம் சம்பாதிக்கிறார்கள், அதை எவ்வாறு, எவ்வினங்களில் செலவு செய்கின்றனர், என்ற ஆராய்ச்சி ஆரம்பிக்கிறது. இதைத் தொடர்ந்து, தனி நபருடைய வருமானத்திலிருந்து தேசிய வருமானத்தின்—ஆதாவது நாடு முழுவதிலும்; குறிப்பிட்ட ஒரு காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், சேவை சாதனங்கள் ஆகியவற்றின் பண மதிப்பின்—அளவைக் கணக்கிடுகின்றனர். தேசிய வருமானத்தை நிர்ணயம் செய்வதில், எங்

தெந்த உபகரணங்கள் எந்த அளவுக்குத் தேசிய வருமானத் திற்கு வகை செய்திருக்கின்றன; இவ் வருமானத்தின் பலனை எந்த அளவில் மக்களின் பலதரப்பட்ட பிரிவினர் கள் எவ்வாறு அடைகின்றனர் என்ற ஆராய்ச்சிகளும் மேற் கொள்ளப்படுகின்றன; இதன் மூலம் உழைப்பாளி களுக்குக் கூலி விகிதங்கள், சம்பளங்கள், முதலுக்கு வட்டி, தொழில் லாபங்கள், தொழில் வருவாயில் ஒவ் வொரு நாட்டிலும் பெரும் பங்கைப் பகிர்ந்து கொள்ளும் அந்தந்த நாட்டு அரசாங்க அலுவல்கள், முதலிய பல விஷ யங்கள் ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாக விளக்கப் படுகின்றன.

மேலே சொல்லியவற்றிலிருந்து பொருளியல் என்றும் பொருளாதார சத்திரத்தின் நோக்கம் தற்கால சமூகத்தின் பொருளாதார அமைப்பில் உற்பத்திக்கும் வினியோகத்திற் கும் சம்பந்தப்பட்ட எல்லாவித நடவடிக்கைகளையும் விளக் குவதே என்பது தெளிவாகும். உற்பத்தி, வினியோகம் இவற்றை விவரிக்கும் போது இவற்றைச் சேர்ந்த, இக் காலத்தில் மிகவும் சிக்கலாக வளர்ந்து விட்ட, நாணயச் செலாவணி, வங்கி முறைகள், அயல் நாட்டு வர்த்தகம், சர்க்கார்—தனியார் நிதி விஷயங்கள், ஆகிய பல்வேறு இதர விஷயங்களும் கூடவே ஆராயப்பட்டு விவரிக்கப்படு கின்றன.

அத்தியாயம்—2

# உற்பத்தியும் தேசிய வருமானமும்

மனிதனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்விப்பதற்காகவே எல்லாவிதமான பொருளாதார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறினோம். ஏதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்யவோ, ஏதாவது ஒரு சேவையை உதவவோ இந்நடவடிக்கை முற்படுகிறது. இதனால் உபயோகிப்பவர்களின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. ஒரு பொருள் உற்பத்தி செய்வதற்கும் ஒரு சேவை அல்லது சாதனத்தை வழங்குவதற்கும் அநேகமாகப் பல்வேறு ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பும் கூட்டுறவும் தேவைப்படுகின்றன. சிற்சில சமயங்களில் ஒரு தனி மனிதனாலேயே ஒரு சேவையைச் செய்துவிட முடிகிறது. அப்படிப்பட்ட சமயங்களில் அவனுடைய உழைப்பு மட்டுமே அச் சேவையை வழங்குவதில் தேவைப்படுகிறது. தனிமனிதன் செய்துவரும் வீட்டு வேலை போன்ற மிகச் சாமான்யமான சேவைகளைத் தவிர, இப்போதெல்லாம் சாதாரணமாகத் தொழிலாளிகள் பல்வேறு கருவிகளையும் ஆயுதங்களையும் துணையாகக் கொண்டு சேவைகளை வழங்குகின்றனர். பல சயயங்களில் விலை மதிப்பு மிகுந்த யந்திர சாதனங்களின் உதவியையும் நாடவேண்டி வருகிறது.

### நவீனகால உற்பத்தியின் தன்மைகள்

நவீன காலத்தில் பண்டங்களின் உற்பத்தி முறைகளில் பிரத்யேகமான சில தன்மைகள் வெகுவாகக் காணப்படு

கின்றன. யந்திரங்கள் அதிகமாக இப்போதெல்லாம் உபயோகிக்கதபடுகின்றன. உற்பத்தி நவீன முறையில் அமைக்கப்பட்ட தொழிற் கூடங்களில் நடைபெறுகிறது. ஒரே மாதிரிப் பொருள்களை, அல்லது அதே இனத்தைச் சார்ந்த பல பொருள்களை, உற்பத்தி செய்யும் பலதொழிற் பட்டறைகள் ஒரே இடத்தில் குவியலாக அமைக்கப்பட்டுச் செயல் புரிகின்றன. உதாரணமாக, பஞ்சாலைத் தொழிற் கூடங்களெல்லாம் கோவையிலும் பம்பாயைச் சுற்றிலும் நிறுவப்பட்டிருக்கின்றன, உற்பத்தியும் வரவர தனித் தன்மை பெற்றுவருகிறது. ஒரு பொருள் முழுவதும் ஒரே தொழிற் கூடத்தில் ஒருவனுடைய மேற் பார்வையில் செய்து முடிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமும் இல்லை. ஒரு யந்திரத்தின் பல்வேறு பாகங்கள் பல தனித் தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, அவை யனைத்தும் ஒரு இடத்திற்குக் கொண்டு வரப்பட்டு ஒன்ருக இணைத்து முழு யந்திரமாக இணைக்கப்படுவது சாதாரணமாகக் காணப்படும் நிகழ்ச்சி. உதாரணமாக, சைகிள் பாகங்களை இப்போதெல்லாம் வெவ்வேறு தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்து, அவற்றை யெல்லாம் வேறு ஒரு தொழிற் கூடத்துக்கு எடுத்துச்சென்று அங்கே அவற்றை இணைத்து முழு சைகிளாகச் செய்ய முடிகிறது. இவ்வாறு தனித் தனிப் பாகங்களைத் தனித்தனித் தொழிற் கூடங்கள் செய்வதால் அந்தந்தப் பாகத்தைத் திறமையுடன் செய்வதில் அந்தந்தப் பட்டறைகள் விசேஷத் தேர்ச்சியடைந்து விடுகின்றன. இதன் மூலம் உற்பத்தியில் சிக்கன முறைகளைக் கூடக் கையாண்டு அடக்க விலையையும் குறைத்துக் கொள்ள முடிகிறது.

தவிரவும் நவீன தொழிற்சாலைகளில் செய்யப்படும் பல பொருள்கள் எல்லாம் ஒரே அச்சாக அமைந்திருப்பது தற்போதைய உற்பத்தி முறையில் ஒரு சிறப்பு அம்சம். அதாவது எல்லாப் பொருள்களுக்கும் தரம் நிர்ணயிக்கப்

பட்டுவிட்டது. எந்தத் தொழிற்கூடத்தில் குறிப்பிட்ட ஒரு பொருள் உற்பத்தி செய்தாலும், அப்பொருளுக்கு நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி அது செய்யப்பட்டால் போதுமானது, பெருவாரியாக உற்பத்தி செய்யப்படும் போது இவ்வாறு முன்கூட்டியே தர நிர்ணயம் செய்வது மிகவும் அவசியமாகிறது. தர நிர்ணயத்தினல் ஒரு புறம் பெருவாரியான உற்பத்தியும் மறுபுறம் குறைந்த செலவில் உற்பத்தியும் சாத்தியமாகின்றன.

### உற்பத்திக்கான சாதனங்கள்

பொருளாதார பண்டிதர்கள் சாதாரணமாக எந்தவித உற்பத்தி முறையிலும் நான்குவித சாதனங்களின் ஒத்துழைப்பு அவசியமாக ஏற்படுகிறது என்று எடுத்துக் காட்டுகின்றனர். நிலம், நிலவளம் (இயற்கைச் செல்வமனைத்தும் இப்பகுதியில் அடங்கியுள்ளது); உழைப்பு, (உடலுழைப்பு, புத்திபூர்வமான உழைப்பு இரண்டும் இதில் அடங்கியுள்ளன); மூலதனம் (நிதி, பணம், மற்றும் கட்டிடங்கள், யந்திரங்கள், யந்திர சாதனங்கள் முதலியவையனைத்தும் இதில் அடங்கியுள்ளன); அமைப்புத் திறன்— இந்நான்கும் உற்பத்தி சாதனங்கள். இவை முதல் அத்தியாயத்தில் சுருக்கமாக எடுத்துக் காட்டப்பட்டன.

இயற்கையின் ஒத்துழைப்பின்றி எந்த விதமான உற்பத்தியும் சாத்தியமாகாது என்பதை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். இயற்கை வளங்கள் எனும்போது நிலவளத்தை மட்டும் குறிப்பிடவில்லை. இதர செல்வங்களான, கனிப் பொருள்கள், ஆறுகள், நீர்வளம், காட்டுச் செல்வம், கடல் வளம், சீதோஷ்ண நிலை முதலிய யாவும் குறிப்பிடப்படுகின்றன. கேவலம் நிலம், அதாவது மண் வளத்தையும் நிலப்பரப்பையும் மட்டும் கவனித்தால்கூட, இதர சாதனங்களுக்கும் இதற்கும் பல விதங்களில்வித்தியாசங்கள் உண்டு என்பது தெரியும். நிலத்தின் மொத்தப் பரப்

யை அதிகரிக்க முடியாது. ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்பட்டுள்ள நிலப்பரப்பு ஒரு குறிப்பிட்ட அளவுடையது. விஞ்ஞான முறைகளை மேற்கொண்டு நிலத்தில் சாகுபடியைச் சீரிய முறையில் செய்து அதிகமான மகசூலை மட்டுமே அடையக்கூடும். ஆனால் இம்முயற்சியையும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் மேற்கொள்ள முடியும். மகசூலை அதிகப்படுத்திக் நிரந்தரமாக கொண்டே செல்ல முடியாது. அனுபவத்திலிருந்து நிலத்திலிருந்து கிடைக்கும் மகசூல் "குறைந்துகொண்டே செல்லும்பலிதம்" (Law of Diminishing Returns) என்னும் நியதியின்படி குறையும் என்பதைக் கண்டறிந்துள்ளார்கள். அதாவது ஒரு நிலத்திற்கு அளிக்கப்பட்ட உழைப்பும்மூலதனமும் படிப்படியாக அதிகரித்துக்கொண்டே போனலும் ஒரு அளவுக்குப் பிறகு நிலத்திலிருந்து கிடைக்கும் உற்பத்திப் பலன் விகிதாசாரப் படி அதிகரிக்காமல் குறைந்து போகிறது என்பதுதான் இந்த நியதி.

## உற்பத்தி முறையில் உழைப்பின் பங்கு

உற்பத்தி முறையில் இயற்கை வளத்தின் பங்கு மிகவும் முக்கியம் என்று மேலே விளக்கப்பட்டது. இது மிகையன்று. ஏனெனில் இயற்கை யளிக்கும் பல பொருள்களை நேரடியாக மனிதன் உபயோகிப்பதுடன் அவற்றைத் தனது உபயோகத்திற்கு ஏற்றவாறு மாற்றி அமைத்துக்கொள்ளவும் அவன் கற்றுக்கொண்டிருக்கிறன். மனிதன் தன்னுடைய உழைப்பின் மூலம் இதைச் செய்கிறன் ஆகவே உழைப்பு அல்லது உழைக்கும் சக்தி பொருள் உற்பத்தியில் முக்கிய இடம் பெறுகிறது. மனித உழைப்பைச் சாதாரண திறமையுடையது, திறமைக்குறைவாக உடையது, விசேஷத் திறமைஉடையது என்று பாகுபாடு செய்வதுண்டு ஆனல் பொதுவாக உழைப்பாளிகளின் எண்ணிக்கையும் உழைப்பின் தரமும் ஒரு நாட்டின் மக்கள் தொகையையும்

சாதன வசதிகளையும் பொறுத்திருக்கின்றன. வாய்ப்புகளும் வசதிகளும் அதிகமாயுள்ள நாட்டில் உழைப்பாளிகளின் தரம் உயர்ந்ததாக இருக்கும். அவை குறைந்துள்ள நாட்டில் உழைப்பின் தரமும் குறைந்தே காணும். நகர்ப்புறங் களிலும், தொழிற்சாலைகள் உள்ள இடங்களிலும் உழைப் பாளிகள் தரம் பொதுவாகக் கிராமப்புறங்களிலுள்ள உழைப்பாளிகளின் தரத்தைவிட உயர்ந்ததாக இருப்பதி லிருந்து இவ்வுண்மை புலப்படும்.

உற்பத்தி முறையில் ஒரு முக்கியமான அம்சத்தில் இதர உபகரணங்களைவிட உழைப்பு மாறுபடுகிறது. ஒரு உழைப்பாளியினுல் தனது உழைப்பையும் தன்னையும் பிரிக்க முடியாது. மூலதனத்தை உடையவன் முதலீடு செய்துவிட்டுத்தான் தனித்து நிற்கமுடியும். அதனுல் உற் பத்தி தடைப்படாது. உழைப்பு அவ்வாறல்ல. உழைக்கும் சக்தியை மட்டும் அளித்துவிட்டுத்தான் ஒதுங்கி நிற்க முடியாது. உழைப்பாளி ஒருநாள் வேலை செய்யவில்லை யென்ருல் அன்றைய உழைப்பு உற்பத்தியைப் பொறுத்த மட்டில் நஷ்டமே. அதைத் திரும்பிப்பெற முடியாது. உழைப்பைக் குறுகிய காலத்தில் தேவைக்குத் தக்கவாறு அதிகரிக்கவோ குறைத்துக்கொள்ளவோ முடியாது. இளைஞர்களைத் திறமையுடைய உழைப்பாளிகளாகப் ஆக்குவதற்குச் சிறிது காலம் பிடிக்கும். உழைப்பின் உற்பத்தித் தரம் உழைப்பின் உற்பத்தி சக்தி, உழைப்பின் உற்பத்தி அளவு என்றெல்லாம் நாம் அடிக்கடிக் கேட் கிருேம். ஒரு தொழிற்கூடத்தில் ஒரு தொழிலாளி செய்யும் உற்பத்தியின் அளவு அவனுடைய திறமை, ஊக்கம், உற்சாகம் முதலிய தனி நபருக்குள்ள அம்சங்களுடன், அவன் கையாளும் யந்திர சாதனங்களின் தரம், தொழிற் கூட அமைப்புமுறை முதலிய பல அம்சங்களைப பொறுத் திருக்கின்றது.

## உற்பத்தி முறையில் "அமைப்புத்திறனும்" அதனுடைய பங்கும்

மூலதனமும், உழைப்புச் சக்தியும் உற்பத்தி முறையில் மிக முக்கியமான பாகம் வகிக்கின்றன என்றாலும், மற்றொரு அம்சமும் அதே அளவில் முக்கியமாக இருக்கிறது. இதைத்தான் "அமைப்புத் திறன்" (Organisational Skill) என்று கூறலாம். இதர சாதனங்களனைத்தையும் ஒன்றாக இணைத்து அவற்றை உபயோகமுள்ள ஒரு தொழிலில் ஈடுபடுத்தி பொருள் உற்பத்தி செய்வதில் வெற்றி காண்பதற்குத் தனிப்பட்ட தொழில் ஆர்வமும் சாமர்த்தியமும் வேண்டும். இச் சாமர்த்தியமே இங்கு அமைப்புத்திறன் என்று குறிக்கப்படுகின்றது, ஒரு தொழிலை நடத்துவதில் மூன்று விதமான அமைப்பு முறைகள் சாதாரணமாக மேற்கொள்ளப்படுகின்றன—தனி முதலாளித்வ முறை; கூட்டுமுறை; கம்பெனிகள் மூலம் இணைக்கப்பட்ட முறை, தனி முதலாளி நடத்தும் தொழிலும் கூட்டு முறையில் நடத்தப்படும் தொழிலும் சுலபமாக அமைக்கப்பட்டுவிடுகின்றன. இவற்றில் இடையூறுகள் அதிகமில்லை. ஆனால் இவ்விரண்டு முறையிலும் குறைந்த மூலதனத்தைக்கொண்டே தொழில் ஆரம்பிக்கப்படுவதால், தொழில் வளர்ச்சியடையும்போது, மூலதனத்துக்குப் பற்றாக்குறை ஏற்படக்கூடும். இதைத் தவிர்க்க ஏற்பட்டது கம்பெனிகள் மூலம் இணைக்கப்பட்ட முறை. கம்பெனி என்பதுபல சிறு முதலாளிகளின் சேர்க்கையே. சிறிய மூலதனமுள்ள பல பேர்கள் தங்கள் பணத்தையெல்லாம் ஒன்றாகத் திரட்டி குறிப்பிட்ட ஒரு தொழிலை ஆரம்பிப்பதுதான் இம்முறை. ஒவ்வொருவருக்கும் தான் வழங்கும் மூலதனத்தின் அளவுக்குக் கம்பெனியில் பங்கு அளிக்கப்படும்: ஆகவே அவர்களைப் பங்குதாரர்கள் என்று அழைப்பார்கள். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கம்பெனிகள் தங்களுக்குத் தேவையான மூலதனத்தை அவ்வப்

போது பங்குகள் மூலமும் கடன் பத்திரங்கள் மூலமும் சேகரித்துக் கொள்ளுகின்றன. இம் முறையில் ஒவ்வொரு பங்குதாரரும் ஏற்றுக்கொள்ளும் நஷ்டப் பொறுப்பு அவர வர் வழங்கியுள்ள பங்குத் தொகை அளவுக்கு வரையறை செய்யப்படுகிறது. இதுதான் இம் முறையிலுள்ள அநு கூலம். மேலும், அதிகமாக நிதி தேவைப்படும் போது, அதிகமாகப் பங்குகள் பொது மக்களுக்கு வழங்கிச் சேக ரித்துக் கொள்வது இம் முறையில் சாத்தியம். மேல் நாடு களில் தொழில் அபிவிருத்தி வேகமாக ஏற்பட்டுள்ளதற்கு இம்மாதிரி கம்பெனி முறை அமைப்புதான் ஒரு முக்கிய காரணம்.

## தேசிய வருமானம் என்பது என்ன?

மேலே விவரித்த உற்பத்தி சாதனங்களின் கூட்டுற வினுல் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு பொருள்கள், மக்களுக்கு வழங்கப்படும் சேவை சாதனங்கள் ஆகியவற் றின் மொத்தமே ஒரு நாட்டின் தேசிய வருமானமாகும்; அதாவது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் கள், சேவைகள் ஆகியவற்றின் கூட்டுத் தொகை. இதைத் "தேசிய மொத்த உற்பத்தி" (Gross National Product) என்று நூல்கள் கூறும். ஆனுல் இவற்றிலிருந்து ஒரு பகுதியை உற்பத்தி சாதானங்கள், முக்கியமாக யந்திர சாதனங்கள், பழுதுருவண்ணம் நல்ல நிலையையில் வைத்திருப்பதற்கும், உற்பத்தி குறைவுருது தொடர்ந்து நடை பெறுவதற்கும், ஒதுக்கி வைத்துச் செலவிடப்படும். இவ்வாறு ஒதுக்கி வைக்கப்படும் பகுதியைத் தொழில் உலக வழக்கில் தேய் மான நிதி என்று கூறுவார்கள். அதாவது உபயோகத் தினுல் யந்திரங்களும், கட்டிடங்களும், மற்றும் இதர மூலதன சாதனங்களும் பழுதடைவதைச் சரிக்கட்ட ஒதுக் கப்படும் நிதி. இதை மொத்த தேசிய உற்பத்தியிலிருந்து கழித்தபின் இருப்பதையே "தேசிய நிகர உற்பத்தி"

(Net National Product) என்று பொருளாதார நூல்கள் கூறும். இதுதான் நாட்டின் மக்களுக்குக் கிடைக்கும் நிகர உற்பத்தி. இதிலிருந்து தான் அவர்கள் தங்களுடைய தேவைக்கு வேண்டியவற்றை உபயோகப்படுத்திக்கொண்டு, பிற்கால உபயோகத்திற்கென சேமிப்புக்கும் ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சமுகம் அதனுடைய தேசிய வருமானத்தை ஆண்டு தோறும் பெருக்கிக் கொண்டே செல்ல விரும்பினுல் அம் மக்கள் மேன் மேலும் அதிகமாக உழைப்பதன் மூலம், அல்லது அதிக உழைப்பு சக்தியை அளிப்பதன் மூலம், அல்லது அதிக மூலதனம் முதலீடு செய்வதன் மூலம் இதை அடையலாம். ஒரு நாட்டிலுள்ள மூலதனப் பொருள்களை அதிகரிப்பதனுல், அந் நாட்டின் உற்பத்தி சாதனங்கள் விரிவடைகின்றன. மூலதனத்தையோ, உழைப்புச் சக்தியையோ அதிகரிக்காமல் அமைப்பு முறைகளைத் திருத்தியே உற்பத்தியைச் சிற்சில சமயங்களில் அதிகரிக்க முடியும். ஆனுல் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இம் மூன்று இனங்களிலுமே அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். அதாவது, உழைப்பாளிகளின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களின் தரத்தை உயர்த்துதல்; மூலதன விஸ்தரிப்பு; அமைப்பு, நிர்வாகத்தில் மாறுதல்கள்—இவை எல்லாமே நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அவசியமாகும். பெருவாரியான மக்கள் வேலையில்லாமலும், முழுத்திறமையோடு வேலைசெய்ய முடியாத நிலையிலுமுள்ள இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளில் உற்பத்திப் பெருக்கையடைய மூலதன விஸ்தரிப்பும் நிர்வாகத் திறனும் மிகவும் அவசியம்,

### தேசிய உற்பத்தியின் பங்கீடு

உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு உபகரணம் அல்லது சாதனத்திற்கும் அதற்கு உரிய விலை கொடுக்க

வேண்டியது முறை. நிலத்தை உபயோகிப்பதற்கு வாடகை கொடுக்க வேண்டும். இதைக் குத்தகை என்ருலும் கிஸ்தி என்ருலும் நிலவரி என்ருலும் அர்த்தம் ஒன்றே. இது நிலத்தின் உபயோகத்திற்குக் கொடுக்கப்படும் பணம். இதை வாடகை அல்லது வரி என்று பொருளாதார நூல்கள் விவரிக்கின்றன. மூலதனத்தின் உபயோகத்திற்கு வட்டி செலுத்த வேண்டும். உழைப்பாளிகளின் உழைப்பிற்குக் கூலி அல்லது ஊதியம் கொடுக்க வேண்டும். தொழில் ஆர்வம், அமைப்பு, நிர்வாகம்—ஆகியவற்றுக்கு லாபம் கிடைக்கவேண்டும். இவ்வாறு உற்பத்தி சாதனங்கள் ஒவ்வொன்றுக்கும் அதனதன் விகிதாசாரம் அளிக்கப்படும் தொகையைக் கூட்டிக் கணக்கிட்டால் கிடைப்பதை தேசியவருமானம் என்று சொல்லலாம். இவ்வாறு சொல்லும் போது நிகர தேசிய உற்பத்தியை, உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதையே பொதுவாகக் குறிக்கப்படுகிறது. எப்படி பங்கீடுசெய்வது,பங்கீட்டு விகிதங்களை மாற்றியளிப்பதனுல் என்ன விளைவுகள் ஏற்படுகின்றன, விகிதங்களை எப்படி, எந்த அடிப்படையில் மாற்றுவது—இப்படிப் பலவிதப் பிரச்னைகளைப் பொருளாதார வல்லுநர்கள் ஆராய்ந்து முடிவுகளை அவ்வப்போது வெளியிடுகின்றனர். இப்போதெல்லாம் உழைப்பாளிகள் ஊதியம், நிலவரி, வட்டி விகிதங்கள், தொழில் லாபங்கள் முதலியவற்றை நிர்ணயம் செய்வதில் அரசாங்கம் அதிகமாகத் தலையிடுவதை நடைமுறையில் காண்கிருேம். அரசாங்கத்தின் தலையீட்டின் விளைவாக உழைப்பாளிகள் ஊதியம் அதிகரித்து, மற்ற சாதனங்களின் பங்கு குறைந்து விடுவதையும் காண்கிருேம். இதை வரிகள் மூலமும், லாபங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் சர்க்கார் நிறைவேற்றுகின்றனர்.

ஆனுல் நிலையாக உள்ள தேசிய வருமானத்தைப் பங்கீடு செய்வதைவிட (பங்கீட்டு விகிதங்கள் எந்த முறையில்

மாற்றியளிக்கப்பட்டாலும்) தேசிய மொத்தவருமானத்தை அதிகரிக்கச் செய்வது மிகவும் முக்கியம் என்பதை மறந்து விடக்கூடாது. உதாரணமாக, ஒரு நாட்டின் தேசிய வருமானம் 1,000 கோடி ரூபாய் என்று வைத்துக்கொள்வோம். இதில் பொருளாதார ரீதியில் உழைப்பாளிகளின் பங்கு 40 சதம் அல்லது 400 கோடி ரூபாய் என்றிருந்தால், இவ் விகிதத்தை உயர்த்தாமலே, தேசிய வருமானம் உயர வகை செய்தால், உழைப்பாளிகளுக்குக் கிடைக்கும் தொகை தானுகவே அதிகரிக்கும். விகிதத்தை உயர்த்துவதால் மட்டுமே கிடைக்கக் கூடியதைவிட அதிகமாகக்கூட அவர்களுக்குக் கிடைக்கும். தேசிய வருமானம் 1000 கோடி ரூபாயிலிருந்து 1200 கோடி ரூபாய்க்கு உயர்ந்தால். உழைப்பாளிகளுக்கு 40 சத விகிதாசாரப் படியே 480 கோடி கிடைக்கும். தேசிய வருமானம் உயராமல் 1000 கோடிக் கணக்கிலேயே இருந்துவிட்டால் உழைப்பாளிகளுடைய விகிதத்தை 10 சத வீதம், அதாவது 40 விருந்து 44 சதத்துக்கு, உயர்த்தினுலும் அவர்களுக்குக் கிடைப்பது 440 கோடியே ஆகும். இந்த 40 கோடி அவர்களுக்கு அதிகப்படியாகக் கிடைப்பது உண்மையில், உற்பத்தியில் இதர பாகஸ்தர்களுக்குச் சேரவேண்டிய தொகையே ஆகும்.

## தேசிய வருமானத்தைப் பாதிக்கும் அம்சங்கள்

சென்ற நூருண்டுக் காலத்தில் பல மேலை நாடுகளின் தேசிய வருமானங்கள் மிகவும கணிசமான அளவில் உயர்ந்துள்ளன. இந்த உயர்வுக்குப் பலவித காரணங்கள் இருக்கின்றன. எல்லாவற்றையும் விட முக்கியமானவை யந்திர நுட்ப அறிவை அதிகமான அளவில் பயன்படுத்தியதும், உற்பத்தியை அதிகரிக்கப் புதுப் புதுவகைகளில் மின்சாரம் போன்ற சக்தியின் உதவியால் யந்திரங்களை இயக்கப் பழகிக் கொண்டதும் ஆகும். விஞ்ஞான முறை விவசாயத்தை மேற்கொள்ளுவதால் ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து

கிடைக்கும் மகசூலே அதிகரிக்க முடிகிறது. அதேபோல தொழில் நுட்ப அறிவைத் தொழிற் கூடங்களில் பயன் படுத்துவதனுல் ஒவ்வொரு உழைப்பாளியின் உற்பத்தி அளவு அதிகரிக்கிறது. இம்மாதிரி அதிகரித்துள்ள உற் பத்தியினுல் தான் மேல் நாடுகளில் உழைப்பாளிகளுக்குக் குறைந்தகால வேலேயும், அதிக ஊதியமும், மற்றும் சம்ப ளத்துடன் கூடிய ஓய்வு நாட்கள், வேலேயில்லாக் கால நிவாரணங்கள், வயோதிக கால பென்ஷன், முதலிய சலு கைகளும் கிடைக்கின்றன.

சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. வாழ்க்கைத்தர உயர்வு தேசிய வருமான உயர்வுடன் நேரடியாகத் தொடர்புடை யது. தேசிய வருமானத்திலிருந்து நாட்டு மக்களின் தனி வருமானம் கணக்கிடப்படுகிறது. மற்ற உலக நாடுகளின் தலேவருமானத்துடன் ஒப்பிட்டால் இந்திய மக்களின் தலே வருமானம் (Per Capita) மிகவும் குறைவு. ஏனெனில் இந்தியாவின் மக்கள் தொகையைக் கொண்டு பார்த்தால் நம் நாட்டின் தேசிய வருமானம் மிகவும் குறைவு. நம்முடைய தலேவருமானம் சிறிதளவு உயரவேண்டுமாளுலும் நம்நாட்டு தேசிய வருமானம் பெருவாரியான அளவுக்கு அதிகரிக்க வேண்டும். தேசிய வருமானம் குறைவாக இருக்கும் வரை யில், அதைப் பங்கீடு செய்யும் விகிதத்தை எப்படி மாற்றி மாற்றி வினியோகம் செய்தாலும் தலேவருமானத்தை உயர்த்திவிட முடியாது. தேசிய வருமானத்தை உயர்த்த வேண்டுமாளுல், நம்முடைய இயற்கை வசதிகளேயும் வளங்களேயும் மென்மேலும் பயனளிக்கும்படிச் செய்து கொள்ள வேண்டும். ஜீவநதிகளே அணேயிட்டுத் தண்ணீ ரைப் பாசனத்துக்கும் மின்சாரப் பெருக்குக்கும் உபயோகப் படுத்தவேண்டும். கனிப்பொருள்களே யெல்லாம் பூரண மாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், நமது விவசா யத்தையும் வளம்பெறச் செய்யவேண்டும். இவற்றைத் தவிர,

பெருமளவில் மூலதனம் போட்டுத் தொழில்களை வளர்க்க வும்வேண்டும். அப்போதுதான் பலதரப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்ய முடியும். உழைக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்புகளையும் அளிக்க முடியும், இவற்றை யெல்லாம் செய்து முடிக்கத் தொழிலதிபர்களிடத்திலும் சர்க்காரிடத் திலும் அதிகமான ஊக்கமும் தொழில் திறமையும் பெரிய அளவில் செயல்படவேண்டும்.

அத்தியாயம்-3

# பொருள்களின் மதிப்பு, தேவை, சப்ளை.

ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பொருளை வாங்குவதில் நாம் ஒவ்வொருவரும் பணம் செலவு செய்கிறோம். சில சமயம் விலையைப் பற்றிப் பேரம் பேசுகிறோம். எனினும், அநேகமாக என்ன விலை கேட்கப்படுகிறதோ அதைக் கொடுத்துவிடுகிறோம். சில சமயம் விலை அதிகமென்று தோன்றினால் அப்பொருளை வாங்காமலே இருந்துவிடுகிறோம். குறித்த விலைக்கு ஏன் அப்பொருள்கள் விற்கப்படுகின்றன? ஏன் விலைகள் அவ்வப்போது மாறுபடுகின்றன? குறிப்பிட்ட ஒரு சமயத்தில் பொருள்களின் விலையை நிர்ணயம் செய்யும் அம்சங்கள் என்ன? இவைபோன்ற கேள்விகளைக் கேட்டு நமது மூளையைக் குழப்பிக் கொள்ளுகிறதில்லை. இவை பற்றி காரண காரியங்களை நாம் அநேகமாக ஆராய்வதுமில்லை.

சாதாரணமாகப் பொருள்கள் தங்களுக்கு உபயோகமுள்ளதாக இருப்பதாலேயே மக்கள் அவற்றை வாங்குகின்றனர், உபயோகமுள்ளவை என்பதனாலேயே மக்கள் அவற்றை விற்கவும் செய்கிறார்கள். அதனாலேயே அவைகளுக்கு மதிப்பு ஏற்படுகிறது. ஆனால் உபயோகமென்பது உபயோகிப்பவனைப் பொறுத்த விஷயம். உபயோகிப்பவனுக்கு அப்பொருளினால் கிடைக்கும் திருப்தி அல்லது சந்தோஷத்தைக் கொண்டே. அப்பொருளின் உபயோகத்தை

அளக்கவேண்டும். இவ்வாறு ஏற்படும் திருப்தி மனித னுக்கு மனிதன் மாறுபடும். ஒரே மனிதனிடத்திலும் கூட ஒரு சமயத்தில் ஒரேபொருளிலிருந்து ஏற்படும் திருப்தி மற்றொரு சமயம் ஏற்படுவதில்லை. தவிரவும் பொருள்களுக்கு மற்றொரு வகையில் மதிப்பு உண்டு. இதுதான் அதனுடைய மாற்று மதிப்பு. ஒரு பொருளைக் கொடுத்து வேறொரு பொருளை வாங்கும்போது பண்டமாற்று நடைபெறுகிறது. இந்த மாற்று விகிதத்தை நிர்ணயிக்க அப்பொருள்கள் மதிப்பிடப்படுகின்றன. இம்மதிப்பு சாதாரணமாக நாணய அடிப்படையில் இருக்கும், இதையே அப்பொருளின் விலை என்று கூறப்படும். நாணய மூலம் விலை கூறினாலும் உண் மையில் அவ்விலையானது அப்பொருளைக் கொண்டு வேறு ஒரு பொருளையோ அல்லது சேவையையோ பெறுவதற் கான விகிதத்தையே குறிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

### மார்க்கெட் அல்லது சந்தை

ஒவ்வொரு பொருளுக்கும், காய்கறி வகைகள் முட்டைகள் போன்ற சிறிய சாமான்களாக இருந்தாலும் ஆகாய விமானம், ரயில் பெட்டிகள் போன்ற பெரிய பொரு ளாக இருந்தாலும், ஒரு "மார்க்கெட்" அல்லது சந்தை உண்டு. பொருளாதார நூல்கள் 'மார்க்கெட்" என்று விவரிக்கும்போது குறிப்பிட்ட ஒரு பொருள் விற்கப்படும் அல்லது வாங்கப்படும் இடத்தைக் கருத்தில் கொண்டே கூறுகின்றன. ஆனால் நடை முறையில் இவ்வாறு ஒரு இடத்தை எல்லாப் பொருள்களுக்கும் நிச்சயமான மார்க் கெட் என்று நிலையாகச் சொல்லமுடியாது. முட்டைகளுக்கு மார்க்கெட் ஒரு நகரத்திலோ, கிராமத்திலோ குறிப்பிட்ட ஒரு இடத்தில் இருக்கும். முட்டை விற்பவர்களும் முட்டை வாங்குவோரும் இங்கே சந்திப்பார்கள். பேரங்கள் நடக்கும். ஆனால் ஆகாயவிமானம் போன்ற பொருளுக்குச் சந்தை

உலக முழுவதிலும் வியாபித்திருக்கிறது. குறிப்பிட்ட இடத்தில் முட்டைகளை வாங்கிவிடுவதுபோல ஆகாய விமானத்தை வாங்கமுடியாது 'முன்கூட்டியே விமானம் தயாரிக்கும் ஸ்தாபனங்களுக்கு ஆர்டர்கள்' கொடுத்துப் பதிவு செய்து கொண்ட பின்னர் ஓரிரண்டு ஆண்டுகள் கழித்தே விமானம் வந்து சேரும்.

## பொருள்களுக்குத் தேவையும் அவற்றின் சப்ளையும்

முட்டைகளாக இருந்தாலும் ஆகாயவிமானமாக இருந்தாலும் விற்பனை செய்யத் தயாராகப் பலரும் வாங்குவதற்குத் தயாராக உள்ள பலரும் மார்க்கெட்டில் சந்திக்கின்றனர். எந்த இடத்தில் வாங்குகிறவர்களும் விற்பவர்களும் கூடுகின்றனரோ அந்த இடமே மார்க்கட். வாங்குகிறவர்கள் தங்களுக்குத் தேவையான வற்றைக் குறைந்த விலைக்கு வாங்கவே முயற்சிக்கிறார்கள். விற்பனை செய்பவர்கள் தங்கள் பொருள்களை அவர்களால் முடிந்த வரையில் லாபத்துக்கு அதாவது அதிக விலைக்கு விற்க முயலுகிறார்கள். வாங்குபவர்கள் எல்லாம் அப்பொருள்களுக்குள்ள தேவையைக் குறிக்கின்றனர். விற்பவர்கள் எல்லாம் அப்பொருளின் சப்ளையைக் குறிக்கின்றனர்.

## தேவையின் நியதிகள்

விலை குறைவாக இருந்தால் ஒரே பொருளை அதிகமாகவும், விலை அதிகமாக இருந்தால் அதே பொருளைக் குறைவாகவும் மக்கள் வாங்குவதை நாம் சாதாரணமாகக் காண்கிறோம். ஏறக்குறைய இதை உலகத்தில் எல்லா இடங்களிலும் காணப்படும் ஒரு பொதுவானவிதி என்றே சொல்லலாம். ஏனெனில் விலையின் ஏற்றத்தாழ்வுகளினால் பொருள்களின் தேவை குறைவதும் உயர்வதும், மனிதனுக்கு மனிதன், அவனவனுடைய அந்தஸ்தை யொட்டி

மாறுபடும். இவ்வாறே பொருள்களின் முக்கியத்வத்தை அனுசரித்தும் மாறுபடும். இவை ஒரே விகிதத்தில் இருக்க வேண்டுமென்ற நியதி இல்லை. விலைகளுக்கும் அவ்விலைகளில் வாங்கப்படும் பொருள்களின் அளவுக்கும் உள்ள சம்பந்தம்தான் "தேவையின் நியதி" என்று கூறப்படுகிறது. அதாவது, மற்ற அம்சங்கள் ஒரே மாதிரி மாறுதலில்லாமல் உள்ள நிலையில், வாங்கப்படும் பொருள்களின் அளவு அவற்றின் விலைக்கு மாற்று விகிதத்தில் இருக்கும். இதுதான் இந்த நியதி. விலை குறையக் குறையப் பொருள்களை வாங்குவதும் படிப்படியாக அதிகரிக்கும். மாறாக, விலை உயர உயர அப்பொருள்கள் வாங்கப்படுவது படிப்படியாகக் குறையும்.

## உபயோகத்தின் குறையும் நியதி

விலைக்கும் வாங்கும் பொருள்களின் அளவுக்குமுள்ள சம்பந்தம் தலை கீழ் விகிதத்திலிருக்குமென்று மேலே சொன்னோம். இதற்கு ஒரு காரணம் பொருள்களின் உபயோகம் குறையும் தன்மையுடையது என்பதே. இது மக்களின் மனப்போக்கைச் சார்ந்துள்ள ஒரு தத்துவம். அளவுக்கு அதிகமாக ஒரு பொருள் கிடைக்குமேயானால், விலை மதிப்புள்ள பொருளாக இருந்தாலும், அதை ஒரு பொருட்டாக மக்கள் அதிகமாகப் பாராட்டுவதில்லை. இதை தினசரி வாழ்க்கையில் மக்கள் நடத்தையில் காண்கிறோம். அளவுக்கு மீறினால் அமிருதம் கூட தனது சிறப்பை இழந்து விடுகின்றது. இந்தத் தினசரி அனுபவத்திலிருந்து பொருளாதார சாத்திரத்தின் கேந்திர கோட்பாடுகளில் ஒன்றாகிய நியதியை ஒரு விதியாகவே நூலாசிரியர்கள் விரிவு படுத்தியுள்ளார்கள்.

தனக்குத் தேவையான ஒரு பொருளின் எண்ணிக்கை அல்லது அளவு அதிகரிக்க அதிகரிக்க, அதை உபயோகிப்பதன் மூலம், உபயோகிப்பவனுக்குக் கிடைக்கும் திருப்தி

அல்லது உபயோகம் படிப்படியாகக் குறையும் என்பது தான் இந்த நியதி. இந்த நியதியை **மார்ஷல்** என்னும் ஆங்கிலப் பொருளாதார அறிஞர் பின் வருமாறு எழுதி யுள்ளார்: ஒரு பொருளினின்று ஒருவனுக்குக் கிடைக்கக் கூடிய மொத்த உபயோகம் (அதாவது அப்பொருள் அவனுக்கு அளிக்கும் திருப்தி) அப்பொருள் அதிகரிக்க அதிகரிக்க, அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆனல் பொருள் அதிகரிப்பது போல அவ்வளவு வேகமாக (அதே விகிதத்தில்) அல்ல, என்று இவ்விதியை அவர் விவரிக் கிருர். இந்த விதியின்படி ஒரு பொருளின் முதல் பகுதி அல்லது எண்ணிலிருந்து **(Unit)** ஒருவனுக்குக் கிடைக்கக் கூடிய உபயோகம் அதனுடைய இரண்டாவது எண்ணி லிருந்து கிடைப்பதைவிட அதிகமாக இருக்கும்; அப்ப டியே இரண்டாவதிலிருந்து கிடைக்கும் உபயோகம் மூன்ருவதிலிருந்து கிடைப்பதைவிட அதிகமாக இருக்கும்; மூன்ருவதிலிருந்து கிடைப்பது நான்காவதிலிருந்து கிடைப் பதைவிட அதிகமாக இருக்கும்; இப்படிப் படிப்படியாக எண்ணிக்கை உயருவதை அனுசரித்து அதன் உபயோகம் குறைந்து கொண்டே போகும். இதிலிருந்து ஒரு உண்மை புலனுகிறது. ஒரு பொருளின் விலை அதிக மாக உயர்ந்துவிட்டால், அந்தப் பொருளில் எவ்வளவு குறைவாக வாங்கினல் அதிகமான பலனை அல்லது உப யோகத்தை, தான் கொடுக்கும் விலைக்கு ஈடாக ஒருவன் பெற முடியுமோ, அவ்வளவுமட்டுமே அவன் வாங்குவான். அதே பொருளுக்கு விலை சற்றுக் குறைந்தால், குறைந்த விலையில் அப்பொருளில் மேலும் சில வற்றை அவன் வாங்குவான்.

இதில் கவனிக்க வேண்டிய மற்ருெரு விஷயமும் உள்ளது. வாங்குபவர்கள் எல்லோரும் சமமான வரு மானம் உடையவர்கள் அல்ல சிலர் அதிகப் பணம் படைத்தவர்களாக இருப்பார்கள். சிலர் குறைந்த பண

முள்ளவர்களாக இருக்கலாம். சிலருக்கு ஒரு பொருளை வாங்கக் கூடிய சக்தி இருக்கலாம்; சிலருக்கு இருக்காது. உதாரணமாக, ஒரு சைகிளின் விலை 300 ரூபாய் என்றிருந்தாலும் வாங்கக் கூடியவர்கள் சிலர் இருப்பார்கள் ஆனால் 100 ரூபாய் விலையில் தான் வாங்க முடியும் என்று பல பேர்களிருப்பார்கள். எனவே, விலை இறங்கும் போது ஒரு பொருளுக்கு ஏற்படும் கிராக்கியும் **(Demand)** அதிகரிக்கிறது. விலை குறைந்ததற்காக அதிகமாக வாங்குபவர்களுடன். உயர்ந்த விலையில் வாங்க முடியாத பல புதிய கிராக்கிகள் குறைந்த விலையில் தோன்றவும் செய்கின்றன. இப்படிப்பட்ட புதுகிராக்கிகள் விலை குறைந்தால் மட்டுமே வாங்க முன்வருவார்கள். சில கடைக்காரர்கள் அடிக்கடி தேங்கிக்கிடக்கும் சரக்குகளைக் காலி செய்வதற்காகக் "குறைந்த விலையில் விற்பனை" என்று விளம்பரப்படுத்துவதைக் காணலாம். இவற்றின் நோக்கம் சிலரை அதிகமாக வாங்கும்படித் தூண்டச் செய்வதோடு பல புதிய வாடிக்கைக்காரர்களை ஈர்ப்பதும்தான்.

அத்தியாயம்—4

# "எல்லைப்புற" உபயோகமும் கிராக்கியும்

மேலே விவரித்த தினசரி சம்பவத்தில் பொதிந்துள்ள ஒரு தத்துவம் பொருளியலில் மிக முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. இதை "எல்லைப்புற"த் தத்துவம் என்று சொல்லலாம். ஆங்கிலத்தில் இதை "மார்ஜின்', (Margin) என்ற சொல்லால் குறிக்கின்றனர். இதிலிருந்து எல்லைப்புற உபயோகம், (Marginal Utility) எல்லைப்புறக் கிராக்கி (Marginal Demand) என்ற சொற்றொடர்களும் வழக்கில் அடிக்கடி கையாளப்படுகின்றன. மேலே கொடுத்த உதாரணத்தைக் கொண்டே இக்கருத்தை விளக்கலாம். குறிப்பிட்ட ஒரு விலையில், விற்பனை செய்யும் ஒருவன் கவனிப்பது அவன் விற்கும் பொருளுக்குள்ள மொத்தக் கிராக்கி அன்று. அந்த விலையில் எத்தனை பேர்கள் அப்பொருளை வாங்குவார்கள் என்பதைவிட அந்த விலையிலிருந்து சிறிது உயர்ந்தால் எத்தனை பேர்கள் வாங்குவதை நிறுத்திவிடுவார்கள், அல்லது எத்தனை பேர்கள் குறைவாக வாங்குவார்கள் என்பதுதான் முக்கியம். அதாவது விலை உயர்விற்கும் கிராக்கிக் குறைவதற்கும் சம்பந்தத்தைக் கணக்கிட்டுச் சொல்ல வேண்டுமானால் விலைக்கும் கிராக்கிக்கும் உள்ள சம நிலையை வைத்து அந்நிலையிலிருந்து ஒவ்வொரு விலை உயர்வுக்கும் ஏற்படும் கிராக்கிக் குறைவை அளவிட வேண்டும். இந்த

சமநிலைகளுக்கு சிறிது முன்னும் பின்னும் உள்ள நிலைதான் எல்லைப்புற நிலை. வாங்குபவர்கள் தாங்கள் வாங்குவதை எந்த விலையில் நிறுத்திக் கொள்ளுகிறார்களோ அந்த நிலை அவர்களுடைய கிராக்கியின் எல்லைப்புற (Marginal) நிலை அதுதான் அவர்களுக்கு அப்பொருளிலிருந்து கிடைக்கும். உபயோகத்தின் எல்லையும். இதையே பொருள்களின் எல்லைப்புற உபயோகம் (Marginal Utility) எனலாம். இந்த எல்லைப்புற உபயோகமும் எல்லைப்புற கிராக்கியும் விலை மாறுதல்களினால் ஒவ்வொரு பொருளுக்கும் கிராக்கி எவ்வாறு மாறுதல் அடைகிறது என்பதை அறிந்து கொள்ளப் பொருளியலில் பெரிதும் பயன்படுகின்றன.

கிராக்கியில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள் எவ்வாறு நிகழ்கின்றன? விலைகளில் சிறிது மாறுதல்கள் ஏற்பட்டாலும் அதற்குப் பிரதியாகக் கிராக்கியில் எந்த தத்துவத்தின் அடிப்படையில், மாறுதல்கள் ஏற்படு கின்றன? எவ்வளவு உணர்ச்சி வேகத்துடன் இவை மாறுகின்றன? இந்த உணர்ச்சியின் வேகத்தைக் கிராக்கி யின் நெகிழ்ச்சித் தன்மை (Elasticity of Demand) என்று பொருளியல் நூல்கள் விவரிக்கின்றன. ஒரு பொருளின் விலை எந்த சதவிகிதத்தில் மாறுகின்றதோ, அதைவிட அதிகமான சதவித அளவில் பொருள்கள் வாங்கப்படின் அந்தப் பொருளுக்குள்ள கிராக்கி நெகிழ்ச்சியுடையது என்று அறிந்துகொள்ளலாம். மாறாக, ஒரு பொருளின் விலையின் மாறுதல் எந்த சதவித அளவில் ஏற்படுகின்றதோ, அதை விடக்குறைவான சதவித அளவில் பொருள்கள் வாங்கப் பட்டால் அப்பொருளுக்குள்ள கிராக்கி நெகிழ்ச்சித் தன்மையற்றது (inelastic) என்று அறிந்து கொள்ளலாம். அதே மாதிரி, ஒரு பொருளின் விலை மாறுதல் எந்த சதவித அளவில் ஏற்படுகிறதோ அதே சதவித அளவில் அப்பொருள் வாங்கப்படுமானால் அப்பொருளுக்குள்ள கிராக்கி "யூனிட்' அல்லது சமநெகிழ்ச்சித் தன்மையுடையது

என்று அறிந்துகொள்ள வேண்டும். உதாரணமாக, சைகிள்களின் விலை 5 சத வீதம் உயர்ந்ததும், கிராக்கி 5 சத வீதத்துக்கு அதிகமாகக் குறைந்தாலும், விலை 5 சத வீதம் குறைந்ததும் கிராக்கி 5 சத வீதத்துக்கு அதிகமாக உயர்ந்தாலும், சைகிளுக்குள்ள கிராக்கி நெகிழ்ச்சித் தன்மையுடையது என்று அறிந்துகொள்ள வேண்டும். மாறாக, அரிசி விலை 5 சத வீதம் உயர்ந்தால் அதற்குள்ள கிராக்கி 5 சத வீதம் குறையாது. அநேகமாக கிராக்கியில் ஒரு குறைவும் ஏற்படாமலே இருக்கும். அல்லது சிறிதளவு, ஒரு சதம் அல்லது 2 சத அளவுக்குக் குறையலாம். அரிசிக்குள்ள கிராக்கி நெகிழ்ச்சித் தன்மையற்றது என்று இதிலிருந்து தெரிகிறது.

பொருளாதார சாஸ்திரத்தில் மட்டுமன்றி, தொழிலஸ்தாபனங்களின் கொள்கை, கோட்பாடுகளிலும், அரசாங்க நிர்வாகங்களிலும் இந்த நெகிழ்ச்சித் தன்மைத் தத்துவம் முக்யத்வம் பெற்றுள்ளது. விவேகமுள்ள எந்த வியாபாரியும் விலையை உயர்த்தினால் கிராக்கி எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை ஆராய்ந்து பார்க்காமல் தான் விற்பனை செய்யும் பொருள்களின் விலையைக் கண்ணைமூடிக் கொண்டு உயர்த்தமாட்டான். அதேபோல் தனது விற்பனைக் குறைந்து லாபமும் குறைந்துவிடும் என்று தோன்றினால் எந்த உற்பத்தியாளரும் தன்னுடைய உற்பத்திப் பொருள்களின் விலையை உயர்த்தத் தயங்கவே செய்வான்.

ஒரு பொருளுக்குள்ள கிராக்கியின் நெகிழ்ச்சித் தன்மைப் பல்வேறு அம்சங்களினால் பாதிக்கப்படுகிறது. இவற்றில் முக்கியமானது உபயோகிப்பவர்களுக்கு அப்பொருள் எவ்வளவு அவசியம் என்பது; அதாவது அதனுடைய **அவசியத்தன்மை.** ஜீவனத்துக்கு இன்றியமையாத அரிசி, கோதுமை போன்ற பொருள்களுக்குள்ள கிராக்கி,

பழவகை போன்ற உப ஆகார இனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நெகிழ்ச்சியற்றத் தன்மையுள்ளதாக இருக்கும். சாதாரணமாக எவ்வளவுக்கெவ்வளவு ஒரு பொருள் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அப்பொருளின் விலை ஏற்றத் தாழ்வினால் உண்டாகும் கிராக்கியின் மாறுதல்களும் குறைவாகவே இருக்கும் என்று பொதுப்படையாகக் கூறலாம். இது ஒரு சாமானிய உண்மை.

இரண்டாவதாக, உபயோகிப்பவர்களின் பழக்க வழக்கங்கள் நெகிழ்ச்சித் தன்மையைப் பாதிக்கும். ஒரு பொருளைச் சில காலம் தொடர்ந்து உபயோகித்து அது பழக்கமாகிவிட்டால், அப்பொருளின் விலை உயர்ந்து விட்டாலும், சிற்சில சமயங்களில் மிக அதிகமாக உயர்ந்து விட்டாலும், கூட, கிராக்கி அதனால் வெகுவாகக் குறைகிறதில்லை. உதாரணமாக, காப்பி, டீ பழக்கப்பட்டவர்கள், விலை அதிகமாக உயர்ந்துள்ள போதும் அவை வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். பல இதரப் பொருள்கள் வாங்குவதை நிறுத்திக் கொண்டாகிலும் தங்களுக்குப் பிரியமான பானத்தை அருந்தவே அவர்கள் ஆவல் கொள்ளுகிறார்கள்.

மூன்றாவது அம்சம் ஒருவனுடைய குடும்பச் செலவில் ஒரு பொருளுக்கு எவ்வளவு செலவு செய்யப்படுவது என்று ஒதுக்கப்படும் தொகை. இதுவும் அப் பொருளுக்குள்ள கிராக்கியின் நெகிழ்ச்சித் தன்மையைப் பாதிக்கும். தனது வருமானத்தில் கணிசமான பகுதியை ஒரு இனத்தில் செலவு செய்தால், உதாரணமாகத் துணிமணிகள், அதற்குள்ள கிராக்கி அதிக நெகிழ்ச்சித் தன்மையுள்ளதாக இருக்கும். அதாவது அவ்வினத்திற்கு விலைவாசி உயர்ந்தால், கிராக்கி குறையும்.

நான்காவதாக, ஒரு பொருள் நீண்ட காலம் உழைக்கக் கூடியதா இல்லையா என்பதைப் பொறுத்தும் அதனுடைய

நெகிழ்ச்சித்தன்மை இருக்கும். சில பண்டங்கள் வெகு சீக்கிரத்தில், குறுகிய காலத்தில் மட்டுமே உபயோகப்பட்டு அழிந்து போகின்றன. உதாரணமாக பழ தினுசுகள். அதிக விலையுள்ள பொருள்கள் என்பதற்காக அவற்றை நீண்ட நாள் வைத்துக் கொண்டிருக்க முடியாது. சில பொருள்கள் சீக்கிரமாகப் பழுதடையமாட்டா. உதாரணமாக பூட்ஸுகள். பூட்ஸுகள் விலை மலிவாக இருந்தால் சிறிது காலம் முன்னதாகவே பழைய பூட்ஸை எறிந்து விட்டுப் புது பூட்ஸ் வாங்கலாம். ஆனால் அதன் விலை மிக அதிகமாக உயர்ந்து போனால் பழைய பாதரக்ஷைகளையே பழுது பார்த்து மேலும் கொஞ்ச காலத்துக்கு உபயோகிக்கிறார்கள். அதாவது புது பூட்ஸுகளுக்குக் கிராக்கிக் குறையும்.

கடைசியாக, ஒரு பொருளுக்கு ஏறக்குறைய அதே மாதிரி உபயோகப்படக்கூடிய மாற்றுப் பொருள்கள் கிடைக்கும் வாய்ப்புகளை அனுசரித்தும் கிராக்கியின் நெகிழ்ச்சித் தன்மை பாதிக்கப்படும். பட்டுத் துணிவகைகள் விலை மலிவாக இருந்தால் மக்கள் அவற்றை வாங்க முற்படுவார்கள். அவை விலை உயர்ந்து விட்டால், ஜனங்கள் நூலாடைகள் வாங்குவதிலேயே அதிக நாட்டம் செலுத்துவார்கள்.

இதுவரையில் கிராக்கியால் ஏற்படும் மாறுதல்களை வாங்குபவர்கள் அல்லது உபயோகிப்பவர்கள் நோக்கிலிருந்தே கவனித்தோம், பண்டங்களின் விலை,ஏற்றத் தாழ்வினால் உபயோகிப்பவர்கள் எவ்வாறு பாதிக்கப் படுகிறார்கள் என்று பார்த்தோம். அது மட்டும் போதாது. பொருள்களை வழங்கும் உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் கூட முக்கியமானவர்கள். அவர்களுடைய நிலையிலிருந்தும் இவ் விஷயத்தைக் கவனிக்க வேண்டும்.

## பொருள் வழங்கு நியதி (Supply)

எவ்விதமான கட்டுப்பாடு மின்றி போட்டி நிலவும் சூழ்நிலையில் பொருள்களை வழங்குபவர்கள் எவ்வாறு நடந்து கொள்ளுகிறார்கள்? விலைவாசிகள் உயர்ந்தால் உற்பத்தி செய்பவர்கள் அதிகமாக அப்பொருள்களை உற்பத்தி செய்ய முன் வருகிறார்கள் என்பது பொதுவாக எங்கும் காணப்படும் சம்பவம். அதிக உற்பத்தி, ஏற்கெனவே இருக்கும் சாதனங்களைக் கொண்டே நிகழக்கூடும். அல்லது புது உற்பத்தியாளர்கள் தொழிலில் பிரவேசித்து சப்ளையைப் பெருக்கலாம். உதாரணமாக, ஜவுளி தினுசுகளுக்குக் கிராக்கி அதிகமாக இருந்து விலைவாசிகளும் உயர்வாக இருந்தால், ஜவுளி ஆலைகள் மேலும் ஒரு "ஷிப்டு" அதிகமாக வேலை செய்வதன் மூலம் உற்பத்தியை அதிகரித்து விடும். அப்படிச் செய்தும் கிராக்கியைப் பூர்த்தி செய்ய முடியவில்லையென்றால் புது ஆலைகள் நிர்மாணிக்கப்படும். அதே போல் விலைவாசிகள் வேகமாகச் சரிந்து விட்டால் ஆலைகள் ஷிப்டு முறையைக் குறைத்து உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளுவார்கள். அல்லது, ஆலைகளைச் சில காலத்துக்கு மூடி விடுவார்கள். இதுதான் சப்ளை சம்பந்தப்பட்ட சாதாரண விதி. அதாவது, இதர அம்சங்களில் எவ்வித மாறுதல்களுமில்லாத சூழ் நிலையில், ஒரு பொருளின் விலை உயர உயர, அதன் சப்ளை அதிகரிக்கிறது; மாறாக, அதன் விலை குறையக்குறைய அதன் சப்ளை சுருங்குகிறது.

கிராக்கிக்குச் சொன்ன நெகிழ்ச்சித் தன்மை சப்ளைக்கும் உண்டு. விலைவாசிகளில் சிறிது மாறுதல் ஏற்பட்டாலும்கூட (உயர்வோ தாழ்வோ) சப்ளையில் (பெருக்கமோ அல்லது சுருக்கமோ) கணிசமாக ஏற்பட்டால், அப்பொருளின் சப்ளை அதிக நெகிழ்ச்சித் தன்மையுடையது என்று சொல்லப்படும். மாறாக, மிகக் கணிசமான (உயர்

வோ தாழ்வோ) விலை மாறுதல்கள் ஏற்பட்டாலும்கூட சப்ளையின் நிலைமையில் (சுருக்கமோ, பெருக்கமோ) விசேஷமான மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லையானால், அப் பொருளின் சப்ளை நெகிழ்ச்சித் தன்மையற்றது என்று சொல்லப்படும்.

விலைவாசிகளின் மாறுதல்களால் மட்டும் சப்ளையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு மாற்றங்களைத் தவிர, அதைப் பாதிக்கும் இதர அம்சங்களும் இருக்கின்றன. உற்பத்தி முறைகளில் புதுக் கண்டுபிடிப்புகளாலும், முறை மாறு பாடுகளினாலும், நுட்ப யந்திர சாதனங்களின் உதவி யாலும், உற்பத்தியின் அளவு கணிசமாக பாதிக்கப்பட லாம். தொழிற் சாலைகளில் இம்மாதிரி மாறுதல்கள் நிகழ் வதைக்காணலாம். விவசாயப் பகுதியில் பருவ நிலை விசேஷமாக உற்பத்தியைப் பாதிக்கும். ஒருஆண்டு உருளைக் கிழங்கு அமோகமாக விளைந்துவிடும்; மறு ஆண்டு ஒன்று மில்லாமலும் போகக் கூடும்.

## உற்பத்தி விலை என்பது என்ன?

பொருள்களுக்குள்ள கிராக்கியை, வாங்குபவர்களுக்கு அப்பொருள்களினால் கிடைக்கும் உபயோகம் எவ்வாறு இயக்கும் சக்தியாக அமைந்திருக்கிறதோ, அதே போல் சப்ளையில் மாறுதல்களை உண்டாக்கி அதை இயக்கும் சக்தி உற்பத்தி விலை. "உற்பத்தி விலை" என்று சொல்லும் போது, ஒரு பொருளை உண்டாக்குவதற்கு, அல்லது ஒரு சேவையை வழங்குவதற்கு, என்னென்ன தியாகங்கள் எந் தெந்த முறையில் செய்யப்படுகின்றனவோ அவைகளுக்கு நாணய விகிதத்தில் மதிப்பிட்டு வரும் கூட்டுத்தொகை என்ற கருத்துதான் அதில் அடங்கியுள்ளது. இதையே வேறு முறையாகச் சொன்னால். உற்பத்தியில் ஈடுபட்டுள் ளப் பல்வேறு உபகரணங்களுக்கும் சேவைக்கும் கொடுக்க

படும் பணமும், யந்திரங்களைப் பழுதற்ற நிலைமையில் வைத்துக் கொள்ளத் தேய்மான நிதியும் விகிதாசாரப்படிக் கூட்டி வருவதே அப்பொருளின் உற்பத்தி விலை. உற்பத்தி விலையில் அடங்கியுள்ள இனங்களில் முக்கியமானவை தொழிலாளிகளின் ஊதியம், மூலதனத்துக்கு வட்டி, வாடகை, மூலப் பொருள்களின் விலை, பராமரிப்புச் செலவு, நிர்வாகத்தின் சம்பளச் செலவு, தேய்மான அம்சம் முதலியன. உற்பத்தி விலையைப் பற்றிக் கூறும்போது அதில் இரண்டுவித விலைகள் அடங்கியுள்ளன: ஒரு பகுதி நிரந்தரமான, விலைகள் (**Fixed costs**); மற்றொன்று மாறுபடும் விலைகள். (**Variable costs**). மாறுபடும் விலைகள் உற்பத்தியின் மொத்த அளவு அதிகமாகவோ குறைவாகவோ ஏற்றத்தாழ்வு அடையும் போது, விலையும் அதற்கேற்ப உயர்ந்தும் தாழ்ந்தும் மாறும். முக்கியமாக இவை தொழிலாளிக் கூலியும் கச்சாப் பொருள்களின் விலையும் சேர்ந்த அம்சமாக இருக்கும். ஆனால் நிரந்தரமான (நிலையான) விலைகளில் உற்பத்தியை அனுசரித்து மாறுதல்கள் நிகழா. வாடகை, வட்டி, நிர்வாகச் செலவு, மேற்பார்வையாளர்களின் சம்பளங்கள் முதலியன நிரந்தரச் செலவைச் சேர்ந்தவை. எப்படியும் முடிவில் இந்த இரண்டு இனச் செலவுகளையுமே உற்பத்தி செய்த பொருள்களை விற்கும் விலையிலிருந்து தான் பெறவேண்டும்.

உற்பத்தியாளர்கள் விலையின் போக்கை அனுசரித்து உற்பத்தியின் அளவைக் கூட்டவோ குறைக்கவோ செய்கின்றனர். அதே போல் தாங்கள் உற்பத்தியைப் பெருக்குவதா கூடாதா என்று நிச்சயம் செய்வதன் மூலம் உற்பத்தியாளர்கள் விலையின் போக்கை மாற்றவும் செய்கிறார்கள். இப்படி இவ்விரண்டும் ஒன்றை யொன்று மாறி மாறி பாதிக்கும் தன்மையுடையவை. எந்த சமயத்திலும் நிலவும் விலைவாசிகள் குறைந்த பட்சம் உற்பத்தி விலைக்குக்

குறையாமல் இருக்கவேண்டும். பொதுவாக மார்க்கெட் விலைகளுக்குக் குறைவான அடக்க விலையில் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தியாளர்கள் சிலர் எப்போதும் இருப்பார்கள். அவர்களுக்குச் சுலபமாக லாபம் கிடைத்து விடும். ஆனால் சில உற்பத்தியாளர்கள் லாபமே கிடைக்காத, அல்லது பேருக்குச் சிறிது லாபம் மட்டுமே கிடைக்கும்படியான நிலைமையிலிருப்பார்கள். அவர்களை "எல்லைப்புற" உற்பத்தியாளர்கள் என்று சொல்லுவார்கள். நிலவும் விலை சிறிது குறைந்தாலும், இம் மாதிரி எல்லைப்புற உற்பத்தியாளர்களுக்கு நஷ்டம் வந்துவிடும். இதைத் தவிர்க்க உற்பத்தித் தொழிலிலிருந்து விலகவேண்டியும் வரலாம். அவ்வாறு நேர்ந்தால் அந்த அளவுக்கு உற்பத்திக் குறைவு உண்டாகும். சப்ளை குறைவதால் விலை சிறிது உயரும். எல்லைப்புற உற்பத்தியாளர்கள் நஷ்டத்தைத் தவிர்த்துக் கொள்ளுவார்கள். பெரும்பாலும் விலை சரியும் போதெல்லாம் உற்பத்தியாளர்கள் உற்பத்தியைத் தற்காலிகமாக எந்த அளவுக்கு குறைத்தால், சிறிது லாபத்துக்காகவாவது விற்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைத்துக்கொள்வார்கள். இவ்வாறு சப்ளை நிலைமையில் மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும்,

## அத்தியாயம்—5

# விலைகள்

ஒரு பொருளின் விலை அதனுடைய சப்ளை நிலை, அப்பொருளுக்குள்ள கிராக்கி இவ்விரண்டுக்குமுள்ள அன்னியோன்னிய சம்பந்தத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது. மார்க்கெட்டில் ஒரு பொருளின் விலை எவ்வாறு நிர்ணயமாகிறது என்ற செயல் முறையை, விலைகளின் ஏற்றத்தாழ்வினால் சப்ளையும் கிராக்கியும் எப்படி மாறுதல் அடைகின்றன என்பதன் மூலம், விளக்கி வைக்கலாம். உதாரணமாக, ஒரு மணங்கு சர்க்கரையின் விலைக்கும் அந்த விலையில் எத்தனை மணங்கு வாங்கப்படுகிறது என்பதற்குமுள்ள சம்பந்தத்தையும் அதே விலையில் எத்தனை மணங்கு சர்க்கரையை உற்பத்தி செய்பவர்கள் விற்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதற்குமுள்ள சம்பந்தத்தையும் கவனிக்கலாம்.

| ஒரு மணங்கு சர்க்கரை விலை கீழ்க்கண்டபடி இருந்தால் | வாங்குபவர்கள் வாங்கத் தயாராக இருக்கும் அளவு | விற்பவர்கள் விற்கத் தயாராக அளிக்க முன்வரும் அளவு |
|---|---|---|
| ரூபாய் கணக்கில் | மணங்குக் கணக்கில் | மணங்குக் கணக்கில் |
| 15 | 80 | 0 |
| 16 | 60 | 2 |
| 18 | 55 | 6 |
| 20 | 54 | 9 |
| 22 | 48 | 13 |
| 24 | 36 | 25 |
| 28 | 30 | 38 |

இரண்டாவது பத்தியில் கொடுக்கப்பட்டுள்ளது கிராக்கியின் அட்டவணை. மூன்றாவது பத்தியில் கொடுக்கப்பட்டிருப்பது சப்ளையின் அட்டவணை.

### விலையின் சமநிலை

மேலே மூன்று பத்திகளிலும் கொடுத்துள்ள அட்டவணையிலிருந்து மார்க்கெட் விலை 24 ரூபாய்க்கும் 28 ரூபாய்க்கும் இடையில் இருக்கவேண்டுமென்று புலனாகும். 24 ரூபாய் அளவில் கிராக்கி அதிகமாகவும் சப்ளை குறைவாகவும் இருக்கிறது. ஆனால் 28 ரூபாய் விலையில் சப்ளை அதிகமாகவும் கிராக்கிக் குறைவாகவும் இருக்கிறது. வாங்குபவர்களும் விற்பவர்களும் தங்களுக்குள் பேரம் பேசிக்கொண்டே சென்றால் ஒரு நிலையில் கிராக்கியும் சப்ளையும் ஒன்றுக்கொன்று சமம் என்ற கட்டம் வரும். மேலே கொடுத்துள்ள உதாரணத்திலிருந்து அந்தச் சமநிலை ஏறக்குறைய :26 ரூபாய் விலையில் ஏற்படுகிறது என்று தெரியும். எப்படி? 26 ரூபாய் விலையில் மொத்த கிராக்கியின் அளவு 34 மணங்குகள்; அதாவது அந்த விலையில் 34 மணங்கு வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கின்றனர். விற்பனை செய்பவர்களும் 34 மணங்கு இந்த விலையில் விற்க முன்வருகின்றனர் ஆகவே 26 ரூபாய் விலையில்தான் சர்க்கரையின் அந்த சமயத்துக்கு கிராக்கிக்கும் சப்ளைக்குமுள்ள சமநிலை. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலையை "சமநிலைவிலை" (Equilibrium price) என்பர், இதில் கவக்கனி வேண்டிய முக்கியமான விஷயம் கிராக்கி மட்டும், அல்லது சப்ளை மட்டும் விலையைத் தனித்து நிர்ணயிப்பதில்லை என்பதுதான். சப்ளையும் கிராக்கியும் சேர்ந்தே விலையை நிர்ணயிக்கின்றன. தேவைகளிலிருந்து தோன்றிய கிராக்கிக்கும் உற்பத்தியிலிருந்து தோன்றிய சப்ளைக்குமிடையே உள்ள சமநிலையே மார்க்கெட்டில் குறித்த காலத்தில்

நிலவும் விலையை நிர்ணயிக்கிறது. சில சமயங்களில் கிராக்கியின் வேகம் தீவிரமாக இருக்கும், மற்றும் சில சமயங்களில் சப்ளையின் வேகம் சுறுசுறுப்பாக இருக்கும். இவ்விரண்டின் வேகமும் விலையை நிர்ணயிப்பதில் செயல்படுகின்றன.

## விலையும் காலமும்

ஒவ்வொரு பொருளுக்குள்ள கிராக்கி சப்ளை நிலை இவ்விரண்டையும் பாதிக்கக்கூடிய அம்சங்கள் பல இருந்தாலும், விலையின் போக்கைப் புரிந்துகொள்ளுவதற்கு அப்பொருளின் தன்மையையும் கால அளவின் முக்கியத்வத்தையும் ஆராய்ந்து தெரிந்துகொள்ளுவது அவசியம், உதாரணமாக, பல விற்பனையாளர்கள் முட்டைகளை விற்பதற்காக மார்க்கெட்டுக்குக் கொண்டுவருகிறார்கள், அன்றையதினத்திற்கு முட்டைகளின் சப்ளை அவர்களிடம் எவ்வளவு இருக்கின்றனவோ அவ்வளவு மாத்திரமே. அன்றையதினத்தில் முட்டைக்குக் கிராக்கி எதிர்பார்த்தபடி மிகத் தீவிரமாக இருந்தால், வாங்குபவர்களுக்கிடையே காணும் பலத்த போட்டியின் விளைவாக கைவசமுள்ள முட்டைகளுக்கு விலை வேகமாக உயரும், அதேபோல், எந்தக் காரணத்தினாலாவது, அன்றையதினம் முட்டைகளுக்குக் கிராக்கி மிகக் குறைவாக அல்லது முற்றிலுமே இல்லாது போனால் கைவசமுள்ள முட்டைகளுக்கு விலை குறைந்துவிடும்.

அன்றையதினம் காணப்பட்ட கிராக்கிக் குறுகிய கால சம்பவமாக இராமல் தொடர்ந்து இருக்குமானால் அதிக விலை கிடைக்கிறதென்ற காரணத்தினால் கோழிப்பண்ணை வைத்திருப்பவர்கள் மேலும் அதிகமாகப் பெட்டைக் கோழிகளை வளர்த்து முட்டைகளின் சப்ளையை அதிகரிக்க

முற்படுவார்கள், மார்க்கெட்டுக்கு முட்டை அதிகமாக வரத் தொடங்கியதும் விலையும் படிப்படியாகக் குறையும்.

இவ்வாறு செய்து முட்டைகளின் சப்ளையை அதிகரிக்கச் செய்வதற்கு நீண்டகாலம் பிடிக்குமல்லவா? இதைத்தான் **கால அம்சம் (Time Factor)** என்று விவரிக்கப்படுகிறது. விலைகள் நிர்ணயிக்கப்படும் விஷயத்தில் பொருளாதாரவல்லுநர்கள் இக்கால அம்சத்தை மூன்றாகப் பாகுபாடு செய்கின்றனர்—குறுகிய காலம், மத்திம காலம், நீண்ட காலம், என்று பொதுவாக இந்தப் பாகுபாடு வகுக்கப்பட்டிருக்கிறது. இதை நிச்சயமாக நிர்ணயித்து எது குறுகிய காலம், எது மத்திமகாலம் என்று வரையறை செய்வது கஷ்டம். இந்தக் கால அளவு என்பது கிராக்கியில் ஏற்படும் மாறுதல்களிலும், உற்பத்தி விலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளினாலும் அந்தந்தப் பொருளின் சப்ளையைப் பெருக்குவதிலோ குறைத்துக்கொள்ளுவதிலோ உற்பத்தியாளர்களுக்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதைப் பொறுத்துள்ளது. எந்தக்காலத்திற்குள் உற்பத்தியின் அளவை அதிகரிக்கவோ குறைக்கவோ முடியாதோ, அல்லது புது உற்பத்தியாளர்கள் உற்பத்தியில் ஈடுபட முடியாதோ, அதைக் குறுகிய காலம் என்பர். மத்திமகாலத்தில், உற்பத்தியை ஓரளவுக்கு மாற்றிக் கொள்வது சாத்தியமாகும். ஆனால் தொழிற்சாலையின் ஏற்கனவேயுள்ள யந்திர சாதனங்களின் திறமைக்கேற்ப அதற்குட்பட்டே இம்மாறுதல்கள் நிகழக்கூடும். உதாரணமாக, ஜவுளி வகைகளுக்கு கிராக்கி அதிகரித்தால் இரண்டு ஷிப்டுகள், அல்லது மூன்று ஷிப்டுகள் வேலை செய்து ஆலைகளை அதிகரிக்காமலே உற்பத்தியை அதிகரிக்க முடியும். இவ்வாறு சுலபமாக மாறுதல்கள் செய்யக்கூடிய காலத்தை மத்திமகாலம் என்பர். நீண்டகாலம் என்பது யந்திர சாதனங்களை மாற்றுவதன் மூலம் உற்பத்தியின் அளவைக் கணிசமாகக் குறைக்கவும் அதிகரிக்கவும் செய்வ

தற்கு வேண்டிய கால அளவு. இந்த நீண்டகாலத்தில் பழைய யந்திர சாதனங்கள் எல்லாம் தேய்ந்து போய் புதுப்பிக்கவேண்டிய நிலை ஏற்படலாம். அல்லது புது மாதிரி யந்திர சாதனங்கள் வருவதற்கு ஆரம்பித்துவிட்ட காரணத்தால் பயனற்றுப்போகலாம். இம்மாதிரி நிலையில் புது யந்திரங்கள் கொணர்ந்து தொழிற் கூடத்தையே புதுப்பிக்கவும் செய்யலாம்.

குறுகிய கால அளவில் வாங்குபவர்களுக்கும் விற்ப வர்களுக்குமிடையே எவ்விதக் கட்டுப்பாடுமின்றி போட்டி யுள்ள நிலையில் கிராக்கியும் சப்ளையும் அதனதன் வேகத் துக்கேற்ப சம நிலை அடைந்து நிற்கும் விலையைத்தான் மார்க்கெட் விலை என்று கூறப்படும். நீண்ட காலப் போக் கில் உற்பத்தி சாதனங்களில் போதிய மாறுதல்களைப் புகுத்தி யந்திரங்களைப் புதுப்பித்து அல்லது மாற்றி உற் பத்தியை பெருக்கவோ அல்லது மாற்றவோ போதிய அவ காசம் இருக்கும் போது எந்த நிலையை நோக்கி மார்க்கெட் டில் விலை எடுத்துச் செல்லப்படுமோ அதற்கு சகஜ விலை (Normal Price) என்று பெயர். இது நீண்ட கால சம நிலை. முதலில் கூறியது குறுகிய கால சம நிலை. இவ்விரண்டுக் கும் இடையே உள்ள மத்திம காலத்தில் சம நிலை விலை என்பது ஏற்கனவே யுள்ள சாதனங்களைக் கொண்டு உற் பத்தியில் மாறுதல்கள் ஏற்படும் போது எந்த திசை அல்லது கட்டத்தை நோக்கி விலை நகருகிறதோ அதைக் கூறவேண்டும்.

குறுகிய காலத்தில் சாதாரணமாக, கிராக்கியின் வேகம் சப்ளையின் வேகத்தைவிட அதிகமாக விலை நிர்ண யத்தைப் பாதிக்கும். நீண்ட காலத்தில் இந்த நிலைமை மாறு படுகிறது. கிராக்கியின் தன்மைக்கு ஏற்ப சப்ளையில் மாறு தல்கள் ஏற்படுவதற்கு போதிய அவகாசம் இருக்கிறது. கிராக்கி அதிகரித்தால் அதிக சாதனங்கள் உற்பத்திப்

பெருக்கில் ஈடுபட முடிகிறது. கிராக்கி நிரந்தரமாகக் குறைந்தால் சாதனங்கள் உற்பத்தியிலிருந்து விலகிக் கொள்ளவும் முடியும். இதையே வேறு முறையில் சொல்ல வேண்டுமானால், மார்க்கெட் விலையைப் பெரும்பாலும் கிராக்கியின் வேகம் நிர்ணயிக்கிறது, சகஜவிலையை சப்ளையின் (உற்பத்தியின்) வேகம் நிர்ணயிக்கிறது, எனலாம். சகஜவிலையை நிர்ணயிப்பதில் உற்பத்தி விலை அல்லது அடக்க விலைதான் முக்கிய இடம் பெறும்.

## விகித மாறுதல்களின் தத்துவம்

ஒரு பொருளின் நீண்டகால சகஜ நிலை விலைக்கும் குறுகிய கால-மார்க்கெட் விலைக்கும் நெருங்கிய சம்பந்தமிருப்பதால், நீண்டகால சகஜ நிலை விலையை எந்த அம்சங்கள் எவ்வாறு பாதிக்கின்றன என்று தெரிந்து கொள்ளுவது அவசியம், நீண்ட கால அவகாசத்தில் ஒரு உற்பத்தியாளர் உற்பத்தி முறையையே மாற்றிக் கொள்ள முடியும். உதாரணமாக, சைகிள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒரு தொழிலதிபர், உற்பத்தியை 10,000 த்திலிருந்து 50,000-க்குப் பெருக்கவேண்டுமென்று விரும்புகிறார் என்று வைத்துக்.கொள்ளுவோம். தானாக இயங்கும் புது முறை யந்திர சாதனங்களைக் கொணர்ந்து அதிக ஆட்களில்லாமல் குறைந்த எண்ணிக்கைத் தொழிலாளிகளைக் கொண்டே உற்பத்தியை விஸ்தரிக்கலாம். அல்லது யந்திர சாதனங்களைக் குறைவாக உபயோகித்து அதிக தொழிலாளிகளைக் கொண்டு உற்பத்தியை அதிகரிக்கக் கூடும். உற்பத்தி லட்சியத்தை நிறைவேற்ற அவருக்கு எவ்வளவு மூலதனம், எவ்வளவு உழைப்புச் சக்தி, எவ்வளவு யந்திர சாதனங்கள் உபயோகித்தால் சிக்கனமாக முடியும் என்று நிர்ணயித்துக் கொள்ளவும் வாய்ப்புகள் இருக்கின்றன. யந்திரங்கள், உழைப்பு இவ்விரண்டு உபகரணங்களையே எதை எந்த

விகிதத்தில் அமைத்துக் கொள்ளலாம் என்று நிச்சயிக்கவும் அவருக்கு வாய்ப்பு இருக்கிறது, எந்த விகிதத்தில் இந்த உபகரணத்தை வகுத்துக் கொண்டால் உற்பத்தி விலையை மிகக் குறைவாகச் செய்து கொள்ள முடியுமோ அந்த விகிதத்தில் இவற்றை அமைத்துக் கொள்ளுவார் திறமையுள்ள தொழிலதிபர். இவ்விகிதத்தை அவர் தமக்கு நிர்ணயித்துக் கொள்ளும் போது ஒரு தத்துவத்தின் அடிப்படையிலேயே அதை நிர்ணயிக்கிறார். அதாவது மூலதனம், உழைப்பு இவ்விரண்டு இனங்களையும் குறிப்பிட்ட உற்பத்தி லட்சியத்தை அடைய எந்த விகிதத்தில் வேண்டுமானாலும் நிர்ணயித்துக் கொள்ளலாம்; ஆனால் குறிப்பிட்ட சிலவிகித அளவில் நிர்ணயித்துக்கொள்ளுவதன் மூலம், மாற்று விகித சேர்க்கையினாலாவதைவிடக் குறைந்த அடக்க விலையில் உற்பத்தி நிகழும். இதைக்கருத்தில் கொண்டுதான் விகிதங்களை அவர் நிர்ணயம் செய்வார்.

குறைந்த விலையில் ஒரு பொருளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற மேலே சொன்ன லட்சியம் ஆரம்பத்திலேயே அடையக் கூடியது அல்ல. பல தவறுதல்கள் புரிந்து, பல பரிசோதனைகள் நிகழ்த்திப்பின்னரே நடைமுறையில் விகிதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே, ஒரு உற்பத்தியாளர்தான் உற்பத்திசெய்து வழங்கும் பொருளின் சப்ளையை கிராக்கியின் போக்கை அனுசரித்து மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும் போது தன்னுடைய தொழில் எந்த சூழ் நிலையில் எத்தன்மையதாக அமைந்திருக்கிற தென்பதையும் எவ்வாறு எந்த அம்சத்தில் மாறுதல் செய்தால் அடக்கவிலை குறையும், முடிவில் தொழில் எவ்வாறு இயங்கும் என்பதையும் ஆழ்ந்து கவனிக்க வேண்டும், தொழில் விரிவடையும் போது சிற்சில சமயங்களில் செலவிடப்படும் ஒவ்வொரு அளவு (Unit), உழைப்புச் சக்திக்கும் மூலதனத்துக்கும் நல்ல பிரதி பலன்

அதாவது லாபம் கிடைக்கும். சில சமயங்களில் அதற்கு ஏற்ற பலன் கிடைக்காமல் போகும். அதாவது லாபம் குறையும். மற்றும் சில சந்தர்ப்பங்களில் உழைப்பிற்காகவும் மூலதனத்திற்காகவும் செய்யப்படும் செலவும் கிடைக்கும் பலனும் சமமாகவே இருக்கும். இந்த மூன்று சந்தர்ப்பங்களுக்கேற்ப மூன்றுவித பலன்களை ஒரு விதியாகவே பொருளாதார நூல்கள் விவரிக்கின்றன. முதலாவது அதிக பிரதி பலனைத் தொடர்ந்து அளிக்கும் நியதி (**Law of Increasing Returns**: இரண்டாவது குறைந்து கொண்டே செல்லும் பிரதி பலனை அளிக்கும் நியதி (**Law of Diminishing**) மூன்ருவது சமபலனை அளிக்கும் நியதி (**Law of Unit Returns**) நீண்ட கால அளவில் ஒரு பொருளின் உற்பத்தியும் விலையும் எந்த விதமாக மாறுதல் அடையக் கூடும் என்பதைக் கண்டுகொள்ள, குறிப்பிட்ட அந்தத் தொழில் எந்தப் பிரதிபலன் நியதியின்படி இயங்குகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதிகப் பிரதி பலனை தொடர்ந்து அளிக்கும் நியதியைக் கீழ்க் கண்டபடி விவரிக்கலாம்:—

வெவ்வேறு உபகரணங்களை இணைத்து உற்பத்தியில் ஈடுபடுத்தும் போது ஒரு உபகரணத்தின் விகிதத்தை மட்டும் ஓரளவு வரையில் அதிகரித்துக் கொண்டே சென்ருல் அந்த உபகரணத்தின் உதவியினுல் கிடைக்கும் பொருள் உற்பத்தியும் அதிகரிக்கும். இந்த நியதியின் வலுவினுல் உற்பத்திப் பெருகப் பெருக ஓரளவு வரையில் உற்பத்திப் பொருள் ஒவ்வொன்றின் உற்பத்தி விலை குறைந்து கொண்டே செல்லும், உதாரணமாக மக்களின் வருமான உயர்வினுல் அல்லது ஜன சங்கியை அதிகரிப்பதால் ஜவுளி வகைகளுக்குக் கிராக்கி அதிகரிக்கிற தென்று வைத்துக் கொள்ளுவோம். கிராக்கி அதிகமாவதால் ஜவுளிவகைகளின் விலைகள் உயரும். விலை உயர்வினுல் உற்பத்தியைப் பெருக்க

வாய்ப்புகள் உண்டாகும். ஜவுளி ஆலைகள் அதிகப் பிரதி பலனைத் தொடர்ந்து அளிக்கும் நியதியின்படி இயங்கினால், உற்பத்தி விஸ்தரிக்கப்படும்போது ஒரு கெஜம் துணியின் உற்பத்தி விலை குறையும். உற்பத்தி விலை குறைவதால் துணி மணிகளின் விற்பனை விலையை உற்பத்தியாளர்கள் குறைக்க முன் வருவார்கள். அதன் மூலம் கிராக்கியும் உயரும்; விற்பனையையும் அதிகரித்துக் கொள்ளுவார்கள். விலை உயர்விலிருந்து ஆரம்பித்த இந்த நிகழ்ச்சித் தொடர் முடிவில் விலை குறைவிற்கு இட்டுச் செல்லுகிறது. இதிலிருந்து அதிகப் பிரதி பலன் அல்லது குறைந்த உற்பத்தி விலை என்னும் நியதிக்குட்பட்டு செயல் புரியும் தொழில்களில் **சகஜ விலை** நாளடைவில் குறையவே செய்யும்.

இவ் விதிக்கு மாருக, குறைந்த பிரதி பலனை அளிக்கும் நியதிக்குட்பட்டு செயல் புரியும் தொழிலும் இருக்கலாமல்லவா? இங்கே பிரதிபலன் குறைவு; உற்பத்தி விலை உயர்வு. விவசாயத் துறையில் இந்த நியதியை முதன் முதலில் கண்டனர். குறிப்பிட்ட ஒரு துண்டு நிலத்திலிருந்து மகசூலை அதிகரிப்பதற்காக உழைப்பையும் மூலதனச் செலவுகளையும் படிப் படியாக உயர்த்திக் கொண்டே சென்றனர். ஆனால் ஒவ்வொரு தடவை இவை அதிகரிக்கப்படும் போதும் அதனதனிலிருந்து கிடைத்த பலன் செலவுக்குத்தக்கவாறு இல்லை. குறைந்தே இருந்தது. செலவு அதிகம்; பலன் குறைவு. குறைந்த பிரதி பலனை அளிக்கும் நியதியைக் கீழ்க் கண்டவாறு கூறலாம்:—

“வெவ்வேறு உபகாரணங்களைச் சேர்த்து உற்பத்தியில் ஈடுபடுத்தும் போது ஒரு உபகரணத்தின் அளவை மட்டும் ஓரளவு வரையில் அதிகரித்துக் கொண்டே சென்றால், அந்த உபகரணத்தின் உதவியால் மட்டும் கிடைக்கும் சராசரி உற்பத்தி குறையும்.” உதாரணமாக, ஒரு துண்டு நிலத்துக்குப் போடப்பட்ட ரசாயன உரத்தைப் படிப்படியாக

உயர்த்திக் கொண்டு சென்றால் ஒவ்வொரு உயர்விலிருந்தும் கிடைக்கக்கூடிய மகசூலின் அளவு படிப்படியாகக் குறைந்து கொண்டே வரும். ஒரு கட்டத்தில் உரத்திற்கான செலவும் மகசூலின் மதிப்பும் ஒன்றாகவே, அல்லது மகசூல் குறைவாகவும் செலவு அதிகமாகவும், இருக்கும்.

சில தொழில்களும், வெவ்வேறு கட்டங்களில் பல தொழில்களும் சமபலன் நியதிக்குட்பட்டு இயங்கும். இந்த நியதியின்படி, உற்பத்தியில் அளவு எத்தன்மையதாயினும், அத்தொழிலில உற்பத்தியாகும் பொருளின் விலை ஏற்றத் தாழ்வின்றி சமமாகவே இருக்கும்.

இவ்விஷயத்தைப்பற்றி இதுவரையில் கூறியதிலிருந்து "ஒரு பொருளுக்குக் கிராக்கி அதிகரித்தால், அதன் விலை உடனே உயர ஆரம்பிக்கும், ஆனால் முடிவில் விலை உயர்ந்து நிற்பதும், குறைந்து போவதும், அல்லது ஒரே நிலையில் இருப்பதும், அந்தத் தொழில் முறையே குறைந்த பலனை அளிப்பது, அல்லது உயர்ந்த பலனை அளிப்பது அல்லது சமபலனை அளிப்பது என்ற நியதிகளில் எந்த நியதியின் படி இயங்கிக் கொண்டிருக்கிற தென்பதைப் பொருத் திருக்கும்" என்பது விளங்கும்.

இந்த விஷயத்தைப் பற்றி இதுவரையில் விவாதிக்கும் போதெல்லாம் எந்த நிலையிலும் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாமல் போட்டியின் வேகம் முழுவதும் செயல் புரியும் சூழ் நிலையை வைத்தே உதாரணங்களும், நியதிகளும் விளக்கப்பட்டன. உற்பத்தியாளர்களும் பலர் இருக்கின் றனர்; வாங்குபவர்களும் பலர் உள்ளனர். கிராக்கியின் வேகம், சப்ளையின் வேகம் இரண்டுமே பூரணமாக இயங்கு கின்றன. இந்நிலைக்கு மாறாக ஒரே ஒரு உற்பத்தியாளர் இருந்தால் என்னவாகும் என்பதை இப்போது கவனிக் கலாம்.

## ஏகபோக உரிமை நிலையில் விலை நிர்ணயம்

எந்த சூழ் நிலையில் ஒரு பொருளை விற்பனை செய்பவர் ஒருவர் மட்டுமே இருக்கிறாரோ அந்தச் சூழ்நிலை ஏகபோகச் சூழ்நிலை எனப்படும். சாதாரண வழக்கில் போட்டாப் போட்டி பூரணமாக உள்ள சூழ் நிலைக்கு நேர் மாறான சூழ் நிலை ஏகபோக சூழ்நிலை என்று எண்ணப்படுகிறது. ஆனால் முற்றிலும் ஏகபோக உரிமை யுள்ள சூழ் நிலை வெகுவாகக் காணப்படுவதில்லை. எந்த ஏகபோக சூழ்நிலையிலும் ஓரள ளவுக்குப் போட்டி இருக்கவே செய்யும். எந்தப் பொருளை ஏகபோக உரிமையாளர்கள் வழங்குகிறார்களோ அப்பொரு ளுக்கு மாற்றுப் பொருள்கள் இருக்கக் கூடும். இம்மாதிரி மாற்றுப் பொருள்கள் தரக் குறைவாக இருப்பின் ஏக போகக்காரர் அதிக கவலை கொள்ளமாட்டார். ஆனால் உயர்தரப் பொருள்களாக அவை இருந்து விட்டால். அவர் வாளா இருக்க முடியாது. எப்படியும் மாற்றுப் பண்டங் களிலிருந்து ஓரளவுக்குப் போட்டி இருக்கக் கூடும் என் பதை அங்கீகரிக்கவே வேண்டும். உதாரணமாக, இன்டர் நேஷனல் நிக்கல் கார்ப்புரேஷன் என்னும் கானடா தேசத் திய ஸ்தாபனம் உலகத்திலுள்ள நிக்கல் உலோகத்துக்கெல் லாம் ஏகபோக உரிமை படைத்துள்ளது. எனினும் மாற்று உலோகங்கள் அதே உபயோகத்தைக் கொடுக்கும் தன்மை யுள்ளதாக இருப்பதால் அவற்றினிடமிருந்து போட்டியை எதிர் பார்க்கவே நேருகிறது. அதேபோல ரஸ்தா போக்குவரத்து பஸ் முழுவதையும் தேசிய மாக்கி ஏகபோ உரிமை ஸ்தாபித்துவிட்டாலும் டாக்ஸிகள், வண்டிகள் போன்ற இதர சாதனங்களினால் ஓரளவுக்குப் போட்டி இருக்கவே செய்யும். பூரணமான ஏகபோக உரிமையுள்ள நிலைக்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால் உற்பத்தியை பெருக்க முடியாத ஒரு பொருள் முழுவதும் ஒருவனுடைய வசம் தங்கிவிடுமேயா

ஞல் அந்த விற்பனையாளரைப் பூரண ஏகபோக உரிமை யுள்ளவர் எனலாம். உதாரணமாக, உலகப் புகழ் பெற்ற ஓவியரின் ஓவியங்கள் சிலவற்றை ஒருவன் வைத்திருக்கக் கூடும். உலகத்திலேயே அவனிடமிருப்பது மட்டுமே அந்த ஓவியருடைய, ஓவியங்கள். மற்றென்று வேண்டு மென் ருலும் கிடைக்காது.

ஒரு ஏகபோக உரிமையாளர் தான் வழங்கும் உரிமைப் பொருளுக்கு என்ன விலை வேண்டுமாஞலும் விதிக்கலாம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. அவரும் மிகவும் அதிக விலை கூறி எவ்வளவு உயர்ந்த லாபம் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவு சம்பாதிக்கவே முயலுவர் என்றும் எண்ணப்படுகிறது. ஆஞல் உண்மையில் அவ்வாறு அல்ல. உற்பத்தி செய்யும் உரிமை தன்னிடம் மட்டுமே இருப்பதால் சப்ளை அவனுடைய வசத்திலிருக்கிறது. அதஞல் இரண் டில் ஒன்று அவன் செய்யலாம். எந்த விலையில் வாங்குபவர் கள் அப்பொருளை வாங்குபவர்களோ அந்த விலையை நிர்ண யித்துவிட்டு சப்ளையைத் தேவையான அளவுக்கு மட்டும் அளிக்கலாம். அல்லது, சப்ளை எந்த அளவுக்கு வழங்குவது என்று தீர்மானித்துவிட்டு, கிராக்கியின் வேகத்துக்குத்தக் கவாறு விலையை மார்க்கெட் போக்கின்படி தானே நிர்ண யித்துக்கொள்ள விட்டுவிடலாம். அதஞல்தான் ஏகபோக உரிமையாளர் சப்ளையை யாவது கட்டுப் படுத்தலாம் அல்லது விலையையாவது கட்டுப்படுத்தலாம், ஆஞல் இரண் டையும் செய்யமுடியாது, என்று அடிக்கடிக் கூறப் படுகிறது.

எவ்வாறிருப்பினும் ஏகபோக உரிமையாளருக்கு லட் சியம் ஒன்றுதான், தனக்குக் கிடைக்க வேண்டிய லாபம் முடிந்த வரையில் உச்சத்திலிருக்கவேண்டும். இதை அடை வதற்கு அவர் வழங்கும் பொருளுக்குள்ள கிராக்கி, சப்ளை நிலையை அவர் மிகவும் கவனத்துடன் நுட்பமாக ஆராய்ந்

தறிய வேண்டும். கிராக்கியைப்பற்றி ஆராயும்போது அப் பொருளுக்குள்ள கிராக்கி நெகிழ்ச்சித் தன்மையுடையதா, நிகழ்ச்சித் தன்மையற்றதா என்பதை முக்கியமாகக் கவ னிக்கவேண்டும். நெகிழ்ச்சித்தன்மையுள்ள கிராக்கியாக இருந்தால்மட்டுமே நிர்ணயிக்கும் விலையைச் சிறிது குறைத் தாலும் தேவை மிக அதிகமாக உயரும். அம்மாதிரி நிலை மையில் விலையைச் சற்றுக் குறைவாகவே நிர்ணயித்து, விற் பனையை அதிகமாகச் செய்வதன் மூலம் லாபம் அதிகமாகக் கிடைக்க வாய்ப்பு உண்டு. ஆனால் கிராக்கி நெகிழ்ச்சித் தன்மையற்றதாக இருந்தால், உரிமையாளர் விலையை வெகு உச்சத்தில் வைத்தாலும் கிராக்கிக் குறையாது. சப்ளை நோக்கில் கவனிக்கும்போது, தன்னுடைய தொழிற்சாலை அதிகரித்துச் செல்லும் பயனையளிக்கும் நியதியின்படி இயங்குகிறதா அல்லது குறைந்த பலனையளிக்கும் நியதியின் படி இயங்குகிறதா என்பதை அவர் கவனித்துக் கொள்ள வேண்டும். அதிகபலனை அளிக்க வல்லது என்றிருந்தால் உற்பத்தியை விஸ்தரித்து, விலையைச் சற்றுக் குறைத்து விற்பனையைப் பெருக்குவது அதிக லாபகரமாக இருக்கும். அதிலும் அப்பொருளுக்குள்ள கிராக்கி நெகிழ்ச்சித் தன்மை யுடையதாக இருந்தால் அவருக்குக் கிடைக்கும் லாபம் அபரிமிதமாக இருக்கும். மாறாக, குறைந்த பலனை அளிக் கும் நியதியின்படி அவருடைய தொழில் இயங்கினால் அவருடைய உற்பத்தி விஸ்தரிக்க விஸ்தரிக்க அவருடைய உற்பத்தி விலை உயருமேயன்றிக் குறையாது. ஆகவே அந்த நிலையில் சப்ளையைக் குறைத்துக் கொள்ளுவதுதான் அவ ருக்கு லாபகரமாக இருக்கும். ஏகபோக உற்பத்தியாளர் தனது உற்பத்தியின் அளவை விஸ்தரிக்கும் போது அவ ருடைய உற்பத்தி விலையும் ஒரு கட்டத்திற்குப் பின் உயர ஆரம்பிக்கும். அதிக உற்பத்தி என்றால் அதிக செலவு என்பது சாதாரண உண்மை. அந்த நிலைமையைக் கவனத் தில் கொண்டு எவ்வளவு வரையில் செலவுக்கு அதிகமாக

பலன்கிடைக்கிறதோ அதுவரையில் மட்டுமே உற்பத்தியை அவர் விரிவு படுத்துவார். அதாவது அதிகப்படியாக அவர் செய்யும் செலவு உயரும் ஒவ்வொரு கட்டத்திற்கும் (**Marginal cost**) அவருக்குக் கிடைக்கும் அதிகப்படியான வருமானம் (**Additional income**) விகிதாசாரப்படி அதிகமாக இருக்கவேண்டும். எந்தக் கட்டத்தில் அவருக்குக் கிடைக்கும் அதிகப்படியான வருமானம் (**Marginal return**) அவர் செய்யும் அதிகப்படியான செலவு (**Margnial cost**)க்குச் சமமாக இருக்கிறதோ அந்த நிலையில் அவர் உற்பத்தி அதிகரிப்பதை நிறுத்திக் கொள்ளுவார். இந்தக் கட்டம்தான் உற்பத்தி விஸ்தரிப்புக்கு ஒரு எல்லை போல் அமையும். இந்தக் கட்டம் வரையில்தான் அவருக்குக் கிடைக்கும் மொத்த லாபம் உச்ச நிலையில் இருக்கும்.

எந்த விலையில் தன்னுடைய உற்பத்திப் பொருள்களை விற்ருல் அதிகப்படியான லாபம் கிடைக்குமோ அந்த விலையில்தான் ஒரு ஏகபோக உற்பத்தியாளர் விற்பனைசெய்வார் என்று மேலே சொல்லப்பட்டது. இதிலிருந்து அவர் ஒரே விலையில்தான் விற்பனை செய்வார் என்று எண்ணவேண்டியதில்லை. அவ்வாறு ஒரே விலையில்தான் விற்கவேண்டும் என்ற நியதி இல்லை. அவ்வாறு நடப்பதும் இல்லை. சப்ளை முழுவதும் அவருடைய கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருப்பதால் சமுகத்தில் பல அந்தஸ்திலுள்ள பல மக்களுக்கு வெவ்வேறு விலையில் விற்பனை நிகழக்கூடும். விலையில் பட்சபாதத்தை வேண்டுமென்றே அவர் செய்வார். அதாவது ஒரே பொருளை அல்லது ஒரே சேவையை வெவ்வேறு விலைகளில் வெவ்வேறு பகுதியினருக்கு வழங்குவார். இந்த விலைப்பட்ச பாதம் பலவிதமாக, அந்தந்த சூழ்நிலை, சந்தர்ப்பங்களை அனுசரித்து, மாறுபட்டு இருக்கும். முதலாவதாக, நாட்டிற்குள்ளேயே பல்வேறு விற்பனை மண்டலங்கள் ஏற்படுத்தி, ஒவ்வொரு மண்டலத்திற்கும் தனித்தனி விலை

மட்டங்கள் ஏற்படுத்தலாம். தவிரவும், தனது நாட்டில் மட்டுமே அவருக்கு ஏகபோக நிலைமை இருக்கக்கூடும். அயல் நாடுகளில் சர்வதேசப் போட்டியைச் சமாளிக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். அம்மாதிரி சந்தர்ப்பங் களில் வெளி நாட்டுச் சந்தைகளில் ;குறைந்த விலையையும் உள்நாட்டு மார்க்கெட்டில் உயர்ந்த விலையையும் அவர் நிர்ணயித்துக் கொள்ளுவர். இரண்டாவதாக, தான் நிர்ண யிக்கும் விலையையே சந்தர்ப்ப மாறுதல்களுக்கேற்ப மாற் றிக் கொள்ளவும் கூடும். ஆரம்ப காலத்தில் விலையைக் குறைத்து வைத்துப் போகப் போக படிப்படியாக இதை உயர்த்திக் கொண்டே செல்லலாம். அல்லது, மாற்றுமுறை யில், ஆரம்பத்தில் விலையை உயர்த்தி வைத்துப் படிப்படி யாக அதைக் குறைத்துக் கொண்டும் போகலாம். மூன்று வதாக, கிராக்கியின் தன்மைக்கு ஏற்றபடியும், உபயோகிப் பவர்களுடைய சக்திக்கு ஏற்றபடியும், விலையைச் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப வெவ்வேறு கட்டங்களில் மாற்றி நிர்ணயிக்கவும் கூடும். உதாரணமாக, ஒரு மின்சார சப்ளை கம்பெனி, அல்லது ரயில்வே கம்பெனியை எடுத்துக்கொள், வோம். அவர்கள் விதிக்கும் கட்டணங்கள் உபயோகிப்பவர் களின் சக்தியை அனுசரித்து வெவ்வேறு விகிதத்தில் இருக் கின்றன. இதன் அடிப்படை நோக்கம், அந்தந்தப் பிரிவினர் களிடமிருந்தும் முடிந்தவரையில் அதிகமான வருமானத்தை அடைய வேண்டுமென்பதே. தங்கக் கட்டிகளையும், பட்டு ஜவுளிகளையும் ஏற்றிச் செல்ல உயர்ந்த கட்டண விகிதங் களை விதித்துவிட்டு, நிலக்கரி, இரும்புச் சாமான்களை அதே தூரத்திற்கு ஏற்றிச் செல்லக் குறைந்த விகிதக் கட்டணங் களை நிர்ணயிக்கும் ரெயில்வே சம்பிரதாயத்தை இதற்குஉதா ரணமாகச் சொல்லலாம். அது போலவே, சேவையின் தன் மைமாறுபட்டாலும் ஒரே விலையில் அச்சேவையை வழங்கு வதும் ஏகபோக நிலைமையில் சாத்தியமாகும். போட்டி நிகழ்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் இம்மாதிரி ஒரே

விலை நிலவுவது சாத்தியமே அல்ல. உதாரணமாக தபால் இலாகா எடுத்துச் செல்லும் கடிதங்களுக்கு, தூரத்தில் வித்தியாசமிருந்தாலும், விலை விகிதத்தில் வித்தியாசமில்லை. இது ஒரு ஆபூர்வமான சேவை.

இது வரையில் மார்க்கெட்டில் நிலவும் பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் ஒரு பொருளின் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பதைப்பற்றி விளக்கம் செய்த போது அந்தப் பொருள் மட்டுமே மார்க்கெட்டில் தனித்து நிற்கிறது என்ற அனுமானத்திலேயே விவாதிக்கப்பட்டது. தினசரி முறையில் அவ்வாறு இருப்பதில்லை. நடைமுறையில் பல பொருள்கள் இணைந்தே உற்பத்தி செய்யப்படுவதையும், இணைந்தே தேவைப்படுவதையும் காண்கிறோம். இம் மாதிரி நிலைமைகளை இப்போது விவரிப்போம்.

## கூட்டுக் கிராக்கியில் விலைகளின் தன்மை

சில பொருள்கள் கூட்டாகவே கோரப்படுகின்றன. புகைக் குழாயுடன் புகையிலையும் சேர்ந்தே தேவைப்படுகின்றன. மோட்டார்கார் உற்பத்தியில் ரப்பர் டயர்கள், மின் விளக்குகள், ஊதுகுழல்கள், அலங்கார சாதனங்கள் முதலிய பல்வேறு பொருள்களும், என்ஜின் உற்பத்தியில் என்ஜினைச்சேர்ந்த இதர பாகங்களும் சேர்ந்தே உற்பத்தி செய்யப்படுகின்றன. மோட்டார் வண்டி ஒரு இறுதிக்கட்டப்பூரணப் பொருள். இப்படிப் பல பொருள்கள் சேர்ந்தே உருவான ஒரு பொருளின் தனித்தனிப் பாகங்களின் விலையை எவ்வாறு நிர்ணயிப்பது? முடிவுப் பொருளான மோட்டாரின் விலைத் தனிப் பொருள்களின் சப்ளை விலைகளை உள்ளடக்கியே இருக்க வேண்டும்; அதாவது அவைகளின் தனித்தனி உற்பத்தி விலைகளும் அதற்குள்ள லாபங்களும் சேர்ந்த விற்பனை விலையும் மோட்டார் விலையில் உள்ளடக்கம்.

## இணைப்பு உபயோகத்தில் விலை நிர்ணயம்

ஒரு பொருளுக்குப் பல உபயோகங்களிருக்கும்போது அதற்குள்ள கிராக்கி இணைப்புக் கிராக்கி என்று சொல்லப் படும். உதாரணமாக, நிலக்கரியைச் சமையல் வேலைக்கு உபயோகிக்கலாம்; தொழிற்சாலைகளில் யந்திரங்களை இயங் கச் செய்யவும் உபயோகிக்கலாம். நிலக்கரிக்கு எந்த ஒரு சமயத்திலுள்ள உபயோகம், பல துறைகளில் தனித்தனி யான உபயோகத்தின் கூட்டுத்தொகை. இதுவே அதற் குள்ள மொத்தக் கிராக்கி. இக் கிராக்கியின் நிலைமைகளும் அளவுகளும், அந்தந்த உபயோகத்திற்கு எவ்வளவு நிலக் கரிப் பயன்படுத்தப்படுகிறதென்பதைப் பொறுத்தே இருக் கும். நீராவி உற்பத்தி செய்து யந்திர வகைகளை இயக்கும் நிலையங்களில் நிலக்கரிக்குள்ள கிராக்கியும் தேவையும் வீட்டு உபயோகத்திற்கான கிராக்கியின் தன்மையைக் காட் டிலும் மாறுபட்டவை. இந்தக் கிராக்கியின் தன்மைதான் நிலக்கரியின் விலையை நிர்ணயம் செய்கிறது. எந்த ஒரு சம யத்திலும் உபயோகிப்பவர்களின் ஒவ்வொரு பகுதியிலும் நிலக்கரியின் "எல்லைப்புற உபயோகம்" (**marginal utility**) எந்த அளவில் சமமாக இருக்கிறதோ அந்த அளவு அல்லது கட்டம்தான் நிலக்கரியின் விலையை நிர்ணயம் செய்யும். இதையே வேறு விதமாகச் சொல்லுவதானால், "வெவ்வேறு உபயோகத்தினால் இணைப்புக்கிராக்கியுள்ள ஒரு பொருளின் "எல்லைப்புற உபயோகம்" ஒவ்வொரு படிவத்திலுமுள்ள தேவையின் உபயோகத்துக்குச் சமமாகவே இருக்கும் தன் மையுடையது" என்று கூற வேண்டும்.

## கூட்டுச் சப்ளையில் விலை நிர்ணயம்

சில பொருள்களுக்கு, பண்டங்கள் வேறாக இருப் பினும், உற்பத்தி விலை ஒன்றாகவே இருக்கும்; உதாரணமாக அரிசியும், தவிடும். ஆனால் இவ்விரண்டு பொருள்களுக்கும்

விற்பனை செய்யுமிடம் வெவ்வேறு. மார்க்கெட் தனித்தனி. உபயோகமும் தனித்தனி. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு பொருளுக்குமுள்ள விலை வாங்குபவர்களுக்கு அப்பொருளின் "எல்லைப்புற உபயோகம் எவ்வளவு என்பதைத் தழுவியே இருக்கும்". ஆனாலும் தனித்தனியாக இப் பொருள்களின் விற்பனையினால் கிடைக்கும் மொத்த வருமானம் உற்பத்தியாளருடைய இவ்விரு பொருள்களின் "எல்லைப்புற உற்பத்திவிலை" **(Marginal cost of Producction)** க்குக் குறைவாக இருக்காது. இரண்டு பொருள்களுக்கும் தனித்தனியே உற்பத்தி விலை ஒரே உற்பத்தி முறையில் கிடைக்கும். தனித்தனியாக நிர்ணயிக்க முடியுமானால், இரு கூட்டுப் பொருள்களையும் தனித்தனிப் பொருள்களா கவே பாவித்து, அதற்குள்ள தேவை, கிராக்கி, சப்ளை நிலை மைகளைத் தழுவி விலைகள் நிர்ணயிக்கப்படும்.

## இணைப்பு சப்ளையில் விலை நிர்ணயம்

பல்வேறு பொருள்களில் ஏதேனும் ஒன்று ஒரு தேவை யைப் பூர்த்தி செல்விக்குமென்ற நிலைமையில் அப்பொருள் களை "இணைப்புச் சப்ளை"ப் பொருள்கள் என்று கூறுவார் கள். உதாரணமாக, விளக்கு எரிப்பதற்காக மின்சாரத்தை யாவது, எரிவாயுவையாவது, மண்ணெண்ணெயையாவது, மற்றும் இதர பொருள்களையாவது உபயோகப்படுத்தலாம். இவையனைத்தும் ஒன்றுக்கொன்று, ஓரளவுக்கு மாற்றுப் பொருள்கள். அவற்றின் விலை அவற்றின் மொத்த சப்ளை யையும் (எல்லா மாற்றுப் பொருள்களின் கூட்டு சப்ளை) மொத்த கிராக்கியையும் தழுவி இருக்கும். ஆனால் ஒவ்வொரு பொருளின் தனி விலை அதனதனுடைய "எல்லைப்புற உற்பத்தி" விலை **(Marginal cost of Produc tion)** க்குச் சமமாக அல்லது சற்று அதிகமாக இருக்க

வேண்டும். இதில் கவனிக்க வேண்டிய வேறொரு விஷயம் ஒரு பொருளின் விலை அதன் மாற்றுப் பொருளின் விலையால் பாதிக்கப்படுகிறது என்பதே. டீ இலைகளின் விலை உயர்ந்துவிட்டால், அதற்கு மாற்றுப் பானமாகிய காப்பிக்குக் கிராக்கி அதிகரிக்கும். இது சிறிது காலத்திற்குப்பின் காப்பியின் விலையையும் உயர்த்திவிடும்.

அத்தியாயம் 6

# பணமும் அதன் தொழிலும்

இன்றைய வாழ்க்கையில் நமக்குப் பணம் மிகவும் இன்றியமையாததாக ஆகிவிட்டது. வாழ்க்கையில் அது ஒரு முக்கிய அம்சம் என்று அதைச் சிந்தனையின்றியே நாம் அங்கீகரிக்கிறோம். எண்ணற்ற பேரங்களை நாம் தினசரி பணத்தைக்கொண்டு நடத்திக்கொள்ளுகிறோம். பணம் இல்லாவிட்டால் நமது வாழ்க்கை எப்படி நடக்கும் என்று வியப்புறுகிறோம். ஆனால் மற்றெல்லாவற்றிலும் இருப்பதுபோலவே பண விஷயத்திலும் எளிய முறையில் ஆதிகாலத்தில் ஆரம்பித்துக் காலப்போக்கில் படிப்படியாகச் சிக்கல் மிகுந்த ஒரு ஸ்தாபனமாகவே பணம் இயங்கத் தலைப்பட்டுவிட்டது. மனித சமூகத்தின் ஆரம்ப கால வாழ்வில் ஒரு குடியானவன் தன்னிடமுள்ள விளைபொருள்களை அப்படியே கொடுத்துத் தனக்குத் தேவையான ஆடு மாடுகளையோ, கோழிகளையோ, துணிமணிகளையோ வாங்கிக்கொள்ளுவான். இப்போதும் கூட நமது நாட்டிலேயே சில கிராமங்களில் மக்கள் நெல்லைக் கொடுத்துக் காய்கறிகள் வாங்குவதையும், கூலியாட்களுக்கு நெல்லையே கூலியாக கொடுப்பதையும் காண்கிறோம். இம்மாதிரிப் பண்ட மாற்று நிகழவேண்டுமானல், அம்முறை சாமானிய உற்பத்திப் பண்டங்களுக்கு மட்டுமே சாத்தியமாகும். ஏனெனில், ஒரு பண்டத்தைக் கொடுத்து மற்றொரு பண்டத்தை வாங்கிக்கொள்ளும் பண்ட மாற்று முறையில் பல தடைகள் உண்டு. முதலாவதாக, பண்ட மாற்று செய்து கொள்ளும் இருவரும் ஒருவரிடமுள்ள பொருளை மற்றவர்

விரும்பும்படியாக இருக்கவேண்டும். வேண்டாத பொருளைப் பண்டமாற்று செய்து எவனும் பெற்றுக்கொள்ள மாட்டான். இரண்டாவதாக, பொதுவாக மதிப்பீடு செய்யும் வாய்ப்பில்லாத நிலையில், பண்டமாற்று விகிதத்தை நிர்ணயம் செய்வதிலுள்ள கஷ்டம் எப்போதும் உண்டு. மூன்ருவதாக, சில பொருளைக் கூறு செய்து, துண்டு துண்டாக அளிக்க முடியாத நிர்ப்பந்தங்களும் இருக்கின்றன. ஒரு நாற்காலியை விற்பனை செய்ய முன்வரும் ஒரு தச்சன், அதற்குப் பதிலாக முழுதும் அரிசி மட்டும் விரும்பாமல், சிறிது அரிசியும், சிறிது எண்ணெயும், சிறிது துணிமணிகளும், இதர வீட்டுச் சாமான்களும் விரும்புவான். இவை யனைத்தும் நாற்காலியை வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கும் ஒருவனிடம் ஒரே சமயத்தில் கிடைக்காது.

## பணத்தின் பரிணமம் அல்லது வளர்ச்சி

மேலே விவரித்த நிர்ப்பந்தங்களின் தடைகளால் ஆதி காலத்திலேயே தங்களுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கவும் விற்கவும் மக்கள் ஒரு பொது அளவையைக் கண்டு பிடிப்பதில் சிந்தனை செலுத்தியதில் வியப்பில்லை அல்லவா? அந்தப் பொது அளவைதான்—அதன் உருவமும், தோற்றமும் எப்படியாகவேனும் இருக்கட்டும்—பணத்திற்குரிய தொழிலைச் செய்தது. அதுதான் பணம் எனப்படுவது. மனித சமுதாய வளர்ச்சியின் பல்வேறு காலங்களில், உலகத்தில் பல்வேறு பகுதிகளில் பல விசித்திரப் பொருள்கள் பணமாகச் செயலாற்றி வந்திருக்கின்றன. ஆடு மாடுகள், தோல் பில்லைகள், கிளிஞ்சில் ஓடுகள், புகையிலை, சில சமயம் சீட்டுக்கட்டுகள் கூட பணமாகத் தொழில் புரிந்திருக்கின்றன. எந்தப் பொருளும் பணமாகத் திருப்திகரமாகச் செயல் புரியவேண்டுமானுல்

அதற்கு இரண்டு முக்கியமான லட்சணங்கள் இருக்க வேண்டும்—அப்பொருள் மிகக் குறைவாகவே கிடைக்கும் வஸ்துவாக இருத்தல் அவசியம். அதிகம் கிடைக்காத வஸ்து என்பதற்காவே அதற்கு ஒரு தனி மதிப்பு ஏற்பட்டு விடுகிறது. இரண்டாவதாக, அப்பொருள் சமுகத்தில் எல்லோராலும் பணமாக அங்கீகரிக்கப்படவேண்டும். ஆனல் சாதாரண வாழ்க்கையில் எந்தக் கருவியும் பண மாகப் புழங்கவேண்டுமானல், மேலே சொன்ன இரண்டு லட்சணங்களைத் தவிர, இதர சில உப லட்சணங்களும் இருக்கவேண்டுவது அவசியம். அது நீண்டகாலத்துக்கு உறுதியுடன் அழியாமலிருக்கவேண்டும். சுலபமாக அடை யாளம் கண்டுகொள்ளும்படி இருக்கவேண்டும். விபாகத் தன்மை வேண்டும். இயல்பு மாருதிருக்கும் தன்மையதாக இருத்தலும் அவசியம். வெவ்வேறு நாடுகளில் வேவ்வேறு காலங்களில் பணமாக உபயோகப்பட்ட பொருள்கள் ஒன்றுமே மேலே சொல்ல எல்லா லட்சணங்களையும் ஒருங்கே பெற்றிருக்கவில்லை. பணத்தின் வளர்ச்சியே இந்த லட்சணங்கள் எல்லாம் ஒருங்கே பொருந்தின ஒரு பொரு ளைக் கண்டுபிடிப்பதன் முயற்சியே. இப்போது நம் மிடையே புழங்கும் பணம் மிகவும் சிக்கல் மிகுந்த ஒரு கருவி. மூன்று நூற்ருண்டுக் காலத்திற்கு முன்புகூட இவ்வளவு சிக்கல் மிகுந்ததாகப் பணம் இருந்ததில்லை.

## பணத்தின் தொழில்கள்

பணத்தின் தொழில்களை இப்போது கவனிக்கலாம். முதலாவது, பணம் ஒரு பரிவர்த்தனை (**Medum of Exchange**)சாதனமாக உபயோகமாகிறது. இதையே பணத்தின் முக்கிய தொழிலாகக் கருதலாம். பொருள்களையும் சேவை களையும் வாங்குவதற்கும் விற்பதற்கும் பணம் ஒருபரிவர்த் தனைப் பொருளாகச் செயல் புரிகிறது. ஒருவருக்கு ஒருவர்

கொடுத்துக் கொள்ளவேண்டிய வரவு செலவுத்தொகைகளை தீர்த்துக்கொள்ள பணம் உதவுகிறது. இரண்டாவது, மதிப்புக்கு ஒரு அளவையாகப் பணம் தொழிலாற்றுகிறது. பொருள்கள் கைமாறும்போது அவற்றின் மதிப்புகளை ஒத்திட்டு அளவை செய்து மாற்றங்களின் விகிதங்களை நிர்ணயம் செய்வது பணம்தான். நாம் விற்கவேண்டிய அல்லது வாங்கவேண்டிய பொருள் அல்லது சேவையை மதிப்பீடு செய்வதற்குப் பணம் ஒரு அளவுகோலாக உதவுகிறது. எல்லாப் பொருள்களின் மதிப்பையும் சேவைகளின் மதிப்பையும் விலை நிர்ணயம் செய்து குறிப்பு வைக்க வகை செய்வது பணம். மதிப்பை விலைகள் மூலம் சொல்ல முடிவதால் நம்மிடம் உள்ள பணத்தை எப்படிச்சிறந்த முறையில் உபயோகித்துக்கொள்ளலாம் என்று நிச்சயித்துக்கொள்ள முடிகிறது. மூன்ருவதாக, மதிப்புக்கு ஒரு களஞ்சியமாக பணம் விளங்குகிறது. பணத்தின் உபயோகங்கள் எல்லாவற்றையும் விட சிறந்ததும் மிகவும் முக்கியமானதும் மதிப்புக்களஞ்சியமாக விளங்கும்' (Store of Value) அதன் உபயோகத்தைத்தான் சொல்லவேண்டும். கோதுமையை அறுவடை செய்யும் ஒரு விவசாயி கோதுமையை நீண்ட காலத்துக்கு அப்படியே வைத்திருந்து பிற்காலத்தில் தனக்குத் தேவைப்படும் இதர பொருள்களுக்கு மாற்றிக் கொள்ளலாம் என்று இருக்க முடியாது. ஆனால் அதை அவன் விற்று அதன் மதிப்பைப் பணமாக மாற்றிக் கொண்டால் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் அதை வைத்துக்கொள்ள முடியும். அவனுடைய பிற்காலத் தேவைகள் ஏற்படும்போது அதைக்கொண்டு அத்தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும். ஒருவனுடைய சேமிப்புகளைச் சுலபமாக மாற்றிக்கொள்ளவும் ஏற்ற வகையில் வைத்துக்கொள்ளுவதற்கும் பணம் உதவுகிறது. நான்காவதாக. வருங்காலத்தில் செலுத்தவேண்டிய தொகைகளுக்கு ஒரு அளவையாகப் பணம் விளங்குகிறது. ஒப்பந்

தங்கள் நிறைவேற்றப்படும்போதும், தவணைக் கடன்கள் செலுத்தப்படும்போதும், பிற்காலத்தில் கொடுக்கப்பட வேண்டிய தொகைகள் பல இருக்கும். தற்கால மதிப்பையும் பிற்கால மதிப்பையும் சமன் செய்து பிற்காலத்தில் செலுத்தப்படும் மதிப்புக் குறையாமல் கொடுக்கல் வாங்கல்களை நிலைக்கச் செய்யப் பணத்தின் உதவி இன்றி யமையாதது. கடன் பேரங்களுக்கெல்லாம் பணம்தான் அடிப்படையாக இருக்கிறது. பிற்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய ஷரத்துக்கள் கொண்ட ஒப்பந்தங்களில் பணம் செலுத்தப்படும்போது இப்போதுள்ள மதிப்புக்கு மாறுபடாத மதிப்புள்ள சாதனத்தையே எல்லோரும் கோருகின்றனர். அத்தகைய சாதனம் பணம் ஒன்றுதான்.

பணம் முக்கியமாக இரண்டு வடிவங்களில் இருக்கின்றன. ஒன்று உலோகத்தினலான பணம், மற்ருென்று காகிதப் பணம். உலோகப்பணம் என்பது தங்கம், வெள்ளி, நிக்கல், செம்பு முதலிய உலோகங்களினுல் செய்யப்பட்ட நாணயங்கள். உலோக நாணயங்களின் சரித்திரம் மிகவும் ருசிகரமானது. வெகுநாட்களுக்கு தங்கச் சவரன்களும் வெள்ளி ரூபாய்களும் எல்லா அம்சங்களிலும் பணமாக அங்கீகரிக்கப்பட்டுப் புழக்கத்திலிருந்தன. அவற்றின் மதிப்பு அந்தந்த நாணயத்திலுள்ள வெள்ளி, தங்கம் இவற்றின் மதிப்புக்குச் சமானமரகவே இருந்தது. ஆனுல் இப்போது அத்தகைய நாணயங்களை உபயோகிப்பதில்லை. நமது நாட்டில் புழக்கத்திலிருக்கும் ரூபாயின் மதிப்புக்கும் அதிலுள்ள வெள்ளியின் மதிப்புக்கும் சம்பந்தமே இல்லை. ரூபாய் ஒரு சின்னமாகவே ஆகிவிட்டது. அது **அடையாளப் பணம்** என்றே சொல்லப்படும். நாணயங்கள் அரசாங்கத்தினுல் வெளியிடப்படுகின்றன. அரசாங்கத்திற்குச் சொந்தமான நாணயச்சாலைகளில் அச்சடிக்கப்பட்டு அவை வழங்கப்படுகின்றன. முன்காலத்தில் யார் வேண்டுமானுலும் தங்கக்

கட்டியையோ வெள்ளிக் கட்டியையோ அரசாங்க நாணயச் சாலைகளுக்கு எடுத்துச் சென்று நாணயச் சட்டபடி விதிக் கப்பட்ட கூலிகொடுத்து அவற்றை நாணயங்களாக அச் சிட்டுக் கொண்டு வரலாம். அப்படி ஒரு நிலைமை இருந்தது. இம்மாதிரி எவ்விதத் தடங்கலுமின்றி உலோகக் கட்டிகளை மக்கள் நாணயங்களாக மாற்றிக்கொள்ள உரிமையுள்ள முறையைக் **கட்டுப்பாடிலா நாணய முறை** என்பர். சில சமயங்களில் எவ்விதக் கூலியுமில்லாமலே உலோகக் கட்டி களை நாணயங்களாக அச்சிட்டுத் தந்தனர். வேறு சில சமயங்களில் ஒரு சிறு தொகையைக் கூலியாகப் பெற்றுக் கொண்டார்கள்.

### காகிதப் பணம்

இப்போது எல்லா நாடுகளிலும் சர்வசாதாரணமாக மக்களிடையே புழங்குவது காகிதப்பணம். காகிதப் பணம் பாங்கி வழங்கும் பாங்க் நோட்டுகளாகவும் இருக்கலாம். அல்லது அரசாங்கத்தார் நிலையங்களில் அச்சிட்டு வழங்கப் படும் நோட்டுகளாகவும் இருக்களாம். எப்படியிருந்தாலும் இது அடையாளப்பணமே(**Token money**).நவீன காலத்தில் இதனுடையமுக்கியத்துவம் பெருமளவுக்கு வளர்ந்துவிட் டது. காகித நோட்டுகளினால் பலவித சௌகர்யங்கள் இருக்கின்றன. அவை சுலபமாக எடுத்துச்செல்லக்கூடியவை. சுலபமாகப் பத்திரப்படுத்திப் பாதுகாக்கப்படக் கூடியவை. இவற்றின்புழக்கத்தினால் நாணயங்களுக்காக தேவைப்படும் உலோகங்களின் அளவு வெகுவாகக் குறைந்துவிட்டது. அதனால் உலோகங்களை இதர உபயோகங்களுக்கும் பயன் படுத்திக்கொள்ளலாம்.

காகிதப் பணத்தில் இரண்டு வகை உண்டு—**மாற்ற வல்லது** ஒன்று; **மாற்ற இயலாதது** மற்றொன்று. நோட்டு

களை வெளியிடும் அதிகாரி எப்போது வேண்டுமானாலும் நோட்டுகளுக்குச் சரியான உலோகப் பணம் கொடுப்பதாக வாக்களித்தால், அந்த நோட்டுகளை மாற்றவல்லக் காகிதப் பணம் என்று கூறுவார்கள். ஆனால் நோட்டை வைத்திருப்பவர்கள் அவற்றை உலோக நாணயங்களாக மாற்றிக்கொள்ள முடியாது என்ற நிலைமை இருந்தால், அத்தகைய நோட்டுகளை மாற்ற இயலாதக் காகிதப் பணம் என்பார்கள். காகித நோட்டுகள் முதலில் புழங்க ஆரம்பித்த காலத்தில் கோரியபோது இவற்றிற்குப் பதிலாக குறிக்கப்பட்டுள்ள அவ்வளவு உண்மைப் பணம்—தங்கச் சவரன்களாகவோவெள்ளிரூபாய்களாகவோ--வழங்கப்படும் என்ற வாக்குறுதி அந்நோட்டுகளில் அளிக்கப்பட்டிருந்தது, இதனால் நோட்டுகளை வழங்கும் அதிகாரிகள் தங்கள் கை வசம் நோட்டுகளுக்கு ஈடாக அதில் குறிக்கப்பட்ட அள வுக்கு தங்கமோ, வெள்ளியோ எப்போதும் வைத்திருந்தனர். அதைக்கொண்டுதான் தாங்கள் நோட்டுகளில் அளித்த வாக் குறுதியை நிறைவேற்றி வந்தனர். தங்கத்திற்கும் வெள் ளிக்கும் மாற்றப்படும் என்ற நிர்ப்பந்தம் இருந்ததால், வழங் கப்படும் நோட்டின் தொகையும் மிகக் குறைவாகவே இருந் தது. எவ்வளவு நோட்டுகள் வழங்கலாம் என்பதற்கு மாற்றப்படும் தன்மையே வரம்பு கட்டுவதாக ஆகியது. மேலும் ஒவ்வொரு நாட்டின் நாணயச் சட்ட திட்டங்களும் உலோக நிதி வைத்துக்கொள்ளும் விஷயத்தில் மிகவும் கண்டிப்பாகவே இருந்தன. அதாவது உலோகநிதி பூரண மாக இராமல் காகித நோட்டு வழங்கக்கூடாது என்ற நிபந் தனைகள் கண்டிப்பாக இருந்தன. ஆனால் முதல் உலக யுத் தத்திற்குப் பின் பல நாடுகளில் காகித நோட்டுகள் ஏராள மாக அச்சடிக்கப்பட்டு, யுத்த காலத்திலும் அதற்குப் பிறகும் புழங்க ஆரம்பித்துவிட்டதால், நிதி சம்பந்தமான திட்டங்களை அனுசரிப்பது சாத்தியமில்லாமல் போய்விட் டது. அதனால் பலநாடுகள் நிதி பற்றிய விதிகளை படிப்படி

யாகத் தளர்த்திவிட்டன. இப்போது பெயரளவுக்கு மட்டும் உலோகப் பாதுகாப்பு நிதி இருந்தால்போதுமென்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. உதாரணமாக, இந்தியாவில் சமீபகாலம் வரையில் நோட்டுகளை அச்சிட்டு வழங்கும் அதிகாரம் பெற்றுள்ள ரிஸர்வ் பாங்கி, தான் வழங்கும் மொத்த நோட்டுகளுக்கு ஈடாக தனது பாதுகாப்பு நிதியில் 40 சத வீதத்திற்காவது தங்கக் கட்டிகளாகவோ, வெள்ளிக் கட்டிகளாகவோ, அந்நிய நாட்டுச் செலாவணிப் பாண்டுகளாகவோ சட்டப்படி வைத்திருக்க வேண்டுமென்று விதியிருந்தது. ஆனால் இப்போது இந்த விகிதம் மாறிவிட்டது. நோட்டுகளுக்கு ஈடாக குறைந்த பட்சம் 200 கோடி ரூபாய் மதிப்புள்ள பாதுகாப்பு நிதி இருந்தால் போதும் என்றும், இந்த 200 கோடியிலும் 115 கோடிக்குத்தங்கக்கட்டிகளும் நாணயங்களும் 85 கோடிக்கு அந்நியச் செலாவணிப் பாண்டு பத்திரங்கள் இருந்தால் போதுமானது என்றும் சட்டம் மாற்றப்பட்டிருக்கிறது. இது பெயரளவுக்குத்தான் நிதி என்பதுஉடனே விளங்கும் உண்மையில் பாதுகாப்பு நிதியல்ல என்றே சொல்லவேண்டும். ஏனெனில் புழக்கத்திலிருக்கும் நோட்டுக்களின் மதிப்பு 1500 கோடி ரூபாய்கள். ஆனால் நம்முடைய ரூபாய்க்குப் பதிலாகத் தங்க நாணயங்களோ வெள்ளிக் கட்டிகளோ கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாததால்—மாற்ற இயலாததால்—பாதுகாப்பு நிதியின் அளவு அதிகமாக இருந்தாலும் குறைவாக இருந்தாலும், காகித நோட்டுகளுக்கு ரூபாய் வழங்கப்படும் விஷயத்தில், அதிக முக்கியத்துவம் உள்ளதல்ல. இப்பாதுகாப்பு நிதியின் முக்கியத்வம் ரூபாயின் அயல் நாட்டு விவகாரங்களில் மட்டுமே பிரதானமாக விளங்குகிறது. ரூபாயின் வெளி நாட்டு மதிப்பைக் குறையாமல் பாதுகாத்துக்கொள்ள இது உதவுகிறது.

பணத்தின் மதிப்பைப் பாதிக்கும் அம்சங்களைப் பற்றி பின்வரும் அத்தியாயங்களில் பரிசீலனை செய்வோம். ஆனால் இங்கே குறிப்பிட வேண்டிய ஒரு விஷயம், அரசாங்கக் கொள்கைகளை யனுசரித்துக் காகித நோட்டுகள் தடங்கலின்றி அளவுக்குமீறி அச்சிட்டு வழங்க அரசாங்கத்தால் முடியும் என்பதால் சாதாரண மக்களின் தினசரி வாழ்க்கையைப் பாதிக்கும் பல்வேறு பிரச்னைகளை இது கிளப்பிவிடுகிறது என்பதுதான்.

## இதர வகைப் பணங்கள்

உலோகப் பணம் காகிதப் பணம் இவ்விரண்டைத் தவிர தற்காலம் கொடுக்கல் வாங்கல்களைப் பூர்த்தி செய்து கொள்வதில் பல்வேறு இதர சாதனங்கள்கூட பணமாகச் செயல்புரிகின்றன. பாங்கிகள் வழங்கும் செக்குகளும், உண்டியல்களும் இவ்வகையைச் சேர்ந்தவை, மேலும், தங்களுடைய வாடிக்கைக்காரர்களுக்குப் பாங்கிகள் கடன்கள் கொடுக்கின்றன. இதைப் பாங்குக் கடன் என்று சொல்லுவார்கள், கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு இம்மாதிரிப் பாங்கிக் கடன்கள் ஒரு முக்கிய சாதனம். இப்போதைய உலக விவகாரத்தில் கடன்களின் பங்கு இன்றியமையாதது. வர்த்தகத்துக்கும், தனிப்பட்ட பல பேரங்களுக்கும், பாங்குக் கடன்கள்தான் தேவைப்படும் மூலதனத்தை வழங்குகின்றன. ஒரு உற்பத்தியாளர் தான் உற்பத்தி செய்த பொருள்களை கடனுக்கு விற்றுவிட்டு ஒரு ஹுண்டியை எழுதிவிடுகிறார். யாருக்கு விற்பனை செய்தாரோ அவர் அந்த ஹுண்டியை ஏற்றுக்கொள்ளுகிறார். இதற்கு ஸ்வீகரிக்கப்பட்ட ஹுண்டி என்று பெயர். ஹுண்டி என்பது ஒரு பொருளை வாங்கியவர், அதைவிற்றவருக்கு அதன் குறிப்பிட்ட கிரயத் தொகையைத் தொண்ணூறு நாட்களுக்கு அல்லது 120 நாட்களுக்குப் பிறகு செலுத்திவிடுவதாகச் சொல்லும் வாக்குறுதி. இந்த

வாக்குறுதியைப் பெற்றுக் கொண்டு உற்பத்தியாளர் அதைத் தன்னுடைய பாங்கியில் கொடுத்து, வட்டிப் பணத்தைக் கழித்து, மீதி ரொக்கப்பணம் பெற்றுக் கொள்ளுகிறுர். இதைக் கொண்டு அவருடைய உற்பத்தித் தொழில் தடங்கலின்றி நடைபெறுகிறது. இவ்வாறு ஹூண்டி மூலம் பணம் பெற்றுக் கொள்வது ஒருவகைக் கடன் சாதனம். இதைப் போலப் பல்வேறு இதர கடன் சாதனங்களும் தற்கால வியாபாரத்தில் உள்ளன. அதிகப் பற்றுக் கடன்கள், கடன்பத்திரங்கள், நடப்புக் கடன்கள் தவணைக் கடன்கள், பாங்கிக் கடன்கள், முதலியவை இவற்றில் சில.

பாங்கி முறை நன்ருக விரிவடைந்துள்ள தொழில் உலகத்தில் பாங்கிகள் வழங்கும் கடன்கள் கொடுக்கல் வாங்கல் பேரங்களின் எண்ணிக்கைகளையும் அளவையை யும் பெருமளவில் பாதிக்கின்றன. முன்னேற்ற மடைந் துள்ள இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளில் காகிதப் பணத்தைக் காட்டிலும் பாங்கிக் கடன்கள் அதிக முக்யத்வம் பெற்று விளங்குகின்றன. அந்நாடுகளின் பொருளாதார நிலை உயர்ந்திருப்பதற்குப் பாங்கிக் கடன் வசதிகள் ஒரு காரணம். நாட்டின் பொருள் அபிவிருத் தியைப் பாங்கிக் கடன்களின் அளவைக் கொண்டே மதிப் பிடுவதும் உண்டு.

அத்தியாயம்—7

# விலைமட்டங்களில் மாறுதல்கள்

பணத்தின் ஒரு முக்கியமான தொழில் மதிப்புக் களஞ்சியமாகச் செயலாற்றுவது என்பதை முன் அத்தியாயத்தில் கண்டோம், இந்தத் தொழிலைப் பணம் பூரணமாகவும் திருப்திகரமாகவும் நிறைவேற்ற வேண்டுமானுல் பணத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சாதனம் காலப்போக்கில் நிலையான (ஸ்திரமான) மதிப்புள்ளதாக இருத்தல் அவசியம். ஆனுல் நமது அனுபவத்தில் இவ்வாறு ஸ்திர மதிப்புள்ளதாகப் பணம் இருப்பதில்லை என்பதையே பார்க்கிருேம். உதாரணமாக, இப்போது ரூபாயின் மதிப்பு 1939ம் ஆண்டுக்கு முன்பு, அதாவது இரண்டாவது யுத்த காலத்திற்குமுன், இருந்த மதிப்பில் நான்கில் ஒரு பங்குகூட இல்லை என்று மக்கள் அடிக்கடிச் சொல்லுவதைக் கேட்கிருேம். வயதானவர்களைக் கேட்டால் முதல் உலக மகாயுத்த காலத்தில், அதாவது 1914ம் ஆண்டு ரூபாயின் மதிப்பில் இப்போதுள்ள ரூபாயின் மதிப்பு எட்டில் ஒன்று தான் இருக்கிறது என்பர். இன்னும் சிலரைக் கேட்டால் பத்தில் ஒன்று தான் என்பார்கள்.

## பணத்தின் மதிப்பு என்பது என்ன?

பணத்தின் மதிப்பு மாறிவிட்டது என்று நாம் கூறும் பொழுது நாம் எந்தக் கருத்தை மனத்தில் கொண்டு அவ்வாறு சொல்லுகிருேம்? இம்மாதிரி மாறுதல்களை ஏற்படுத்தும் காரணங்கள் என்ன? இவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். பணத்தின் மதிப்பு என்பது அதைக்

கொண்டு இதர பண்டங்களை வாங்கக் கூடிய சக்தியே. குறித்த ஒரு சமயத்தில் அல்லது கால அளவில் பொருள்களை வாங்கக் கூடிய சக்தியையே பணம் குறிக்கிறது. பொருள்கள் அனைத்திற்கும் விலையின் மூலமாக பணத்தைக் கொண்டே மதிப்பை நிர்ணயிக்கப் படுவதால் பணத்தின் மதிப்பையும் பண்டங்களின் விலையைக் கொண்டே நிர்ணயிக்க வேண்டும். விலை வாசிகள் பொதுவாக உயர்ந்து விட்டால், பணத்தின் மதிப்புக்குறைந்து விட்டது என்பதை உணர்கிறோம். விலைவாசிகள் சரிந்து விட்டால் பணத்தின் மதிப்பு உயர்ந்து விட்டது என்று அறிகிறோம். விலைகளின் மாறுதல்களைப் பற்றிச் சொல்லும்போது, தனித்தனி மாறுபட்ட நிலைமைகளும் ஏற்படும். பொதுவாக விலைகள் உயர்ந்தாலும், சில இனங்களில் விலை குறையவும் செய்யலாம். அதேபோல பொதுவாக விலை சரிந்திருந்தாலும் சில இனங்களில் விலை உயர்ந்து நிற்றல் சாத்தியமே. ஆனால் மொத்தமாக விலை வாசிகளின் ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டே பணத்தின் மதிப்பின் தாழ்வு ஏற்றங்கள் கணிக்கப் படுகின்றன.

விலை வாசிகளின் மாறுதல்கள் எல்லா இனங்களுக்கும் சமானமாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை என்று மேலே சொல்லப்பட்டது. ஒரே சமயத்தில் சில இனங்களுக்கு விலை உயரலாம்; சில வற்றிற்கு விலை குறையலாம். உதாரணமாக, உணவுப் பொருகளின் விலை குறையும் போது ஜவுளி தினுசுகளின் விலைகள் உயரக்கூடும். இவ்வாறு பல்வேறு பொருள்களின் தனித்தனி விலைகள் அதனதன் காரிய காரணங்களுக்கேற்ப நிகழ்ந்தாலும், பொதுவாக விலைவாசிகளின் போக்கு உயர்ந்து கொண்டே செல்லுகிறது அல்லது இறங்கு முகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்தப் பொது விலை மட்டங்கள் தான் பணத்தின் மதிப்பை அறிந்துகொள்ளுவதில் முக்கியமாக விளங்குகின்றன.

**பணத்தின் மதிப்பை அளத்தல்**

விலைகளின் மாறுதல் அல்லது பணத்தின் மதிப்பின் ஏற்றத் தாழ்வுகளை அளந்து கணக்கிடுவதற்கு குறியீட்டு எண் என்ற புள்ளி விவர முறை மேற்கொள்ளப்படுகிறது. இந்தக் குறியீட்டு எண்ணைக் கணிக்கப்பல்வேறு முறைகள் நடை முறையில் கையாளப் படுகின்றன. ஆனாலும் இவ் வெல்லா முறைகளிலும் அடிப்படையாக அமைந்துள்ள தத்துங்களில் அதிக வித்தியாசங்கள் இல்லை. இவற்றையே இங்கே விவரிக்கிறோம். ஆரம்பத்தில் ஏதாவது ஒரு வருஷத்தை ஆதார ஆண்டு என்று நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். இந்த ஆதார ஆண்டில் நிலவிய விலைவாசி களுடன் பிற்கால ஆண்டுகளில் நிலவிய விலைவாசிகளை ஒப் பிட்டு ஏற்றத் தாழ்வுகளை நிர்ணயம் செய்து சொல்லப்படும். ஆதார ஆண்டில் பல பண்டங்கள் பரவலாகப் பொறுக்கிக் கொள்ளப்பட்டு அதனதனுடைய விலைகளும் மார்க்கட் நில வரப்படிக் குறித்துக் கொள்ளப்படுகின்றன. வெவ்வேறு விலைகளை இவ்வாறு சேகரித்து அவற்றை எல்லாம் ஒரே இனமாக மாற்றுகிறார்கள். குறிப்பிட்ட பொருள்கள், அல்லது பண்டங்களின் சராசரி விலையைக் கண்டு பிடித்து ஒன்று சேர்த்துக் கணக்கிடுவதன் மூலம் இந்த ஆதார ஆண்டுக்கான விலைவாசியின் ஆதாரக் குறியீட்டு எண் கணக்கிடப் படுகிறது. பிறகு அதே பொருள்கள் அல்லது பண்டங்களுக்கு ஆதார ஆண்டுக்கு எந்த மாதிரி விலைவாசி கள் சேகரிக்கப் பட்டனவோ அதே மாதிரி அந்தந்தப் பொருள்களின் விலைவாசிகள் குறிக்கப்பட்டு சராசரிக் கணக்குப்படி அந்த வருஷத்தின் விலையில் குறியீட்டு எண் கணக்கிடப்படுகிறது. இப்படி எந்த ஆண்டின் பொது விலைகளின் போக்கை அறிய விருப்பமோ அந்த ஆண்டில் அந்தந்தப் பொருள்களின் விலைகளைக் குறித்துக் கணக்கிட்டுக் குறியீட்டு எண் கணக்கிடப்படும். பிறகு

பிற்கால ஆண்டின் குறியீட்டு எண்ணை ஆதார ஆண்டின் குறியீட்டு எண்ணுடன் ஒத்திட்டு பிந்தியது முந்தியதற்கு எந்த சதவீதத்தில் இருக்கிறதென்பது கணக்கிடப்படுகிறது. உதாரணமாக, ஆதார ஆண்டின் விலைவாசிக் குறியீட்டு எண் 100 என்று வைத்துக்கொண்டு (சதவீதக் கணக்குக்காக ஆதார ஆண்டு எண்ணை 100 க்கு சமன் செய்து 100 என்றே ஆரம்பிக்கும்) பிற்கால ஆண்டில் விலைவாசிகள் 10 சதம் உயர்ந்து விட்டதென்றால், அதை 110 என்ற குறியீட்டு எண்ணினால் குறிப்பிடுவார்கள்.

குறியீட்டு எண்ணைத் தயாரிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பொருள்களின் தனித்தனி முக்யத்வத்தைக் கவனத்தில் கொண்டே தேர்ந்தெடுத்துக் கொள்ளுவது அவசியம். மக்கள் உபயோகத்தில் அப்பொருள்கள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதைக் கொண்டே பண்டங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். எல்லாப் பொருள்களும் சமம் என்று கணக்கிட்டால் அது சரியான முறையாகாது என்பது உடனே விளங்கும். அரிசி போன்ற அத்தியாவசியமான பொருள்களின் உபயோகமும் ஆடம்பரப் பொருளான பட்டுத்துணிகளின் உபயோகமும் சமமாகக் கருதக் கூடாதல்லவா? எல்லாப் பண்டங்களின் சராசரி விலையைக் கணிக்கும்போது அரிசிக்குள்ள விலை ஏற்றம் பட்டு ஜவுளிக்குள்ள விலைக் குறைவில் அடிபட்டுப் போய், சமநிலைக்கு வந்துவிடும், குறியீட்டு எண்ணில் எந்தவித மாறுதலும் தெரியாது. உபயோகிப்பவர்களுக்கு அரிசி முக்கியப் பொருளாகையால் அதனுடைய விலை ஏற்றத்தால் ஏற்படும் கஷ்டம் அவசியமில்லாத பட்டு ஜவுளியின் விலைக் குறைவால் நீங்கி விடாது. இம்மாதிரிப் பண்டங்களின் முக்யத்வத்தில் தாரதம்யங்கள் காணப்படுவதைச் சமன் செய்வதற்காக "கனப்படுத்துதல்" (Weighting) என்ற முறை கையாளப்

படுகிறது. அதாவது ஒரு பொருள் மக்களால் வாங்கப் படும் அளவைக்கொண்டு அதன் முக்கியத்வத்தை நிர்ண யித்து, இதை ஒரு முக்கியத்வ எண்ணுல் குறிப்பிட்டு, அந்த எண்ணுல் அப்பொருளின் மார்க்கெட் விலையைப் பெருக்கி, வந்த எண்ணை அப்பொருளின் உண்மை விலை எனக் கொள்ளப்படுகிறது. உதாரணமாக, ஒருவன் ஒரு ஆண்டில் 100 ரூபாய் அரிசிக்காகவும் 10 ரூபாய் பட்டு ஜவுளிக்காகவும் செலவழித்தால், அவனுடையக் குடும்ப வரவு செலவு திட்டத்தில் அரிசி பட்டு ஜவுளியைவிடப் பத்து மடங்கு அகிக முக்கியத்வம் உள்ளது என்பது தெரிகிறது. பத்து முக்கியத்வ எண்ணுகக் கருதப்படும். அரிசியின் விலையைப் பத்தால் பெருக்கி வந்த தொகையை அரிசியின் உண்மை விலையாகக் கொள்ளப்படும்.

இக்குறியீட்டு எண்கள் விலைவாசிகளின் ஏற்றத் தாழ்வுகளைச் சரிவரக் காட்ட வேண்டுமென்பதற்கு மேலே சொன்ன கனப்படுத்துதல் முறையைத் தவிர, பல இதர நுட்பமான முறைகளும் கையாளப்படுகின்றன. ஆனல் எம்மாதிரி முறை மேற்கொள்ளப்பட்டாலும், குறியீட்டு எண்கள் விலை வாசிகளின் நிலைமையை உத்தேசமாகத் தான் தெரிவிக்குமே தவிர, நிச்சயமாக நிகரமாகத் தெரி விக்கும் என்று சொல்ல முடியாது. அவ்வாறு எதிர் பார்க்கவும் கூடாது. ஏனெனில் குறியீட்டு எண்ணைக் கணிப்பதிலுள்ள சில சிக்கல்களினுல் அதனுடைய முக்கியத்வம் ஓரளவுக்குக் குறைந்து விடுகிறது. வெவ் வேறு மக்கள் வெவ்வேறு பொருள்களை வெவ்வேறு அளவிலும் வெவ்வேறு தரத்திலும் வாங்குகின்றனர். ஒரு நடுத்தரக் குடும்பம், அதாவது ஐந்து நபர்களைக்கொண்ட ஒரு குடும்பம், வாங்கும் பொருள்களை பிரதான மாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட குறியீட்டு எண் ஒரு பெரிய குடும்பம், அல்லது மிகச் சிறிய

குடும்பம், அல்லது அதிக வருமானமோ, மிகக் குறைந்த வருமானமோ உள்ள ஒரு குடும்பம் வாங்கும் தேவைகளுக்குப் பொருந்தாமலிருக்கலாம். உதாரணமாக, குழந்தைகள் அதிகமாக உள்ள ஒரு குடும்பத்தின் செலவு இனங்களில் பாலுக்காகச் செலவு செய்யப்படுவது அதிக மாகவே இருக்கும். ஆனல், ஒரு சிறிய குடும்பத்தில் இந்த இனத்திற்காகப் பிடிக்கும் செலவு குறைவாக இருக்கும். இரண்டாவதாக, செலவு செய்யப்படும் தன்மையும் காலத் திற்கு ஏற்ப மாறுபடும். இது மக்களின் நாகரிக மாறுதல் களினுலும், விருப்பு வெறுப்பு மாறுவதாலும், 'பாஷன்'கள் மாறுவதாலும் ஏற்படும். சில சமயங்களில் புதுப்புதுப் பொருள்களும் புதுப்புது சேவைகளும் சுலபமாகக் கிடைக்கும் வாய்ப்புகள் இருக்கும். இதர சமயங்களில் அவை சுலபமாகக் கிடைக்காமல் போகலாம். குறியீட்டு எண்கள் தயாரிக்கப்படும்போது இம்மாதிரி அம்சங்களையும் கவனத்தில் கொள்ளவேண்டும். உதாரணமாக 20 அல் லது 30 ஆண்டுகளுக்கு முன்பு சினிமா, புகைப்பிடித்தல் இவ் விரு இனங்களில் மட்டுமே எவ்வளவு செலவு செய்யப் பட்டதோ அதைவிட மிக அதிகமாக இப்போதெல்லாம் செலவு செய்யப்படுகிறது. இப்போதுள்ள நாகரிகத்தில் இவை அதிக முக்கியத்வம் பெற்றுவிட்டன. இம்மாதிரி சிக் கல்கள் ஏற்படுவதால் குறியீட்டு எண்களிலிருந்து விளக்கம் செய்யும்போது மிகுந்த எச்சரிக்கை வேண்டும். உதாரண மாக, தொழிலாளிகள் பொது விலைவாசிகள் உயர்ந்து விட்டனவென்று சம்பள உயர்வு கோருவார்கள். அவர் களுடைய இம்மாதிரி கோரிக்கையை பரிசீலனை செய்யும் போது, அவர்களுடைய வாழ்க்கையில், அவர்களுடைய வரவு செலவு திட்டத்தில் என்னென்ன பொருள்கள் இடம் பெறுகின்றன, அந்தப் பொருள்களின் விலைகள் உயர்ந்திருக்கின்றனவா என்பதை முக்கியமாகக் கவனிக்க

வேண்டும். இம்மாதிரி கஷ்டங்களைச் சமாளிப்பதற்காகவே பல நாடுகளில் வெவ்வேறு தேவைகளைக் கருத்தில்கொண்டு வெவ்வேறு குறியீட்டு எண்கள் தயாரிக்கப்படுகின்றன. நமது நாட்டிலும் கூட இம்மாதிரி வெவ்வேறு குறி எண்கள் கணிக்கப்படுகின்றன.

### விலைவாசிகள் மாறுதலினால் விளையும் பலன்

விலைவாசிகளில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதனால் நாம் ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்படுகிறோம். எல்லோரும் ஒரே விதமாக அல்லது ஒரே அளவில் பாதிக்கப்படா விட்டாலும், அவற்றைப்பற்றி நாம் கவலை கொள்ளாமல் இருக்க முடிகிறதில்லை. விலைகள் உயரும் போது, பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் அதிக விலையினால் அதிக லாபம் அடைகிறார்கள். அவர்களுக்கு அது நன்மை. ஆனால் மாதச் சம்பளம் பெற்றுக்கொண்டு ஊழியம் செய்யும் சர்க்கார் சிப்பந்திகள், குமாஸ்தாக்கள் போன்றவர்களுக்கு விலை உயர்வை அனுசரித்து சம்பள விகிதம் உயருவதில்லையாதலால் அவர்கள் எல்லோரும் விலை ஏற்றத்தினால் கஷ்டப்படுவார்கள்.

பொதுவாகச் சொன்னால், ஓரளவுக்கு விலைகள் உயருவது விரும்பத்தக்கதே என்று கருதலாம். காரணங்கள் பின்வருமாறு. தொழில் வளர்ச்சியை இது ஊக்குவிக்கும். தொழில் வளர்ச்சியிலும் உற்பத்தியிலும் ஈடுபட்டிருப்பவர்களுக்கு விலை வாசிகள் பொதுவாக உயருகின்றன என்றாலே ஒருவித உற்சாகம் உண்டாகும். விலை உயர்விலிருந்து அதிக லாபம் என்பது பொதுவான நியதியாகையால், தொழிலில் பற்றுள்ளவர்கள் அவரவர்கள் தொழிலை விஸ்தரிக்க முற்படுவார்கள். தொழில் விஸ்தரிப்பினால் அதிகமாக வேலை வாய்ப்புகள் ஏற்படும். பலருக்குப் புது வேலைகள் கிடைக்கும். வேலையில்லாத்

திண்டாட்டம் குறையும். ஆனால் விலைவாசிகள் இடைவிடாது உயர்ந்துகொண்டே சென்றாலும், ஒரே சமயத்தில் மிதமிஞ்சி உயர்ந்துவிட்டாலும் சமூகத்திற்குக் கெடுதல் தான் உண்டாகும். ஏனெனில் பணத்தின் "வாங்கும் சக்தி" அந்த அளவுக்குக் குறைந்து போகும். கடன் கொடுத்தவர்களெல்லாம் விலைவாசிகள் ஏறுமுகமாயுள்ள காலத்தில் ரொக்கமாகப் பணத்தைத் திரும்பிப் பெறும்பொது, உண்மையில் பார்த்தால் நஷ்டமே அடைவர். ஏனென்னில். பணத்தின் மதிப்புக் குறைந்திருக்குமாதலால், அந்தப் பணத்தைக்கொண்டு இதர பொருள்களை வாங்குவதானல், விலை ஏற்றத்துக்கு முன்பு இருந்த மாதிரி அதே அளவில் வாங்க முடியாது. பணத்தின் அப்போதைய "வாங்கும் சக்தி" குறைந்திருத்தலே அதற்குக் காரணம். பென்ஷன் பெற்று ஜீவிக்கும் மக்கள், சம்பளக்காரர்கள், சர்க்கார் கடன் பத்திரங்களிலிருந்து வட்டி வாங்கி ஜீவிப்பவர்கள் முதலியவர்களுக்கு இதனல் நஷ்டம் உண்டாகும். அவர்களுக்குக் கிடைக்கும் பணம் எண்ணிக்கையளவில் குறையாவிட்டாலும் அதன் மதிப்புக் குறைவே. தொழிலாளிகளும். அவர்களுடைய கூலி விகிதங்கள் விலை உயர்வையொட்டி உயருவதில்லை. ஆதலால் நஷ்டப்பட வேண்டிவரும், அதேபோல் நீண்ட காலத்திற்கு ஒரு ஒப்பந்தத்தின் பேரில் நிகரச் சம்பளத்திற்கு பணியாற்றும் மக்களும் இவ்வாறே விலை உயரும் காலத்தில் நஷ்டப்படுவார்கள். அரசாங்கத்துக்குக் கூட நஷ்டம் உண்டாகும். ஏனெனில், முன்பு, அதாவது விலை உயர்வதற்கு முன்னல், அவர்கள் பெற்று வந்த சேவைகளுக்கும் பண்டங்களுக்கும் பொருள்களுக்கும், அவர்கள் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கும். அதற்காக முடிவில் மக்களிடமிருந்து அதிக வரி வசூல் செய்ய வேண்டியும் வரும்.

மாருக, விலை ஏற்றத்தினுல் தொழிலதிபர்களும்; கடைக்காரர்களும், விற்பனையாளர்களும், அதிக லாபம் அடைவார்கள். பெரிய பண்ணைகள் நடத்தி, அபரிமித மான தானியங்களை விளைத்து மார்க்கெட்டுக்கு வழங்கக் கூடிய வசதியுள்ள நிலச்சுவான்தார்களும் விலை வாசிகள் உயருகின்ற காலத்தில் லாபம் அடைவார்கள். தொழிற் சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகள், தொழிலாளர் சங்கங்களின் கட்டுப்பாட்டினுல், விலைவாசிகள் உயர்ந்து விட்டதையும் தொழிலுக்கு அதிக லாபம் கிடைப்பதையும் காரணங்களாகக் காட்டி சம்பள உயர்வுக்குக் கிளர்ச்சி செய்து அதைப் பெற்றும் வருவார்கள்.

விலைவாசிகள் குறையும் காலத்தில் ஏற்படும் விளைவு கள் மேலே விவரித்தவைக்கு நேர் மாருனவை. தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உற்சாகக் குறைவை அவை உண்டுபண்ணும். புது முயற்சிகளில் ஈடுபட அவர் கள் மனம் செல்லாது. பொருளாதார நடவடிக்கைகளெல் லாம் மந்தகதியடையும். சட்டப்படியோ அல்லது ஒப்பந்தப் படியோ ஸ்திரமான வருமானமுள்ளவர்கள் எல்லோரும் விலைகள் சரிந்துள்ள காரணத்தால் உண்மையில் அதிக வருமானம் பெறுபவர்களாகவே கருதப்படுவார்கள். அவர் கள் பெறும் பணத்தின் வாங்கும் சக்தி அதிகரித்திருப்பதே இதற்குக் காரணம். “பண வருமானம்” மாருவிட்டாலும் “உண்மை வருமானம்” மாறுதல் அடைகிறது. விலைக் குறைவு என்ருல் லாபக் குறைவு. தொழிலதிபர்களும் உற் பத்தியாளர்களும் தொழிலாளிகளை வேலையினின்று நீக்கு வார்கள். வேலை வாய்ப்புகள் குறையும். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும். சர்க்காருக்கு வரிகள் மூலம் கிடைக்கும் வருவாயும் குறைந்து போகக்கூடும். ஏனெனில் லாபங்களும், வருமானங்களும் குறைவாக இருக்குமாதலால் இவற்றிலிருந்து சர்க்காருக்குக் கிடைக்கும் வரிப்பணமும்.

விகிதாசாரப்படிக் குறையவே செய்யும். மேலும் சர்க்கார் செய்யும் செலவினங்கள் எல்லாம் பெரும்பாலும் ஸ்திரத் தன்மையுடையன ஆதலால் பொது மக்களுக்கு, அதாவது வரி செலுத்தும் மக்களுக்கு, இச் செலவினங்களின் சுமை அதிகரிக்கும். உதாரணமாக, தேசியக் கடனுக்குக் கொடுக்கப்படும் வட்டி, பென்ஷன் இனங்கள், சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளம், மற்றும் இவை போன்ற இனங்களில் செய்யப்படும் செலவுகள் ஸ்திரத்தன்மையுள்ளவை. இவற்றின் சுமை அதிகரிக்கும்.

விலைவாசிகளில் ஏற்றத் தாழ்வுகளைக் காட்டிலும் ஒரே நிதானத்தில் விலைகள் இருப்பதுதான் பொதுவாக விரும்பத்தக்கது. சமூகத்தில் எல்லாப் பகுதியினருக்கும் நிலையான விலை மட்டம் நன்மையளிக்கும். நவீன கால நாணய நிர்வாகத்தின் லட்சியம் விலைவாசிகளைக் கூடிய வரையில் ஸ்திரமான மட்டத்திலேயே வைத்திருப்பதுடன் உயர்ந்த அளவில் உற்பத்தியையும் வேலை வசதிகளையும் வைத்திருப்பதே,

## பணப்பரிமாணக் கொள்கை (Quantity Theory of Money)

பொருள்களின் விலைகள் எவ்வாறு நிர்ணயமாகின்றன என்பதைப் பற்றி விவாதித்த முன் அத்தியாயத்தில், ஒரு பொருளின் சப்ளையில் உயர்வு அல்லது தாழ்வு ஏற்பட்டால் அதன் விலைக் குறையவோ அல்லது உயரவோ செய்கிற தென்றும், ஒரு பொருளுக்குள்ள கிராக்கி உயரவோ தாழவோ செய்தால் அதனுடைய விலை குறையும் அல்லது உயரும் என்றும் விளக்கப்பட்டது. இந்தப் பொது விதிகள் இதரப் பண்டங்கள் அல்லது பொருள்கள் விஷயத்தில் உள்ளது போல பண விஷயத்தில் முற்றிலும் பொருந்தா விட்டாலும் (பணத்துக்குள்ள கிராக்கியும் சப்ளையும் மற்றப் பொருள்களுக்குள்ளது போன்ற காரண காரியங்

களால் ஏற்படுவதல்ல) பணத்தின் மதிப்பைப் பற்றிய மட்டில் அதற்குள்ள கிராக்கியும் சப்ளையும், மற்றப்பொருள் களின் மதிப்பை நிர்ணயிப்பது போலவே, பணத்தின் மதிப்பையும் நிர்ணயிக்கின்றன. புழக்கத்திலிருக்கும் பணத்தின் மொத்தத் தொகை அதிகரிக்குமேயானால், அதனுடைய மதிப்பு அந்த அளவுக்குக் குறைகிறது. அதாவது, பணத்தின் வாங்கும் சக்தி குறைந்து, பொருள்களின் விலை உயரும். பணத்தின் மதிப்பு, அது மற்றப் பொருள்களை வாங்கும் சக்தியே என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதிகப் பணம் என்றால் குறைந்த மதிப்பு என்ற பொது விதி பணத்துக்கும் பொருந்தும், மாறாக, புழக்கத்திலிருக்கும் பணத்தின் மொத்தத் தொகை குறைந்தால், அதனுடைய "வாங்கும் சக்தி" அதிகரிக்கும்; அந்த அளவுக்குப் பொருள்கள், சேவைகள், ஆகியவற்றின் விலைகள் குறையும். குறைந்த பணம், அதிக மதிப்பு இந்த இரண்டு போக்குகளின் அடிப்படையில் உருவானது தான் "பணப்பரிமாணக் கொள்கை" (Quantity Theory of Money) என்று பொருளாதார நூல்களில் விவரிக்கப்படும் தத்துவம். இந்தக் கொள்கையின்படி, பரிவர்த்தனை செய்யப்பட வேண்டிய (விற்க அல்லது வாங்கவேண்டிய) பொருள்களின் மொத்த அளவு ஸ்திரமாக இருக்கும் சமூக நிலையில், விலைவாசிகளில் உயர்வும் தாழ்வும், அச் சமூகத்தில் புழங்கும் மொத்தப் பணத்தில் குறைவு அல்லது உயர்வு ஏற்படும் அளவுக்கு நேர் விகித சாம்யத்திலிருக்கும் இக்கொள்கையின ஆரம்ப காலத்தில் இப்படித்தான் இது விவரிக்கப்பட்டது. இந்தக் கொள்கையில் கீழ்க்கண்ட அடிப்படை அனுமானங்கள் உள்ளன; (1) ஒவ்வொரு தடவை பொருள்கள் கை மாறும்போது பணமும் ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு மாறுகிறது; (2) எவ்வளவு பணம் இருக்கின்றதோ, அவ்வளவும் புழக்கத்திலிருக்

கின்றது; (3) எவ்வளவு பொருள்கள், சேவைகள், பண்டங்கள் விற்பனைக்காக இருக்கின்றனவோ, அவ்வளவும் விற்கப்படுகின்றன. இந்த மூன்று அனுமானங்கள் இக்கருத்தில் அடங்கியிருக்கின்றன.

இவை முற்றிலும் சரி அல்ல. இந்த அனுமானங்கள் ஓரளவுக்குத்தான் பொருந்தும். ஆரம்ப காலத்தில் இந்தத் தத்துவம் எளிய முறையில் உருவாக்கப்பட்டது. இப்போதுள்ள விரிவான பொருளாதாரச் சமுதாயத்தில் இக் கருத்து வெகுவாக மாறுபட்டுள்ளது. விலை வாசிகளின் நிலைமைகளை, தற்போது நிலவும் இக்கருத்தின்படி, மூன்று முக்கிய அம்சங்களைக்கொண்டு நிர்ணயம் செய்கின்றனர்—(1) பணத்தின் பரிமாணம் (Quantity of money); (2) பணம் சுழலும் வேகமும், அதன் செயல் ஓட்டமும் பணத்தின் ஸ்தானத்தில் அதற்குப் பதிலாக, அதே திறமையுடன் செயல் புரியும் பணத்தின் மாற்று வகைகளான செக் முதலியவற்றின் பரிமாணமும் அவற்றின் சுழலும் வேகமும்; (3) வியாபாரத்தின் பரிமாணம் (கொடுக்கல், வாங்கலின் மொத்தம்). பணத்தின் பரிமாணம் என்னும்போது நாண்யங்கள், நோட்டுகள், போன்ற அரசாங்க முத்திரை தாங்கிப் பணமாகச் செயலாற்றும் செலாவணியும், அதே தொழிலைச் செய்யும் செக்குகள், பாங்குச் சீட்டுகள், ஹூண்டியல்கள் முதலிய இதரவஸ்துக்களும் மொத்தமாகக் குறிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட காலத்தில் சமூகத்தில் புழக்கத்திலிருக்கும் இவ்வினங்களின் மொத்தத் தொகையைப் பணத்தின் பரிமாணம் என்று சொல்லப்படுகிறது. இதைக் கணக்கிடும்போது பணத்தைக் கையாளுவதில் மக்களின் பழக்க வழக்கங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்; அதாவது நோட்டுகளையும், ரொக்கப் பணத்தையும் அதிகமாகக் கையாள விரும்புகின்றனரா, அல்லது செக்குகளைக்கொண்டே தங்கள் தேவைகளைப் பூர்த்தி

செய்து கொள்ளுகின்றனரா என்பது. உதாரணமாக, இங்கிலாந்து போன்ற நாடுகளில் செக்குகளை உபயோகிக்கும் பழக்கம்அதிகம். ஆனால் இந்தியாவில் செக்குப் பழக்கம் அதிகமாகப் பரவவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக சமீப காலத்தில் இது பரவிக்கொண்டு வருகிறது. இரண்டாவது அம்சம் சுழலும் வேகம் (Velocity of Circulation). ஒருவனிடமிருந்து மற்றொருவனிடத்திற்குக் கொடுக்கல் வாங்கல் செய்யும்போது பணம் எவ்வளவு வேகமாகக் கை மாறுகிறது என்பதே சுழலும் வேகம் எனப்படும். ஒரு நாளில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு ரூபாய் நோட்டு, அல்லது நாணயம் ஒரு முறைதான் மாறுகிறது என்று வைத்துக்கொண்டால், அதன் சுழல் வேகம் ஒன்று. அதே ரூபாய் ஒரே நாளில், அல்லது அதே குறிப்பிட்ட காலத்தில் இரண்டு முறை இருவர் கை மாறினால் அதன் சுழல் வேகம் இரண்டு. அதாவது இரண்டு தனித்தனி ரூபாய் செய்யும் இரண்டு காரியத்தை ஒரே ரூபாய் வேகமாகக் கை மாறுவதன் மூலம் செய்து விடுகிறது. இப்படியே வேகம் அதிகரிக்க அதிகரிக்க, அதன் எண்ணிக்கை மூன்று, நான்கு, என்று உயர்ந்துகொண்டே போகும். இப்படியே ஒரே ஒரு ரூபாய் நோட்டுப் பல தனித்தனி பேரங்களைத் தொடர்ந்து செய்துகொண்டே போகும். அதனுடைய வாங்கும் சக்தியும் தனித்தனி ரூபாய் நோட்டுகள் இருந்தால் மொத்தம் என்ன இருக்குமோ, அதே அளவில் இந்த ஒரே ரூபாய்க்கும் உண்டு. குறிப்பிட்ட காலத்தில் ஆறு தடவைகள் இது உபயோகிக்கப்பட்டால், அதன் சுழல் வேகம் ஆறு என்று குறிப்பிடலாம். பணம் என்பது பணமாகச் செயல்படும் போது மட்டுமே பணம் என்ற முக்கியத்வம் பெறுகிறது. ஆகவே விலை வாசிகளின் போக்கைப் பணம் எவ்வாறு நிர்ணயிக்கிறதென்பதைக் கவனிக்கும்போது. நாட்டில்

இருக்கும் மொத்தப் பணத்தைக் கணக்கெடுத்துக் கொள்ளுவதுடன், அதனுடைய உபயோகத்தின் வேகத்தையும் கணக்கிட வேண்டும். மூன்ருவது அம்சம் வியாபாரத்தின் அளவு. வியாபாரம் சுறுசுறுப்பாக விரிவடையும் போதும், மந்த கதி யடைந்து சுருங்கும்போதும் பணம் அதிகமாகவும் குறைவாகவும் தேவைப்படுகிறது. அதாவது, பணத்துக்குக் கிராக்கி வியாபாரத்தின் போக்கை அனுசரித்தே இருக்கிறது. இந்தக் கிராக்கியை அனுசரித்து பணத்தின் மதிப்பு மாறுதல் அடைகிறது. மேலும் வியாபாரத்தின் அளவு பணத்தின் சுழல் வேகத்தையும் பாதிக்கிறது. அதன் மூலம் சமூகத்தில் புழங்கும் நிகரப் பணத்தின் அளவையும் நிர்ணயித்து இறுதியில் விலைவாசிகளின் போக்கையும் பாதிக்கிறது.

பணப் பரிமாணக் கொள்கையைச் சில சமயம்' கணித நூல்களில் காணப்படுவதுபோல் சாம்ய விகிதத்தில் குறிப்பிடுவதுண்டு. இதைப் பணத்தின் **மாற்று விகித சாம்யம் (Equation of Exchange)** என்பர். இதை மக்களிடையே பரவச் செய்தவர் இர்விங் ஃபிஷர் என்னும் அமெரிக்கப் பொருளியல் பேராசிரியர், இந்த சாம்யத்தைச் சுருக்கமாக **(M V=P T) எம். வி.** என்பது **பி. டி.** க்குச் சமம் என்று சொல்லிவிட்டார். ´இதில் எம் **(M)** என்பது பணத்தின் சப்ளை, **வி (V)** என்பது பணத்தின் சுழல் வேகம், **டி (T)** என்பது பேரங்களின் மொத்தம் (அதாவது வியாபாரத்தின் அளவு), **பி (P)** என்பது விலை மட்டம். இதே சாம்யத்தை வேறு முறையில் $P=\frac{M\ V}{T}$ என்று குறிப்பிடுவதும் உண்டு, எழுத்துக்களுக்குப் பொருள் மேலே கொடுத்திருப்பது போலவே.

நவீன பொருளாதார உலகத்தில் நோட்டுகள், ரொக்கப்பணம் ஆகியவற்றுடன், பாங்கிகள் வழங்கும் செக்கு

களும் கொடுக்கல் வாங்கல் பேரங்களில் இடம் பெறுகின்றன என்று மேலே சொல்லப்பட்டது. இவற்றையும், அதாவது பணத்தின் மொத்தத் தொகையில் செக்குகளேயும், சேர்த்துக் கொள்ளும் பொருட்டு மேலே சொன்ன சாம்யத்தைச் சிறிது மாற்றி MV+M'V'=P. T. என்று குறிப்பிடுவதுண்டு, இதில் M' என்பது பாங்கு டிபாசிட்டுகள் அல்லது செக் நாணயத்தைக் குறிக்கும். V' என்பது பாங்கு டிபாசிட்டுகளின் சுழல் வேகத்தைக் குறிக்கும். செக்குகளின் மொத்தத்தைக் கணக்கெடுப்பதன் மூலம் பாங்கு டிபாசிட்டுகளின் சுழல் வேகம் நிர்ணயிக்கப்படுகிறது. (செக்குகள் என்பது பாங்கிலுள்ள டிபாசிட்டுத் தொகையின் அம்சம் தான் என்பது கவனிக்கத் தக்கது,)

மேலே குறிப்பிட்டுள்ள சாம்யமே பணப் பரிமாணக் கொள்கை அல்ல என்பதை இங்கே முக்கியமாக எடுத்துக் காட்டவேண்டும். பணம் பரிமாணக் கொள்கையை விளக்குவதற்காகஏற்பட்ட பல முறைகளில் இச் சாம்ய முறையும் ஒன்று. இச் சாம்யம் ஒரு விளக்கமே தவிர, அசல் கொள்கையல்ல. பணம்—பண்டம் என்ற மாற்று விகித சாம்யத்தை அடிப்படையாகக்கொண்டு பணப் பரிமாணக் கொள்கையை விஸ்தரித்துச் சொல்லுவது அவசியம். அப்போது தான் இவ்விரண்டுக்கும் உள்ள வேற்றுமை புலப்படும். பொது விலைகளின் மட்டம், எல்லாவிதப் பணத்தின் மொத்தத் தொகைக்கும் அதனுடைய சுழல் வேகத்திற்கும் (இதை நிகரப் பணம் எனலாம்)நேர்விகிதத்தில் மாறுபடும். ஆனல் வியாபார மொத்த பேரங்களுக்கு (இதைத் தான் பணத்துக்குள்ள கிராக்கி) தலை கீழ் விகிதத்தில் மாறுபடும். நேர்விகித மாறுபாடு என்பது பணத்தின் தொகை அதிகரித்தால் விலைகள் அதிகரிக்கும்,குறைந்தால் விலைகள் குறையும். தலைகீழ் விகித மாறுபாடு என்பது வியாபாரத்தில் பணத்திற்கு கிராக்கி அதிகமானல் விலைகள் குறையும். கிராக்கிக்

குறைந்தால் விலைகள் உயரும் என்ற நிலைமை. இதையே பேராசிரியர் இரவிங் ஃபிஷர் கூறிய சாம்ய விகித ரீதியில் அமைக்க வேண்டுமானல் $P=\frac{MV+M'V'}{T}$ என்று விரியும்.

பணப் பரிமாணக் கொள்கை ஒரு தத்துவம் என்பதையே ஒப்புக் கொள்ளாதசில பொருளியல் வல்லுநர்களும் உண்டு. அவர்களுடைய கருத்துப்படி இது பொருள் உலகத்தில் காணப்படும் ஒரு உண்மையே தவிர ஒரு கொள்கையோ, கோட்பாடோ தத்துவமோ அல்ல. இவ்வாறு சொல்லும்போது இந்தக் கொள்கையை மிகவும் எளிமையாகவே அவர்கள் வர்ணித்து விடுகிறார்கள். பழக்கத்திலிருக்கும் பணங்களின் மொத்தத் தொகை, வர்த்தகத்தில் கைமாறும் பொருள்களின் விலைகளைக் கூட்டிய மொத்தத் தொகைக்குச் சமம் என்பதையே இந்தக் கொள்கை கூறுகிறது; ஆகவே இதில் தத்துவம் ஒன்றுமில்லை என்பார்கள் அவர்கள். இப்படி இதைக் குறைவுப்படுத்திச் சொல்லுபவர்களும் பணத்திற்கும் விலைகளுக்கும் உள்ள சம்பந்தத்தை இக் கொள்கை ஆராய்ந்து விளக்கி வைக்க முற்படுகிறதென்பதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். அந்த அளவுக்காகிலும் இக்கொள்கைக்கு முக்கியத்வம் உண்டு.

பணத்தின் மதிப்பில் மாறுதல்கள் எவ்வாறு உண்டாகின்றன என்பதை இக்கொள்கை விளக்க முற்படுகின்றதே தவிர பணத்தின் மதிப்பு எவ்வாறு முதன் முதலில் நிர்ணயிக்கப்படுகிற தென்பதை விளக்கி வைப்பதில்லை என்று மற்ருெரு சாரார் இக்கொள்கையைக் குறைவாகச் சொல்லுவதும் உண்டு. பணத்தின் சப்ளை சம்பந்தமாகவே அதிகமான கவனம் செலுத்தப்படுகிறது; சப்ளையின் அளவு, வேகம் முதலியவற்றை அதிக முக்கியமெனக் கருதி அவைகளை ஆராய்கிறது; சப்ளை என்பது மதிப்பை நிர்ணயிப்பதற்கு அவசியமான பல காரணங்களில் ஒன்று ,தானே,

ஆகையால் இக் கொள்கை அவ்வளவு முக்கியமானதல்ல என்பது இச்சாராரின் வாதம். பணத்தின் கிராக்கியைப் பற்றியும் சிறிது கூறப்படுகிறது என்பதை ஒப்புக் கொண்டாலும், அதனுடைய வெவ்வேறு அர்த்த அநர்த்த விளைவுகளைப் பற்றி விரிவாக பரிசீலிப்பதில்லை என்று எடுத்துக் காட்டப்படுகிறது.

மேலும் ஒரு கண்டனம் பொது விலை மட்டத்தைப் பற்றியது. பணம் பரிமாணக் கொள்கைக்கு பொது விலை மட்டம் என்னும் கருத்து இன்றியமையாத அம்சம். ஆனால் சிலர் பொது விலை மட்டம் **(General Price level)** என்னும் கூற்றே சரியல்ல, உண்மையில் பொது விலை மட்டம் என்பதே கிடையாது என்று எடுத்துக் காட்டுகின்றனர். இவ் வாதத்தில் சிறிதளவு மட்டுமே உண்மையிருக்கிறது. நடைமுறையில் விலைவாசிகளின் போக்குகளை ஆராய்வதற்கும், படிப்பதற்கும் பொது விலை மட்டம் என்ற கருத்து முக்கிய இடம் பெற்றுள்ளது. இதைப் புறக்கணிக்க முடியாது.

மற்றும் ஒரு சாரார் வேறு ஒரு முறையில் இக் கொள்கையைக் கண்டிக்கின்றனர். பணத்தின் மொத்தத் தொகை விலை வாசிகளின் உயர்வுக்கு ஒரு எல்லைக் கட்டி, எவ்வளவு வரையில் அவை உயரக்கூடும் என்பதை நிர்ணயிக்கக் கூடுமானாலும், வியாபார மந்தம் ஏற்படும் காலங்களில் பணத்தின் மொத்தத் தொகையில் எவ்விதக் குறைவும் ஏற்படாமலிருக்கும் போதும் பொதுவாக விலை வாசிகள் சரிந்து போவதற்கு இக்கொள்கை போதிய விளக்கம் தருவதில்லை என்பது இவர்களுடைய வாதம். தொழிற் சுறு சுறுப்புள்ள காலத்தில் இருக்கும் பணம் மந்தம் ஏற்படும் போதும் அப்படியே தான் இருக்கிறது; ஆனாலும் விலைகள் மந்தம் ஏற்படும்போது குறைவதைப் பற்றி இக் கொள்கை ஒன்றும் கூறுவதில்லை. இதிலிருந்து, பணத்தின் மொத்தத் தொகையைக் காட்டிலும், அவற்றில் எவ்வளவு பாகத்தை ஒரு

சமூகம் செலவு செய்யத் தயாராக இருக்கிற தென்பதுதான் முக்கியம் என்பது தெரிகிறது. இப்படி இந்த வாதம் கூறு கிறது.

இவ்வாறு பல்வேறு கண்டனங்கள் இக் கொள்கை யின் முக்கியத்தைக் குறைக்கப் பார்த்தாலும், சாதாரண மாக பணத்தின் மொத்தத் தொகைக்கும் அதனுடைய மதிப்புக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவே செய்கிறது என்பதை ஒப்புக் கொள்ளவேண்டும். பொதுவாக இந்த உண்மை கண் கூடாகக் காணப்படுகிறது. பணத்தின் மொத்தத் தொகை பெருமளவில் அதிகரிக்கும் காலங்களில் பணத்தின் மதிப்பும் பெருமளவில் குறைகிறது என்பதைக் கண்டிருக்கிறோம். சென்ற யுத்த காலத்திலும் அதற்குப் பிற்காலத்திலும் பண வீக்கம் எவ்வளவு அதிகமாக இருந்த தென்பது நமக்குத் தெரிந்ததே. நடை முறையில், அடிக்கடி பணத்தின் சப்ளையைக் கட்டுப்படுத்தியும், கடன் வசதி களைக் குறைத்தும், உயர்ந்து கொண்டே செல்லும் விலை களைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதிலிருந்து இவ்விரண்டுக்கு முள்ள சம்பந்தம் புலப்படும். எவ்வாறாயினும் இக் கொள்கையினால் ஒரு உண்மை புலனா கிறது; பணத்தின் சப்ளை திடீரென்று அதிகரித்தால் (அதிக நோட்டுகள் அச்சடித்து வழங்கினாலும் சரி, பாங் கிகள் குறைந்த வட்டியில் அதிகமாகக் கடன் வழங்கினாலும் சரி.) அதன் விளைவு விலை வாசிகள் உயர்வும், அந்த அள வுக்குப் பணத்தின் மதிப்புக் குறைவும் (நாணயம் என்ற முறையில் அதன் பண்டமாற்றுச் சக்திக் குறைவும்) ஏற்படு வது நிச்சயம்.

### பண வீக்கமும் பணச்சுருக்கமும்

சாதாரணமாக குறிப்பிட்ட விலை மட்டத்தில் நடை பெறவேண்டிய வியாபார, வர்த்தக பேரங்களின் மொத்

தத்துக்கும் போதிய அளவு பணம் தானுகவே, தேவைக்கு ஏற்றவாறு விரியவும் சுருங்கவும் வேண்டும். பண நிர்வாக முறைகளும் கொள்கைகளும் இவ்வாறு தேவைக்குத் தக்க வாறு பணம் விரிவடையவோ சுருங்கவோ இயங்குமாறு நெகிழ்ச்சித் தன்மை யுடையதாக இருக்கவேண்டும். சாதா ரண அல்லது சுதந்திர நிலைமை என்பது பணத்தின் சப்ளை யைக் கட்டுப்படுத்தும், அல்லது பாதிக்கும்படியான எவ்வித அரசாங்க நடவடிக்கையின் நிர்ப்பந்தங்களில்லாத நிலைமை. அத்தகைய சமூக நிலைமையில் விலை வாசிகளின் ஏற்றத் தாழ்வுகள் பொருளாதார சக்திகளின் வேகத்தின் போக்குப் படியே நிகழவேண்டும். உதாரணமாக. உற்பத்தி முறை களில் நுட்ப சாதானங்களின் உதவியால் மாறுதல் ஏற்பட்டு சப்ளை அதிகரித்தால், அதன் விளைவாக அப்பொருளின் விலை குறையவேண்டும். கட்டுப்பாடுகளின்றி விவகாரங் கள் நடந்தால் பொருளாதார ரீதியில் இப்படித்தான் குறையும். ஆனுல் தற்போதிய உலகத்தில் எல்லா நாடுகளி லும் வியாபாரத்திலும், தொழிலிலும், பண நிர்வாகத்திலும் அரசாங்கத்தின் தலையீடு பெருமளவில் காணப்படுகின்றன. இவற்றின் காரணமாக, விலை வாசிகளின் போக்கை நிர்ண யிப்பதில் அரசாங்க நடவடிக்கைகள் ஒரு முக்கிய அம்ச மாக ஆகிவிட்டன.

பண நிர்வாகத்தைப் பற்றி விவாதிக்கும் போதெல் லாம் பணவீக்கம், பணச்சுருக்கம் என்ற இரண்டு சொற் ருெடர்கள் அடிக்கடி உபயோகிக்கப்படுவதை வழக்கில் காணலாம். இச் சொற்ருெடர்களுக்கு நிச்சயமான இலக் கணம் கூறுவது கஷ்டம். குறிப்பிட்ட ஒரு நிலையில் விலை வாசிகளின் மட்டம், உயர்வாக இருந்தாலும் தாழ்வாக இருந்தாலும், பண வீக்கத்தினுல் அது ஏற்பட்டதா அல் லது பணச் சுருக்கத்தினுல் ஏற்பட்டதா என்று திட்ட வட்டமாகச் சொல்லுவது எளிதல்ல. திடீரென்று காணப்

படும் விலை உயர்வையும் அபரிமிதமாக உயரும் விலையை யும் சாதாரணமாகப் பண வீக்கத்தினுல் ஏற்பட்டவை என்று கூறலாம். அதே போல், எதிர் பார்த்த அளவுக்கு மிஞ்சிய விலைச் சரிவையும் பணச் சுருக்கத்தினுல் உண்டா னது என்றுப் பொதுவாகக் கூறலாம்.

சில சந்தர்ப்பங்களில் பணவீக்கம் தோன்றியிருக்கிறது என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். உதா ரணமாக, யுத்த காலங்களில், சர்க்கார் செய்யும் அபரி மிதமான செலவுகள் அவ்வளவையும் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப் பணத்திலிருந்து அல்லது கடன் தொகைகளிலிருந்து சமாளிக்க முடியாமல் போய்விடுகிறது. அக் காலங்களில் அரசாங்கங்கள் பணத்தை அச்சிட்டுப் பெருக்கிக்கொள்ளுவார்கள், அல்லது கடன் வசதிகளை அதி கரித்துக் கொள்வார்கள். இவ்விரண்டின் விளைவாக, விலை வாசிகள் உயரும். அதிகப் பணத்தை அச்சிட்டு வழங்கு வதன்மூலம் யுத்தகாலச் சேவையைச் சமாளிப்பது ஒரு எளிய முறை என்று மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது தோன்றலாம். ஏனெனில், இதன் மூலம் அதிக வரிவசூல் செய்வதிலும் கடன் எழுப்புவதிலும் உள்ள கஷ்டங்களை சர்க்கார் மேற் கொள்ளவேண்டியதில்லை. ஆனுல் இவ்வாறு செய்யப்படும் பண விஸ்தரிப்பை அசாதாரண காலங்களி லும் மிகுந்த கட்டுப்பாடுகளுக்கு அடங்கியும் கண்காணிப் புடன் மேற் கொள்ளாவிடில் விலை வாசிகள் உயருவதை யும், நாணயத்தின் மதிப்பு வேகமாகச் சரிவதையும் தவிர்க்க முடியாது. இம்மாதிரி ஏற்படும் பண வீக்கத்தின் ஒரு முக் கிய விளைவு, இதை மேற் கொள்ளும் அரசாங்கமே இதனு டைய விளைவுகளில் சிக்கித் தவிக்க நேரிடும். இதுதான் இதிலுள்ள ஒரு பெரும் குறை. இதைத் தீமை என்றே சொல்லலாம். சர்க்கார் வாங்கும் பொருளுக்கும் செய்யும் செலவுக்கும் கொடுக்கும் விஸ்தரித்த நோட்டுப் பணத்

திஞல், விலே வாசிகள் உயரும். அதிக விலே கொடுப்பதற்காக, மேலும் அதிக நோட்டுகள் அச்சிட்டு அரசாங்கம் வழங்கவேண்டி வரும். இவ்வாறு ஒவ்வொரு முறை சர்க்கார் பொருள்களே வாங்கும்போதும் படிப்படியாக அதிக விலேகளேக் கொடுத்தே வாங்க வேண்டி வரும்.

பணவீக்கத்தின் முதல் விளேவுகள் (1) பொது விலே மட்டத்தின்உயர்வு; (2) அளவு கடந்த வியாபார சுறுசுறுப்பு; (3) சுலபமான லாபங்கள்; (4) பெரும்பாலான தொழிற்கூடங்களில் சம்பள விகிதத்திலும் தொழிலாளிகள் ஊதிய விகிதத்திலும் உயர்வு, முதலியவை. தோற்றமளவில் செழுமை நிலவுவது போன்ற பிரமை தோன்றும். ஆனல் வாழ்க்மைத்தரத்தில் உயர்வு இருக்காது. உற்பத்தி சாதனங்களெல்லாம் அரசாங்கத்துக்குத் தேவையான பொருள்களே உற்பத்தி செய்வதிலேயே முனேந்து வேலே செய்யும். சாதாரண மக்கள் உபயோகிக்கும் தினசரித் தேவைப் பொருள் சப்ளேகளில் பற்ருக் குறையே காணும். இதனல் மக்களிடம் பணம் அதிகம் சேர்ந்து,அவர்களுடைய 'வாங்கும் சக்தி' அதிகரிக்கும். ஆனல் அப்பணத்தைச் செலவழிக்கப்போதியபொருள்கள் இல்லாததால், குறைந்த சப்ளேயும் அபரிமிதமான கிராக்கியுமுள்ள நிலேமை ஏற்படுகிறது. இந்நிலேயில் விலேகள் உயருகின்றன. விலேகள் உயருவதனல் மாதச் சம்பளம் பெறுபவர்கள் செலவை சமாளிக்க முடியாமல் அதிகச் சம்பளத்திற்கு கிளர்ச்சி செய்வார்கள். அதிகச் சம்பளத்தின் விளேவாக, தேவைப் பொருள்களுக்குக் கிராக்கி மேலும் அதிகமாகி, அவற்றின் விலேகள் இன்னம் உயரும். இப்படியே முதலில் தோன்றிய பணவீக்கம் அடுத்த பணவீக்கத்திற்குக் காரணமாகிப் படிப்படியாக விரிவடைந்து கொண்டே போகும். இது எல்லோராலும் கண்டறியப்பட்ட உண்மை. அனுபவத்திலிருந்து எழுந்தது. பணவீக்க காலத்தில் விலே வாசிகளின் உயர்வை அனுசரித்து

உற்பத்தி விலைகளும் அதிகரிக்கும். அபரிமிதமான பண வீக்கம் விலை வாசிகளை உச்சிக்கு உயர்த்தி விட்டு மக்கள் மனத்தைக் கலங்க வைத்துவிடும். மேலும் இம்மாதிரி நிலைமை வீண் செலவு செய்யப்படுவதையும், அபரிமிதமாகச் செலவு செய்யப்படுவதையும் தூண்டிவிடும். ஏனெனில், உபயோகிப்பவர்கள், தாமதித்தால் விலைகள் மேலும் உயர்ந்துவிடப் போகின்றதென்ற பயத்தினால், உடனே பண்டங்களை வாங்க விரைவதுடன், தேவைக்கு அதிக மாகவும் வாங்க முற்படுவார்கள்.

பணவீக்கம் தொடர்ந்து நிலவினால் பல தீமைகள் அச்சமூகத்தில் விளையும். ஸ்திரமான சம்பளம் பெற்று வாழ்பவர்களெல்லாம் விலை உயர்வதற்கேற்றபடி சம்பளம் உயராததால், மிகுந்த அதிருப்தி அடைகிறார்கள். கடன் பத்திரங்களிலிருந்து வட்டி வாங்கி ஜீவிப்பவர்களும் பென்ஷன் பெற்று வாழ்பவர்களும் தங்களுடைய "உண்மை வருமானம்" (**Real income**) பண்ட மாற்று விகிதத்தில் குறைந்து விட்டதைக் காண்பர். இந்நிலையில் சேமிப்பு செய்ய வேண்டுமென்ற உற்சாகம் அநேகமாக இருக்கவே இருக்காது. கடன் பத்திரங்களை வாங்கும் போது இருந்ததைவிட கடனைத் திரும்பிப் பெறும் போது பணத்தின் மதிப்புக் குறைவாகவே இருக்கு மாதலால் சேமித்து வைப்பதில் நஷ்டமேற்படுவதை மக்கள் உணருவார்கள். விலைவாசிகள் உயர்ந்துகொண்டே செல்லும்போது நாணயத்தில் நம்பிக்கை இழந்த மக்கள் கையிலுள்ள பணத்தையெல்லாம் பண்டங்களாகவும் பொருள்களாகவும் மாற்றி வைத்துக் கொள்ளவே விரும்புவர். இதைப் பரவலாக சமூகத்தில் எல்லோரும் செய்ய முற்படும்போது "நாணயத்திலிருந்து ஓட்டம்" ஏற்படுகிறது. ஒவ்வொருவரும் தன்னுடைய சம்பாத்யத் தொகையை நாணயமாக வைத்துக் கொள்ளாமல் நிலைத்

திருக்கக்கூடிய பொருள்களாக மாற்றவும், தங்கள் ஊதியத்தையே நாணயமாகக் கொடுப்பதற்குப் பதிலாகப் பண்டங்களாகக் கொடுத்துவிடும்படி ஊழியர்கள் வற்புறுத்தவும் நேரும்போது நாணயத்திலிருந்து ஓட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படும். இந்த நிலையிலிருந்து "வரம்பு கடந்த பணவீக்க நிலை" அடுத்த ஒருபடி தான். இதையே "கட்டுக்கடங்காத பணவீக்கம்" என்று கூறுவர். கடிவாளமில்லாத குதிரை ஓடுவது போல் பண வீக்கம் கட்டுப்பாடின்றி அதிகரித்துக்கொண்டே போகும். இந்த நிலையில் நாணயத்திற்கு மதிப்பே இருக்காது. மதிப்பை முற்றிலும் இழந்துவிட்ட நாணயத்தை நிலை நிறுத்திப் பொருளாதார நிலைமையைச் சீராக்க வேண்டுமானால் சாதாரணமாக புது நாணயமே சட்டப்படி உண்டாக்க வேண்டும். பழைய நாணயங்களைச் சட்ட மூலம் ரத்து செய்துவிட்டுப் புது நாணயங்களைப் புகுத்த வேண்டும். முதல் உலக யுத்தத்திற்குப் பின் ஐரோப்பாவில் பல நாடுகளில் இம்மாதிரி அநுபவம் ஏற்பட்டது. ஜெர்மனியில் மார்க்கு நாணயமும் ருஷ்யாவில் 'ரூபிள்' நாணயமும் முதல் யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட பண வீக்கத்தின் காரணத்தினால் அவை அச்சடித்திருந்த காகிதத்தின் மதிப்புக்கும் குறைவாகப் போய்விட்டன. ஒரு சமயத்தில் பத்து லட்சம் மார்க்குள் கணக்குள்ள மார்க்கு நோட்டுக் கட்டுக்களைக்கொண்டு ஒரு கோப்பை காப்பி அல்லது ஒரு முழு ரொட்டித் துண்டு கூட வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது என்றால் பண வீக்கத்தின் அளவு எவ்வளவு இருந்திருக்குமென்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

பணவீக்கத்தினால் ஏற்படும் தீமைகளைத் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது. பணவீக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது, அதை எவ்வாறு சமாளிப்பது

என்பதைக் கவனிப்போம். இதைக் கட்டுப்படுத்தி அதில் வெற்றியும் காணவேண்டுமானுல் ஒரு வழிதான் உண்டு— மக்கள் வசம் இருக்கும் நாணயத் தொகையைக் குறைக்க வேண்டும்; இது சாத்தியமில்லையென்ருல் எவ்வளவு அதிகமாகப் பணம் புழக்கத்திலிருக்கிறதோ அந்த அளவுக்குப் பொருள்களை வேகமாக உற்பத்தி செய்து விற்பனைக்கு அளிக்க வேண்டும். பொது ஜனங்களின் தேவைப் பொருள்களைப் பெருமளவில் உற்பத்தி செய்து அளிக்கச் சிறிது காலம் பிடிக்கும். உடனடியாகவோ குறுகிய காலத்திலோ இதைச் செய்ய முடியாது. ஆனுல் பணத்தின் சப்ளையை விரைவாகக் குறைக்க முடியும். பாங்கிகள் அளிக்கும் கடன் வசதிகளைக் குறைத்துக்கொள் வதன் மூலம் இது செய்யப்படுகிறது. பாங்குகள் தங்கள் கடன் வட்டி விகிதங்களை உயர்த்தி மக்களைக் கடன் பெற வொட்டாமல் தடுப்பதுண்டு. பாங்கி வட்டி விகிதங்கள் உயருவதால் சேமிப்பு செய்யச் சிறிது தூண்டுதல் இருக்கும். நவீன கால அரசாங்கங்கள் பணவீக்கத்தை எதிர்க்கவும், கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வைக்கவும், இதர பல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்றன. இதற்காக அரசாங்கங்கள் அவசியமான பண்டங்களின் வினியோகத்திற்குக் கட்டுப்பாடுகள் விதித்து "ரேஷன்" அல்லது பங்கீடு முறைகளை அமுலுக்குக் கொண்டு வந்து ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட அளவுப் பண்டங்கள் மட்டுமே நிர்ணயம் செய்யப்பட்ட விலைக்கு வாங்கலாம் என்ற முறைகளை மேற்கொள்ளுகிருர்கள். பொருள் வினியோகத்திலுமன்றி விலைக் கட்டுப்பாடுகளையும் புகுத்தி, சேமிப்பு செய்ய மக்களைத் தூண்டும் நடவடிக்கை களும் எடுக்கப்படுகின்றன. இம்மாதிரி நடவடிக்கைகளின் நோக்கம் பணவீக்கத்தை முற்றிலும் தடுத்துவிடுவது அல்ல. அதைக் கட்டுப்படுத்துவதுதான். இந்தக் கட்டுப்பாடு களினுல் பணவீக்கம் அப்போதைக்கு அமிழ்த்தி வைக்கப்

படுகிறது. இதனுல் அரசாங்கத்தின் நாணயக் கொள்கைச் சரியாகவே இயங்கி வருகிறது என்றும், கட்டுப்படுத்தப் பட்ட விலைகள்தான் பொருள்களின் சாதாரண கால விலைகள் என்றும், நாட்டின் பொருளாதார நிலைமை சீராகவே இருக்கின்றதென்றும் மக்கள் மனத்தில் தவருன எண்ணத்தை உண்டாக்கிவிடக்கூடும். அமிழ்த்தி வைக்கப் பட்ட பணவீக்கத்தில் உள்ள குறைபாடு இது. தவருன அபிப்பிராயம் உண்டாக்கப்படுகிறது என்று சொன்னேே மல்லவா? கட்டுப்பாடுகள் எடுபட்டவுடன், இதுவரையில் அமிழ்த்தி வைக்கப்பட்ட பணவீக்கச் சக்திகள் வேகமாக வெளிவரும். விலைவாசிகள் மிதமிஞ்சி உயரும் ஒவ்வொரு முறையும் கட்டுப்பாடு விலகியதும் காணப்படும் சம்பவம் இது. மேலும் பண்டங்கள் மீது நீண்ட காலத்துக்குத் தடை விதிக்கப்பட்டால், கையில் பணமுள்ளவர்கள், அதிக விலை கொடுத்துத் தங்களுக்குத் தேவையான பொருள்களைக் கறுப்பு மார்க்கெட்டில் வாங்கத் தயங்க மாட்டார்கள். கறுப்பு மார்க்கெட் என்பதே கட்டுப்பாடு அல்லது கண்ட்ரோல் முறையின் மற்ெருரு தோற்றம். கறுப்பு மார்க்கெட் விலை உச்ச நிலையில் இருக்கும். கண்ட்ரோல் விலைகளுக்கும் கறுப்பு மார்க்கெட் விலை களுக்கும் சம்பந்தமே இராது. இதிலிருந்து கண்ட்ரோல் சட்ட திட்டங்களை மீறவேண்டிய ஆவலும் அவசியமும் உண்டாகி, அவற்றிற்கு உடந்தையாக அதிகாரிகளின் உதவி தேவைப் படுவதால், லஞ்சமும் ஊழலும் மலியும். இக்காரணம் பற்றியே கண்ட்ரோல் முறைகளைக் கூடு மான வரையில் மேற்கொள்ளாதிருக்கவே பலரும் விரும்பு கின்றனர்.

பணத்தின் மொத்தத் தொகை குறிப்பிட்ட ஒரு விலை மட்டத்தில் நடைபெறும் எல்லா கொடுக்கல் வாங்கல் பேரங்களுக்கும் தேவையான அளவுக்குக் குறைவாகச்

சுருக்கபபட்டுப் போனல் "பணச் சுருக்கம்" ஏற்பட்டு விட்டது என்று கூறப்படும். பணவீக்கத்திற்கு மாருன நிலை பணச் சுருக்கம். பணச் சுருக்கம் வரி முறைகளை அதிகரிப்பதனுலும் சர்க்கார் செலவு இனங்களைக் குறைத்துக் கொள்ளுவதாலும் உண்டாக்கப்படுகிறது. இவற்றின் மூலம் கிடைக்கும் உபரி பணத்தை (நாணயத்தை) அரசாங்கம் ரத்து செய்துவிடும். கடன் வசதியினுலும் கடனுகக் கொடுக்கும் பண விஸ்தரிப்பினுலும் நாணயப் புழக்கம் அதிகமாகி விட்டால், பணச் சுருக்கத்தை உண்டு பண்ண பாங்குகள் கடன் கொடுப்பதை நிறுத்திக் கொள்ளும்படி உத்திரவிடலாம். இந்த நடவடிக்கை சாதாரணமாக மேற்கொள்ளப்படும் செயல் முறை. இதைப் பாங்கிகள் கடன் வட்டி விகிதத்தை அதிகரிப்பதன் மூலம் நிறைவேற்றி வைப்பார்கள். இச்செயல் முறைக்குப் பக்கபலமாக சமூகத்தினரிடையே சேமிப்பு செய்வதற்குத் தேவையான தூண்டுதல்களும் அளிக்கப்படும். உற்பத்திப் பெருக்கும் இறக்குமதி விஸ்தரிப்பும் பணச் சுருக்கத்தை உண்டுபண்ணக் கூடியவையே.

பணச் சுருக்கத்தினுல் விளையும் பலன்கள் என்ன? மேலே சொன்ன நடவடிக்கைகள் எல்லாம் சரிவர திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டால், விலைவாசிகள் இறங்க ஆரம்பிக்கும். ஆனுல் இம்மாதிரி நடவடிக்கைகள் மிகையாகப் போய்விடக்கூடும் என்ற ஆபத்தும் கூடவே இருக்கின்றது. மிகையாகப் போகக்கூடும் என்ருல் விலைவாசிகள் வேகமாகச் சரிந்து அதன் விளைவாக ஒன்றைத் தொடர்ந்து ஒன்ருக பலவித கஷ்டங்கள் ஏற்படும். நிலைமையைச்சமாளிக்க விலைவாசிகள் வேகமாக அல்லது மிதமிஞ்சி குறையும்போது, வியாபாரிகள் கஷ்டப்படுவார்கள். உற்பத்தியாளர்களின் விலை உயர்வாக இருக்குமாதலால், நஷ்டத்தைத் தவிர்க்க உற்பத்தியைச் சுருக்கிக் கொள்ளு

வார்கள். உற்பத்தியைச் சுருக்கிஞல் தொழிலாளிகள் வேலே இழக்க நேரிடும். வேலேயில்லாத் திண்டாட்டம் அதிகமாகும். விலே சரிந்து கொண்டிருக்கும் காலத்தில் சாதாரண மக்கள்கூடத் தங்களுடைய தேவைப் பொருள்களே வாங்கத் தயங்குவார்கள். இன்னம் விலேகள் குறைந்த பின்னர் வாங்கிக் கொள்ளலாமே என்று அவசிய மான பொருள்கள் வாங்குவதைக்கூடத் தள்ளிப் போடு வார்கள். அதனுல் சரிந்துகொண்டிருக்கும் விலேகள் மேலும் அதிகமாகச் சரியும்.

பணவீக்கம், பணச் சுருக்கம் இரண்டினுலும் தீமைகள் ஏற்படுகின்றன என்பதைக் கவனிக்கும்போது, பணவீக்கம் தோன்ற ஆரம்பிக்கும்போதே பலனளிக்கக் கூடிய நடவடிக்கைகளேக் காலம் கடத்தாது எடுத்துக் கொண்டு அதைக் கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியம். அரசாங்கத்தின் டண சம்பந்தமான நடவடிக்கைகள் இந்த லட்சியத்தையே தங்கள் கருத்தில் கொண்டு கொள்கைகளே வகுத்துக் கொள்ளவேண்டும். பணவீக்கம் ஓரளவுக்குத் தனது தீமையைச் செய்துவிட்ட பிறகு அதைச் சமாளிக்கப் பணச் சுருக்க முறைகளேக் கையாளுவதைவிட, பண வீக்கத்தையே அத்துமீறிப் போகாமல் பார்த்துக் கொள்ளுவது நல்லது.

அத்தியாயம் 8

# நாணய மதிப்பு அளவைகள்

முன் ஒரு அத்தியாயத்தில் விவரித்துள்ளபடி பணத்தின் நீண்ட கால சரித்திரத்தில் பல்வேறு நாடுகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு பொருள்கள் நாணயமாகச் செயலாற்றியிருக்கின்றன. புகையிலை, பதனிட்ட தோல், கிளிஞ்சில், தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த உலோகங்கள்—இவையெல்லாம் நாணயங்களாக இருந்து வந்தன. நாளடைவில் தங்கம் ஒன்றுதான் பணத்திற்கு ஆதார நாணயமாக உயர் பதவியை அடைந்து விட்டது. ஒரு நாட்டிற்குள்ளே நடக்கும் பண சம்பந்தமான கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்கும், சர்வ தேச நாடுகளுக்கிடையே கொடுக்கல், வாங்கல் செய்யவும் தங்கமே சிறந்த உலோகமென எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. ஆனால் சில காலத்திற்குத் தங்கத்திற்கு இணையாக சீனு, இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய நாடுகளில் வெள்ளியும் சம அந்தஸ்துடன் நாணயமாக செயலாற்றி யிருக்கிறது.

## ஓரே உலோக நாணயமும், இரு உலோக நாணயங்களும்

தங்கமோ, வெள்ளியோ இரண்டில் ஒன்று நாணயத்தின் மதிப்பிற்கு ஆதாரமாக உபயோகமாகும் முறையை **ஏக உலோக நாணய முறை** எனக் கூறுவார்கள். தங்கம் அவ்வாறு மதிப்பிற்கு ஆதாரமாக இருந்தால் தங்க மதிப்பு அளவை முறை இயங்குகிறதென்றும், வெள்ளி ஆதார

மாக இருந்தால் வெள்ளி மதிப்பு அளவை முறை செயல் படுகிறதென்றும் சொல்லப்படும். இதில் கவனிக்க வேண்டியது மதிப்பீட்டிற்கு இந்த இரு உலோகங்களும் ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன என்பதே. ஆங்கிலத்தில் 'ஸ்டாண்டர்ட்' என்று இதைக் குறிப்பிடும் போதெல்லாம் நாணயத்தின் மதிப்புக்கு தங்கம் அல்லது வெள்ளி ஆதாரமாக இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இதினின்று மாறுபட்டது நாணயத்திற்கே இவ்விரு உலோகங்களும் அடிப்படையாக உபயோகிப்பது. அவ்வாறு இவ்விரு உலோகங்களும் நாணயங்களாக புழங்குவதைத்தான் இரு உலோக நாணயமுறை (Bimetallism) என்பார்கள். இரு உலோக நாணய முயை முறையில் தங்கக் கட்டியும் வெள்ளிக் கட்டியும் அரசாங்க நாணயச் சாலைகளில் தாராளமாக நாணயங்களாக அச்சிட்டு வழங்கப்படும். இரண்டு உலோகத்திலுமான நாணயங்களும் கொடுக்கல் வாங்கல் பேரங்களில் சரளமாக எவ்வித தடங்கலுமன்றி உபயோகமாகும். இவ்வாறு இரண்டு உலோகங்கள் நாணயங்களாக உபயோகத்திலிருக்கும் போது ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்ளப்படும் விகிதத்தை அரசாங்கத்தார் நிர்ணயம் செய்து விடுவார்கள். இந்த விகிதப்படி தங்க நாணயங்களை வெள்ளி நாணயங்களாகவும், வெள்ளி நாணயங்களைத் தங்க நாணயங்களாகவும் யாவரும் மாற்றிக் கொள்ளலாம். 1803-ம் ஆண்டில் பிரான்ஸ் தேசம் இரு உலோக நாணய முறையை மேற்கொண்டபோது $15\frac{1}{2}$ அவுன்ஸ் வெள்ளி ஒரு அவுன்ஸ் தங்கத்துக்குச் சமம் என்று ஒன்றுக்கொன்று மாற்று விகிதம் நிர்ணயிக்கப்பட்டது. சுமார் 50 வருஷ காலத்திற்கு இந்த விகிதம் அமுலிலிருந்தது. இவ்விகிதத்தை நடைமுறையில் செயல் படுத்துவதில் எவ்வித இடையூறும் நேரவில்லை. ஆனல் பத்தொன்பதாம் நூற்ருண்டு மத்தியில் புதுத் தங்க வயல்கள் கண்டுபிடிக்கப் பட்டதின் விளை

வாக உலக மார்க்கெட்டில் தங்கத்தின் சப்ளை அதிகரித்து விட்டது. அதனால் தங்கத்தின் விலை, வெள்ளியின் விலையைக் காட்டிலும் குறைந்து விட்டது. அதாவது வெள்ளிக்கு கிராக்கி அதிகரித்து விட்டது. ஏனென்றால் தங்கத்தின் விலை குறைந்ததால், அந்த அளவுக்கு வெள்ளியின் மதிப்பு உயர்ந்துவிட்டது. ஒரு அவுன்ஸ் தங்கத்துக்கு மார்க்கெட்டில் $15\frac{1}{2}$ அவுன்ஸுக்கும் குறைவாகவே வெள்ளி கிடைத்தது. ஆனால் அரசாங்க நாணயச் சாலையில் $15\frac{1}{2}$ அவுன்ஸ் விகிதத்தில் மாற்றிக் கொள்ள முடிந்தது. இரண்டு உலோகங்களும் நாணயங்களாக இருந்ததால், சட்டப்படி நிர்ணயித்துள்ள விகிதத்தில் வெள்ளி கிடைத்துக் கொண்டிருந்தது. ஆகவே தங்களிடமுள்ள வெள்ளி நாணயங்களை யெல்லாம் உருக்கி உலோக மார்க்கெட்டில் விற்று சட்ட விகிதத்திற்கு அதிகமாகத் தங்கம் பெற்று, அதை அரசாங்க நாணயச் சாலையில் நாணயமாக மாற்றிக் கொள்வது மக்களுக்கு லாபகரமாக இருந்தது. இதன் விளைவாக வெள்ளி நாணயங்கள் வேகமாக மறையத் தொடங்கித் தங்க நாணயங்கள் மட்டுமே புழக்கத்திலிருந்தன. இம்மாதிரியே இவ்விரு உலோகங்களின் மார்க்கெட் விலைகளின் ஏற்றத் தாழ்வுகளினால் ஏதாவது ஒரு உலோகம் மற்றதைவிட விலை உயர்ந்ததாக ஆகி, எந்த உலோகம் விலை உயர்ந்து விடுகிறதோ அந்த உலோக நாணயம் புழக்கத்திலிருந்து மறைந்து போய்க் கொண்டிருந்தது. தங்கத்தின் விலை உயரும் போது தங்க நாணயங்கள் மறைந்தன. வெள்ளியின் விலை உயர்ந்த போது வெள்ளி நாணயங்கள் மறைந்தன. இவ்வாறு ஏதாவது ஒரு உலோக நாணயம் புழக்கத்திலிருந்து மறையாமல் இருக்கச் செய்ய ஒரே ஒரு வழி தான் உண்டு. இவ்விரண்டு நாணயங்களுக்கு முள்ள மாற்று விகிதத்தையும், மார்க்கெட்டில் இவ்விரு உலோகங்களுக்குள்ள விலைகளை அனுசரித்து, அடிக்கடி சட்டப்படி மாற்றிக் கொண்டே இருக்கவேண்டும். ஆனால் நாணய

விஷயத்தில் இவ்வாறு செய்வது விரும்பத் தக்கதல்ல. ஸ்திரமான மதிப்புதான் நாணயத்துக்குக் கௌரவம் அளிப்பது. அதை யொட்டியே நாணயத்தின் நாணயம் நிலைத்துள்ளது. அதை மாற்றி ஸ்திரமில்லாமல் செய்து விட்டால், மக்களிடையே குழப்பம் ஏற்படும். நிலையற்ற நிலைமை ஏற்பட்டு விடும். இம்மாதிரி கஷ்டங்களிலிருந்து திருப்திகரமாக தீர்வு காண முடியாமல்தான் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பதினெட்டாம் நூற்றுண்டில் இரு உலோக நாணய முறையை மேற்கொண்ட நாடுகளெல்லாம் அம்முறையைக் கைவிட்டு, **தங்க மதிப்பு முறை (Gold Standard)** யை மேற்கொண்டனர்.

## தங்க மதிப்பு முறை

தங்க மதிப்பு முறையின் வரலாறு நீண்டது. ருசிகரமானது. இது முதன் முதலில் இங்கிலாந்தில் தான் தோன்றியது. தொழில் உலகில் புரட்சிகரமான மாறுதல்கள் தோன்றிய காலத்தில் தொழில் புரட்சியில் முதல் ஸ்தானம் வகித்ததாலும், சர்வதேச வர்த்தகத்தின் கேந்திர ஸ்தானமாக விளங்கியதாலும் அந்நாட்டு வியாபாரமும் உலகத்தின் எல்லாப் பாகங்களுடனும் தொடர்பு கொண்டிருந்ததாலும், இங்கிலாந்து அந்தக் காலத்தில் வர்த்தகத்தில் முதலிடம் பெற்று விளங்கிற்று. முதல் உலக யுத்தத்திற்கு முன் லண்டன் மா நகரந்தான் சர்வதேச நிதி விவகாரங்களில் கேந்திரமாக இருந்தது. உலக வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் பெரும்பாலும் லண்டன் நகரின் மூலமாகவே நடைபெற்றது. இதற்குக் காரணம் இங்கிலாந்தின் பிரதான நாணயமான பவுண்டு ஸ்டெர்லிங் ஸ்திரமான மதிப்புள்ளதாக விளங்கியதுடன் அதனுடைய மதிப்பு கெட்டித் தங்கத்தின் மதிப்புடன் இணைக்கப் பட்டிருந்தது. தங்கக் கட்டிகள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும் அனுமதிக்கப்

பட்டதால், எல்லா நாடுகளும் தங்களுடைய வர்த்தகக் கடன்களை இங்கிலாந்து மூலம் தீர்த்துக் கொள்ளுவது எளிதாக இருந்தது.

1914-ம் ஆண்டுக்கு முன்பு இங்கிலாந்தில் வழக்கிலிருந்த தங்க மதிப்பு முறையின் முக்கிய அம்சங்களைச் சுருக்கமாகக் கவனிக்கலாம். (1) பவுண்டு ஸ்டெர்லிங் என்னும் அந்நாட்டு நாணயம் குறிப்பிட்ட அளவு கெட்டித் தங்கத்தின் சமமதிப்புள்ளதாக இருந்தது. (2) தங்கச் சவரன்கள் (பவுண்டு ஸ்டெர்லிங்கைத் தங்கச் சவரன்கள் என்று கூறுவார்கள்) நாட்டில் தாராளமாக புழங்கிக் கொண்டிருந்தன. (3) நாணய நோட்டுகளை எல்லாம் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி யார் வேண்டுமானுலும் எப்போது வேண்டுமானுலும் சவரன்களாகவோ, தங்கக் கட்டிகளாகவோ மாற்றிக் கொள்ளலாம். (4) இங்கிலாந்தின் மத்திய பாங்கி (Bank of England) குறிப்பிட்ட விலைக்குத் தங்கக் கட்டிகளை வாங்கவும் விற்கவும் எப்போதும் தயாராக இருப்பதாக உறுதியளித்தது. அதனுல், இங்கிலாந்தின் நாணயமான சவரன் கெட்டித் தங்க அடிப்படையில் குறிப்பிட்ட ஸ்திரமான மதிப்புள்ளதென்றும், இங்கிலாந்தின் சவரனுக்கும் இதர நாடுகளின் பிரதான நாணயங்களுக்கும் உள்ள மாற்று விகிதங்கள் அந்தந்த நாணயங்களிலுள்ள கெட்டித் தங்கத்தின் அளவுப்படி தங்கத்தின் அடிப்படை மதிப்பின் படியே நிர்ணயிக்கப்பட்டன என்றும் தெரிகிறது. இதையே வேறு விதமாகச் சொல்லுவதானுல்,சவரனின் வெளி நாட்டு மதிப்பு அதிலுள்ள கெட்டித் தங்கத்தின் மதிப்பை யனுசரித்து நிர்ணயிக்கப் பட்டது எனலாம். இவ்வாறு நாணயத்தின் மதிப்புக் கெட்டித் தங்கத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டதாலும், தங்கக் கட்டிகள் எப்போது வேண்டுமானுலும் எவ்விதத் தடங்கலுமின்றி இங்கிலாந்துக்

குள்ளேகொண்டு வரவும், இங்கிலாந்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லவும் சாத்தியமாக இருந்ததாலும், எல்லா நாடுகளும் தங்கள் அயல் நாட்டு வர்த்தகத்தை சவரன் கணக்கிலேயே நடத்தவும், வர்த்தகத்தின் வரவு செலவுகளையும் கையிருப்புகளையும் சவரன்களாகவே லண்டன் பாங்கிகளில் விட்டு வைக்கவும் இசைந்தனர்.

முதல் உலக யுத்தத்திற்கு முன்பு இருந்த நிலை மேலே விவரிக்கப்பட்ட நிலை. யுத்த காலத்தில் இந்த நிலை மாறி விட்டது. உலக வர்த்தக அரங்கில் இதர நாடுகளுக்குக் கடன் வழங்கக் கூடிய நிலைமையிலிருந்து இங்கிலாந்தின் முக்கியத்வம் படிப்படியாகக் குறைந்து, அமெரிக்காவின் முக்கியத்வமும் பிரான்ஸின் முக்யத்வமும் உயர ஆரம்பித்தன. யுத்த நிலைமை காரணமாக நாணய நோட்டுகளைத் தங்கமாக மாற்றிக் கொள்ளும் உரிமை தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டது. சவரன்கள் அச்சிட்டு வழங்குவதும் அவ்வாறே நிறுத்தி வைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக ஒரு ஒரு பவுண்டு காகித நோட்டுகளும் 10 ஷில்லிங் (அரைப் பவுண்டு) நோட்டுகளும் அச்சடித்து வழங்கப்பட்டன. யுத்தம் முடிவுற்ற போது தங்கச் சவரன்களே புழக்கத்திலிருந்து மறைந்து போயின. பணவீக்கம் காரணமாகக் கெட்டித் தங்கத்தின் அடிப்படையில் சவரினின் மதிப்பும் குறைந்து விடடது. ஆனாலும் யுத்த பிற்காலத்தில் படிப்படியாக, சவரனின் மதிப்பு உயர்ந்து, பழைய அளவுக்குக் கொண்டுவரப்பட்டது, மதிப்புப் பழைய நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டாலும், யுத்த முற்காலத்திலிருந்த தங்க மதிப்பு முறைக்குத் திரும்பிச் செல்லவில்லை. அதாவது சவரனின் மதிப்புத் தங்கக் கட்டி மதிப்புடன் இணைக்கப் பட்டது. இதைத் தங்கக் கட்டி மதிப்பு முறை (Gold Bullion Standard) என்பார்கள். முன்னால் விவரிக்கப்பட்டது தங்க மதிப்பு முறை (Gold Standard), இவ்விரண்டுக்கும் சிறிது

வித்தியாசம் உண்டு. தங்கக் கட்டி மதிப்பு முறையில், உள் நாட்டுத் தேவைக்கு காகித நோட்டுகளைத் தங்கச் சவரன் களாக மாற்றிக்கொள்ள முடியாது. வெளி நாட்டுக்குத் தங்கம் அனுப்ப வேண்டுவோர், நோட்டுகளைக் கொடுத்துத் தங்கக் கட்டிகள் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கும் ஒரு நிபந்தனை போடப்பட்டிருந்தது. குறைந் தது 400 அவுன்ஸ் தங்கமாவது தேவைப்பட்டால் மட்டுமே இவ்விதம் மாற்றிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. தங்கக் கட்டிகள் இறக்குமதி செய்யவும் ஏற்றுமதி செய்ய வும் எவ்விதத் தடையும் இல்லை. தங்க மதிப்பு முறைத் தங்கக் கட்டி மதிப்பு முறையாக மாற்றப்பட்டதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. எந்த நாணய முறையிலும், அடிப்படையாக விளங்கும் தங்கத்தின் முக்கியத்வம் அயல் நாட்டு வர்த்தகத்தினால் உண்டாகும் கொடுக்கல் வாங்கல் பேரங்களைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கே யொழிய உள்நாட்டு நடவடிக்கைகளுக்கு அவசியமல்ல என்பதை இது உணர்த்துகிறது. இதை அங்கீகரித்து, இதன் அடிப்படை யில் உருவானது தான் தங்கக்கட்டி மதிப்பு முறை.

முதல் யுத்த காலத்தில் இந்தியாவின் அனுபவங்கள் புதுப்புது நாணயச் சீர்திருத்தங்கள் ஏற்படுவதற்கு ஒரு விதத்தில் காரணமாகஇருந்தன என்பதையும் இங்கே குறிப் பிடவேண்டும். இந்திய நாணயமான ரூபாய் 1893-ம் ஆண்டு வரையில் பூரணமான வெள்ளி நாணயமாக இருந்தது. அந்த ஆண்டில் வெள்ளிக் கட்டிகளை நாணயங்களாக அச் சிட்டு வழங்கும் உரிமையை அந்தக் காலத்திய இந்திய அர சாங்கம் ரத்து செய்துவிட்டபடியால், முன்பு பூரணமாக இருந்த ரூபாய் நாணயம், இப்போது ஒரு அடையாள உலோகப் பணமாக ஆயிற்று. இத்த அடையாள நாணய மான ரூபாய் இங்கிலாந்தின் நாணயமானச் சவரனுடன் 15 ரூபாய்க்கு ஒரு சவரன் என்ற விகிதத்தில் இணைக்கப்

பட்டது. இந்த விகிதத்தை 1 ஷில்லிங் நான்கு பென்சு விகிதம் என்று கூறுவர். அதாவது 1 ரூபாய் 1 ஷில்லிங் 4 பென்சுக்குச் சமம். அந்தக் காலத்தில் சவரன் தங்க மதிப்பு முறையில் இயங்கி வந்ததால், இந்தியாவிலும் தங்கச் சவரன்களை மக்களிடையே புகுத்த வேண்டுமென்ற கருத்துடன் 15 ரூபாய்க்கு ஒரு சவரன் என்ற விகிதத்தில் சவரன்கள் வழங்கப்பட்டன. ஆனால் முதல் யுத்தகாலத்தில் இவ்வாறு தங்க நாணயங்கள் வழங்கப்படுவதை நிறுத்த வேண்டி வந்தது. யுத்தகாலத்தில் ஏராளமான பண்டங்கள் இந்தியாவிலிருந்து யுத்த அரங்கங்களுக்கு அனுப்பப்பட்டதால், வர்த்தகக் கணக்கில் இந்தியாவுக்குச் சேரவேண்டிய பாக்கி மிதமிஞ்சி வளர்ந்துவிட்டது. இதனால் இந்திய ரூபாய்க்குக் கிராக்கி அமோகமாக அதிகரித்தது, ரூபாயின் மதிப்பும் உயரத் தொடங்கியது. இதைச் சமாளிக்கப் பெருவாரியாக நோட்டுகள் அச்சடித்து நாணயத்தை விஸ்தரிப்பதைவிட, பவுண்டு ஸ்டெர்லிங்குடன் 15 ரூபாய்க்கு ஒரு சவரன், என்று இணைத்திருந்த விகிதத்தைக்கைவிடுவது மேல் என்று சர்க்கார் எண்ணி, அவ்வாறே இதைக் கைவிட்டுவிட்டனர். அதனால் ரூபாயின் அன்னிய நாட்டு மதிப்பு, கிராக்கியின் காரணமாக, உயர்ந்து, யுத்தகால முடிவில் ஒரு ரூபாய் 2 ஷில்லிங் 4 பென்சு என்ற விகிதத்துக்குச் சென்றுவிட்டது. யுத்தத்துக்கு முன்பு ஒரு ரூபாய் 1 ஷில்லிங் 4 பென்சுதான் என்பதை நினைத்தால், யுத்த முடிவில் அதன் மதிப்பு எவ்வளவு உயர்ந்துவிட்டது என்பது புலனாகும். அப்போது நிலைமையைப் பரிசோதித்து ஆலோசனை சொல்ல நியமிக்கப்பட்ட கமிஷனின் சிபாரிசுகளுக் கிணங்க ரூபாயின் அந்நியநாட்டு மாற்று விகிதம் இரண்டு ஷில்லிங்குகள் (அதாவது 10ரூபாய்க்கு ஒரு சவரன்) என்று அதிகார பூர்வமாக அப்போதைய அரசாங்கம் சட்டமியற்றியது. இந்த முடிவு சரியான முடிவு அல்ல என்பது வெகு சீக்கிரத்திலேயே வெளியாயிற்று. இவ்வளவு உச்ச

அளவில் ரூபாயின் அயல் நாட்டு மாற்று விகிதத்தை நிர்ண யித்ததன் விளைவாக அந்நிய நாட்டுச் சாமான்கள் வேகமாக நம்நாட்டில் இறக்குமதி ஆக ஆரம்பித்தன. இறக்குமதிக் கெல்லாம் பணம் அனுப்பவேண்டி வந்தது. யுத்தகாலத்தில் சேர்த்துவைத்திருந்த ஸ்டெர்லிங் கையிருப்பு அவ்வளவும் வேகமாகச்செலவழிந்துவிட்டன. மேலும் கிராக்கியைச்சமா ளிக்கப்போதிய ஸ்டெர்லிங் நிதிஇல்லாததால், ரூபாய்க்கு இரண்டு ஷில்லிங் என்ற விகிதத்தைச் சர்க்காரால் அமுல் நடத்த முடியாமல் போயிற்று. சட்டப்படியிருந்த விகி தத்தை ரத்து செய்துவிட்டு வர்த்தகத்தின்போக்கை யனு சரித்துத் தேவைக்கும் கிராக்கிக்கும் தக்கவாறுதானுகவே விகிதம் ஏற்படட்டும் என்று விடப்பட்டது. சில ஆண்டு களுக்குப் பின்னர் செலாவணி விகிதம் ரூபாய்க்கு ஒரு ஷில் லிங் ஆறு பென்சு என்று சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட் டது. இதே சமயத்தில் இதையொட்டித் **தங்க மதிப்பு மாற்றுச் செலாவணி** முறை (Gold Exchange Standard) யை இந்திய அரசாங்கம் மேற்கொண்டது. இதன் மூலம் வெள்ளி நாணயமான இந்திய ரூபாய்க்குத் தங்கச் சவர னுடன் உள்ள தொடர்பின் காரணமாக வெளி நாட்டுக் கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் தங்கத்தின் அடிப் படையில் மதிப்பு ஏற்பட்டுவிட்டது. இந்தியாவின் கணக் கில் தங்கநிதியும் அன்னியநாட்டுப்பாண்டு, பத்திரங்களான நிதியும் லண்டன் பாங்கியில் தனியாக வைக்கப்பட்டன. இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குத் தங்கம் அனுப்பத் தேவைப்பட்டவர்கள் இந்தியாவிலேயே ரிசர்வ் பாங்கியி னிடமிருந்து போதுமான ஸ்டெர்லிங்நாணயத்தைக் கட்டுப் பாடின்றி வாங்கிக்கொள்ள முடிந்தது. அதே போல ஸ்டெர்லிங் நாணயத்தைக் குறிப்பிட்ட விகிதத்தில் ரிசர்வ் பாங்கிக்கு விற்றுப் பதிலுக்கு இந்திய ரூபாய்களையும் பெற முடிந்தது.

இந்த முறையில் ஒரு கஷ்டம் இருக்கிறது. ஒரு நாட்டின் நாணயத்தின் ஸ்திரத்தன்மை மற்றொரு நாட்டின் நாணயத்தின் ஸ்திரத்தன்மையுடன் இணைக்கப்பட்டிருந்தது தான் விரும்பத்தகாத அம்சம். உதாரணமாக, ரூபாய் ஸ்டெர்லிங் பவுண்டுடன் இணைக்கப்பட்டிருந்ததால் 1931-ம் ஆண்டில் பவுண்டு ஸ்டெர்லிங் தங்க மதிப்பு முறையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டபோது, இந்திய ரூபாயும் ஸ்டெர்லிங்கின் புதிய மதிப்புக்கேற்ப தனது மதிப்பைக் குறைத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. அப்போதிலிருந்து, அதாவது 1931-ம் ஆண்டிலிருந்து இந்திய ரூபாய் தங்க மதிப்பு மாற்றுச் செலாவணி முறையிலிருந்து விலகி, ஸ்டெர்லிங் மதிப்பு மாற்றுச் செலாவணி (Sterling Exchange Standard) முறையிலேயே இயங்கி வருகிறதாகச் சொல்லலாம். கருத்தளவில் பார்த்தால் சர்வதேச ஸ்தாபனத்தின் ஒரு அம்சமாகிய சர்வதேச நாணயக் காப்பு நிதி ஒப்பந்தத்தின்படி ரூபாய்க்குத் தங்கத்தின் அடிப்படையில் மதிப்பு நிர்ணயிக்கப்பட்டிருப்பதால், தங்கத்துடன் நேரடியாகவே நமது நாணயம் இணைக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம். நடைமுறையில் ஸ்டெர்லிங் நாணய மூலமாகவே நடவடிக்கைகள் நிகழுகின்றன.

**நிர்வகிக்கப்பட்ட நாணய முறை (Managed Currency)**

முதல் உலக மகா யுத்தகாலத்திற்குப்பின் சம்பிரதாயமான தங்க மதிப்பு நாணய முறை செயலில் பலமிழந்து வந்தது. அதற்குப் பதிலாக உலகத்தில் எல்லா நாடுகளும் ஏதோ ஒருவிதத்தில் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது நிர்வகிக்கப்பட்ட நாணய முறையையே மேற்கொண்டுள்ளன. இதன்படி அந்தந்த நாட்டு நாணயத்தின் உள்நாட்டு மதிப்பும் வெளிநாட்டு மதிப்பும், அதனதன் கெட்டித் தங்கத்தின் மதிப்பை அனுசரித்து நிர்ணயிக்கப்படுவதற்குப் பதிலாக, அந்தந்த நாட்டு அரசாங்கங்களின் கொள்கைகளை யனு

சரித்து நிச்சயிக்கப்பட்டன. 1930-ம் ஆண்டு தோன்றிய உலகத் தொழில் மந்தத்திற்குப்பின் பல தேசத்து நாணயங்கள் தங்கள் மதிப்பைக் குறைத்துக்கொண்டன. அதாவது அயல்நாட்டு நாணயங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒவ்வொரு நாட்டின் நாணயங்களின் அன்னியச் செலாவணி மதிப்பு குறைந்துபோயிற்று. இதன் விளைவாகச் சர்வதேச நாடுகளில் நாணய மதிப்புக் குறைத்தலில் போட்டியே ஏற்பட்டுவிட்டது. எந்த நாட்டின் நாணயத்தின் மதிப்பு அதிகமாகக் குறைகிறது, எது அதிகமாகக் குறையவில்லை என்று தாரதம்யங்களைப் பற்றியே பெரிதாகப் பேசப்பட்டது. 1914-ம் ஆண்டுகட்கு முன் நாணயத்திற்கிருந்த ஸ்திரத்தன்மை அநேகமாக எல்லா நாடுகளிலுமே மறைந்து போய்விட்டது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தில் அனுபவம் வேறு விதமாக இருந்தது. மிகவும் கண்டிப்பான கட்டுப்பாடுகள் அமுல் நடத்தப்பட்ட காலம் இது. இறக்குமதியும் ஏற்றுமதியும் கண்காணிக்கப்பட்டு அன்னியச் செலாவணி விரயமாவதை மிகுந்த ஜாக்கிரதையுடன் கட்டுப்படுத்தப்பட்டது. தவிர, ஒவ்வொரு நாட்டிலும் காகிதப் பணம் பெருவாரியாகப் பெருகிற்று. அந்தந்த நாட்டு நாணயங்களின் உள்நாட்டு மதிப்பு அந்தந்த தேசத்துப் பொது விலை மட்டங்களின் ஏற்றத்தாழ்வை யொட்டிக் குறைந்தோ உயர்ந்தோ இருந்தது. ஆனால் அவற்றின் வெளிநாட்டு மதிப்பு (external value) செயற்கை மட்டத்தில் அந்தந்த அரசாங்கங்கள் தீர்மானித்த அந்த மட்டத்திலேயே தங்கள் நாணய நிர்வாக நடவடிக்கை மூலம் ஏறக்குறைய ஸ்திரமாகவே வைத்துக்கொண்டனர். இதைத் திருப்திகரமாக நிறைவேற்றி வைப்பதற்கு ஏற்றுமதி வியாபாரத்தினால் கிடைக்கும் வருமானம், இறக்குமதி வர்த்தகத்தினால் ஏற்படும் செலவு, இதர இனங்களில் அவசியமாகச் செய்யப்படும்

அன்னியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல் முதலிய எல்லா அம்சங்கள் மீதும் பூரணமான கட்டுப்பாடு இருக்க வேண்டும். அன்னியச் செலாவணி வரவு செலவு எவ்வளவு கண்டிப்பாகக் கண்காணிக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு நாணய நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெறும்.

## சர்வதேச நாணய நிதித் திட்டம்

இரண்டாவது யுத்த காலத்தில் ஒவ்வொரு நாடும் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் தங்கள் நாணயத்தின் மதிப்பைக் குறைப்பதைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்றும், யுத்த பிற்காலத்திலாவது உலக வியாபாரம் செலாவணிக் கட்டுப்பாடு, ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாடு என்ற தடைகளின்றி தாராளமாக நடைபெறவேண்டுமென்றும் பல தேச நாடுகளின் நாணயங்களின் ஒன்றிற்கொன்று மாற்று விகிதங்கள் கூடுமானவரையில் ஸ்திரமாக்கப்படவேண்டுமென்றும், அப்படியிருந்தால் மட்டுமே சர்வதேச வர்த்தகம் தடங்கலின்றி நடைபெறும் என்றும் எல்லா நாடுகளும் நினைத்தன. இதை நடைமுறையில் எவ்விதம் உருவாக்குவது என்பதை ஆராய்ந்து செயல்முறை வகுக்க **1944**-ம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள **ப்ரெட்டன்** உட்ஸ் (Bretton Woods) என்னுமிடத்தில் ஒரு மகாநாடு கூடிற்று. உலகத்தின் பல தேசத்தவர்களும் இம்மகாநாட்டிற்கு வந்திருந்தனர். சர்வதேச நாணய நிதி அமைப்பதற்கும், யுத்தத்தில் சீரழிந்த நாடுகளின் புனரமைப்புக்கும் உத்தாரணத்திற்கும் சர்வதேச பாங்கி ஒன்று அமைப்பதற்கும் இம்மகாநாட்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கைவிடப்பட்ட பழைய தங்க மதிப்பு முறையை உலகப் பொருளாதார அரங்கில் நிலைக்கச் செய்யவேண்டுமென்பதே சர்வதேச நாணய நிதியின் நோக்கம். பழைய முறைக்கு மாற்று முறையாக, ஆனால் பழைய முறையில் காணப்பட்டதுபோலவே சர்வதேச நாணயங்களின் மாற்று

விகிதங்களில், ஒரு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவும் அமைந்தது இந்த நிதி. இதில் அங்கம் வகிக்கும் நாடுகளின் நாணயங்களின் அன்னியச் செலாவணி மதிப்பில் ஸ்திரத்தன்மையை உண்டாக்குவதே இந்த நிதியின் லட்சியம். தவிரவும் அந்தத் தேசங்களுக்கு எப்போதாவது அந்நியச் செலாவணி நெருக்கடி ஏற்பட்டால் அச்சமயங்களில் தக்க முறையில் உதவியளிக்கவும், படிப்படியாக நாடுகளிடையே வர்த்தகத் தடைகளை நீக்க முயற்சிக்கவும், இந்த ஸ்தாபனம் வேலை செய்கிறது.

ஆனால் லட்சியத்தின்படி முற்றிலும் வெற்றிகரமாக இந்த ஸ்தாபனத்தால் செயல் புரிய முடியவில்லை. சுமார் பன்னிரண்டு வருஷங்களாக இந்த ஸ்தாபனம் செயல் புரிந்து வந்தபோதிலும் உலக வர்த்தகப் போக்கில் அன்னியச் செலாவணி சம்பந்தப்பட்ட மட்டில் கட்டுப்பாடுகள் குறைந்ததாகவோ, தடங்கல்கள் நிவர்த்திக்கப்பட்டதாகவோ காணவில்லை. கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வர்த்தகப் பெருக்கை உண்டுபண்ண முடியாவிட்டாலும் நாணய மதிப்பு விகிதங்களில் திருப்திப்படும் அளவுக்கு ஸ்திரத்தன்மையை இந்த ஸ்தாபனம் உண்டாக்கியிருக்கிறது. இது செயல் புரியும் முறைதான் இதற்குக் காரணம். தங்கத்தின் மதிப்பு அவுன்ஸுக்கு 35 அமெரிக்க டாலர்கள் என்ற அடிப்படையில் ஆரம்பித்து அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டின் பிரதான நாணயத்தின் மதிப்பை அமெரிக்க டாலர் கணக்கிலோ, அல்லது 35 டாலர் மதிப்புள்ளது ஒரு அவுன்ஸ் தங்கம் என்ற விகிதப்படிக் கெட்டித் தங்கக் கணக்கிலோ, நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு நிர்ணயித்துவிட்ட விகிதம் ஸ்திரமானது. அதை அந்த மட்டத்திலேயே இருக்கும்படிப் பார்த்துக்கொள்ளுவது அந்தந்த நாட்டின் பொறுப்பு. இவ்வாறு ஸ்திரமாக நிர்ணயிக்கப்பட்டு மாற்று விகிதத்தின் மூலம் அந்தந்த நாடுகளின்

நாணயங்கள் மறைமுகமாகக் கெட்டித் தங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. எந்த நாடாவது தனது நாணயத்தின் செலாவணி மாற்று விகிதத்தை ஓரளவுக்கு அதிகமாக உயர்த்திக்கொள்ளவோ தாழ்த்திக்கொள்ளவோ விரும்பினுல் அந்த நாடு முன்னதாகவே இந்த சர்வதேச நாணய நிதியின் அனுமதியைப் பெறவேண்டும். இம்மாதிரிப் பல நாடுகள் முதன் முதலில் அறிக்கை செய்துவிட்ட மாற்று விகிதத்தைத் திருத்திக்கொண்டிருக்கின்றன. இந்திய ரூபாய் கூட இம்மாதிரி ஒரு தடவை தனது மதிப்பை மாற்றிக் கொண்டிருக்கிறது. எனினும் பொதுவாக பார்க்குமிடத்து யுத்த பிற்கால ஆண்டுகளில் உலக நாடுகளுக்கிடையே நாணயச் செலாவணி விகிதத்தில் ஓரளவுக்கு ஸ்திரத் தன்மை ஏற்பட்டிருப்பது இந்த ஸ்தாபனம் இயங்குவதனுல் தான் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

அங்கம் வகிக்கும் நாடுகளின் நாணயங்களின் அன்னியச் செலாவணி மதிப்பு (external value) அல்லது வெளி நாட்டு மதிப்பு இவ்வாறு இந்த ஸ்தாபனத்தினுல் கண்காணிக்கப்பட்டு ஏதேனும் ஒருவித சட்ட திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டாலும், உலக நாணய நிதி அந்தந்த நாட்டு நாணயங்களின் உள்நாட்டு மதிப்பை நிர்ணயிப்பதில் தலையிடுவதில்லை. அதனுடைய நடவடிக்கைகள் நாணயங்களின் உள்நாட்டு மதிப்பைப் பாதிக்கிறதில்லை. உள்நாட்டு விவகாரம் சம்பந்தப்பட்ட வரையில் எல்லா நாடுகளும் நாணயத்திற்காகவோ, காகித நாணயங்களுக்குப் பாதுகாப்பு நிதியாகவோ தங்கக் கட்டிகளை உபயோகிப்பதைக் கைவிட்டுவிட்டதால், எல்லா தேசங்களிலும் கட்டுப்படுத்தப்பட்ட நாணய முறைதான் செயல்முறையில் காணப்படுகிறது.

கட்டுப்படுத்தப்பட்ட நாணய முறையின் முக்கிய லட்சணங்களாவன :— (1) காகித நாணயங்களை தங்கத்

திற்கும் வெள்ளிக்கும் மாற்றிக்கொள்ள முடியாது.(2) புழக்கத்திலிருக்கும் மொத்த நாணயத்தின் பரிமாணத்தில் பெருக்கமும் சுருக்கமும் அரசாங்க நிர்வாகக் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் அனுசரித்து நிகழும். அரசாங்கம் நேரடியாக நடவடிக்கை எடுக்காதபோது அந்தந்த நாட்டு மத்திய பாங்கி சர்க்காரின் சார்பில் பணியாற்றி இந்தக் கடமையைச் செய்யும். சம்பிரதாயமான தங்க மதிப்பு நாணய முறை செயலாற்றிய காலத்திலும் ஓரளவுக்கு அரசாங்கங்களின் நடவடிக்கைகள் நாணயக் கொள்கையை கட்டுப்படுத்தின என்றாலும் காகித நாணயத்தைக் கெட்டித் தங்கத்திற்கு மாற்றிக் கொடுக்கவேண்டும் என்ற கடமை இருந்ததாலும் சட்டப்படி இந்தக் கடமையை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருந்ததாலும், நாணயக் கொள்கைகளை அரசாங்கங்கள் மனம்போனபடிக் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் காகித நோட்டுகளைத் தங்கமாக மாற்றிக் கொடுக்கவேண்டும் என்ற கடமை ரத்து செய்யப்பட்டபின் கொஞ்ச நஞ்சம் இருந்த நிர்ப்பந்தமும் நீங்கிவிட்டது. நாணயக் கொள்கைகளை வகுப்பதும், அதை அவ்வப்போது மாற்றுவதும், அமுல் நடத்துவதும், ஆட்சியாளர்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் இஷ்டத்திற்கும் விடப்பட்டன. இப்படித்தான் தற்போதுள்ள உலக நாடுகளில் நாணய நிர்வாகம் நடைபெறுகிறது.

இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்ட நாணய நிர்வாக முறை நல்லதா, கெட்டதா என்பதைப்பற்றி கருத்து வேற்றுமை உண்டு. ஆனால் யுத்த பிற்காலத்தில் பல நாடுகளில் ஏற்பட்ட அனுபவத்தைக்கொண்டு கவனித்தால், அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்ட நாணய முறையில் ஓரளவு பண வீக்கம் ஏற்படுவதைத் தடுக்க முடியாதென்றே எண்ண வேண்டியிருக்கிறது. எல்லா நாடுகளிலுமே நாணய முறையின் போக்குப் பண வீக்கத்தை அதிகரிப்பதாகவே இருக்

கிறது. இதனல் பொருளாதார ரீதியில் உள்நாட்டு மதிப்பு மட்டுமே ஆரம்பகாலத்தில் பாதிக்கப்படுகிறதென்ருலும். காலப்போக்கில் அந்தந்த நாட்டு நாணயங்களின் வெளி நாட்டு மதிப்பும் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும். இவ் விளைவைத் தவிர்க்க, ஏதேனும் ஒரு கட்டத்தில் அன்னியச் செலாவணிக் கட்டுப்பாடும் அயல்நாட்டு வர்த்தகக் கட்டுப் பாடுகளும் இந்த நிர்வாக நாணய முறையில் இருக்சவே செய்யும். இவை தவிர்க்க முடியாதவை. அமெரிக்கா, கானடா, ஸ்விட்ஜர்லாந்து போன்ற சில நாடுகள் மட்டுமே கட்டுப்பாடின்றி அயல்நாட்டு வர்த்தகமும் அன்னியச் செலாவணி பேரமும் செய்கின்றன. பெரும்பாலான ஏனைய நாடுகளில் அன்னியச் செலாவணி நிலைமையும் மாற்று விகிதங்களும், அந்தந்த அரசாங்கங்கள் தங்களது அன்னியச் செலாவணி சம்பாத்தியத்தைக் குறையாது பார்த்துக் கொள்ள மேற்கொள்ளும் கட்டுப்பாடுகளினல் தோன்றிய புறத்தோற்றங்களேயாம். இந்தச் செயற்கை மட்டத் திலேயே அன்னியச் செலாவணி நிலைமை வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது.

## அத்தியாயம் 9

# பாங்கி முறையும் கடன் வசதியும்

முற்காலங்களில் "இன்றைக்கு ரொக்கம்; நாளைக்குக் கடன்," என்று கடை வாயில்களில் கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்ட அட்டைகள் தொங்குவதைப் பலர் பார்த்திருப்பார்கள். இதில் பொதிந்துள்ள கருத்தைப் பளிச்சென்று விளக்கி வைக்க இதில் இரண்டு படங்களும் வரையப்பட்டிருக்கும். ஒரு படத்தில் தனது இரும்புப் பெட்டிக் கெதிரில் சிரித்த முகத்துடன் உட்கார்ந்திருக்கும் வியாபாரி தோற்றமளிப்பார். "நான் ரொக்கத்திற்கு மட்டிலுமே விற்றேன்,"என்ற விளக்கம் அவருடைய சந்தோஷத்துக்குக் காரணம் என்பதை எடுத்துக் காட்டும். மற்றெரு படத்தில் களையிழந்த முகத்துடன் சோகமே உருவாய் ஒரு வியாபாரி உட்கார்ந்திருக்கும் தோற்றம் காணும். "நான் கடனுக்கு விற்றேன்," என்ற விளக்கம் அவருடைய சோகத்தின் காரணத்தை எடுத்துக் கூறும். வாடிக்கைக்காரர்களுக்குக் கடனுகச் சாமான்கள் கொடுக்கமுடியாது என்பதை வற்புறுத்தவே இந்த முறையைக் கடைக்காரர்கள் கையாண்டனர்.

இந்த உண்மையைக் கடைப்பிடித்து வியாபாரம் நடத்தும் வியாபாரிகள் இப்போதும் பலர் இருக்கின்றனர். எனினும் கடனுகச் சாமான்கள் வழங்கப்படாவிட்டால் இப்போது தினசரி நடைபெறும் வியாபாரம் பெருமளவுக்குச் சுருங்கிப்போகும். தற்போதுள்ள வியாபாரம் தொழில் எல்லாம் எவ்வளவு தூரம் கடன் வசதியைக் கொண்டே வளர்ந்துவந்துள்ளது. இன்னமும் நடைபெறுகிறது என்

பதை முற்றிலும் பொதுவாக உணருவதில்லை. ஒரு உற்பத்தியாளர் தனக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களை கடனில் வாங்குகிறார். தான் உற்பத்தி செய்த பொருள்களையும் கடனுக்கே விற்பனை செய்கிறார். மொத்த வியாபாரிகளும் சில்லறைக் கடைக்காரர்களும் பண்டங்களைக் கடனில் பெறுகின்றனர். அவர்களும் சாமான்களை வாடிக்கைக்காரர்களுக்கு பெரும்பாலும் கடனுக்கு விற்பனை செய்கின்றனர். இப்போதெல்லாம் தவணைக் கடன்கள் அடிக்கடி நடைமுறையில் காணப்படுகின்றன. அதாவது மரச் சாமான்கள், குளிர்ச்சிப் பெட்டிகள், ரேடியோ, சைகிள்கள் வீடுகள் மற்றும் இவை போன்ற விலையுயர்ந்த பொருள்களை வாங்குபவர்கள் அவற்றின் விலை முற்றிலும் உடனடியாகக் கொடுக்காமல் பல மாதங்களில், சிற்சில சமயங்களில் வருஷக் கணக்கிலும், தவணைகளாகச் செலுத்தப்படுகின்றன.

## கடன் என்பது என்ன?

ஒரு பொருளையோ அல்லது ஒரு சேவையையோ அல்லது ரொக்கப் பணத்தையோ, அந்தத் தொகையை அல்லது அதன் விலையை, வட்டியுடனோ வட்டியில்லாமலோ, பிற்காலத்தில் செலுத்துவதாக அளிக்கப்படும் வாக்குறுதியின் பேரில் ஒருவன் மற்றவனிடமுள்ள அந்தப் பொருளையோ பணத்தையோ தனக்களிக்குமாறு தூண்டக்கூடிய சாமர்த்தியம் அல்லது சக்திதான் கடன் என்பது. கடன் எழுப்பக் கூடிய சக்தி, கடன் கொடுப்பவர் கடன் கேட்பவரின் நாணயத்திலும், திருப்பிக் கொடுக்கக்கூடிய வசதியிலும் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பதைப் பொறுத்தே இருக்கும். கடனுக்கு நாணயமும் நம்பிக்கையுமே ஆதாரம். பொருள்கள் விற்றதாலோ, ரொக்கப் பணம் வழங்கியதாலோ ஏற்பட்ட கடனை, அதை ஏற்றுக்

கொண்டவர் ஒப்பந்தப்படி காலவரையறையை மீருமல் திருப்பித்தருவதாக உறுதிமொழி தந்து அதைக் காப்பாற்ற வும் வேண்டும்.

இதிலிருந்து வர்த்தகத்திலும் தொழிலிலும் கடன்வசதி எவ்வளவு முக்கிய இடம்பெற்றுள்ளது என்பதுவிளங்கும். உதாரணமாக, ஒரு சில்லறை வியாபாரி ஒரு மொத்த வியா பாரியிடமிருந்து ரூ. 5000-க்கு சாமான் வாங்க உத்தரவு கொடுக்கிருர். இந்தச் சாமான்களுக்கான விலையை அவர் உடனடியாகச் செலுத்த முடியாமலிருக்கலாம். ஆனுல் இரண்டு மாத அளவில் இப்பொருள்களை விற்று அதன் விலையைச் செலுத்த அவரால் முடியும். இரண்டாவது மாத முடிவிற்குள் சில்லறை வியாபாரியால் இந்தத் தொகையை முழுவதும் செலுத்திவிட முடியும் என்ற நம் பிக்கை சாமானை விற்கும் மொத்த வியாபாரிக்கு இருந்தால், அவர் சாமான்களைக் கடனுக்குக் கொடுத்துவிடுகிருர். இந்தச் சலுகைக்காக சிறிது வட்டி வாங்கிக்கொண்டு இரண்டு மாதம் காத்திருந்து பணத்தைப்பெற்றுக்கொள்ளு வார். அதே மாதிரி ஒரு ஜவுளி ஆலைத் தொழிலதிபர் தனக் குத் தேவைப்படும் மூலப்பொருளான பருத்தியை உற்பத்தி யாளர்களிடமிருந்து கடனுகப் பெற்று, அந்தப்பருத்தியைக் கொண்டு துணி நெய்து அதை விற்ற பின்னர், அந்தக் கட னைத் திருப்பிக் கொடுப்பார்.

இதிலிருந்து கடன் என்பது தொடர்ந்து நிகழும் சம் பவம் என்பது விளங்கும். கடன்கள் எழுப்பப்படுகின்றன. அவை திருப்பிக் கொடுக்கப்படுகின்றன; மறுபடியும் புதுக் கடன்கள் வாங்கப்படுகின்றன. இப்படியே தொடர்ச்சி யாக நடவடிக்கைகள் நிகழ்ந்து கொண்டே செல்கின்றன. தொழில் உலகத்தில் கடன் வசதி இல்லையானுல் ஒவ்வொரு வரும் தன்னிடம் எவ்வளவு ரொக்கப் பணம் இருக்கிறதோ அந்த அளவுக்கு மட்டுமே வியாபாரமோ, தொழிலோ

நடத்துவர். எல்லாமே மந்தகதியில்தான் செல்லும். சில்லறை வியாபாரம் பூராவுமே ஸ்தம்பித்துப் போகக்கூடிய நிலைமை ஏற்படக்கூடும். சில்லறை வியாபாரி தான் வாங்கி வரும் பொருள்கள் எல்லாவற்றிற்கும் முழுவிலை கொடுத்த பின்னரே வாங்கிவர முடியும் என்ருல் வியாபாரமே நின்று போகக் கூடும்.

## கடனைக் குறிக்கும் தஸ்தாவேஜுகள்

ஒவ்வொருதரம் கடன் பேரம் நடக்கும்போதும் ஒரு தஸ்தாவேஜு தயாரிக்கப்படுகிறது. எழுத்து மூலம் இந்தக் கடன் விவகாரம் பதிவுசெய்யப்படுகிறது. கடன் விவரமும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்கும் பொறுப்புகளும் இத்தாஸ்தவேஜில் குறிக்கப்படுகின்றன. இந்த மாதிரி தஸ்தாவேஜிகளைக் கடனைக் குறிக்கும் தஸ்தவேஜிகள் என்று கூறுவார்கள். சுருக்கமாக இவற்றைக் கடன் பத்திரம் என்றும் கூறலாம். இந்தப் பத்திரங்கள் சாதாரணமாக ஒருவரிடமிருந்து மற்ருெருவருக்கு மாற்றக்கூடியவை. ஆகையால் ஒரு கடன் பத்திரத்தைக்கொண்டே பல பேரங்களை நடத்தலாம். நடைமுறையில்காணும் சில கடன் தஸ்தாவேஜிகள் கீழே சுருக்கமாக விவரிக்கப்படுகின்றன.

## பிராமிஸரி நோட்டு அல்லது வாக்குறுதிப் பத்திரம்

எவ்வித நிபந்தனையுமின்றி குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்தை குறிப்பிட்ட ஒரு நபருக்கோ அல்லது அவருடைய உத்தரவு பெற்றவருக்கோ, அல்லது யாருடைய வசம் உள்ளதோ அவருக்குக் கொடுப்பதாக வாக்குறுதி கூறி ஒருவர் எழுதிக் கையெழுத்திட்டு வழங்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரம் பிராமிசரி நோட்டு. இதன் பெயருக்கேற்ப இது பணம் கொடுப்பதாகக் கூறும் ஒரு வாக்குறுதியே என்பது கவனிக்கத் தக்கது.

(உண்டியல் என்பது பணம் கொடுக்கும்படி உத்தரவு இடும்; பிராமிசரி நோட்டு என்பது பணம் தருவதாக உறுதி மொழி கூறும்). பிராமிசரி நோட்டுகளை தனி நபர்கள், பாங்கிகள், அரசாங்கங்கள்—இப்படி யார் வேண்டு மானாலும் கையெழுத்திட்டு வழங்கலாம். அதை வழங்கு பவரின் நாணயம் உயர்ந்ததாக இருந்து எல்லோராலும் அங்கீ கரிக்கப்பட்டிருந்தால் அவை கைக்குக் கை மாறி பல பேரங் களைப் பூர்த்தி செய்துகொள்ள உபயோகிக்கப்படும்.

பிராமிசரி நோட்டைவிட மிகவும் அதிகமாக தொழில் உலகத்திலும் வியாபாரிகளிடையேயும் பழக்கத்திலிருப்பது உண்டியல் என்னும் கடன் தஸ்தாவேஜி. இதை ஆங்கி லத்தில் "பில் ஆப் எக்ஸ்சேஞ்சு" என்று சொல்வார்கள். கேட்ட உடனேயோ, அல்லது குறிப்பிட்ட ஒரு நாளன்றோ, குறிப்பிட்ட ஒரு தொகையை (இது உண்டியலில் கூறப் பட்டிருக்கும்) குறிப்பிட்ட ஒரு நபருக்கோ அல்லது மூன்றாவது நபருக்கோ, அல்லது தனக்கேயோ, அல்லது தன் உத்தரவு பெற்றவருக்கோ கொடுத்துவிடும்படி, (சாதாரணமாக) கடன் கொடுத்தவர் (சாதாரணமாகக்) கடன் வாங்கியவருக்கு இடப்பட்ட உத்திரவு, உண்டியல் எனப்படும். உண்டியலின் தோற்றமும் அமைப்பும் கீழ்க் கண்ட மாதிரி இருக்கும் :—

| | |
|---|---|
| £ 1000 பவுண்டுகளுக்கு மாத்திரம் : | சென்னை ஜூன் 20, 1958 |

இன்றைய தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிந்த உடனே ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவுக்காவது அல்லது அவர்களுடைய உத்தரவு பெற்றவர்களுக்காவது நீங்கள் பெற்றுக்கொண்ட மதிப்புக்குச் சமமானப் பவுண்டு ஸ்டெர் லிங் 1000 த்தைக் கொடுத்துவிடவும்.

பெறல் :—

எஸ். மாரிஸன் அண்டு சன்ஸ் லண்டன் — ஆர். ராகவன் (கையொப்பம்)

இதன் விளக்கம். சென்னையிலுள்ள ஆர். ராகவன் என்பவர், லண்டனிலுள்ள மாரிஸன் அண்டு சன்ஸ் கம்பெனிக்கு, 1000 பவுன் ஸ்டெர்லிங் பெறுமானமுள்ள சரக்கு ஏற்றுமதி செய்தார். ஏற்றுமதியானதும் தனக்குச் சேரவேண்டிய தொகைக்கு மேலே கண்டபடி ஒரு உண்டியல் எழுதிவிட்டார். இந்த உண்டியலுக்குப் பணம் கொடுக்கப்பட வேண்டிய நாள் ஜூன் 20 ங் தேதியிலிருந்து மூன்று மாதம் முடிந்ததும்; அதாவது செப்டம்பர் 20ங் தேதி யன்று. வியாபார உலக வழக்கில் மூன்று நாட்கள் அதிகப் படியாகச் சலுகை கொடுப்பதுண்டு. ஆகவே செப்டம்பர் 23ம்தேதியன்று இந்த உண்டியலுக்குப்பணம் செலுத்தியாக வேண்டும். உண்டியலை எழுதியவர் சென்னையிலிருப்பவர். அதை அவர் தபால் மூலம் லண்டனுக்கு மாரிஸன் அண்டு சன்ஸ் கம்பெனிக்கு அனுப்பி வைக்கிறார். அவர் உண்டியலில் குறித்துள்ள விவரங்கள் சரி என்பதற்கு அறிகுறியாக "ஒப்புக்கொள்ளப்பட்டது" என்று அதன்மீது எழுதிக் கையெழுத்திட்டு அதை திரும்பச் சென்னையிலுள்ள ராகவனுக்கு அனுப்பி விடுவார்கள். இப்போது ராகவன் வசம் மாரிசன் கம்பெனியால் வாக்குறுதியளிக்கப் பட்ட 1000 பவுண்டுக்கு ஒரு கடன் பத்திரம் (உண்டியல்) இருக்கிறது. இதை அவர் தன் வசமே வைத்துக்கொண்டு உரிய காலத்தில், அதாவது செப்டம்பர் 23 ம் தேதியன்று, தன்னுடைய பாங்கிக்கு அனுப்பி, மாரிசனிடமிருந்து தொகையை வசூல் செய்ய அனுப்பி வைக்கலாம். அப்படி அவர் மூன்று மாத காலம் வரையில் காத்துக்கொண்டிருக்க இஷ்டமில்லாவிடில் அதை உடனே தன்னுடைய பாங்கியிடம் அனுப்பிச் சிறிது தொகையைத் தள்ளுபடி

செய்து பாக்கியை அப்போதே பாங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் செய்யலாம். அதாவது மூன்று மாத காலத்துக்குள்ள வட்டியைக் கழித்துக்கொண்டு பாங்கி மிச்சத் தொகையைக் கொடுத்துவிடும். பாங்கிக்கே பணம் அவசரமாகத் தேவைப்பட்டால், இதே உண்டியலைத்தான் ராகவனிடம் செய்ததுபோலவே, மற்றொரு பாங்கியினிடமோ, அல்லது நாட்டிலுள்ள மத்திய கேந்திர பாங்கியினிடமோ வட்டித் தள்ளுபடி செய்து உடனடியாக மிச்சத் தொகையைப் பெற்றுக்கொள்ளும். இம்மாதிரி உண்டியல்களை பாங்கிகள் தாமதமின்றி தள்ளுபடி செய்து வாங்கிக்கொள்ளத் தயாராக இருப்பார்கள். அவர்களுக்கு இம்மாதிரி இனங்களில் தங்கள் உபரி பணத்தை முதலீடு செய்வது சுலபமான முறை. லாபகரமானதும்கூட.

மேலே கொடுத்துள்ள உதாரணத்தில் அயல் நாட்டு வர்த்தக சம்பந்தமாக உண்டியல் எழுதப்பட்டிருக்கிறது. சாதாரணமாக உண்டியல் முறை உள்நாட்டு வியாபாரம் வெளிநாட்டு வர்த்தகம் இரண்டுக்குமே பொருந்தும். உள்நாட்டு வியாபாரத்தில் செயலாற்றும் போது உள்நாட்டு உண்டியல்கள் என்றும் ஏற்றுமதி வர்த்தகத்தில் செயல்படும் போது, வெளிநாட்டு உண்டியல் என்றும் இதைக் கூறுவார்கள். வியாபாரத்தைத் தவிர கடனைத் திருப்பிக் கொடுக்கவும், கடன் அளிப்பதற்கும்கூட உண்டியல் முறை கையாளப்படுகிறது. இம்மாதிரி விவகாரங்களுக்கு பயன்படும் உண்டியல்களை நிதி வசதிச் சீட்டுகள் அல்லது நிதிச் சலுகைச் சீட்டுகள் என்று குறிப்பிடுவர்.

பிராமிசரி நோட்டுகளும் உண்டியல்களும் தொழிலிலும் வர்த்தகத்திலும் பெருவாரியாக உபயோகப்படுத்தப் பட்டாலும் சீரான முறையில் பாங்கி முறை விருத்தியடைந்திராவிட்டால் இம்மாதிரிக் கடன் தஸ்தாவேஜிகளினால் அதிக பலன் விளையாது. பல பேர்களிடம் பிராமிசரி

நோட்டுகளும் உண்டியல்களும் குவிந்து கிடக்கலாம். ஆனல் அவைகளுக்கெல்லாம் உடனடியாக ரொக்கப்பணம் வழங்கும் ஸ்தாபனங்கள் பாங்குகள். அவை செயல் புரியாவிட்டால், தவணைக் கால முடிவு வரையில் உண்டியல்களை வைத்துக் கொண்டுதானே அவர்களெல்லாம் காத்திருக்க வேண்டும். பாங்கிகள் உடனடியாகப் பணம் எவ்வாறு கொடுக்கிருர்கள்? அவர்கள் எப்படி பணியாற்றுகின்றனர் என்பதை இப்போது கவனிக்கலாம்.

### பாங்கிகள்

பாங்கிகள் முக்கியமாகச் சேமிப்பு ஸ்தாபனங்கள். சமூக மக்களுடைய சேமிப்புத் தொகைகளை ஒன்ருகத் திரட்டி அதை லாபகரமாக உபயோகிப்பவர்களுக்கு அளிப்பதற்காகவே பாங்குகள் ஏற்பட்டுள்ளன. சேமிப்பை வாங்கிக் கொள்ளுவது; கடன் வழங்குவது என்ற தொழில்களைப் புரியவே எளிய முறையில் முதன் முதலில் பாங்குகள் தோன்றின. ஆனல் இப்போது பாங்கிகள் மிக விரிவாக வளர்ந்து பல்வேறு சேவைகளைப் புரிவதில் தனிச் சிறப்பு பெற்றுப் பல்வேறு வகையாகப் பிரிந்து, பொருளாதார உலகில் இன்றியமையாத பகுதிகளாக ஆகிவிட்டன. பாங்கிகளின் வெவ்வேறு விதங்களைச் சுருக்கமாகக் கீழே விவரிக்கிருேம்.

### வர்த்தகப் பாங்குகள்

இதுதான் மிகச் சாதரரணமாக எல்லா இடங்களிலும் காணப்படும் பாங்கிகள். வியாபாரப் பாங்கிகள் அல்லது வர்த்தகப் பாங்கிகள் என்று இவைகளுக்குப் பெயர். இவற்றின் முக்கியத் தொழில் சமுகத்திலுள்ள குறுகிய கால சேமிப்புத் தொகைகளையும் மக்களிடம் தற்காலிகமாக உள்ள உபரிப் பணத்தையும் திரட்டி அதைத் தற்கால உபயோகத்திற்கோ குறுகிய கால உபயோகத்திற்கோ

தொழில் ஸ்தாபனங்களுக்கும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் அளிப்பதே. தங்களுடைய பங்குத் தொகை மூலதனமும், ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டுச் சேர்த்து வைக்கும் நிதிப் பணமும் தவிர, வியாபாரப் பாங்கிகளுக்குப் பணம் பொது மக்கள் 'டிபாசிட்டு' செய்யும் தொகையிலிருந்துதான் கிடைக்கிறது. பாதுகாப்புக்காகப் போட்டு வைக்கப்படும் பணம் 'டெபாசிட்' எனப்படும் இது இருவகைப்படும். ஒன்று நடைமுறைக் கணக்கில் வைக்கப்படுவது. இதை டிபாசிட்டு தாரர்கள் எப்போது வேண்டுமானாலும், திரும்பிப் பெற்றுக் கொண்டு போகலாம். மற்றொன்று ஸ்திரமான டிபாசிட்டு. இது காலவரம்புடன் கூடியது. குறித்த காலத்திற்குப் பின்னரே இத்தொகையை வாபசு பெற முடியும். இத்தவணை ஆறுமாதம், ஒரு வருஷம், இரண்டு மூன்று வருஷங்கள் என்று சந்தர்ப்பங்களுக்கேற்ப இருக்கும். நடைமுறை டிபாசிட்டுகளுக்குப் பாங்கிகள் அநேகமாக வட்டியே கொடுக்க மாட்டார்கள்; அல்லது மிகவும் குறைவாகப் பெயரளவுக்காக மட்டும் கொடுப்பார்கள். ஸ்திர டிபாசிட் அல்லது தவணை டிப்பாசிட்டுகளுக்குத் தவணைக் காலத்தை அனுசரித்து வட்டி விகிதங்களும் சிறிது அதிகமாகவே பாங்கிகள் கொடுக்கும். சாதாரணமாகத் தவணை டிபாசிட்டுகளை விட நடைமுறை டிபாசிட்டுத் தொகைகள் தான் ஒவ்வொரு பாங்கியிலும் அதிகமாக இருக்கும்.

நடை முறை டெபாசிட்டுத் தொகைகள் எப்போது வேண்டுமானல் வாபசு பெற முடியும் என்றிருந்தாலும், வாடிக்கைக்காரர்கள் தாங்கள் போட்டுவைத்த பணம் முழுவதையும் ஒரே காலத்தில் முற்றிலும் திருப்பி எடுத்துக் கொள்ளுவதில்லை. ஒருபாகம் எப்போதும் உபயோகப் படாமல் கணக்கிலேயே தங்கிப் போகும். இவ்வாறு தங்கிப் போன பணத்தையும் வேண்டுவோர்க்குக் கடன் அளிக்கப் பாங்கிகள் பயன்படுத்திக் கொள்ளுவார்கள். கடனைத் தவிர உண்டியல்களைத் தள்ளுபடி செய்வதற்கும், கஜானுச் சீட்டு

கள் போன்ற குறுகிய கால சர்க்கார் கடன்களிலும் முத லீடு செய்ய இப்பணத்தை உபயோகிப்பார்கள். (கஜானு சீட்டுகள் என்பது சர்க்கார் வரி வசூல் மந்தமாக இருக்கும் காலத்திலும், வருமானம் மிதமாக உள்ள காலத்திலும் செலவை சமாளிப்பதற்காகக் கடன் எழுப்பும் பத்திரங்கள். இவைகள் மூன்று மாதத் தவணை அல்லது ஆறுமாதத் தவணைகளுக்கு விற்பனை செய்யப்படும். ஏலத்தில் விடுவது போன்ற முறை இங்கே கையாளப்படுகிறது. 100 ரூபாய் கஜானுச் சீட்டை 99 ரூபாய்க்கு உடனடியாக வாங்கி, மூன்று மாதம் கழித்து அதற்குச் சர்க்கார் கஜானுவிலிருந்து 100 ரூபாய் பெற்றுக் கொள்ளுவார்கள். இதில் பாங்குகள் அதிகமாக பங்கு கொள்ளுவார்கள்.)

## மூலதனம் வழங்கும் பாங்கிகள்

வியாபாரப் பாங்குகளிலிருந்து மாறு பட்டவை மூல தனம் வழங்கும் பாங்குகளும், டிரஸ்டு என்ற தர்மகர்த்தா ஸ்தாபனங்களும், நிதிக் கம்பெனிகளும். இம்மாதிரி பாங்கு களுக்குத் தங்களுடைய சொந்த மூலதனமே ஏராளமாக இருக்கும். அதை அவர்கள் தொழில் ஸ்தாபனங்களுக்கு நீண்ட காலத்திற்குக் கடனாக அளிப்பார்கள். சிற்சில சம யங்களில் ஏற்கனவே வெற்றிகரமாகச் செயல் புரிந்து வரும் தொழில்களை விஸ்தரிக்க அவர்கள் கடன் வழங்குவார்கள். இந்தியாவில் "இண்டஸ்டிரியல் ஃபை னன்ஸ் கார்ப்பரேஷன் இத்தகைய தொழிலைச் செய் கிறது. பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலதனத்தை நீண்ட காலக் கடனாக இந்த ஸ்தாபனம் கொடுக்கிறது. சில கடன்கள் ஒரு கோடி ரூபாய் அளவில் கூட இருக்கின்றன. இதர பாங்கிகள் இதே முறையில் சிறு தொழில்களுக்கான நிதி வசதிகளை வழங்குகின்றன. உதார ணமாக ராஜ்ய நிதிக் கார்ப்பரேஷன்கள் ஒவ்வொரு ராஜ்

யத்திலும் சிறு தொழில்களுக்குத் தேவைப்படும் உதவியை அளிக்கின்றன.

## தொழிலபிவிருத்திப் பாங்கிகள்

சில நாடுகளில் தனியாக நிதி வசதி உதவும் பாங்குகளோ தொழிலபிவிருத்தி பாங்குகளோ இல்லை. அங்கெல்லாம் அந்தந்தத் தொழில் கம்பெனிகள் கடன் பத்திரங்களையும் பங்குகளையும் பொது மக்களுக்குச் சந்தாமுறையில் வழங்குவார்கள், இவைகளுக்குப் பணம் கொடுத்து மக்கள் ஆதரவு அளிப்பார்கள். இதன் மூலம் அத்தொழிலுக்கு வேண்டிய மூலதனம் திரட்டப்படுகிறது. மற்றும் சில நாடுகளில் "கலப்பு முறை பாங்குகள்" செயல் புரிகின்றன— அதாவது வியாபாரப் பாங்குகளே தொழிலுக்கு நிதி வழங்கும் பாங்குகளாகவும் செயலாற்றுகின்றன. ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸ்விட்ஜர்லாந்து போன்ற நாடுகளில் இந்த முறை விரிவாகக் காணப்படுகின்றது.

வியாபாரத்திற்கும் தொழிலுக்கும் உதவி யளிப்பதற்காகவே சில பாங்கிகள் இருப்பது போல விவசாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேறு வகைப் பாங்கிகள் பிரத்யேகமாக இருக்கின்றன. விவசாயக் கூட்டுறவு பாங்கிகளும் நில அடமான பாங்கிகளும் விவசாயத் தொழில் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பிரத்யேகத் தேர்ச்சி பெற்றிருக்கின்றன. விவசாயிகளின் விசேஷத் தேவைகளை ஆழ்ந்து கவனித்து அவர்களுக்குக் குறுகிய காலக்கடன் வசதியும் நீண்டகாலக் கடன் வசதியும் விவசாயப் பாங்கிகள் கொடுக்கின்றன.

## மத்திய பாங்கு

உலகத்தில் எல்லா நாடுகளிலும் இக்காலத்தில் பாங்கி முறையில் இன்றியமையாத அம்சம் மத்திய பாங்கி. பாங்கி

முறையில் எல்லா அந்தஸ்துகளுக்கும் மேல் சிகரமாக விளங்குவது இந்த மத்திய பாங்கு. இதுதான் பாங்கு முறையையே இயங்கச் செய்கிறது எனலாம். இந்தியாவில் ரிசர்வ் பாங்கி இந்த ஸ்தானத்தை வகிக்கிறது. பெரும் பாலான நாடுகளில் மத்திய பாங்குதான் நாணயத்தை அச்சிட்டு வழங்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. மேலும், மற்ற பாங்குகளுக்கெல்லாம் கடன் அளிக்கும் உயர்பாங்காகவும் இந்த மத்தியபாங்குச் செயலாற்றுகிறது. மற்ற பாங்குகளிடமிருந்து டிபாசிட்டுகள் பெற்று, அவர்கள் கொடுக்கும் பாண்டு பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு கடனும் கொடுக்கிறது. தவிரவும் நாட்டிலுள்ள பல்வேறு பொது ஸ்தாபனங்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் பாங்கர்களாக இந்த மத்திய பாங்கிதான் பணியாற்றுகிறது. சில நாடுகளில் மத்திய பாங்கு தேசிய மாக்கப்பட்டு இருக்கிறது. அதாவது அது முற்றிலும் அரசாங்கத்துக்கே சொந்தம். அதனுடைய மூலதனம் முழுவதும் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டு. நடைமுறையிலும் சர்க்காரின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு சேயல் புரியும். இதர நாடுகளில் தனியார்களின் ஆதிக்கத்தில் இதற்கென தனிச் சட்டத்தின்படி நிர்வகிக்கப்படுவதுமுண்டு.

மத்திய பாங்கி சாதாரண வியாபார பாங்கியைப் போன்றது அல்ல. அதனுடைய முக்கிய தொழில் நாட்டின் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை இருக்கும்படிப் பார்த்துக் கொள்வது. நாட்டின் பாங்கு முறைகளைக் கண்காணித்துத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு வேண்டிய அதிகாரங்கள் சட்டப்படி மத்திய பாங்குக்கு எல்லா நாடுகளிலுமே கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்தியாவில் ரிஸர்வ் பாங்கி இம்மாதிரி நிலையில் இருக்கிறது. அரசாங்கங்களின் சார்பில் அபரிமிதமான பாங்கி அலுவல்களை ரிஸர்வ் பாங்கி கவனிக்கிறது. பொதுக் கடன்களை

எழுப்புகிறது. தேசியக் கடன் விவகாரங்களைக் கவனித்து நிர்வகிக்கிறது. நோட்டுகளை வழங்குகிறது. நாணய முறையை நிர்வாகம் செய்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டிலுள்ள வியாபரரப் பாங்கிகளின் நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்கிறது.

### வியாபாரப் பாங்கியின் தொழில்கள்

வியாபாரப் பாங்குகளின் முக்கியமான தொழில் கடன் வழங்குவதும், தற்காலிகமாக முன்பணம் கொடுப்பதும். பொறுப்புள்ள வஸ்துக்களை ஈடாக வைத்துக்கொண்டு குறிப்பிட்ட வட்டி விகிதத்தில் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. பாங்கிகள் கொடுக்கும் கடன்கள் இரண்டு வகைப்படும்:—குறிப்பிட்ட ஒரு தொகையை சாதாரணக் கடனுக அளிப்பது ஒருவகை. நடைமுறைக் கணக்கில் ஒரு வரம்பு ஏற்படுத்தி அதுவரையில் கணக்குக் கையிருப்புக்கும் அதிகமாக கடன் அளிக்கப்படுவது மற்ருெரு வகை, உண்டியல்களையும் பிராமிசரி நோட்டுகளையும் தள்ளுபடி செய்து முன்பணம் கொடுப்பதும் உண்டு, உண்டியல்களையும் பிராமிசரி நோட்டுகளையும் தள்ளுபடி செய்து வாங்குவதன் மூலம், அவற்றில் குறிப்பிட்ட தொகையை தாங்களே வசூல் செய்து கொள்ளும் உரிமையை உண்டியல் பிராமிசரி நோட்டுச் சொந்தக்காரர்களிடமிருந்து பாங்கிகள் பெறுகின்றன.

இம்மாதிரி சாதாரணத் தொழில்களைத் தவிர வியாபார பாங்கிகள் ஏஜெண்டுகளாகவும், காரியஸ்தர்களாகவும், தர்மகர்த்தா முறையில் நிர்வாகஸ்தர்களாகவும் இதரவகைகளிலும் சேவை செய்கின்றன. குறிப்பிட்ட சில காரியங்களை வியாபார பாங்கிகள் தங்களுடைய வாடிக்கைகாரர்களுக்கு செய்து கொடுக்கின்றன். இம்மாதிரி சேவைக்கு "ஏஜென்ஸி சேவைகள்" என்று பெயர். பங்குகள் மீதும் சர்க்கார் கடன்

பத்திரங்கள் மீதும் வட்டிகளை உரிய காலத்தில் வசூலிப்பது, வருமானவரி வாக்கு மூலங்கள் தயாரித்தல் முதலியசேவைகளை வாடிக்கைக்காரர்களுக்காக பாங்கிகள் செயகின்றன. இதர சேவைகளில் கீழ்கண்ட சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்:—தனி நபர்களுக்கும் வியாபார ஸ்தாபனங்களுக்கும் கடன்சீட்டுகள் (Letters of Credit) வழங்குவது; (இவற்றின்மூலம் பாங்கியின் உயர்ந்த நாணயத்தின் பலன் வாடிக்கைக்காரர்களுக்கும் கிடைத்து, அயல் நாட்டு வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்புகளும் அவர்களுக்குக் கிட்டுகின்றன), விலையுயர்ந்த பொருள்களையும் தஸ்தாவேஜிகளையும் தங்கள்பாதுகாப்பில் வைத்துக்கொள்வது; பிரயாணச் செக்குகள் வழங்குவது' (இவை அயல் நாட்டுப் பிரயாணங்களுக்கு மிகவும் வசதியானவை); வியாபார சம்மந்தமான செய்திகளையும் புள்ளி விவரங்களையும் அவ்வப்போது வழங்குவது; மற்றும் இவை போன்ற சேவைகளை முற்போக்குள்ள பாங்கிகள் பல இப்போதெல்லாம் சாதாரணமாகவே செய்கின்றனர்.

## பாங்கியின் சிட்டா (Balance Sheet)

தனிப்பட்ட நபர்களிடமிருந்து மூலதனம் வசூலிக்கப்பட்டு நடத்தப்பட்டாலும் பாங்கிகள் அடிப்படையில் பொது ஸதாபனங்கள் தாம் என்பதை மறக்கக் கூடாது. அதற்காக பாங்கிகள் அந்தந்த காலங்களில் பாங்கிகளின் நிதிநிலைமையை வாடிக்கைக்காரர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்த சிட்டா (Balance Sheet) தயாரித்து வெளியிட வேண்டும், பாங்கு ஈடுபட்டுள்ள அலுவல்களின் தன்மை, பாங்கியின் நிதிநிலைமை முதலியவிவரங்கள் இந்த சிட்டாவில் விவாரிக்கப்பட்டிருக்கும், இந்தச் சிட்டாவுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒரு பக்கம் சொத்துகள் (ஸ்தாவர ஜங்கம சொத்து உள்பட),பொறுப்புள்ள

ஈடு வகைகள், பாண்டு பத்திரங்கள், வரவேண்டிய கடன்கள், கையிருப்பு ரொக்கம் முதலிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். மறு பக்கத்தில் பங்கு தாரர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணம், டிபாசிட்டுத் தொகை, காப்பு நிதிகள், கொடுக்க வேண்டிய கடன்கள், நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள், முதலிய விவரங்கள் அடங்கியிருக்கும். இந்தப் பக்கத்தைப் "பாங்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் காட்டும் பக்கம்" அல்லது "கடன்கள் பக்கம்" (lialilities side) எனலாம். பாங்கியின் பணம் எங்கெந்த இனங்களிலிருந்து கிடைக்கின்றது என்பதை இந்தப் பக்கத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம். மற்றப் பக்கத்தை ஆஸ்திப் பகுதி யெனலாம். இதிலிருந்து எங்கெந்த இனங்களில் பாங்கிக்குப் பணம் வரவேண்டுமென்றும் எவ்வளவு தொகைக்கு பாங்கி உரிமை பெற்றுள்ளது என்பதும் தெரிய வரும். தவிரவும், பாங்கியின் அலுவல்கள் எத்தன்மையன என்பதும் இதைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். பாங்கியின் பணம் எவ்வாறு எங்கெந்த இனங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். பாங்கியின் சிட்டாவின் தோற்றம் எப்படி இருக்குமென்பதைக் கீழே கொடுக்கப்பட்ட உதாரணத்திலிருந்து புரிந்து கொள்ளலாம்.

| கடன்கள். | ரூ. |
|---|---|
| மூலதனம் (செலுத்தப்பட்டது) | 50,00,000 |
| காப்பு நிதிகள் | 30,00.000 |
| கடன்கள் (வாடிக்கைத்காரர்களுக்காக உண்டியல், பில் வகை உறுதியளிக்கப்பட்டவை) | 75,00,000 |
| டிபாசிட்டுக்கள் | 2.35,00,000 |
| | 3,90,00.000 |

| ஆஸ்திகள் | ரூ |
|---|---|
| ரொக்கம் (கையிருப்பு) | 35,00.000 |
| (இதர பாங்குகளின் கையிருப்பு) | 15,00,000 |
| (அல்லது குறுகிய காலத்தில்) வேண்டும்போது கிடைக்கும் ரொக்கப் பணம். | 25,00,000 |
| உண்டியல்கள் (வட்டி தள்ளுபடி செய்தவை) | 50,00.000 |
| முதலிட்டுவகைகள் | 15,00,000 |
| முன் பணம் வழங்கியது | 75,00,000 |
| உண்டியல் வகைகளில் வாடிக்கைக் காரர்களிடமிருந்து வர வேண்டியது | 75,00,000 |
| | 390,00,000 |

கடன்கள் என்ற பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள இனங்களை இப்போது கவனிக்கலாம். முதலில் இருப்பது மூலதனம். பாங்கி ஆரம்பிக்கப்பட்டபோது பங்குதாரர் களிடமிருந்து பங்குகள் மூலம் வசூலிக்கப்பட்ட தொகையை இது குறிக்கிறது. இதுதான் பாங்கியின் அஸ்திவாரம். 'காப்பு நிதிகள்' என்பது ஆண்டு தோறும் கிடைத்த லாபத்தில் பங்குதாரர்களுக்கு வினியோகிக்கப் படாமல் எதிர் காலத் தேவைக்கும் எதிர் பார்த்து நேரக் கூடிய அவசரத் தேவைக்குமாக மிச்சம் பிடித்து ஒதுக்கி வைக்கப்பட்ட பணத்தின் கூட்டுத் தொகை. இதுவும் முடிவில் பங்குதாரர்களுக்குச் சேரவேண்டிய பணம்தான். "டிபாசிட்டுகள்" தான் இப்பகுதியில் மிகவும் கணிசமான இனம். வாடிக்கைக்காரர்கள் தங்கள் உபரிப்பணத்தை பாங்கியில் வைத்திருப்பதை இது காட்டுகிறது. "கடன்

கள்"என்ற இனம் உண்மைக் கடன்கள் அல்ல, பொறுப் புக் கடன்கள் (Contingent Liabilities); அதாவது வாடிக் கைக்காரர்கள் சார்பில் பாங்கி உத்தரவாதம் அளித்து பொறுப்பை ஏற்றுக்கொண்டவை. வாடிக்கைக்காரர்கள் செலுத்தத் தவறிய காலத்தில் மட்டுமே இந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் பாங்கிற்கு ஏற்படும். அதனுல்தான் இதைக் கடன் பக்கத்தில் சிட்டாவில்காட்டப் பட்டாலும் ஆஸ்திகள் பக்கத்திலும் இதே தொகையைப் பாங்கிக்கு வரவேண்டிய கடனுக வரவிலும் காட்டப்பட் டிருக்கிறது. சுருங்கச் சொன்னுல் பாங்கியின் கடன்களே இரண்டு இனங்களாகப் பிரிக்கலாம். ஒன்று பங்குதாரர் களுக்குக் கொடுக்கவேண்டியயபணம் (மூலதனம், காப்பு நிதி இரண்டும்); மற்ருென்று இதர வகுப்பினர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணம் (டிபாசிட்டு முதலியவை).

சொத்துக்கள் பகுதியிலுள்ள இனங்களே இப்போது கவனிக்கலாம். பாங்கியின் தொழில் எத்தன்மையது, எவ் வளவு விரிவானது என்பதை இப்பகுதியிலுள்ள விவரங் கள் அறிவிக்கும். "கையிருப்பு ரொக்கமும்" இதர பாங்கு களில் தனது கணக்கில் வைக்கப்பட்டுள்ள ரொக்கமும் பாங்கியின் பாதுகாப்பிற்கு முதன் அரண் என்று கூறலாம். வாடிக்கைக் காரர்களுடைய தேவைகளேயும், நெருக்கடியின் போது அதிகப்படியான தேவைகளேயும் இந்த ரொக்கக் கையிருப்பைக் கொண்டே பூர்த்தி செய்விக்கப்படுகிறது. இந்த ரொக்கப்பணம் டிபாசிட்டு செய்துள்ளவர்களுக்குப் பாங்குகிக் கொடுக்க வேண்டிய தொகையில் குறிப்பிட்ட ஒரு விகிதாசாரத்தில் இருக்கும். இந்த விகிதாசாரம் எவ் வளவு இருந்தால் பாதுகாப்புக்குப் போதுமானது என்பதை ஒவ்வொரு பாங்கரும் தமது அநுபவத்தின் மூலம் அறிந் திருப்பார். அடுத்தபடியாக உள்ள இனம் "வேண்டும் போதுக் குறுகிய காலத்தில் கிடைக்கக் கூடிய

தொகை.'' இது பெரும்பாலும் இதர பாங்கிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன்கள்; அல்லது வாடிக்கைக்காரர் களுக்குக் குறுகிய கால எச்சரிக்கையில் கொடுக்கப்பட வேண்டியது என்ற உத்தரவாதத்தின் பேரில் வழங்கிய கடன்களாகவும் இருக்கும். இது பாதுகாப்பிற்கு இரண் டாவது அரண். அடுத்த இனம், தள்ளுபடி செய்து வாங்கப் பட்ட உண்டியல்களும், பிருமிசரி நோட்டுகளும். இதுதான் பாங்குக்கு லாபகரமான இனம். தொகையும் கணிசமாக இருக்கும். இந்த உண்டியல்களெல்லாம் சாதாரணமாக மூன்று மாதத் தவணையுள்ளவையாக இருக்கும். குறுகிய கால முதலீடுகளுக்கு இத்தகைய உண்டியல்கள் பாங்கி களுக்கு மிகவும் ஏற்றவை. இந்த இனத்தில் முதலீடு செய்வதில் பாங்கர்கள் மிகுந்த திறமை காட்டுவார்கள். தினசரி காலாவதியாகும்படியான உண்டியல்களில் ஒரு பாகத்தை முதலீடு செய்து, பெரும்பான்மைப் பகுதி எப் போது டிபாசிட் செய்தவர்களிட மிருந்து ரொக்கப் பணத் திற்குக் கிராக்கி எதிர்ப் பார்க்கப் படுகிறதோ அப்போது காலாவதி ஆகும் உண்டியல்களில் அதிகமாக முதலீடு செய்து வைத்திருப்பார்கள். "முதலீடு" என்பது பாங்குகள் தங்கள் உபரிப் பணத்தை சர்க்கார் கடன் பத்திரங்களிலும் முதல் தரமானவை என்று கருதப்பட்ட இதர வகைப் பாண்டு பத் திரங்களிலும் முதலீடு செய்துள்ளதைக் காட்டும். "முன் பணக்கடன்கள்" (Advances)தான் பாங்கியின் நடவடிக்கை யில் மிகவும் முக்கியமானதும் கணிசமானதுமான பாகம். இவைகளெல்லாம் குறுகிய கால அளவில் வழங்கப்பட்ட கடன்கள். பல்வேறு வகையாக இக்கடன்கள் இருக்கும். தொழில் ஸ்தாபனங்களுடைய தினசரித் தேவைக்குப் பாங் குக்கடன்கள்தான் பெரும்பாலும் உதவுகின்றன. வியாபாரி களுக்கும் தனி நபர்களுக்கும் கூட பாங்கிகள் குறுகிய காலத்திற்குக் கடன் கொடுக்கிறார்கள்.

பாங்கியின் நடவடிக்கைகளுக்கு வேண்டிய பணம் பொதுவாக இரண்டு விதங்களாக இருக்கின்றன என்பதைச் சிட்டாவிலிருந்து தெரிந்து கொள்ளுகிறோம். ஒன்று பாங்கியின் மூலதனமும் காப்பு நிதிகளும்; மற்றொன்று வாடிக்கைக்காரர்களால் அதனிடம் வைக்கப்பட்டுள்ள டிபாசிட் தொகை. இந்த மொத்தத் தொகைகளைக்கொண்டு தான் டிபாசிட்டுதாரர்களுக்குக் கொடுக்கவேண்டிய வட்டி, சிப்பந்திகளுக்குச் சம்பளம், இதரச் செலவுகள், முதலியவைகளுக்குப் போதுமான லாபத்தை சம்பாதித்து, பங்குதாரர்களுக்கும் அவர்கள் போட்டுள்ள மூலதனத்துக்கு "டிவிடெண்ட்"டும் கொடுக்கவேண்டும். முன்பணமாகக் கடன் கொடுக்கும் போதும் எந்த இனங்களிலாவது முதலீடு செய்யும் போதும், தனக்குக் கிடைக்கும் லாபத்தைக் முக்கியமாகக் கவனிப்பதுடன் ஒவ்வொரு பாங்கியும், முதலுக்கு மோசம் வராமல் அதுபாதுகாப்பாக இருக்கவேண்டிய அவசியத்தையும் கவனித்துக் கொள்ளவேண்டும். தவிரவும் டிபாசிட்டு தாரர்களிடமிருந்து எழக்கூடிய தேவைகளுக்கு ரொக்கப் பணம் தயங்காமல் கொடுக்கக் கைவசம் ஒரு பகுதி எப்போதும் வைத்திருக்கவும் வேண்டும். அதனுடைய முதலீடு இனங்களும் எப்போது வேண்டுமானாலும் ரொக்கமாக மாற்றிக் கொள்ளக் கூடிய தன்மையுள்ளதாக இருக்கவேண்டும். முதலீடு செய்வதில் நுட்பமான திறமையுடன் நடந்து கொள்வது பாங்கிக்கு மிகவும் அவசியம். பாது காப்பாகவும் இருக்கவேண்டும்; முதலீட்டு இனங்களிலிருந்து நல்ல லாபமும் கிடைக்கவேண்டும்; டிபாசிட்டு தாரர்களின் பணத்தைக் கொண்டே பாங்கியின் நடவடிக்கைகள் நடைபெறுவதால், தனது முதலீடுகளை எப்போது வேண்டுமானாலும் ரொக்கமாக மாற்றிக் கொள்ளும்படி இருக்கவேண்டும். தனது ஆஸ்திகளை எளிதில் பணமாக்கிக் கொள்ளவேண்டியது பாங்கிக்கு மிகவும் அவசியம். தான் வழங்கிய கடன்களும் முன்பணங்களும் குறுகிய கால எச்ச

ரிக்கையில் திருப்பிக் கிடைக்கும்படி பாங்கிகள் பார்த்துக் கொள்ளும். கேட்ட உடனே கொடுக்கப்பட வேண்டுமென்ற இனங்கள் பாங்கிக்கு மிகுந்த பாதுகாப்பளிப்பவை. கையிருப்பிலுள்ள ரொக்கப் பணத்துக்கு அடுத்தபடியாக இந்த இனம் தான் பாங்கியின் பாதுகாப்பு அரணுக விளங்குகிறது. உண்டியல்களும் சர்க்கார் கடன் பத்திரங்களும் பாதுகாப்பான முதலீடுகள் என்ருலும் "கேட்டதும் கொடுக்க" வேண்டுமென்ற இனத்துக்கு அடுத்தபடியாகவே அவற்றைக் கருதவேண்டும். ஆனல் இதன் மூலம் அதிக லாபம் கிடைக்காது. கடன்களும் முன் பணங்களுமே நல்ல லாபத்தை அளிக்கக் கூடிய இனங்கள். ஆனல் கொடுக்கப் படும் கடன்கள் எல்லாம் பொறுப்பும் நாணயமு முள்ள நபர்களுக்கு மட்டுமே வழங்கவேண்டும். இவ்விஷயத்தில் பாங்கிகள் எப்போதும் மிகுந்த கண்காணிப்புடன் ஜாக்கிரதையாகவே இருப்பார்கள்.

அத்தியாயம் 10

# கடன் உற்பத்தி செய்தல்

மேலே விவரித்துள்ளபடி பாங்கிகள் மேற் கொள்ளும் தொழில்களில் முக்கியமானவை கடன் வழங்குவதும் முன் பணம் கொடுப்பதும். வேண்டுவோருக்குத் தாராளமாகக் கடன் கொடுக்கும் வசதியை டிபாசிட்டுதார்கள் தங்கள் பணத்தைத் தன்னிடம் போட்டு வைத்திருப்பதிலிருந்தே பாங்கு பெறுகிறது. தன்னுடைய மூலதனப்பணமும், காப்பு நிதிப் பணங்களும் கடன் கொடுக்க உதவி செய்கிறதென்ருலும் டிபாசிட் பணம்தான் கடன்களுக்கு ஆதாரமாக இருப்பது, இவ்விரண்டு இனங்களைத் தவிர பாங்குகள் வாடிக்கைக்காரர்களுக்குக் கொடுக்கும் கடன்களையும் முன்பணங்களையும் நிர்ணயிக்கும் மூன்ருவது இனமும் நவீன பாங்கு முறையில் இருக்கிறது. இதைத்தான் "கடன் உற்பத்தி செய்யும் சக்தி" என்று சொல்வார்கள். ஒவ்வொரு பாங்கும் கடன் உற்பத்தி செய்கிறது. அதனுடைய தொழிலில் இதுவும் ஒன்று. பாங்கிகள் இதை எவ்வாறு செய்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில் இக்காலத்திய பொருளாதார உலகத்தில், பொருளியல் நடவடிக்கைகள் பெரும்பாலும் பாங்கிகளின் கடன் உற்பத்தியைத் தழுவியே நிகழ்கின்றன.

டெபாசிட்தாரர்கள் பாங்கிகளிடம் விட்டுவைத்துள்ள பணத்தில் 10 அல்லது 15 சதவீதத்துக்குமேல் ஏக காலத்தில் டிபாசிட்டு தாரர்கள் வாபசு பெறக் கோருவதில்லை என்று பாங்கர்கள் தங்கள் அனுபவ மூலம் அறிந்திருக்கின்றனர். ஆகவே இந்த அளவுக்கு மட்டில் ரொக்கப் பணமாக

கையிருப்பில் வைத்துக்கொண்டு பாக்கியுள்ளதைக் கடனுக்கு வெளியே கொடுத்தால் லாபம் சம்பாதிக்கலாம் என்பதை அவர்கள் கண்டனர். கடனுகக் கொடுக்கப் படும் பணம் மட்டும் நல்ல பொறுப்புள்ள நபர்களுக்கும், தக்க ஈடுகள் பேரிலும், சுலபமாக ரொக்கமாக மாற்றிக் கொள்ளும் வகையிலோ அல்லது கேட்டபோதுத் திருப்பிப் பெறக் கூடியதாகவோ இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இதை மட்டும் கவனித்துக்கொண்டால் டிபாசிட் தாரர்கள் பணத்தில் பெரும்பான்மைப் பாகத்தை லாபகரமாகப் பாங்கிகள் உபயோகிப்பதில் தடை ஏதுமில்லை. கையிருப்புத் தொகைக்கும் இவ்வாறு கடன் கொடுக்கப்படும் தொகைக்கும் உள்ள விகிதம் அப்போதைக்கப்போது சேமிப்பு வகையில் காணும் போக்குக்கும் கடன்கள்தேவையின் போக்குக்கும் ஏற்ப மாறுபடலாம். அதிகமாகச் சேமிப்புத் தொகை டிபாசிட்டு தாரர்களிடமிருந்து கிடைக்கும் ஒவ்வொரு சமயத்திலும், அந்தத் தொகையில் பன்மடங்கு அதிகமாகக் கடன் கொடுக்கும் சாமர்த்தியத்தை ஒவ்வொரு பாங்கியும் பெறுகிறது. உதாரணமாக, ஒரு பாங்கு டிபாசிட்டுத் தொகையாக 1000 ரூபாய் பெறுகிறது என்ருல் அதன் ஆதாரத்தைக் கொண்டு அது 10 அல்லது 15 மடங்கு, அதாவது 10,000 அல்லது 15000 ரூபாய் கடனுகக் கொடுக்க முடியும். இதைத்தான் கடன் உற்பத்தி செய்தல் என்று கூறுகிருர்கள். கடன் விஸ்தரிப்பு அல்லது கடன்உற்பத்தி வாடிக்கைக்காரர்களுக்கு அதிகப்பற்றுப் (Overdraft) பணம் அளிப்பதன் மூலமும், சுத்தக் கடன்கள் (Clean leans) அளிப்பதன் மூலமும், உண்டியல்களை தள்ளுபடி செய்து வாங்குவதன் மூலமும் செய்யப்படுகிறது. இந்த விஸ்தரிப்பு ஒரே காலத்தில் நிகழுவதல்ல என்பதைக் கவனிக்கவேண்டும். குறிப்பிட்ட ஒரு பாங்கில் மட்டில் நிகழுவதும் அல்ல. அது தொடர்ந்து நிகழும் ஒரு சம்பவம். பாங்கி அமைப்பு முழுவதிலும்நிகழும்

சம்பவம். உதாரணமாக, 1000 ரூபாய் டிபாசிட்டுத் தொகை பாங்கிக்குக் கிடைத்ததும், அது 2000 ரூபாய்க்குத் தன் வாடிக்கைக்காரர்களுக்கு அதிகக் கடன் வசதிஅளிக்கலாம். அவர்கள் தங்கள் பாங்கியின் மீது செக்குகள் எழுதுவார்கள். இந்தச் செக்குகளைப் பெறும் மூன்றும் நபர்களில் சிலர் இந்தப் பாங்கியின் வாடிக்கைக்காரராகவே இருக்கலாம். அவர்கள் அந்தச் செக்குகளை மறுபடியும் பாங்கியிடமே ஒப்படைப்பார்கள். வாடிக்கைக் காரர்கள் கணக்கில் மாறுதல் ஏற்படுமே தவிர, பாங்கியின் பணம் ஏறக்குறைய அப்படியே இருக்கும். செக்குகளைப் பெறுபவர்களில் சிலர் இதர பாங்கிகளின் வாடிக்கைக்காரர்களாக இருக்கலாம். அவர்களுக்கு மட்டும் ரொக்கப் பணம் கொடுக்கப்படவேண்டும். இவ்வாறு ரொக்கமாக பாங்கியிலிருந்து வெளிச் செல்லும் தொகை சுமார் 500 ரூபாய் இருக்கும். இந்தப் பணம் இதர பாங்குகளுக்கே செல்லுவதால், இந்த டிபாசிட் தொகையைக் கொண்டு, அவர்களும் தங்களுடைய வாடிக்கைக்காரர்களுக்குக் கடன் வழங்குவார்கள். இப்படியாக ஒரு பாங்கியில் போடப்பட்ட டிபாசிட்டுத் தொகை பாங்கி அமைப்பு முழுவதிலும் பரவிப் பாங்கிகள் கொடுக்கும் கடனும் முன்பணமும் பாங்கி அமைப்பு முழுவதிலும் பரவி விடுகிறது.

மேலே சொன்னதிலிருந்து, கடன் உற்பத்தி செய்வது பாங்கிகளுக்கு லாபகரமாக இருப்பதால், அவர்கள் எவ்வித வரம்புமின்றி அளவு கடந்து கடன் வழங்கிக் கொண்டே போகலாம் என்று தெரிகிறது. ஆனால் நடைமுறையில் இப்படி அளவு மீறிக் கடன் விஸ்தரிப்புச் செய்ய முடியாது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, கையிருப்புத் தொகை, டிபாசிட்டுத் தொகை கடன் தொகை ஆகிய வற்றிற்கு குறிப்பிட்ட ஒரு விகிதத்தில் எப்போதும் இருக்கவேண்டும். கடன்கள் தாராள

மாகக் கொடுக்கப்பட்டால், இந்தக் கையிருப்பு விகிதம் குறையும். இதனுல் இதர பாங்கிகளுக்குத் தன் கையிருப்புத் தொகையையும் காப்பு நிதியையும் கொடுக்கவேண்டி வரும். ஆகவே ஒவ்வொரு பாங்கியும் மற்ற பாங்குகளின் நடவடிக்கைகளேயும் கவனித்துக்கொண்டு தனது ரொக்கப்பணத்தின் விகிதங்கள் குறிப்பிட்ட அளவுக்குக்கீழிறங்காமல் பார்த்துக்கொள்ளும். இரண்டாவதாக, பாங்குகள் கண்டபேர்களுக்கெல்லாம் கடன் கொடுக்க மாட்டார்கள். கொடுக்கவும் கூடாது. தகுந்த ஈடுகள் பேரில் மட்டுமே கடன்கள் கொடுக்கப்படுகின்றன. கடன்களும் குறுகிய காலத்திற்கு மட்டுமே கொடுக்கப்படும். பாங்கியின் கடன் நடவடிக்கைகள் எல்லாமே மிகக் குறுகிய கால—அதாவது மூன்றுமாத காலம் அல்லது ஆறுமாதத் தவணையில்தான் இருக்கும், ஆகவே ஒரு புறம் கடன் விஸ்தரிப்பு நடந்தாலும் மறு புறம் கடன் ரத்து செய்வதும் கூடவே நிகழுகின்றன.

இவையனைத்தும் பாங்கியின் கடன் வழங்கும் சக்திக்கு வரம்புகள் போல் இருக்கின்றன. ஆனுல் கடன் உற்பத்தி செய்யும் சாமர்த்தியம் என்பது ஒருவகையில் பார்த்தால், பாங்கியின் இதர வாடிக்கைக்காரர்கள் தங்களுடைய டிபாசிட்டுத் தொகையை பாங்கியிடம் விட்டு வைப்பது தான் கடன் உற்பத்திக்கு ஆதாரம் என்பது விளங்கும்.

மேலே விவரித்த இரண்டு வரம்புகளும் பாங்கிகள் தாங்களாகவே மேற்கொள்ளும் நடைமுறை நடவடிக்கைகள். இவற்றைத் தவிர நாட்டின் மத்திய பாங்கி என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. இதைப்பற்றி முன் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறேம். அதனுடைய பல தொழில்களில் ஒன்று பாங்கிகளின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணிப்பதும், அதிகக் கடன்கள் வழங்கப்படும் போதெல்லாம், எச்சரிக்கைச் செய்வதும். இத்தொழிலைச் சரிவர செய்வதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பல

சாதனங்கள் உள்ளன: பல முறைகள் கையாளப்படுகின்றன; அதற்குப் போதிய அதிகாரங்களும் அதற்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வதிகாரத்தை அவசியமானபோது பூரணமாகப் பயன்படுத்த அது தயங்குவதுமில்லை.

## மத்திய பாங்கும் அதன் செயல் முறையும்

ஒவ்வொரு தேசத்திலும் அந்தந்த நாட்டின் நாணய முறை, பாங்கி முறை ஆகியவற்றின் நடவடிக்கைகளை நிர்வாகம் செய்வதில் மத்திய பாங்கு என்ற ஸ்தாபனத்திற்கு முக்கியமான பங்கு உண்டு. ஆகவே பாங்கு அமைப்பில் உச்ச நிலையிலுள்ள இந்தக் கேந்திர பாங்கியின் செயல் முறையை நன்கு தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியமாகிறது.

மத்திய பாங்கு ஒவ்வொரு நாட்டிலும் இருக்கவேண்டியது இப்போதைய உலகில் அத்தியாவசியமாக ஆகிவிட்டது. அதற்குப்பலகாரணங்கள் உண்டு. அநேகமாக எல்லா தேசத்தின் நாணயமுறைகளும் கட்டுப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டமுறைகளே தவிர,சுதந்திரத்துடன் இயங்கும் முறைகள் அல்ல எனவே இந்த முறைகளைத்தேசீய நன்மைக்காகவும். தேசீய நலனை வளர்ப்பதாக இருக்கும்படிக்கும் நிர்வாகம் செய்ய வேண்டியது அவசியம். ஒரு அரசாங்க இலாகா இம்மாதிரி முக்கியமான விஷயத்தில் பொறுப்பேற்று நிர்வாகம் செய்வதைக் காட்டிலும், இதர நிர்ப்பந்தங்களில்லாமல் ஒரு தனிஸ்தாபனம் தனி அதிகாரம் பெற்று தேசத்தின் நாணய நிர்வாகத்தை நடத்தினால் மக்களின் நம்பிக்கைக்கு ஏற்றதாக இருக்கும், நிர்வாகமும் திறமையுடன் நடைபெறும் என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. இரண்டாவதாக, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திலும் தினசரி நடவடிக்கைகளிலும் பாங்கிகளின் பங்கு மிக முக்கியமானதாக இருப்பதால் எல்லா வியாபாரப் பாங்குகளுக்கும் நண்பனும், ஆலோசனை சொல்லக்கூடியதாயும், வழிகாட்டியாக

வும் ஒரு உயர் ஸ்தாபனம் இருப்பது நல்லது என்று ஒப்புக் கொள்ளப்படுகிறது. இதர பாங்கிகளுக்கு ஏதாவது இடுக்கண் வந்தபோதும், நெருக்கடி நிலைமை ஏற்படும்போதும், அவர்கள் சீரான பாங்கு முறைகளைக் கடைப்பிடிக்கத் தவறியபோதும், நாணய சம்பந்தமாகத் தேசியக் கொள்கைகளுக்கு இணக்கமாக பாங்குகளைச் செயலாற்றும்படி ஊக்குவிக்கவும் ஆலோசனை கூறவும், உதவி செய்யவும், மத்திய பாங்கு மிகவும் அவசியமாகிறது. எல்லா நாட்டிலும் மத்திய பாங்குகள் முக்கியமான பணியாற்றுகின்றன.

கேந்திர ஸ்தாபனமாக விளங்கும் இந்த மத்திய பாங்குகள், தங்கள் தொழிலும் நடவடிக்கைளும், சாதாரண வியாபாரப்பாங்கிகளின் தொழில்களிலிருந்து மாறுபட்டவை என்பதனாலேயே, செயல் முறையிலும் அடிப்படையிலும் மாறுபட்ட தத்துவத்தின்படியே இயங்குகின்றன. முதலாவதாக, வியாபாரப் பாங்குகள் முக்கியமாக லாபம் சம்பாதிப்பதற்காகவே ஏற்பட்டவை. அந்த லட்சியத்துடனே, மற்ற வியாபார ஸ்தாபனங்கள் செயல் புரிவதைப் போலவே, பாங்குகளும் தொழில் நடத்துகின்றன. ஆனால் மத்திய பாங்கியின் லட்சியம் நாணய விஷயத்தில் தேச நலனைப் பேணி வளர்ப்பது. மத்திய பாங்கிகள் சம்பாதிக்கும் லாபம், லாபத்திற்காகப் பாடுபட்டுக் கிடைக்கும் ஆதாயம் அல்ல. தனது நடவடிக்கைகளைக் கவனிக்கும்போது தானாகவே கிடைக்கும் லாபம். இரண்டாவதாக, மத்தியபாங்குகளுக்கு விரிவான அதிகாரங்கள் அளிக்கப்பட் டிருப்பதாலும், அவற்றை அமுல் செய்யும்போது அவை அளவு மீறிய செல்வாக்கை அடைந்துவிடுவதாலும், மத்திய பாங்குகள் தங்கள் நடவடிக்கைளில் பட்சபாதமின்றி நடந்துகொள்ளுவது மிகவும் அவசியம். நாணய சம்பந்தமாக அரசாங்கம் கொள்கைகளை வகுக்கவோ, மாற்றவோ மத்திய பாங்கு

களின் ஆலோசனையைக் கேட்கும்போது, விருப்பு வெறுப் பின்றி, கட்சிச் சார்புற்று, தேச நலம் ஒன்றை மட்டுமே கருத்தில்கொண்டு அவை ஆலோசனைகள் கூறவேண்டும்.பல பாங்குகளுடன் தொடர்பு கொண்டிருப்பதால், அவர்களுக் கிடையே நியாயமாகவும் நேர்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும். பட்சபாதமாக மத்திய பாங்குகள் நடந்து கொண்டது என்ற பழிக்கு ஆளாகாமல் இருத்தல் அவ சியம். மத்திய பாங்கின் நிர்வாக உயர் அதிகாரி சாதா ரணமாக நாட்டில் முக்கியமானவராகவும் அந்தஸ்து உடையவராகவும் இருப்பார். வியாபார உலகிலும் பாங்கர் களிடையேயும் மிகுந்த செல்வாக்குள்ளவர்களாக இருப் பர். நிதி, நாணயம், கடன், மூலதனம், போன்ற விவகாரங் களில் அவ்வப்போதுள்ள போக்குகளை எல்லாம் நன்கு அறிந்திருப்பார். மத்திய பாங்குகள் தேசியமயமாக்கப் பட்டுவிட்ட நாடுகளில் அவை அந்தந்த நாட்டு அரசாங்க நிதி அமைச்சரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு ஒரு உயர் தேசிய ஸ்தாபனத்துக்கு இருக்க வேண்டிய சுதந்திரத் தன்மையை இழந்துவிட்டபோதிலும், மனோ உறுதியும், தைரியமுமுள்ள மத்திய பாங்குத் தலைவர், தன் துறையில் நிபுணர் என்ற முறையில் தனது அபிப்பிராயங்களை அர சாங்கத்துக்கு வலியுறுத்திச் சொல்லி, அரசாங்கத்தின் நிதி, நாணயக் கொள்கைகளையே மாற்றிவைக்கக் கூடும்.

மத்திய பாங்குகள் சாதாரணமாகச் செய்யும் தொழில் களாவன ;—(1) நாட்டிலுள்ள நாணயச் செலாவணியின் தொகையை இது கட்டுப்படுத்துகிறது. நாணய நோட்டு களை அச்சிட்டு வழங்கும் ஏகபோக உரிமை ஒரு நாட்டில் அந்தந்த நாட்டு மத்திய பாங்குகளுக்கே உண்டு. அதாவது அந்தந்த நாட்டு சர்க்கார் மட்டுமே காகித நாணயம் வழங்கும் உரிமையை உடையது என்றாலும், மத்திய பாங்கியின் மூலமாகவே இது மக்களுக்கு வழங்கப்படுகிறது. புழக்

கத்திலிருக்கும் நாணயங்கள் (நோட்டுகளும் உலோக நாண யங்களும் சேர்ந்த தொகை) நாட்டின் வியாபாரத்தின் அள வுக்கும் மக்களின் தேவைகளுக்கும் போதுமானதாக இருக் கும்படிப் பார்த்துக்கொள்ளுவது மத்திய பாங்குகளின் பொறுப்பு. (2) கடன் வசதிகளையும் மத்திய பாங்குக் கட்டுப்படுத்துகிறது. இந்தத் தொழில்தான் மத்திய பாங் கின் எல்லா அலுவல்களைவிட முக்கியமானது. ஏனெனில் தற்போது முன்னேற்றமடைந்துள்ள எல்லா நாடுகளிலும் நாணயச் செலாவணியைவிடக் கடன் வசதிகள்தான் அதிக முக்கியத்துவம் பெற்றுவிட்டன. வியாபாரப் பாங்குகள் ஓரளவுக்குட்பட்டு எவ்வாறு கடன் உற்பத்தி செய்கிறார் கள் என்பதை முன் பக்கங்களில் விவரித்தோம். கடன் கட்டுப்பாடு விஷயத்தில், பாங்கிகளின் நடவடிக்கை களினால் ஏற்படும் பண வீக்கத்தினாலும் பணச் சுருக்கத் தினாலும் தேசத் தின் பொருளாதாரமும் மக்களின் நலனும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதும் மத்திய பாங்குகளின் முக்கிய வேலை. இந்த வேலையைத் திறமையுடன் செய்து முடிக்கவும், தீய விளைவுகள் நேரா மல் பார்த்துக் கொள்ளவும் மத்திய பாங்கு பலமுறைகளைக் கையாளுகின்றது. முதலாவதாக, மத்திய பாங்கு, பாங்கு களுக்கெல்லாம் ஒரு உயர்பாங்காகச் செயல்புரிகிறது. எல்லா வியாபாரப் பாங்குகளும் மத்திய பாங்கியில் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும். அந்தந்தபாங்கியின் டிபாசிட் தொகையில் குறிப்பிட்ட ஒரு பாகத்தை அவசரக் கால நிதி யாக மத்திய பாங்கியில் இருப்பு வைக்க வேண்டும் என்று ஒரு விதி சாதாரணமாக எல்லா நாடுகளிலும் இருக்கும். இவ்வாறாக நாட்டிலுள்ள எல்லா பாங்குகளின் நிதி வளங் களுக்கும் மத்திய பாங்கு காப்பாளராக விளங்குகிறது. சில நாடுகளில் மத்திய பாங்கு சிருஷ்டிக்கப் பட்டபோதே, இதர பாங்குகள் தங்கள் டிபாசிட்டுத் தொகையில் ஒரு பகுதியைக் கையிருப்பாக மத்திய பாங்கியில் வைக்கவேண்டு

மென்று சட்டத்திலேயே ஷரத்துகள் சேர்க்கப்பட்டு இருக கின்றன. அப்படிக்கில்லாத நாடுகளில் இம்முறை சம்பிரதா யத்தில் உருவாகி சட்டத்திற்குமேல் பலமுள்ளதாக இயங்கு கிறது. இதற்குப் பிரதி உபகாரம் செய்வதேபோல், வியா பாரப் பாங்கிகளுக்கு நெருக்கடிகள் நேரும்போதும், டிபா சிட்டுத்தார்களுக்கு பணம் கொடுக்க முடியாமல் பணத் தட்டு ஏற்படும்போதும், தன்னுடைய சொந்த பலத்தைக் கொண்டே நிலைமையைச் சமாளிக்க முடியாதபோதும், மத்திய பாங்கிகளின் உதவி கோரப்படும். மத்திய பாங்கியும் உதவியளிக்க மறுப்பதில்லை. மத்திய பாங்கியின் இம்மாதிரி உதவியானது பாங்கி முறை மீது மக்களுக்குள்ள நம்பிக் கையை வளர்க்கக் காரணமாகிறது. எந்தப் பாங்கியும் முழுகிப்போகாது என்ற நம்பிக்கை மக்கள் மனத்தில் வளரு வதால், டெபாசிட்டுதார்கள் தங்களிடமுள்ள உபரிப்பணத் தைப் பாங்கிகளிடம் விட்டு வைக்கத் தயங்குவதில்லை.

மத்திய பாங்குகள் புரியும் மற்றொரு முக்கியமான சேவை நாட்டின் தொழில், வர்த்தகம் முதலிய செழித் தோங்கும் நகரங்களில் செக் பரிவர்த்தனை சாலைகள் **(Clearnig House)** நடத்திக்கொடுத்தல். செக் பரிவர்த்தனை மிகவும் உபயோகமுள்ளதும் அவசியமானதும், சுலப மானதும்,தொழில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் மேற்கொள்ளப்படுவதுமான ஒரு செயல் முறை. இதன் மூலம் பாங்கிகள், தங்கள் வாடிக்கைக்காரர்கள் கொடுத்த செக்குகளினால் தங்களுக்குள் கொடுக்கப்பட வேண்டிய அல்லது வரவேண்டிய தொகைகளை ஒருவருக்கொருவர் கணக்கு மூலம் தீர்த்துக்கொள்ள வகை செய்யப்படுகிறது. ஒவ்வொரு பாங்கியும் தங்களுக்கு வாடிக்கைக்காரர்கள் கணக்கில் கொடுக்கவேண்டிய பணத்தையும், வரவேண் டிய பணத்தையும் அந்தந்த செக்கை அந்தந்த பாங்கு களுக்குத் தனித்தனியாக அனுப்பி வசூல் செய்வதானால்

பாங்குகளில் வேலை மிதமிஞ்சிப் போய்விடும். சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். இவ்வாறு செய்வ தற்குப் பதிலாக, ஒவ்வொரு பாங்கியின் பிரதிநிதிகளும் அடிக்கடி ஒரு இடத்தில் கூடித் தங்களுக்குள் கணக்கைச் சரிக்கட்டிக்கொள்ளும் முறைதான் செக் பரிவர்த்தனை என்பது. இப்படிக் கணக்குப் பார்த்து எவ்வளவு தொகை நிகரமாகக் கொடுக்கவேண்டும் என்று ஏற்படுகிறதோ அத்தத் தொகைக்கு மட்டும் ஒவ்வொரு பாங்கியும் ஒரே செக்கு வழங்கித் தன் பாக்கியைத் தீர்த்துக்கொள்ளும். இதன் மூலம் ரொக்கப்பணம் கொடுத்துத் தீர்த்துக்கொள்ள வேண்டிய பல பேரங்கள் செக்குகள் பரிவர்த்தனை மூலம் சரிக்கட்டித் தீர்த்துக்கொள்ளப்படுகின்றன. பாங்குகளுக்கு இதனால் வேலை குறைகிறது. கொடுக்கல் வாங்கல் லாகவ மாகவும் எளிய முறையிலும் நடைபெற்றுவிடுகிறது. வாரந்தோறும் இந்த செக் பரிவர்த்தனைச் சாலையில் கையாளப்பட்ட செக்குகளின் மொத்தத் தொகை விவரங் கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றன. இவற்றி லிருந்து பாங்கு நடவடிக்கைகள் எவ்வளவு தீவிரமாக நடைபெறுகின்றன என்றும், பாங்கு டிபாசிட்டுகளை வாடிக்கைக்காரர்கள் எவ்வளவு தீவிரமாக உபயோகிக் கின்றனர் என்றும் தெரிந்துகொள்ளலாம்.

பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் மத்திய பாங்குகள் தான் அந்தந்த நாட்டு அரசாங்கத்துக்குப் பாங்கர்களாகப் பணியாற்றுகின்றன. அரசாங்கத்திற்குப் பாங்கர்களாகப் பணியாற்றுவதென்றால், அரசாங்கம் வசூலிக்கும் வரிப் பணம் முதலிய எல்லா வரவுகளும் மத்திய பாங்குகளில் செலுத்தப்படுகின்றன. அதே மாதிரி அரசாங்கத்தினிட மிருந்துப் பணம் பெறவேண்டிய வகைகளுக்கெல்லாம், அரசாங்கத்தின் கணக்கிலிருந்து மத்திய பாங்கிகள் பணம் கொடுக்கின்றன. இப்படித் தொடர்ந்து நடக்கும் கொடுக்

கல் வாங்கல்களில், சில சமயங்களில் அரசாங்கத்தின் கணக்கில் போதிய கையிருப்பு இல்லாமலிருக்கக்கூடும். அல்லது மிகக் குறைந்துபோகவும் கூடும்' இப்படிப்பட்ட நிலைமை அவ்வப்போது ஏற்படுவதுண்டு. வரி வசூல்கள் மந்தமாக இருக்கும் மாதங்களில் அரசாங்கத்தின் வரவு குறைந்தே இருக்குமாதலால் இம்மாதிரி நிலைமை அந்த மாதங்களில் உண்டாகும். அப்போதெல்லாம் மத்திய பாங்குகள் அரசாங்கத்துக்கு முன் பணமாகக் கடன்கள் கொடுக்கும். சாதாரண வியாபாரப் பாங்குகள் தங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு கடன்களும், உபரிப்பற்று **(Overdraft)** வசதிகளும் அளிப்பதுபோலவே மத்திய பாங்குகளும் அரசாங்கத்திற்கு இச்சலுகைகளை அளிக்கின்றன.

பாங்கு முறை விஸ்தாரமாக அபிவிருத்தியடைந்து விட்டதாலும் பாங்குப் பழக்கம் மக்களிடையே பரவியிருப்பதாலும், ஒரு சமுகத்தினரிடையே எந்தச் சமயத்திலுமுள்ள மொத்த நாணயத்தின் அளவைக் கணக்கிடவேண்டுமானுல், அவர்களிடமுள்ள ரொக்கப் பணத்தையும் அவர்கள் கணக்கில் பாங்குகளில் இருக்கும் டிபாசிட்டுத் தொகையையும் சேர்த்தே கணக்கெடுக்கவேண்டும், டிபாசிட்டுகளும் பாங்குகள் அளிக்கும் கடன் வசதிகளால் விரிவடைவதால், சமுகத்தினிடமுள்ள மொத்தப் பண சப்ளைப் பாங்குகள் கடனளிக்கும் கொள்கைகளினுல் நிர்ணயமயெய்யப்படுகிறது என்றும் சொல்லலாம். பாங்குகள் குறைந்த வட்டி விகிதத்தில் தாராளமாகக்கடன் வழங்கினுல், கடன் தொகை அதிகரித்து அந்த அளவுக்கு சமுகத்திலுள்ள பணத்தின் சப்ளை அதிகரிக்கிறது. மாருக வட்டி விகிதத்தை உயர்த்தியும் இதர நடவடிக்கைகள் மூலமும் கடன் அளிப்பதையும் கடன் வசதிகளையும் பாங்குகள் கட்டுப்படுத்திக் குறைத்துவிட்டால், பணத்தின் சப்ளை குறைகிறது. இதிலிருந்து ஒரு சமுகத்தில் பணத்தில் சப்ளை

யும் ஏற்றத்தாழ்வும் ரொக்கப்பணத்தினுல் மட்டும் ஏற்படு வதில்லை என்பதும் பாங்குகளின் கடன் கொள்கை மூலம் அதிகமான அளவில் உண்டாகிறது என்பதும் புலனுகும்.

பொதுவாக வியாபாரப் பாங்குகளுக்கு அவ்வப்போது கடன் வழங்கும் விஷயங்களில் அவர்கள் எந்தக் கொள் கையை நடைமுறையில் மேற்கொள்ளவேண்டும் என்று உத்திரவுகள் பிறப்பிப்பதும் ஆலோசனைகள் கூறுவதும் மத்திய பாங்குகளின் ஒரு முக்கியமான தொழில். மத்திய பாங்குகள் இது சம்பந்தமாகக் கூறும் ஆலோசனைகளை நாட்டிலுள்ள எல்லாப் பாங்குகளும் தங்களுடைய நன்மைக் காகவும், நாட்டின் பொருளாதார நலனுக்காகவும், தயங் காமல் ஏற்றுக்கொள்ளுகிருர்கள். அதன்படி நடக்கவும் செய்கிருர்கள். ஆலோசனைகள்தானே யென்று கருதி, நடைமுறையில் அவைகள் மேற்கொள்ளப்படவில்லை யாளுல், அவற்றை உத்தரவுகளாக மாற்றி அமுல் நடத்தப் போதிய அதிகாரமும் மத்திய பாங்குகளுக்கு உண்டு. இவ் வாறு தங்கள் கொள்கைகளைப் பாங்குகள் அனுசரிக்கும்படி வற்புறுத்திச் செயல்படுத்துவதற்கு மத்திய பாங்குகள் பல முறைகளைக் கையாளுகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே கூறுவோம்.

### பாங்கி வட்டி விகிதம்

நாட்டின் கடன் கொள்கைகளை அமுல் நடத்துவதில் மத்திய பாங்கு உபயோகிக்கும் முறைகளில் முதன்மை யானது வட்டி விகிதம். பாங்கி வட்டி என்ற சொல். பொதுவாக மத்திய பாங்கு கடன் வழங்கும் வட்டி விகிதத் தையே குறிக்கும். வியாபாரப் பாங்கிகளுக்குக் கடன் வழங்கவும், அவர்களுடைய உண்டியல்களையும், வர்த்தகக் கடன் சீட்டுக்களையும் தள்ளுபடி செய்து எடுத்துக்கொள்ள வும், பங்குப் பத்திரங்கள், கடன் பத்திரங்கள் அடமான

மாக எடுத்துக்கொண்டுக் கடன், முன் பணம் முதலிய வசதி வழங்கவும், எந்த விகிதத்தில் மத்திய பாங்கி வட்டி விதிக்கிறதோ அதற்குப் பாங்கி வட்டி என்று பெயர். சாதாரணமாக, வியாபாரப் பாங்குகள் தங்களுடைய நிதி நிலைமையில் தட்டு ஏற்படும்போதும், அவர்களுடைய டிபாசிட்டுப் பணங்கள் முழுவதும் உபயோகப்படுத்தப் பட்டபோதும், மத்திய பாங்கியின் உதவியை நாடுவார்கள். இம்மாதிரி நிலைமை வியாபாரம் பெருகிச் செழிக்கும் காலங்களிலும், விலைவாசிகள் பொதுவாக உயர்ந்து கொண்டே செல்லும் காலங்களிலும் ஏற்படும். இந்த நிலைமை அபாயகரமானதல்ல, வியாபாரப் பெருக்கத்தினுல் எதிர்பார்க்கக் கூடியதே, என்று மத்திய பாங்குக் கருதினுல், வியாபாரப்பாங்கு களிடமிருந்து உண்டியல்களையும் வியாபாரக் கடன் சீட்டுக்களையும் பெற்றுக் கொண்டு அவர்களுக்குத் தேவையான கடன் வசதிகளைத் தொடர்ந்து அளிக்கும். அதாவது,'பாங்கிகளின் சொந்தப் பணத்திற்குப் பக்கபலமாகத் தனது நிதிவசதிகளை மத்திய பாங்கியும் அவர்களுக்கு அளிக்கும். ஆனுல் சில சமயங்களில், கடன் வசதி விஸ்தரிப்பு நாட்டின் பொருளாதாரப் போக்குக்கு நல்லதல்ல, பண வீக்கத்தை உண்டு பண்ணித் தீமையை விளைவிக்கும் என்று மத்திய பாங்குக் கருதக்கூடும். அவ்வாறு அது கருதுமேயானுல் பாங்கிகள் தன்னிடமிருந்து கடன்வாங்குவதை அனுமதிக்காது மத்திய பாங்கு தடைசெய்துவிடும். தன்னிடமிருந்து கடன் வசதி வியாபாரப் பாங்கிகளுக்குக் கிடைக்காததால், வியாபாரப் பாங்கிகளும் தங்கள் வாடிக்கைக்காரர்களுக்குக் கடன்வசதி அளிக்க முடியாத நிலையில் இருப்பார்கள். அதனுல் மக்களும் அதிகமாகக் கடன்வாங்க மாட்டார்கள். இப்படிக் கடன் வசதியை மறுப்பதற்கு அறிகுறியாக மத்திய பாங்கு தனது வட்டி விகிதத்தை உயர்த்திவிடும். 4 சதவீதமுள்ள வட்டி விகிதத்தை 6 அல்லது 7 சத வீதத்திற்கு உயர்த்திவிட்டால்,

இந்த உயர்ந்த விகிதத்தில் கடன் பெறுவது வியாபார பாங்கிகளுக்கு லாபகரமாக இருக்காது. ஆகவே, பாங்கி வட்டிவிகிதம் உயர்த்தப்பட்டால், அதன் முதல் விளைவு வியாபாரப் பாங்கிகள் மத்திய பாங்கியிலிருந்து கடன்வாங்க மாட்டார்கள். கடன் வசதி குறைந்தால் பணத்தின் சப்ளைக் குறையும். சமுகத்தில் பணச்சப்ளை குறைந்தால் பொருள்களையும் சேவைகளையும் வாங்கும் சக்தி மக்களிடையே குறையும். வாங்கும் சக்தி குறைந்தால் பொருள்களுக்குக் கிராக்கிக் குறையும். கிராகிக் குறைந்தால் விலை குறையும். இப்படி விளைவுகள் படிப்படியாக நிகழ்ந்து பாங்கி வட்டி உயர்த்தப்பட்டால் விலைவாசிகள் குறையும் என்று எதிர்பார்க்கலாம்.

பாங்கி வட்டி உயர்த்தப்படுவதற்கு இரண்டு சூழ்நிலைகளில் ஒன்றோ அல்லது இரண்டுமோ காரணமாக இருக்கும். உள்நாட்டின் பொருளாதார நிலைமையில் பணவீக்கம் ஏற்பட்டிருந்தால் அதைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்படும். அல்லது அயல்நாட்டு வர்த்தகத்தின் ஏற்றத்தாழ்வினால், அயல்நாடுகளுக்கு வியாபாரக் கடன் பெருகி, அதைத் தீர்ப்பதற்காக அன்னியச் செலாவணி நிதியில் குறைவு ஏற்படும்போதும் பாங்கி வட்டி விகிகம் உயர்த்தப்படலாம். பாங்கிவட்டி உயர்த்தப்படுவதால் அயல்நாட்டினர் தங்கள் பணத்தை அதிக லாபம் கிடைக்கிறதென்று உயர்ந்த வட்டி விகிதமுள்ள நாட்டிற்கு அதிகமாக அனுப்பிவைப்பார்கள். இதனால் அயல்நாட்டு வர்த்தகத்தில் ஏற்படும் குறையை, வெளிநாட்டு மூலதனத்தை ஈர்ப்பதன் மூலம் அந்நியச் செலாவணி நிதி பாதுகாக்கப்படுகிறது. தவிரவும், உள் நாட்டில் விலைவாசிகளைக் குறையச் செய்வதால், ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அயல்நாட்டுச்சந்தைகளில் விலை குறைவான உள்நாட்டுப் பொருள்களை லாபகரமாக விற்பனை செய்து வர்த்தகத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

வியாபாரம் மந்த கதியிலிருக்கும்போது, வியாபாரத்திற்கு சுறுசுறுப்பு அளிக்கவும், தொழிலில் ஊக்கமுண்டாக்கவும், மத்திய பாங்குகள் வட்டி விகிதத்தைக் குறைப்பதுமுண்டு. அதன் மூலம் வியாபாரப் பாங்குகளுக்குக் கடன் வசதியைக் குறைந்த வட்டி விகிதத்தில் அளித்து, வர்த்தகப் பாங்கிகள் தங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு அவ்வாறே கடன் வசதியை அதிகமாக வழங்குவார்கள். பணத்தின் சப்ளே அதிகரிப்பதனுல், மக்களும் பொருள்களே அதிகமாக வாங்க முயற்சி செய்வார்கள். தவிரவும், கடன் வசதிக் குறைவாகவோ அல்லது கிடைக்காமலோ இருந்த காலத்தில் மேற்கொள்ள முடியாத அபிவிருத்தித் திட்டங்களேக் தொழிலதிபர்கள் இப்போது நிறைவேற்ற முற்படுவர்.

ஆனுல் அனுபவத்திலிருந்து, மத்திய பாங்குகளின் வட்டிக் குறைப்பு நடவடிக்கை மூலம் கடன் வசதியைப் பெருக்கி வியாபாரத்திலும் தொழிலிலும் சுறுசுறுப்பை உண்டுபண்ணுவது பெரும்பாலும் சாத்தியமாவதில்லே; அல்லது ஓரளவுக்குச் சாத்தியமாஞலும், வட்டி உயர்த்துதல் மூலம் பணச்சப்ளேயைக் கட்டுப்படுத்தி விலேவாசிகளேக் குறைப்பதில் வெற்றி காணுவது போல், உற்சாகமூட்டுவதில் பலன் கிடைப்பதில்லே என்றே தெரிகிறது. ஏனெனில் வியாபாரம் மந்தகதி யடையும்போது, விலேவாசிகள் சரிந்து, வேலேயில்லாமல் கஷ்டப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து, உபயோகப்படுத்தாமல் முடங்கிக்கிடக்கும் டிபாசிட்டுத் தொகைகளும் பாங்கிகளில் ஏராளமாக இருக்கும். ஆகவே பணத்தட்டு ஏற்படுவதில்லே. பணச்சப்ளேக் குறைவினுல் வியாபரம் மந்தம் உண்டாவதில்லே. ஆகவே மத்திய பாங்கு வட்டி விகிதத்தைக் குறைத்துவிட்டால், ஏற்கனவே உபயோகப்படாமல் பதுங்கிக்கிடக்கும் பணச்சப்ளேயைக் கடன் வசதிகள் அதிகரிக்கச் செய்யுமே

தவிர, சுறுசுறுப்புண்டாக வகை செய்யாது. அம்மாதிரி சமயங்களில் அரசாங்கத்தினிடமிருந்து இதர விதமான தீவிர நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்படும். அதாவது சர்க்கார் மூலம் மேற்கொள்ளப்படும் மராமத்து வேலைகள் கட்டடங்கள் கட்டுதல், ரஸ்தா போடுதல் போன்ற வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அவற்றின் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகரித்து, வியாபாரத்திலும் சுறுசுறுப்பு காணும். பாங்கு வட்டிக் குறைப்பினாலும், கடன்வசதி விஸ்தரிப்பினாலும் தனிப்பட்ட கணிசமான பலன் ஒன்றும் கிடைப்பதில்லை.

பாங்கி வட்டி விகிதத்தை உயர்த்துவதும் தாழ்த்துவதும் மத்திய பாங்கின் ஆயுதங்களில் முக்கியமானது என்று மேலே சொல்லப்பட்டது. பணச் சப்ளையைக் கட்டுப்படுத்த, மத்திய பாங்கியிடம் இதர ஆயுதங்களும் இருக்கின்றன. இவற்றில் ஒன்றுதான் மார்க்கெட்டில் புகுந்து நேரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அதிகாரம். சுருக்கமாகக் கூறப்பட்ட இந்த முறை சற்றே விரிவானது. இங்கே 'மார்க்கெட்' என்று கூறப்பட்டது அரசாங்கக் கடன் பத்திரங்களில் பேரங்கள் நடக்கும் மார்க்கெட்டு. இங்கே பேரங்கள் நடத்துபவர்கள் பாங்கிகள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள், தொழில் ஸ்தாபனங்கள், முதலாளிகள் டிரஸ்டுகள், மூலதனக் கம்பெனிகள், முதலியவர்கள். சாதாரணமாக மத்திய பாங்கு இந்த மார்க்கெட்டில் நடக்கும் பேரங்களில் ஈடுபடாது. ஆனால் சிற்சில சமயங்களில், பணத்தின் சப்ளையைக் குறைக்கவேண்டும் என்று நினைக்கும்போதும், வட்டி விகிதத்தை உயர்த்துவதால் மட்டும் கடனுக்குக் கிராக்கி மிதமிஞ்சி அதிகரித்திருப்பதன் காரணமாக, எதிர் பார்த்த பலன் கிடைக்காது என்று தோன்றும் போதும், மத்திய பாங்கு நேரடியாக மார்க்கெட்டில் தன் வசமுள்ள அரசாங்கக் கடன் பத்திரங்களை

விற்பனை செய்யமுன் வரும். இதை வாங்குபவர்கள், யாராக இருந்தாலும், அதன் கிரயத்தை ரொக்கமாக மத்திய பாங்கிக்குச் செலுத்தவேண்டுமாகையால், அந்த அளவுக்கு மார்க்கெட்டிலுள்ள பணச் சப்ளை குறையும். மார்க்கெட்டில் பணச் சப்ளை குறைந்தால் மக்களிடையே புழக்கத்திலுள்ள பணச் சப்ளையும் சப்ளையும் குறையும். இந்த நிலையில் பாங்கிகளும் வாடிக்கைக்காரர்களுக்கு வழக்கமாகக் கொடுக்கும் கடன் வசதிகளைக் குறைத்துக் கொள்ளுவார்கள். அதன் விளைவாகப் படிப்படியாக பொது மக்களிடமும் பணச்சப்ளை குறைய ஆரம்பிக்கும். மத்திய பாங்கு தன்னிடமுள்ள அரசாங்கக் கடன்பத்திரங்களை விற்பனை செய்வதற்குப் பதிலாக, மார்க்கெட்டிலிருந்து கடன் பத்திரங்களைச் சிலசமயங்களில் வாங்கவும் செய்யும். அப்படி நிகழும் போது மேலே விவரித்த விளைவுகளுக்கு நேர்மாருன விளைவுகள் ஏற்படும். அதாவது மக்களிடையே புழக்கத்திலிருக்கும் பணச் சப்ளையை அதிகரிக்க வேண்டுமானுல் இந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த இரண்டு முறைகளைத் தவிர, அதாவது பாங்கு வட்டி விகிதம், மார்க்கட்டில் நேரடி நடவடிக்கை ஆகிய இவற்றைத் தவிர, சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட இனங்களில் மட்டும் கடன் விஸ்தரிப்பு ஏற்படுவதைக் கட்டுப் படுத்தவும் மத்திய பாங்குக்கு அதிகாரம் உண்டு. உதாரணமாக, கோதுமை, அரிசி, சக்கரை, போன்ற குறிப்பிட்ட ஒரு பண்டத்தில், சூதாட்ட நடவடிக்கைகள் காரணமாக மிதமிஞ்சிய சுறுசுறுப்பு மார்க்கெட்டுப் பேரங்களில் காணப்பட்டால், அந்தப் பொருள்களை ஈடாக வைத்துக்கொண்டு பாங்கிகள் வாடிக்கைக்காரர்களுக்கு அடமானக் கடன்கள், முன்பணம், கடன் வசதிகள் முதலிய சலுகைகள் காட்டக்கூடாதென்று மத்திய பாங்கு இதர பாங்கிகளுக்கு உத்திர விடுவதும் உண்டு. தவிரவும்,

வியாபாரப் பாங்கிகள் தங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு விலையுயர்ந்த பொருள்களை வாங்குவதற்குக் கொடுக்கப் படும் தவணைக்கடன்களும் ஒருவகையில் கடன்விஸ்தரிப் பைச் சேர்ந்ததே. இதைப் பாங்கிகளே எப்போது வேண்டு மானாலும் குறைத்துக் கொள்ளலாம். இதற்கு மத்திய பாங்கியின் தலையீடு தேவையில்லை.

அத்தியாயம்—11

# அயல் நாட்டு வர்த்தகம்

அயல் நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட சாமான்கள் பலவற்றை நாம் தினசரி வாழ்க்கையில் உபயோகப்படுத்து கிருேம். விளையாட்டுப் பொம்மைகள், கை கடியாரங்கள், பௌண்டன் பேனுக்கள் போன்ற சாமான்யப் பொருள்க ளாகவும் இவை இருக்கலாம். அல்லது இரயில் என்ஜின் கள், மின்சார யந்திரங்கள், பல்வேறு தொழிற் சாதனக் கருவிகள் போன்று நுட்பம் மிகுந்த விலையுயர்ந்த பொருள் களாகவும் இருக்கக் கூடும். அதே போல் இந்தியாவில் தயார் செய்யப்பட்ட பல பொருள்கள் அயல் நாடுகளில் விற்பனை செய்யப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன.

உள் நாட்டு வியாபாரத்தைவிட அயல் நாட்டு வர்த்த கம் சிக்கலான நடவடிக்கைகள் பலவற்றைக் கொண்டது. உள்நாட்டு வியாபாரம் அந்தந்த நாட்டு நாணய முறையி லேயே நடைபெறும். வாங்குபவர்களும் விறபனை செய்பவர் களும் கொடுக்கல் வாங்கல்களை அந்தந்த நாட்டு நாணயத் திலேயே செய்வார்கள். இந்தியாவில் ரூபாயும், இங்கி லாந்தில் ஸ்டெர்லிங் பவுனும், அமெரிக்காவில் டாலரும் அந் தந்த உள்நாட்டு நாணயங்கள். இந்தியா அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்வதில், குறிப்பிட்ட ஒரு பொருளை இறக்கு மதி செய்து கொண்டு வருவதை அல்லது ஏற்றுமதி செய்து வெளியே அனுப்புவதைப் பற்றிமட்டும் கவனித்தால் போ தாது. இந்த பேரங்களுக்கான ரொக்கக் கொடுக்கல் வாங்கல்களை எப்படி, எந்த நாணயத்தில் எந்த விகிதத்தில் தீர்த்துக் கொள்வது என்பதையும் கவனித்துக் கொள்ள

வேண்டும். தவிரவும், ரூபாயை டாலராகவும், டாலரை ரூபாயாகவும் எந்த விகிதத்தில் மாற்றிக் கொள்ளுவது என்பதையும் கவனிக்கவேண்டும்.

இவைகளைத் தவிர ஒவ்வொரு பொருளின்மீது இறக்குமதியாகுமுன் இறக்குமதி செய்யும்நாட்டில் விதிக்கப்படும் சுங்க வரிகளையும், ஏற்றுமதியாகுமுன் ஏற்றுமதிசெய்யும் நாட்டில் விதிக்கப்படும் சுங்க வரிகளையும் தெரிந்துவைத்துக் கொள்ள வேண்டுவது அவசியம். இதுவும் அயல் நாட்டு வர்த்தகத்தில் ஒரு பிரச்னை. இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது விதிக்கப்படும் வரிகள், கேவலம் வருமானத்தை உத்தேசித்து மட்டும் விதிக்கப்படலாம்.அல்லது உள் நாட்டுத் தொழில் வளர்ச்சிக்குப் பாதுகாப்பாகஇறக்குமதியை தடை செய்வது போலும் இருக்கலாம். எந்தக் காரணத்திற்காக விதிக்கப்பட்டாலும், இவ்விரண்டுவித இறக்குமதிச் சுங்க வரிகளும் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் விலையை உயர்த்தவே செய்யும். அந்த அளவுக்கு இரண்டு நாடுகளுக்கிடையே தாராளமாக வர்த்தகம் நடைபெறுவது தடைப்படும்.

மேலும், அந்தந்த நாட்டின் அயல் நாட்டு வர்த்தகக் கொள்கைகள், வாணிபச் சட்ட் திட்டங்கள், காரணமாகவும், குறிப்பிட்ட அயல் நாட்டிற்குப் பாதகமாக வர்த்தக நிபந்தனைகள் ஏற்படுத்தப் படுவதும் உண்டு. தன் நலனை உத்தேசித்து, மற்ற நாட்டு வர்த்தகத்துக்குத் தடங்கல் செய்வது சகஜம். உதாரணமாக, குறிப்பிட்ட சில பொருள்கள் அல்லது இனங்கள் இறக்குமதி செய்யக்கூடாது என்று முழுத்தடையோ அல்லது கட்டுப் பாடுகளோ ஏற்படுத்தலாம், மோட்டார் தொழிற்சாலைகள் உள் நாட்டில் ஏற்பட வேண்டுமென்று இந்தியா முயற்சிசெய்துவருகிறது. அதனால் பலதரப்பட்ட மோட்டார்கள் இறக்குமதி யாவதைத் தடை செய்திருக்கிறது. தவிரவும் ஒரு குறிப்பிட்ட பொருளை

சில நாடுகளிலிருந்து மட்டும் இறக்குமதிசெய்ய அனுமதித்து மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதற்குத் தடை ஏற்படுத்தலாம். இதற்கு அந்த நாடுகளிலிருந்து சில சலுகைகள் உள்நாட்டிலிருந்து ஏற்றுமதிக்குக் கிடைத்திருக்கலாம். அம்மாதிரிச் சலுகைகளுக்குப் பிரதியாக இறக்குமதியில் மாற்றுச் சலுகைகள் வழங்கப்படும். உதாரணமாக, எந்தவிதமான இறக்குமதி வரியும் விதிக்கப்படாமல் இந்தியாவிலிருந்து மைகாவை மேற்கு ஜெர்மனி இறக்குமதி செய்ய அனுமதிக்கிறது என்பதற்காக இந்தியா விவசாயத்திற்குத் தகுதியான யந்திர-ட்ராக்டர்களை மேற்கு ஜெர்மனியிலிருந்து மட்டுமே தருவித்துக்கொள்ளலாம். இதர நாடுகளிலிருந்து தருவித்துக்கொள்ளக்கூடாது என்று தடையும் விதிக்கலாம்.

அயல் நாட்டு வர்த்தகத்தைப் பாதிக்கும் அல்லது ஊக்குவிக்கும் அம்சங்கள் பலவாக இருக்கின்றன. உதாரணமாக எகிப்து பருத்தியையும், பர்மா அரிசியையும், இந்தியா கோணிப்பைகளையும், எப்படியும் ஏற்றுமதி செய்தே ஆக வேண்டும். இதற்குக் காரணங்கள் வெளிப்படை. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பொருளை உற்பத்தி செய்வதில் இயற்கையாகவே சில வசதிகளைப் பெற்றிருக்கிறது. இம்மாதிரி வசதிகள் நீண்ட கால வழக்கத்தினால், சர்வதேச நாடுகளிடையே மாமூலனவை என்று கருதப்பட்டு வருகின்றன. ஸ்விட்ஜர்லாந்தின் கடியாரத் தொழில் இப்படிப் பிரசித்தி பெற்றுவிட்டது. ஒரு நாடு நுட்ப முறைகள் சிலவற்றை முதன் முதலாகக் கண்டுபிடித்து அதன் பலனைத் தொழிலில் புகுத்தியிருக்கலாம். சில நாடுகளில் இயற்கை வசதிகள் அமைந்துள்ளதுபோல் இதர நாடுகளில் அவை இரா. இம்மாதிரி மாறுபட்ட நிலைமைகளுக்கிடையில் வாழும் நாடுகள், தங்களால் உற்பத்தி செய்ய முடியாத, அல்லது இதர நாடுகளில் உற்பத்தி செய்யப்படுவது போல் அவ்வளவு விலைக் குறைவாக உற்பத்தி செய்ய

முடியாத சாமான்களை வெளி நாடுகளிலிருந்து தருவித்துக் கொள்ளவும், தாங்கள் ஏராளமாகவும் மலிவாகவும் உற்பத்தி செய்யும் பொருள்களை இதர நாடுகளுக்கு அனுப்பி வைக்கவும் விரும்புவது இயல்பே. இதில் பொதிந்துள்ள தத்துவம் "எந்தெந்தப் பொருள்களைத் தன்னால்மிகவும் குறைந்த அடக்க விலையில் உற்பத்தி செய்ய முடியுமோ அந்தந்தப் பொருள்களை மட்டும் ஒவ்வொரு நாடும் உற்பத்தி செய்து, அப்பொருள்களில் தங்கள் உபயோகத்திற்குப் பிறகுள்ள உபரியை இதர நாடுகளுக்கு அனுப்பி, அதே மாதிரி அந்த நாடுகளில் குறைந்த விலையில் உற்பத்தியாகும் பொருள்களின் உபரியைத் தருவித்துக்கொள்ளுதல்" என்பதே.

## உற்பத்தி விலைகளை ஒப்பு நோக்கும் நியதி

மேலே விவரித்த தத்துவத்தைப் பொருளில் நூல்களில் உற்பத்தி விலையை ஒப்பு நோக்கும் நியதி. **(Law of Comparaitive Cost)** அல்லது மேம்பாடுகளை ஒப்பு நோக்கும் நியதி **(Law Comparative Advantage)** என்று கூறப்படும். எந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதில் மற்ற நாடுகளிலில்லாத மேம்பாடு ஒரு நாட்டிற்கு இருக்கின்றதோ, அந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதில் அந்த நாடு தனித்திறமை எய்திவிடும் என்பதுதான் இந்தத் தத்துவத்தின் கருத்து. சில சந்தர்ப்பங்களில் இத்தகைய மேம்பாடு இருந்தாலும், அதை முற்றிலும் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலைமையில் சில நாடுகள் இருக்கலாம். அங்கெல்லாம் இந்த நியதி நடைமுறையில் சாத்தியக்கூறு உடையதல்ல. ஆனால், இதற்காக அந்த நாடுகளிலிருந்து ஏற்றுமதி வர்த்தகமே நடைபெறாது என்பது அல்ல. இதர நாடுகளும் தங்களுடைய தேவையை அந்நாடுகளிலிருந்து பூர்த்திசெய்து கொள்ளாது என்பதும் அல்ல. ஆகையால், மேலே சொன்ன நியதிக்கு ஒரு உப நியதியாகப் பொருளாதார

துறையில் முன்னேற்றமடையாத நாடுகளின் நிலைமைக்குப் பொருந்தும்படியாக மற்ெரு தத்துவத்தைக் கூறலாம். அதாவது, "ஒரு தேசமோ ஒரு பகுதியோ, சமூகமோ, எந்தப் பொருள் உற்பத்தியிலும் ஒப்பிடத்தக்க மேம்பாடு பெற்றிருக்கவில்லையானல், எந்தப் பொருள் உற்பத்தியில் ஒப்பிடத்தக்க குறைபாடு மிகவும் குறைந்துள்ளதோ, அந்தப் பொருள்களை மட்டுமே அந்த நாடுகள் உற்பத்தி செய்யும்."

ஒப்புமை மேம்பாடு என்ற கொள்கையை உதாரணத்தின் மூலம் விளக்கி வைக்கலாம். "மேம்பாடு" என்று நாட்டில் அமைந்துள்ள வசதிகளைப் பற்றிப் பொதுவாகக் கூறும்போது பொருள்களை உற்பத்தி செய்வதில் அந்தந்த நாட்டுக்குள்ள மேம்பாடுதான் குறிக்கப்படுகிறது. இந்த மேம்பாட்டை அந்தந்தப் பொருள்களின் உற்பத்தி விலை, அல்லது அடக்கவிலையைக் கொண்டே அளவிடவேண்டும். இந்த அடக்கவிலை அல்லது உற்பத்திவிலையின் மேம்பாடு மூன்று வெவ்வேறு பிரிவாக இருக்கும். முதலாவது, இரு நாடுகளுக்கிடையே உள்ள நிச்சயமான உற்பத்தி விலை மேம்பாடு; இங்கே விலை வித்தியாசங்கள் தெளிவாகத் தெரியும் இரண்டாவது உற்பத்தி விலை மேம்பாடு இருநாடுகளுக்கிடையே சமமாக இருந்தால், இதில் வித்தியாசங்கள் சமமாக இருக்கும்; ஏறத்தாழ்வுகள் தெளிவாகத் தெரியாது. மூன்ருவது ஏற்றத் தாழ்வுகள் மலிந்துள்ள நிலை. இம்மூன்றில், முதலாவதும் மூன்ருவதுமுள்ள நிலைமையில் இரு நாடுகளிடையே வர்த்தகம் சாத்தியமாகும். இரண்டாவது நிலைமையில் சாத்தியமல்ல. இந்த வித்தியாசங்களை உதாரணத்தின் வாயிலாக விளக்கி வைக்கலாம்.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| தேசம் | பொருள்கள் | நிச்சயமான விலை வித்தியாசமுள்ள நிலை. | சமமான விலை வித்தியாசமுள்ள நிலை. | விலை வித்தியாசத்தில் ஒப்புமை மேம்பாடு உள்ள நிலை. |
| இந்தியா | பருத்தி | ரூ. 5 | ரூ. 5 | ரூ. 7 |
| இந்தியா | சக்கரை | ரூ. 10 | ரூ, 10 | ரூ. 14 |
| க்யூபா | பருத்தி | ரூ. 10 | ரூ. 4 | ரூ. 5 |
| க்யூபா | சக்கரை | ரூ. 5 | ரூ. 8 | ரூ. 7 |

மேலே கொடுத்துள்ள அட்டவணையில் மூன்றுவது பத்தியிலுள்ள விலைகளைக் கவனிக்கவும். இங்கே பருத்தி உற்பத்தி செய்வதில் இந்தியாவுக்கும் சர்க்கரை உற்பத்தி செய்வதில் க்யூபாவிற்கும் நிச்சயமாக உற்பத்தி விலை மேம்பாடு இருக்கிறது. இதில் சந்தேகமில்லை. ஆகவே, பருத்தி உற்பத்தி செய்வதில் இந்தியாவும், சர்க்கரை உற்பத்தி செய்வதில் கியூராவும் அதிக கவனம் செலுத்தி, அவற்றில் தனித்தன்மை அடைவதுதான் நல்லது. வர்த்தகத்திலும் இந்தியா தன்னிடமுள்ள உபரிப் பருத்தியைக் கியூபாவுக்கு அனுப்பி அந்த நாட்டிலிருந்து சர்க்கரையைத் தருவித்துக் கொண்டால் இரு நாடுகளுக்கும் லாபகரமாக இருக்கும்.

சமமான விலை வித்தியாசமுள்ள நிலைக்கு நான்காவது பத்தியிலுள்ள விவரங்களைப் பார்க்கவும். இங்கே இருநாடுகளிக்கிடையே வர்த்தகம் லாபகரமாக இருக்காது. ஏனெனில் இருநாடுகளிலும் இரண்டு பொருள்களுக்குமுள்ள உற்பத்தி விலை ஒரே விகிதத்தில் இருக்கிறது. இந்தியாவில் உற்பத்திவிலை விகிதம் பருத்தியைவிடச் சர்க்கரைக்கு இருமடங்காக இருக்கிறது; (1 ; 2). அதேபோல் கியூபாவிலும் பருத்தியைவிடச் சர்க்கரை இருமடங்கு

அடக்கவிலை என்ற விகிதத்தில் இருக்கிறது (1 : 2 விகிதம்) ஆகவே இவ்வாறு இருக்கும் நிலையில் இந்த இருநாடுகளும் இந்த இரண்டு பொருள்களில் எதையும் ஏற்றுமதியோ இறக்குமதியோ செய்தால் லாபகரமாக இருக்காது.

ஐந்தாம் பத்தியிலுள்ள விவரத்தைப் பார்த்தால், விலை வித்தியாசத்தில் ஒப்புமை மேம்பாடு இருப்பதால் இந்த நிலையில் வர்த்தகம் நடப்பது சாத்தியமே. லாபகரமாகவும் இருக்கும். இங்கே பருத்திக்கும் சர்க்கரைக்கும் 1 : 2 விகிதத்தில் விலைகள் இந்தியாவில் இருக்கின்றன. (7:14). இது கியூபாவில் 1:1½ என்ற விகிதத்தில் இருக்கின்றது. (ரூ 5:7) இந்த வித்தியாசம் காணப்படும் நிலைமையில் பருத்தி உற்பத்தி செய்வதில் இந்தியா அதிக கவனமும், சர்க்கரை உற்பத்தியில் க்யூபா. அதிக கவனமும் செலுத்த வேண்டும்.

மேலே விளக்கியது தத்துவமுறையில் அயல்நாட்டு வர்த்தகம் இயங்கும் நிலை. ஆனால் நடைமுறையில் இவ்வாறு காணப்படுவதில்லை. ஒவ்வொரு நாட்டிலும் எந்தெந்தப் பொருள்களை உற்பத்தி செய்வது சர்வதேச வர்த்தக ரீதியில் லாபகரமாக இருக்கும் என்பதை இந்த அடிப்படைத் தத்துவம் விளக்கிவைத்தாலும், மேம்பாடு இல்லாதபோதிலும் பல பொருள்களின் உற்பத்தியை மேற்கொள்ளும்படி ஒவ்வொரு நாட்டையும் தூண்டக்கூடிய இதர காரணங்கள் நடைமுறையில் காணப்படுகின்றன. தேசீயப் பாதுகாப்பு, நாட்டின் உற்பத்தி விஸ்தரிப்பும் அதன் மூலம் உண்டாகும் வேலை வாய்ப்புகள், உள்நாட்டிலேயே கிடைக்கும் மூலப் பொருள்களை அதிகமாக உள்நாட்டிலேயே தொழில்களில் உபயோகப்படுத்த வேண்டும் என்ற ஆர்வம், —இம்மாதிரி காரணங்கள் ஒவ்வொரு நாட்டிலும் முதன்மை இடம் பெற்று, உற்பத்தி விலை அதிகமாக இருக்கும் பொருள்களையும், இறக்குமதி செய்வது லாபகரமாக இருக்கும் பொருள்களையும் உள் நாட்டிலேயே உற்பத்தி செய்கிறார்கள்.

தற்காலம் காணும் உலகத்தின் அமைப்பு பல்வேறு சக்திகளின் இறுக்கத்தினுல் உருவாகியுள்ளது. ஒரு காலத்தில் இங்கிலாந்து மட்டுமே தொழில் வளம் மிகுந்து முன்னேறிய நாடு, மற்ற உலக நாடுகள் எல்லாம் (இந்தியா உள்பட) குடியேற்ற நாடுகள் என்ற கருத்து வேரூன்றியிருந்து, இந்த அடிப்படையிலேயே உலக நாடுகளிடையே வர்த்தகமும் நடைபெற்று வந்தது. அந்தக் காலத்தில் குடியேற்ற நாடுகளெல்லாம் மூலப் பொருள்களையும் விவசாய உற்பத்திப் பண்டங்களையும் ஏராளமாக ஏற்றுமதிசெய்து ஆலைப் பொருள்களை இறக்குமதி செய்துவந்தன. குடியேற்ற முறை என்ற கொள்கைப் பலத்தினுல், அரசியல் பிணைப்புகள் முக்கியத்துவம்பெற்று குடியேற்ற நாடுகளிலேயே மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் தாய் நாடான ஆளும் தேசத்துக்குச் சாதகமாகவே அமைந்திருந்தன. இதனுல்தான் இந்தியாவில் பஞ்சாலைகளையும், கரும்பு எஃகுத் தொழில்களையும் பெருவாரியாக விரிவடையச் செய்ய வாய்ப்புகள் இருந்தும், பல ஆண்டுகளுக்கு அவை வளரவொட்டாமலே செய்யப்பட்டன. ஒவ்வொரு நாட்டின் அரசியல் அந்தஸ்தும், அதன் அரசியல் லட்சியங்களும், கொள்கைகளும், பொருளாதாரத் துறையிலும் இதரத் துறைகளிலும் அதன் ஆர்வங்களும், அந்நாட்டின் சர்வதேச வர்த்தகத்தையும், அயல்நாட்டு வர்த்தகக் கோட்பாடுகளையும் அதிகமாக இயக்குகின்றன. இதன் விளைவாகப் பொருளாதார ரீதியில் பொருளாதாரத் தத்துவ அடிப்படையில் மட்டுமே அயல்நாட்டு வர்த்தகம் நடைபெருமல் அரசியல், பாதுகாப்பு முதலிய காரணங்களால் பெருமளவில் இவை மாறுபட்டு இயங்குகின்றன.

### வர்த்தகக் கணக்கும் அங்கியச் செலாவணிக் கணக்கும்

அயல்நாட்டு வர்த்தக சம்பந்தமான விவாதங்களில் வர்த்தகக் கணக்கில் ஏற்படும் மிச்சம், கொடுக்கல் வாங்கல்

கணக்கில் ஏற்படும் மிச்சம் என்று தனித்தனியாக அடிக கடி குறிப்பிட்டுப் பேசப்படும். உதாரணமாக 1956 ஆண் டிலிருந்து அந்நிய நாட்டுக் கொடுக்கல் வாங்கல் நிலைமையில் நெருக்கடி ஏற்பட்டுவிட்டது, அந்நியச் செலாவணி நெருக் கடி, என்றெல்லாம் நாம் கேள்விப்பட்டு வருகிறோம். இந்த இரண்டு சொற்றொடர்களின் பொருளையும் முக்கியத்து வத்தையும் இப்போது கவனிக்கலாம்.

## வர்த்தகக் கணக்கில் மிச்சம்

வர்த்தகக் கணக்கில் மிச்சம் என்பது ஒரு நாட்டின் ஏற்றுமதியான மொத்த பொருள்களின் மதிப்புக்கும் இறக்கு மதியான மொத்தப்பொருள்களின் மதிப்புக்கு முள்ள வித்தியாசம். இக்கணக்கில் தங்கக் கட்டிகளின் ஏற்றுமதி யும் இறக்குமதியும், மற்றப் பொருள்களைப் போலவே, சேர்த்துக்கொள்ளப்படும். ஸ்தூலமாக ஏற்றுமதி இறக்கு மதியாகும் பொருள்களின் மதிப்பு மட்டுமே இந்தக் கணக் கில் எடுக்கப்படுகிறது. இவைகளைப் பார்வைக்குள் அகப் பட்ட (Vissible) இனங்கள் என்பார்கள். ஏனென்றால், இவ்வினங்களை ஏற்றுமதி செய்யும்போதும் இறக்குமதி செய்யும்போதும் அதனதன் உருவில் கண்கூடாகக் காண முடியும். இவற்றைத் தவிர பார்வைக்குள் அகப்படாத (Invisible) ஏற்றுமதி இறக்குமதி இனங்களும் உண்டு. இவ்வினங்களுக்காகவும் பணம் செலுத்தவோ அல்லது பெறவோ வேண்டும். உதாரணமாக, கப்பல் கட்டணங் கள், இன்ஷியூரன்ஸ் பாதுகாப்புகள், அயல்நாட்டுப் பிரயாணங்கள், மற்றும் இவை போன்ற இனங்கள் ஒரு நாட்டு வர்த்தகக் கணக்குப் புள்ளி விவரங்களில் அகப் படா. இவ்வினங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, மொத்தத்தில் வரவேண்டிய தொகையிலோ கொடுக்க வேண்டிய தொகையிலோ எவ்வளவு வித்தியாசம் காண் கிறதோ அதற்குக் கொடுக்கல் வாங்கல் கணக்கின்

மிச்சம் என்று பெயர். பார்வைக்குட்பட்ட இனங்கள், பார்வையில் அகப்படாத இனங்கள் இரண்டும் சேர்ந்து கணக்கெடுக்கப்பட்ட மிச்சமே இது.

வர்த்தகக் கணக்கின் மிச்சத்தை மட்டும் விவரிக்கும் போது நாட்டிற்குச் சாதகமான வர்த்தக நிலை என்றும் பாதகமான வர்த்தக நிலை என்றும் விவரணம் செய்வது உண்டு. குறிப்பிட்ட காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு இறக்குமதி செய்யப்பட்ட மொத்த மதிப்புக்கு அதிகமாக இருந்தால், அந்த நிலைமை யைச் சாதகமான நிலை என்பார்கள். ஏனெனில் இந்தக் கணக்கைத் தீர்க்க அயல்நாட்டிலிருந்து தங்கமும் அந்நியச் செலாவணியும் நாட்டில் வந்து சேரும். இறக்குமதியாகும் பொருள்களின் மொத்த மதிப்பு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் மொத்த மதிப்புக்கு அதிகமாக இருந் தால் அந்த நிலைமையை நாட்டிற்குப் பாதகமான வர்த்தக நிலை என்பார்கள். எந்த நாடுநிரந்தரமாக ஏற்றுமதியே செய்து கொண்டிருக்கிறதோ அந்த நாடு செல்வம் கொழிக்கும் நாடாக விளங்கும் என்று ஒருகாலத்தில் கருதப்பட்டது. ஏனெனில் வெளி நாடுகளிலிருந்து தங்கம் உள்நாட்டை நோக்கி வந்த வண்ணம் இருக்குமல்ல வா? ஆனால் இந்தக் கருத்து இப்போதெல்லாம கைவிடப் பட்டு, ஏற்றுமதியும் இறக்குமதியும் ஒன்றுக்கொன்று ஒரு கால அளவில் சமமாக இருப்பதே நல்லது என்ற எண்ணம் எல்லா நாடுகளிடையேயும் பரவலாக இருக் கிறது. ஏனெனில் தொடர்ந்து பாதகமான வர்த்தக நிலை ஒரு நாட்டிற்கு ஏற்பட்டால், அந்நியச் செலாவணிப் பிரச்னை ஏற்பட்டு அந்நியக் கடன் உயர்ந்து கொண்டே போகும். ஆகையால் அத்தகைய பாதக நிலையை, ஏற்று மதியை அதிகரிப்பதன் மூலமோ, இறக்கு மதியைக் குறைத்துக் கொள்ளுவதன் மூலமோ, மாற்றுவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்காமல்போனால், அயல்நாட்டுக்

கடனைக் கொடுக்க முடியாமல் போய்விடும்.உலக அரங்கில் அத்தகைய நாட்டின் கௌரவமும் நாணயமும் குறைவ துடன், அந்நாட்டின் நாணயச் செலாவணியின் மதிப்பும் குறைய ஆரம்பிக்கும்.

அயல்நாட்டுச் சம்பந்தமான பேரங்களின் நிலைமையை எளிய முறையில் விளக்கிச் சொல்லிவிடலாம். அயல் நாட்டிலிருந்து ஒரு பொருளை வாங்கும்போது, அதன் மதிப்பை அயல்நாட்டு நாணயத்தில் செலுத்தவேண்டும்; அதேபோல, நாம் ஒரு பொருளை அயல்நாட்டுச் சந்தைகளில் விற்ருல், அந்த நாட்டு நாணயம் நமக்குக் கிடைக்கிறது. நாம் அயல்நாட்டிலிருந்து வாங்கும் பொருள்களுக்காகவும், அயல்நாடுகள் நமக்குப் புரிந்துள்ள சேவைகளுக்காகவும், இந்தியப் பிரஜைகள் அயல்நாடுகளில் பிரயாணம் செய்யும் போது ஏற்படும் செலவுகளுக்காகவும், நாம் அயல்நாட்டின ருக்கு அந்நியச் செலாவணி கொடுக்கவேண்டும். அதே போல், நாம் ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்காகவும். நாம் அயல்நாட்டினருக்குப் புரியும் சேவைகளுக்காகவும், அயல்நாட்டினர் நமது நாட்டில் பிரயாணம் செய்யும்போது ஏற்படும் செலவுகளுக்காகவும், நமக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. இவ்விரண்டு தொகைகளும் ஏறக்குறையசரிக் கட்டிக் கொள்ளவேண்டும் என்பது தற்காலத்தில் நிலவும் கருத்து. இதிலிருந்து நாம் இறக்குமதி செய்யும் சாமர்த் தியமும் வாய்ப்புகளும், நமது ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணி சம்பாதிக்கும் சாமர்த்தியத்தையும் வாய்ப்பை யும் அனுசரித்துத்தான் இருக்கும் என்பது விளங்கும், அந்நியக் கடன்களையும் சேர்த்து நமது மொத்த சம்பாத் தியம் நமது மொத்தச் செலவுகளுக்கு அதிகமாக இருந்தால், அந்த நிலையை நாட்டுக்குச் சாதகமான கையிருப்பு நிலை என்கிறோம். இந்தக் கையிருப்புத்தான் நமது தேசத்தில் வெளிநாட்டுச் சொத்து என்று அரசாங்கக் கணக்கில்

காட்டப்படுகிறது. சென்ற உலக மகாயுத்தத்தின்போது நமக்கு இம்மாதிரி வெளிநாட்டுச் சொத்துப் பெருவாரியாக இருந்தது. இதுதான் நமது "ஸ்டெர்லிங் சொத்து" என்று இந்தியாவின் கணக்கில் லண்டனில் உள்ள ரிசர்வ் பாங்கிக் கிளை ஆபீசில் வைக்கப்பட்டிருந்தது.

### வரவு செலவுச் சரிக்கட்டுதல்

அயல்நாட்டு வரவு செலவுக் கணக்கு மிச்சத்தை ஆங்கிலத்தில் வரவும் செலவும் சரிக்கட்டிக்கொள்ளும்படிப் பார்த்துக்கொள்ளுதல் - **(Balance of Payments)** என்று பொருள்படும்படி விவரிப்பார்கள். இதிலிருந்து வரவு செலவு இரண்டையும் சமன் செய்து கொள்ளவேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் அளித்திருப்பது புலனாகும். இல்லாவிடில், நிலைமையில் ஏற்றத்தாழ்வு ஏற்படும். புலப்படும் இனங்கள் புலப்படாத இனங்கள் இருவகையிலும் நாட்டின் கணக்கில்வரவு அதிகமாக இருந்து அதேபோல் இவ்விரு இனங்களிலும் பற்றுக்குறையாக இருந்தால், நாட்டிற்கு அயல்நாட்டுச் செலாவணி கிடைக்கிறது. இது அயல்நாட்டு வரவு செலவுக் கணக்கில் மூலதனம் 'நிகர வரவு' என்ற தலைப்பின்கீழ் காட்டப்படும். மாறாக, வரவுத் தொகைக் குறைவாகவும், கொடுக்கவேண்டிய தொகை அதிகமாகவும் இருந்தால், ஏற்கனவே சேமித்துவைத்திருந்த அந்நியச்செலாவணி கையிருப்பிலிருந்து வாபசு பெற்றுப் பாக்கியைச் செலுத்தவேண்டும், சேமித்து வைத்த கையிருப்பு முற்றிலும் இல்லாமலோ, அல்லது போதுமானதாக இல்லாமலோ இருப்பின், அந்நியச் செலாவணியைக் கடன் வாங்கி இந்தப் பாக்கியை அடைக்கவேண்டும். இந்தத் தொகையும் அயல் நாட்டு வரவு செலவுக் கணக்கில் "மூலதனம்—செலவு" என்ற தலைப்பின் கீழ் காட்டப்படும். இவ்வாறாக, இந்த அயல் நாட்டு வரவு—செலவுக் கணக்கில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று நடை முறை அல்லது வர்த்தகப்

பகுதி; மற்ருென்று மூலதனப்பகுதி. நடை முறை வர்த்தப் பகுதியில் வர்த்தகத்தின் போக்கை அனுசரித்து நிகர வரவோ, அல்லது பற்ருே இருக்கும். இந்த வர்த்தகப் பகுதியில் காணப்படும் நிகர மிச்சம் எவ்வாறு தீர்க்கப் பட்டது என்பதை மூலதனப் பகுதிகாட்டும்.

ஒரு நாட்டின் அந்நியச் செலாவணி வரவு—செலவுக் கணக்கில் ஏற்றத் தாழ்வின்றி சம நிலையிலிருக்குமே யானுல்—அதாவது மொத்த வரவுக்கும் மொத்த செலவுக் கும் சரிக்கட்டிக் கொண்டு, அயல் நாட்டுச் செலாவணிக் கையிருப்பிலிருந்து கூட்டவோ குறைக்கவோ செய்யாம லிருக்கும் நிலைமை இருக்குமேயானுல்—அந்த நாடு சீரானப் பொருளாதார நிலைமையிலிருக்கிற தென்பதற்கு அறிகுறி. ஆனுல் நடைமுறையில் இம்மாதிரி சம நிலை காண்பது அரிது. சாதாரணமாக பல நாடுகளின் நிலைமை, முக்கிய மாகப் பொருளாதாரத் துரையில் பின் தங்கிய நாடுகளின் நிலைமை, பாதகமாகவே இருக்கும். அதாவது, வர வேண்டிய அந்நியச் செலாவணித் தொகையை விடக் கொடுக்கவேண்டிய தொகை தான் அதிகமாக இருக்கும். இம்மாதிரி பாதகமான நிலைமை பல்வேறு வகைகளில் உண் டாகிவிடும். உதாரணமாக, தொழில் துறையில் சுறு சுறுப்புடன் முன்னேறிக் கொண்டிருக்கும் நாட்டிற்கு அயல் நாடுகளிலிருந்து யந்திர சாமான்கள் பெருவாரியாக இறக்குமதி செய்யவேண்டி யிருக்கும். அவைகளுக்கு உட னடியாக அந்நியச் செலாவணி கொடுத்து சமாளிக்க முடி யாமல் போகலாம். ஏற்றுமதியினுல் கிடைக்கும் அன்னியச் செலாவணி மிகவும் குறைவாக இருக்கலாம். இந்தியாவின் தற்போதிய நிலைமை இத்தன்மையதே.

இவ்வாறு அந்நியச் செலாவணி வரவு செலவுக் கணக் கில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டால் அந்த நிலைமையைச் சமாளிக்க ஒவ்வொரு நாடும் சில முறைகளை மேற்கொள்ளு

கிறது. ஆனல் நடவடிக்கை எதுவாக இருந்தாலும் லட்சியம் ஒன்றே—அந்நியச் செலாவணிச் சம்பாத்யத்தை அதிகரிப்பது. இதை எப்படிச் செய்வது? நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்தை விஸ்தரிக்கவும் ஊக்குவிக்கவும் பல முறைகளை மேற் கொள்ளலாம். ஏற்றுமதிசெய்யப்படும்பொருள்களுக்கு அரசாங்கம் மானியங்கள் வழங்கியும், அப்பொருள்களின் விலையைக் குறைத்தும், வர்த்தகத்தை ஊக்குவிக்கலாம். இறக்குமதியையும் லைசென்சுகள் மூலமும், இறக்குமதிச் சுங்க விகிதங்களை மிகவும் உயர்ந்த அளவுக்கு உயர்த்துவதன் மூலமும், இறக்குமதியைக் கட்டுப்படுத்தலாம். மேலும் அந்நியச் செலாவணி நெருக்கடியைச் சமாளிக்கவேண்டிய நிலைமையிலிருக்கும் ஒரு நாடு அதன் பிரஜைகளின் அந்நியச் செலாவணிப் பேரங்களைக் கண் காணிப்புடன் பார்த்துக் கொள்ளுவதும் சகஜமே. அவைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும். ஏற்றுமதி செய்வதனல் கிடைக்கும் அந்நியச் செலாவணித் தொகை முழுவதையும் அரசாங்கம் தனது மேற் பார்வையில் கணக்கு வைத்துக்கொண்டு, அதிலிருந்து செலவு செய்யவேண்டிய இனங்களை நாட்டின் நலனை உத்தேசித்து மிக ஜாக்கிரதையாக கவனித்து அத்தியாவசியமான செலவுகளை மட்டுமே அனுமதிக்கும். நாட்டின் நாணயத்தின் மதிப்பைக் குறைப்பதன் மூலம் இந்த மாதிரி நிலைமையைச் சமாளிப்பதும் சில நாடுகள் கையாளும் முறை. நாணய மதிப்பைக் குறைப்பது என்பது அந்நிய நாட்டு நாணயங்களுடன் உள் நாட்டு நாணயங்கள் மாற்றிக் கொள்ளும் விகிதத்தில் மாறுபாடுகளைச் சட்ட மூலம் ஏற்படுத்துவது, இது எல்லா அயல் நாட்டு நாணயங்களின் மாற்று விகிதங்களுக்கும் பொருந்தும்படியும் இருக்கலாம். அல்லது குறிப்பிட்ட சில நாணயங்களின் விகிதங்களுக்கு மட்டும் இருக்கலாம். இந்தியா இந்த முறையை 1948-ம் ஆண்டியில் மேற்கொண்டது. அமெரிக்க டாலருடன் ரூபா

யின் நாணய மாற்று விகிதத்தை மாற்றிக் கொண்டு விட்டது; ஆனல் ரூபாய்க்கும் ஆங்கிலேயே ஸ்டெர்லிங் பவுண்டுக்கும் உள்ள விகிதம் மாறவில்லை.

## அங்கியச் செலாவணி மாற்றம்

மேலே சொன்னதிலிருந்து ஒரு நாட்டின் நாணயமும் அயல் நாட்டு நாணயமும் எந்த விகிதத்தில் மாற்றிக் கொள்ளப்படுகின்றன, இந்த விகிதங்கள் எவ்வாறு நிர்ணயிக்கப் படுகின்றன என்பது போன்ற கேள்விகள் எழுகின்றன.

தினசரி பத்திரிகையின் வர்த்தகப் பகுதியைப் புரட்டிப் பார்த்தால் பல்வேறு நாடுகளின் நாணயங்களுடன் உள் நாட்டு நாணயம் எந்த விகிதத்தில் மாற்றப்படுகிறது என்றபட்டியல் கொடுக்கப்பட்டிருப்பதைக்காணலாம். இந்த விகிதங்கள் அப்போதைக்கப்போது உள்ள வர்த்தக நிலைமையை அனுசரித்து மாறிக் கொண்டிருக்கும். ஆனல் மாறுதல்கள் மிகக்குறைந்த அளவில்தானிருக்கும். மற்றஎல்லா விலைகளையும் போலவே, நாணயத்தின் விலையும், அதனதன் சப்ளை—கிராக்கி நிலைமைக்குத் தக்கவாறு மாறுபடும். கிராக்கியையும் சப்ளையையும் இயக்கும் எந்த மாறுதலும், நாணயங்களின் மதிப்பிலும் மாறுதலை உண்டாக்கும். ஆனல் அங்நிய நாட்டு நாணய விகிதங்களை நிர்ணயிப்பதில் அதிகப்படியாக ஒரு முக்கியவிதி உண்டு. அதுதான் அந்தந்த நாணயங்களுக்கு அந்தந்த நாடுகளில் பண்டங்களை வாங்கும் சக்தி; அல்லது அந்தந்த நாட்டின் விலைவாசிகளின் நிலைமை. இரு நாட்டு நாணயங்களுக்கு முள்ள மாற்று விகிதம் அந்தந்த நாணயங்களுக்கு அந்தந்த நாடுகளில் பண்டங்களை வாங்கும் சக்தி எந்த விகிதத்திலிருக்கிறதோ அதேவிகிதத்தில் நாணய மாற்று விகிதமும் இருக்கும். உதாரணமாக, ஒரு டாலருக்கு அமெரிக்காவில் ஒரு கெஜம் துணி வாங்கி அதே மாதிரி துணிக்கு இந்தியாவில் ஒரு கெஜத்துக்கு ஐந்து ரூபாய் கொடுக்கவேண்டியிருந்தால், இரு நாணயங்களுக்கு முள்ள

நாணயவிகிதம் ஒரு டாலருக்கு ஐந்துரூபாய் என்று கிடைக் கிறது. டாலரும் ரூபாயும்ஒன்றுக்கு ஐந்து என்றவிகிதத்தில் மாற்றிக் கொள்ளப்படும். இதனுடைய பொருள் என்ன வென்ருல், நாம் நமது நாணயத்தை அமெரிக்க டாலர்களாக மாற்றும் போது, உண்மையில் அயல் நாட்டில் பொருள் களை வாங்கும் சக்தியைத்தான் பெறுகிருேம். உள் நாட்டில் பண்டங்களை வாங்கும் சக்தியைக் கொடுத்து அயல் நாட் டில் பொருள்களை வாங்கும் சக்தியைப் பெறுகிருேம். குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய ஒரு பொருளுக்கு அதிக விலை கொடுத்து எப்படி ஒருவரும் வாங்கமட்டாரோ அதே போல உள் நாட்டு நாணயத்தை வெளி நாட்டு நாணயத்துக்கு மாற்றிக் கொள்ளும் போதும் எவ் வளவு குறைந்த உள் நாட்டு நாணயத்தை வழங்கி எவ்வளவு உயர்ந்த வெளி நாட்டு நாணயத்தை வாங்க முடியுமோ அப்படித்தான் ஒவ்வொரு நாடும் செய் யும். வேறு வழியில்லாமல் போனுல் மட்டுமே அவசியத் திற்கு அதிகமான விகிதத்தில் நாணயமாற்று நடைபெறும். இம்மாதிரி இரு நாணயங்களுக்கிடையே மாற்று விகி தத்தை நிர்ணயித்துக் கொள்ளும் முறைக்கு **'நாணயங் களின் வாங்கும் சக்தியின் சமத்துவக் கொள்கை' (Purchasing power Parity)** என்று பெயர்.

ஆனுல் நடை முறையில் மற்ற விஷயங்களில் காணப் படுவது போலவே, இந்தத் தத்துவமும் கட்டுப்பாடின்றி செயலாற்றுவதில்லை. சுங்க வரி விகிதங்கள், ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப் பாடுகள், அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள்; அயல் நாட்டு மூலதன வருகையிலும், செல்கையிலும் கட்டுப்பாடுகள்—இவ்வாறு பல நிர்ப்பந் தங்கள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு அளவில் அமுலி லிருக்கின்றன. இவையனைத்தும், மேற்படி வாங்கும் சக்தி சமத்வக் கொள்கையைப் பயனற்றதாகவே செய்து விட்டன.

அத்தியாயம் 12

# அரசாங்க நிதி விஷயம்

அர்த்தசாஸ்திரம் எழுதிய கௌடில்யர் காலத்திலிருந்து நாட்டு மக்களின் சுகவாழ்வுக்கு நல்ல, திறமையுள்ள அரசாங்கம் இன்றியமையாதது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அயல்நாடுகளிலிருந்து ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புகளிலிருந்து நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பதற்கும், உள்நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும், மக்கள் வாழ்க்கைக்கும், நலனுக்கும் அவசியமான பொது ரஸ்தாக்கள், நீர்ப்பாசன வசதிகள், சுகாதாரம், முதலிய சேவைகளைச் செய்து கொடுக்கவும் நல்ல அரசாங்கம் இருக்கவேண்டும். இச்சேவைகளையெல்லாம் பொதுஜனங்களின் பொது நலனுக்காக வழங்குவதால் மக்களுக்குப் பொதுவாக இருக்கும் அரசாங்கத்தால் மட்டுமே இவைகளை மேற்கொள்ள முடியும். பாதுகாப்பிற்காகச் சைனியத்தை ஏற்படுத்திப் பராமரிக்கவும், நிர்வாகத்திற்குச் சர்க்கார் சிப்பந்திகளை நியமித்து நடத்தவும், பொது சேவைகளை மக்களுக்குச் செய்துகொடுக்கவும், அரசாங்கம் ஏராளமாகச் செலவு செய்ய வேண்டும். இதற்காக வருமானம் வேண்டும். இவ்வருமானத்தை அரசாங்கம் பல்வேறு வகைகளிலிருந்து அடைகிறது. வரி முறைகள்தான் சர்க்கார் வருமானத்து ஆதாரம். கௌடில்யர் தமது நூலில் பல்வேறு வரிமுறைகளைப் பற்றி விவரித்துச் சொல்லியிருக்கிறார். விற்பனைவரி என்று இப்போது நமக்குச் சாதாரணமாகப் பழகிப்போன வரியைப் பற்றிக்கூட கௌடில்யர் அந்தக் காலத்திலேயே சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் குறிப்பிட்டிருக்கிறார். அவருக்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் தோன்றிய காளிதாச கவி அரசனை சூரியனுக்குச் சமமாக உவமை கூறுகிறார். எப்படி சூரியன் தனது வெப்

பத்தால் பல நீர்நிலைகளிலிருந்து தண்ணீரை ஆவியாக ஈர்த்துக் கொண்டு பின்னர் அதையே மழையாகப் பெய்து மக்களின் சுபிட்சத்திற்கு வகை செய்கிறானோ, அப்படியே அரசனும் மக்களிடமிருந்து சிறுகச் சிறுகப் பணத்தை வரிகள் மூலம் திரட்டி அவர்களுக்குப் பன்மடங்கு அதிகமாக நன்மை தரும்படி அதைச் செலவிடுகிறான் என்கிறார் காளிதாசன்.

அந்தப் பண்டைக் காலத்திலிருந்து உலகம் வெகுதூரம் முன்னேறிவிட்டது. கடந்த நூறு ஆண்டுகளுக்குள் அரசாங்கத்தின் பொறுப்புக்களும் தொழில்களும் ஒவ்வொரு நாட்டிலும் மிகவும் விரிவடைந்துவிட்டன. இதற்குத்தக்கவாறு மக்களுடைய பொருளாதார வாழ்க்கையில் அரசாங்கத்தின் தலையீடும் விரிவடைந்து விட்டது. உலகத்தின் பல நாடுகளில் மக்களுடைய தேசிய வருமானத்தில் ஏறக்குறைய நாலில் ஒரு பாகத்தை அரசாங்கமே நிர்வாகத்திற்காக வசூலித்து வருகிறது. அவற்றையெல்லாம் மக்கள் நலனுக்காகப் பல்வேறு சேவைகளுக்குச் செலவழித்துவிடுகிறது. அரசாங்கம் எப்படி அதன் தேவைக்காக நிதியைத் திரட்டுகிறது, அதை எவ்வாறு செலவிடுகிறது என்பதும் பொருளியல் நூல்களில் விவரிக்கப்படும் ஒரு முக்கியமான பகுதி. ஏனெனில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் தன்மையும், அளவும் நாட்டின் பொருளாதார வாழ்க்கையைப் பெருமளவில் பாதிக்கின்றன. இதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

## தனி மனிதன் நிதிவிவகாரமும் அரசாங்கத்தின் நிதி விவகாரமும்

தனிமனிதன் தன்னுடைய நிதிவிவகாரங்களை நடத்துவதற்கும் அரசாங்கம் தனது நிதிவிவகாரங்களை நடத்துவதற்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன என்பது சுலபவாகவே

புலனாகும். தனி மனிதன் விஷயத்தில் ஒருவனுடைய செலவுகள் அனைத்தும் அவனுடைய வருமானத்தினால் கட்டுப்படுத்தப் படுகிறது. அதாவது, ஒவ்வொருவனும், தனிப்பட்டவனானாலும், கம்பெனிகள்போன்ற ஸ்தாபனங்களானாலும், எந்தச் செலவையும் மேற்கொள்ளுவதற்கு முன் அதற்கு வேண்டிய பணத்திற்கு வகைசெய்து கொள்ள வேண்டும். ஆனால் அரசாங்கத்தின் விஷயத்தில் இது மாறுபட்டு நிகழுகிறது. தாங்கள் செய்ய வேண்டிய செலவுகளைச் சர்க்கார் முதலில் நிச்சயம் செய்து கொள்ளுகின்றனர். அவர்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்றவும் கடமைகளைச் செய்யவும் தேவையான செலவினங்களையும் அளவுகளையும் முதலில் நிர்ணயம் செய்துகொண்டுப்பின்னர் அத்தேவைகளுக்கு எந்த வகைகளிலிருந்து நிதி திரட்டலாம் என்று ஆராயத் தொடங்குகிறார்கள். இரண்டாவதாக, தனிபட்டவர்கள் நிதி நடவடிக்கைகளில் அவரவர்களுடைய திருப்தி, சந்தோஷம், லாபம் முதலிய லட்சியங்கள்தான் பிரதானமாக விளங்கும். ஆனால் அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகள் எல்லாம் பொதுவாக மக்களின் பொதுநலனுக்காகவே இருக்கும். மக்களின் அவ்வப்போதுள்ள நன்மைகளைத் தவிர நீண்டகால நலனையும் அரசாங்கம் கவனித்தே ஆகவேண்டும். தனிப்பட்டவர்கள் விஷயத்தில் அப்போதைக் கப்போது ஏற்படும் நலன்கள் மட்டுமே முக்கியமாக இருக்கும். கல்விக்காகச் செலவு செய்யும்போதும் பெரிய இனங்களான ரெயில்வே அமைத்தல், அணைகள் கட்டுதல் போன்ற செலவுகளை மேற்கொள்ளும் போதும் பூங்காக்கள், விளையாடுமிடங்கள் போன்ற வசதிகளை அமைத்துக் கொடுக்கும்போதும் அரசாங்கம் சமூகத்தின் நீண்டகால நன்மைகளையும் கருத்தில் கொண்டே செயலாற்றுகிறது.

### அரசாங்கத்தின் வருமானம்

அரசாங்கத்துக்கு வருமானம் எங்கிருந்து கிடைக்கிறது? வரிகள் மூலம் கிடைக்கும் வருமானம் தான் எல்லாவற்றையும்விட முக்கியமான அம்சம் என்பது வெளிப்படை. பொதுச் சொத்துக்களாகிய காடுகள், ரெயில்வே ஸ்தாபனங்கள், போன்றவைகளைத் பல அரசாங்கங்கள் தாங்களே நேரடியாக நிர்வாகம் செய்து அவற்றினின்று கிடைக்கும் லாபத்தைப் பெறுகின்றன. மேலும், பஸ் போக்கு வரத்து, ரசாயன உர உற்பத்தித் தொழில், உர வினியோகம், தபால் தந்தி சாதனங்கள், தொழிற்சாலைகள் முதலிய தொழில்களைத் தாங்களேநடத்தி அதனல் கிடைக்கும் லாபத்தையும் அடைகின்றனர். நீதி மன்றங்களில் நீதி வழங்கச் செலுத்தப்படும் கட்டணங்கள், ரேடியோ வைத்திருப்பதற்குச் செலுத்தப்படும் கட்டணங்கள், மற்றும் இவைபோன்று பல்வேறு இதரவகைக் கட்டணங்களும்அரசாங்கத்துக்கு வருமானத்தை அளிக்கின்றன. அபராதங்கள் மூலமும் சர்க்காருக்கு வருமானம் கிடைக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, பொதுஜனங்களிட மிருந்து அரசாங்கம் கடன்களையும் அவ்வப்போது எழுப்புகின்றன. நவீனகால அரசாங்க நிதி நிர்வாகத்தில் இந்த இனம் அதிகமாக முக்கியத்வம் பெற்றுவருகிறது. மேலும் அரசாங்கங்களுக்கு மட்டுமே உள்ள மற்ருெரு அம்சம் நாணய நோட்டுகளை அச்சிட்டுத் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுதல். இந்த வசதியை அரசாங்கங்கள் எல்லாம் சாதாரணமாகவே வெகு ஜாக்கிரதையுடன், மிகவும் அவசியமான போது மட்டும் குறைந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன.

மேலே கொடுத்துள்ள அரசாங்க வருமான இனங்களின் ஜாபிதாவில் வரிமுறைகள்தான் மிகப் பழமையான காலங்களிலிருந்தே முக்கியமானவையாகக் கருதப்பட்டு

வந்துள்ளன. இப்போதும் இவைகள்தான் அரசாங்க வருமானத்திற்கு ஆதாரம். வரி என்பது ஒவ்வொரு பிரஜையும் அரசாங்கத்துக்கு அரசு நடைபெறுவதற்கும், பொது நன்மைகள் செய்யப்படுவதற்கும், கட்டாயமாகச் செலுத்தும் தொகை. இதிலிருந்து இரண்டு விஷயங்கள் புலனாகின்றன. வரி என்பது கட்டாயமாகச் செலுத்தப்படுவது; வரிமூலம் கொடுக்கும் பணத்துக்கும் அரசாங்கத்தினிடமிருந்து கிடைக்கும் நன்மைக்கும் நேரடியாகச்சம்பந்தமோ விகிதமோ கிடையாது. நேரடி சம்பந்தம் இல்லை என்பதற்காக வரிகளை கண்டபடி அரசாங்கம் விதித்துக்கொள்ளலாம் என்று அர்த்தமல்ல. பண்டைகாலத்திலிருந்தே வரிகள் எந்தத்தத்துவத்தின் அடிப்படையில் மக்கள்மீது விதிக்கப்பட வேண்டும் என்பதை நிர்ணயித்துவிளக்கிவைக்க பல்வேறுகாலங்களில் பலர் முயற்சி செய்திருக்கின்றனர். ஆதிகாலத்தில் விவசாய நிலங்கள்தான் அரசாங்கத்தின் வருமானத்துக்கு முக்கிய ஆதாரமாக இருந்தன. அப்போதெல்லாம் இந்தியாவில் அரசாங்கத்தின் பங்கு ஆறில் ஒன்று எனப் பொதுவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இது ராஜபாகம் என்று கூறப்பட்டு வந்தது.

## வரிமுறைகளின் தத்துவம்

சமீப காலங்களில் வரிமுறைகளின் அடிப்படைத் தத்துவங்களைக் கிரமம்படுத்தப் பல்வேறு முயற்சிகள் பொருளியல் நிபுணர்களால் மேல்நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரி கொடுக்கும் அளவு, அதாவது வரியின் தொகை ஒவ்வொரு பிரஜையின் சக்தியை அனுசரித்தே இருக்க வேண்டும் என்பது ஒரு சாராரின் கருத்து. உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தனி நபர்களும் அரசாங்க இலாகாக்களும், தொழில் ஸ்தாபனங்களும் தங்கள் ஊக்கமும் உற்சாகமும் குறையாமல் தொழில் நடத்தும்படியாக

வரி மூறைகள் எந்த அளவில் விதிக்கப்பட வேண்டுமோ அதைத்தான் வரி கொடுக்கும் சக்தி என்று சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. சமூகத்தினருக்கும் தனி மக்களுக்கும் இந்தப் பொது விதி பொருந்தும். ஆனால் இருசாரார்களிட மிருந்தும் வரி கொடுக்கும் சக்தியை அளவிட்டு நிர்ணயிப் பது எளிதல்ல. எனெனில் இந்தச்சக்தி ஸ்திரமானது அல்ல. நிச்சயமானதும் அல்ல. கால சூழ்நிலை, சந்தர்ப்பங்கள், பொருள் நிலை, நாட்டு நிலைமை முதலிய நிலைமைகளினால் அடிக்கடி மாறக்கூடியது. உதாரணமாக, யுத்த காலங்களில் தேச நலனையும் பாதுகாப்பையும் கருதி சாதாரண காலங் களில் அவர்களால் கொடுக்க முடியாத அளவு வரிகளைத் தயங்காமல் மக்கள் செலுத்தமுன் வருவார்கள். அவர் களுடைய வரி செலுத்தும் சக்தி அப்போதுள்ள காலநிலை யில் மிகவும் அதிகமாக இருக்கும். வரிச்சுமையைத் தாங்கும் சக்தியைப் பாதிக்கும் அல்லது இயக்கும் அம்சங்களில் சில வற்றை இங்கே எடுத்துக் கூறலாம்.

முதலாவது வரிகளின் தன்மை. சில வரிகள் மக்க ளுடைய கண்டனத்துக்கு அதிகமாக இலக்காகாது. இவைகளுக்கு எதிர்ப்புக் குறைவு. வேறு சில வரிகளுக்கு மக்களிடையே எதிர்ப்பு அதிகமாக இருக்கும். அரிசி மீது 50 சத விகிதம் வரி விதித்தால் மக்களிடமிருந்து எதிர்ப்பு மிகவும் வன்மையாக இருக்கும். ஆனால் புகையிலைமீது 100 சதவிகிதம் வரி விதித்தாலும், முன்னால் சொன்னதைப்போல அவ்வளவு அதிகமான கண்டனம் இருக்காது. இரண்டா வது, செலவு இனங்களின் தன்மை; அதாவது வசூலிக்கப் படும் வரிப்பணம் எப்படிச் செலவு செய்யப்படப்போகிற தென்பதைப் பொறுத்து மக்கள் அவ்வரியை முகம் சுளிக் காமல் செலுத்துவதும் இருக்கும். வரி முறைகளில் உயர்வி னால் கிடைக்கும் அதிக வருமானம் அரசாங்கத்தால் சமூ கத்திற்கு நலனைப் பெருக்கும் இனங்களிலும், நாட்டின்

உற்பத்தியை அதிகரிப்பதிலும் செலவழிக்கபபடும் என்று மக்கள் உணர்ந்தால், தங்கள் சக்திக்கு மீறியதாக இருந்தாலும் அதிகப்படி வரிச்சுமையைத் தாங்க முன்வருவார்கள்.

எந்த நாட்டிலும் வரிமுறைகளின் அமைப்பு சீராகவும் பயனுடையதாகவும் இருக்க வேண்டுமேயானுல் அவற்றின் மூலம் சர்க்காருக்குப் பெருவாரியாக வருமானம் கிடைத்தால்மட்டும் போதாது. சமூகத்தின் பொருளாதார வாழ்க்கையிலும் நடவடிக்கைகளிலும் பாதகமான விளைவுகளை உண்டாக்காமலும் இருக்க வேண்டுவது அவசயம். அப்படிப் பாதகரமான விளைவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லையென்ருல் அவ்விளைவுகள் எவ்வளவுக்குறைந்த அளவில் இருக்க முடியுமோ அந்த மட்டத்திலாவது வைத்துக்கொள்ளப்படவேண்டும். தவிரவும் சமூகத்தின் பல்வேறு பகுதிகளும், பல்வேறு பிரஜைகளும் செலுத்தும் வரிகளும் ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுப் பார்க்கும்போது வரிச்சுமை கூடிய வரையில் சமமாக இருக்க வேண்டுவதும் அவசியம். பல ஆண்டுகளுக்கு முன்னர் தற்காலப் பொருளியல் சாத்திரத்தின் தந்தை என்று மதிக்கப்படும் ஆதாம் ஸ்மித் **(Adam Smith)** என்பவர் வரி முறைகளைப் பற்றிய நான்கு தத்துவங்களை முதன் முதலாக வகைப்படுத்தி விளக்கினுர். பிற்காலங்களில், அந்தந்த நாட்டுச் சந்தர்ப்பங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு சிற்சில மாறுதல்கள் இவற்றில் ஆங்காங்கே செய்யப்பட்டாலும், அடிப்படை கொள்கைகளாக அவர் வகுத்த தத்துவங்கள் இன்றும் பிரதானமாக விளங்குகின்றன. அவர் வகைப்படுத்திய நான்கு தத்துவங்களாவன.

(1) சமத்வம், அல்லது சமத்துவ நியதி. அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் செலவுகளுக்காக அந்தந்த நாட்டு ஒவ்வொரு பிரஜையும் தன்னுடைய சக்திக்குத்தக்கபடி வரி கொடுக்க வேண்டும். எல்லாப் பிரஜை

களும் அரசாங்க நடவடிக்கைகளுக்குப் பணம் செலுத்துவ தால் பிரஜைகளுக்குள் சமத்துவம் இருக்கிறது. சமத்துவம் இருக்க வேண்டும் என்பதை இந்த நியதி வலியுறுத்துகிறது.

(2) *நிச்சயத் தன்மை, அல்லது நிச்சயத் தன்மை நியதி*, வரி கொடுப்பவர்களுக்குத் தாங்கள் நிகரமாகச் செலுத்த வேண்டிய வரித்தொகை எவ்வளவு என்பதைப் பற்றியும், எப்போது அதைச் செலுத்தவேண்டும் என்பது பற்றியும், எத்தன்மையான வரி என்பதைப் பற்றியும், நிர்ணயமான அறிவு இருக்க வேண்டும்.

(3) சௌகர்யம், அதாவது, வரிச் செலுத்தப்படும் காலமும், செலுத்தப்பட வேண்டிய முறையும் வரி செலுத்துவோரின் சௌகர்யத்தை அனுசரித்தே இருக்க வேண்டும் என்பது இந்த மூன்ருவது நியதியின் பொருள்

(4) சிக்கனம், அதாவது வரிகள் மூலம் வசூல் செய்யப்படும் பணத்தைக் காட்டிலும் அதை வசூலிப்பதற்காக பிடிக்கும் செலவு மிகவும் குறைவாக இருத்தல் அவசியம். செலவு மிகக் குறைவாக இருக்கும்படியான வழி முறைகளையே விதிக்க வேண்டும் என்பது இதனல் வற்புறுத்தப் படுகிறது.

இந்தத் தத்துவங்கள் எல்லாம் பொதுவாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் படுகின்றன. பிற்காலத்தில் அதிகப் படியாகச் சில இதர கருத்துகளும் மேலே கூறியவைகளுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நாட்டு நிதிநிர்வாக விஷயங்களில் ஆராய்ச்சி செய்து அனுபவப்பட்ட நவீன கால நிபுணர்கள், வரி முறைகளினின்று கிடைக்கும் வருமானம் மட்டுமே பிரதான அம்சமாக எந்த வரிவிதிப்பு அமைப்பிலும் இருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். ஒவ்வொரு வரியும் கணிசமான அளவு வருமானம் அளிக்க வேண்டும், இதர பாதகமான அம்சங்கள் ஏதேனும்

காணப்பட்டாலும், வருமானம் கிடைப்பதனுல், அவை முக்கியமானவைகளாகக் கருதப்படமாட்டா. மற்ெருரு கருத்து வரிகள் நெகிழ்ச்சித் தன்மை யுடையனவாக இருக்கவேண்டும் என்பது. நாட்டின் தேசிய வருமானமோ ஜன சங்கியையோ அதிகரிப்பதற்குத் தக்கவாறு வரிகளி னின்று கிடைக்கும் வருமானமும் அதிகரிக்குபடியாக வரி முறை அமையவேண்டும் என்பது இதன் கருத்து. நெருக்கடியான காலங்களிலும், அத்தியாவசியமான நிலைமைகளிலும் வரி விகிதங்களை உயர்த்துவதன் மூலமே அதிகப்படியான வருமானம் கிடைக்கக் கூடிய அவ்வளவு லாகவமான வரி முறை இருக்கவேண்டும் என்பதும் ஒரு நவீன கால கருத்து. மூன்ருவது, வரி முறை மிகவும் எளிமையாக இருத்தல் அவசியம். சிக்கல்மிகுந்து இருக்கக் கூடாது. அதாவது, வரி சம்பந்தப்பட்ட சட்டங்களையும் ஷரத்துக்களையும் நிபுணர்களின் உதவியில்லாமலே ஒவ்வொருவரும் படித்துப் புரிந்து கொள்ளும்படியாக இருத்தல் வேண்டும். ஆனுல் இந்தக் கருத்தை நடை முறையில் கையாளும் அரசாங்கங்கள் தற்காலத்தில் மிகச் சிலவே; அநேகமாகக் கையாளப்படுவதே இல்லை என்று கூடச் சொல்லி விடலாம். நவீன காலச் சட்டங்கள், முக்கியமாக, வருமான வரி விதிகள், வாரிசுச் சட்ட விதிகள், வியாபார லாப வரி விதிகள், விற்பனை வரிகள், எல்லாம் மிகவும் சிக்கலான சட்டங்கள். இவைகளைச் செயலாற்றுவதிலும் நிறைவேற்றி வைப்பதிலும் கோர்ட்டு நடவடிக்கைகளும் கேசுகளும் ஏராளமாகப் பெருகி விட்டன.

வரி வசூல் செய்வதில் சிக்கனம் இன்றியமையாதது என்பது மிகவும் முக்கியமான அம்சம் என்பதில் சந்தேகம் இருக்காது. வருமானத்தில் பெரும் பாகத்தை வசூல் செய்வதிலேயே செலவிட வேண்டுமானுல் அத்தகைய வரியை உபயோகமற்ற வரி என்றே கூறவேண்டும். பெரிய தொழில்களான ஜவுளி ஆலைகள், சர்க்கரை ஆலைகள். இரும்பு,

எஃகு ஆலேகள் போன்றவைகளில் உற்பத்திப் பொருள்கள் மீது விதிக்கப்படும் உற்பத்தி வரிகள் (Excise duties) வசூலிப்பதற்கு மிகவும் எளியவை. வருமானமோ மிகவும் கணிசமாகக் கிடைக்கும். வசூலிக்க ஆகும் செலவு மிகவும் குறைவு. செலவை மட்டிலும் கொண்டு பார்த்தால் இவ்வரி மிகவும் சிலாக்கியமானது என்று தோன்றுகிறது. ஆனுல் இம்மாதிரி வரிகளில் அந்தந்தத் தொழில்களும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களே வாங்கி உபயோகிக்கும் சாதாரண மக்களும் எவ்வாறு பாதிக்கப்படுகிருர்கள் என்பதை ஆழ்ந்து கவனிக்கவேண்டும். ஜவுளி ஆலேத் தொழிலே மந்த நிலைமை வாட்டும்போதும் உற்பத்தி செய்த துணிமணிகளே விற்பனேசெய்ய முடியாமல் தேங்கிப் போய் ஆலேகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போதும் உற்பத்தி வரி, குறைந்த விகிதமாயிருப்பினும் கூட தொழிலுக்கு மிகுந்த கஷ்டத்தையே உண்டு பண்ணும்.

## நேரடி வரிகளும் மறைமுக வரிகளும்

வரிகள் சாதாரணமாக இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படும்—நேரடி வரிகள் முதலாவது வகை; மறை முக வரிகள் இரண்டாவது வகை. யாரைக் குறித்து வரிகள் விதிக்கப்படுகின்றனவோ அவரையே பாதித்து, அவ்வரிச் சுமையை அவரே தாங்கும்படி அமைந்துள்ளவை நேரடி வரிகள். உதாரணமாக, வருமான வரிகள் வருமானத்தின் மீது விதிக்கப்படுவதால், வருமான முள்ளவர்கள் மட்டுமே, வரித் தொகை முழுவதையும் செலுத்தியாகவேண்டும். வருமானமில்லாதவர்கள் இவ்வரியைப் பற்றி எவ்வித கவலேயும் கொள்ளத் தேவையில்லே. ஆகையால் இது நேரடி வரி. பெரும்பாலும் சொத்துக்கள் மீதும் வருமானத்தின் மீதும் விதிக்கப்படும் வரி எல்லாம் நேரடி வரிகளே. இக்காலத்தில் சாதாரணமாக விதிக்கப்படும் நேர்முக வரிகள்

—வருமானவரி, உபரி வருமானவரி, செல்வ வரி, நன்கொடை வரி, செலவுவரி, சொத்து வரி, முதலியன.

நேர் முறை வரிகளில் பல அனுகூலங்கள் இருக்கின்றன. வரி செலுத்துபவர்களின் சக்திக்கு எற்றவாறு வரிகளை விதிக்கலாம். வரி விகிதங்களையும் மாற்றிக் கொள்ளலாம். விகிதங்களையும் ஒரே சமமாக வைத்துக் கொள்ளாமல் படிப்படியாக உயர்த்தி அமைத்துக் கொள்ளலாம். இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தை ஏறக்குறைய நிச்சயமாகவே முன் கூட்டி நிர்ணயித்து விடக்கூடும். வருமானம் நிச்சயமாக முன்னாலேயே தெரிந்துவிடக் கூடுமாதலால் போதாது என்று தோன்றும்போது வேண்டிய அளவிற்கு விகிதங்களை மாற்றிக் கொள்ளலாம். வரி வசூல் செய்ய ஆகும் செலவு மிகவும் குறைவு. மேலும், அரசாங்கம் செய்யும் செலவுகள் எப்படி இருக்கின்றன, வீண் செலவுகள் உள்ளனவா, இல்லையா என்றெல்லாம் அறிந்து கொள்ள ஆவலை மக்களிடையே நேரடி வரிகள் தூண்டிவிடும். வீண் விரயம் செய்யப்படுவதைக் கடுமையாகக் கண்டிப்பவர்கள் பெரும்பாலும் நேரடி வரி செலுத்துபவர்களாகவே இருப்பார்கள். தங்களுடைய வரிப்பணத்தினால் தான் சர்க்கார் நிர்வாகம் நடைபெறுகிறது என்ற உணர்ச்சியை வரி கொடுப்பவர்களிடையே நேர் முக வரிகள் உண்டாக்கும். ஆனால் மிகவும் குறைவான வருமானம் உள்ளவர்களிடமிருந்து வருமான வரி வசூல் செய்ய செலவு அதிகமாகவே ஆகும். அத்தகைய வகுப்பினர்மீது குறைந்த விகிதத்தில் வருமான வரி விதித்தாலும், அவர்களுக்குப் பெருஞ் சுமையாகவே இது தோன்றும். எனவே, தற்போதுள்ள அரசாங்கங்களுக்கு நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி யடையும் போதும், மக்களின் வருமானம் உயரும் போதும் நேர்முக வரிகள் முக்கியமாகவே விளங்குகின்றன.

சமூகத்தில் ஒரு சாரார் மீது மட்டுமே விதிக்கப்பட்டு அவர்களிடமிருந்தே வசூல் செய்யப்பட்டாலும், முடிவில் அத்தொகையை மற்ெருரு சாரார்களே ஏற்று அவற்றின் சுமையை மற்ெருரு சாரார்களே தாங்கும் தன்மையுள்ள வரிகளுக்கு மறைமுக வரிகள் என்று பெயர். இப்படிப்பட்ட மறைமுக வரிகள் சாதாரணமாகப் பண்டங்களின் மீது விதிக்கப்படும். உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் முதலியவர்களிடமிருந்து இவ்வரிகள் வசூலித்து விடப்படும். ஆனுல் இவ்வரியின் தொகையை அப்பொருள்களின் விலையில் கூட்டி,அவற்றை வாங்கி உபயோகிப்பவர்களுக்கு அவர்கள் மாற்றி விடுவார்கள். உதாரணமாக, புகையிலைமீது விதிக்கப்படும் வரியை புகையிலை உற்பத்தி செய்பவர் சர்க்காருக்குச் செலுத்தி விட்டாலும், அதன் சுமையைக் கடைசியாகச் சுமப்பவர் புகையிலை உபயோகிக்கும் மக்களே. இப்படித்தான் இதரப் பொருள்கள்மீது விதிக்கப்படும் உற்பத்தி வரிகளும்.

மறைமுக வரிகளில் சில அநுகூலங்கள் உள்ளன. இவ்வரிகளை ஏமாற்ற முடியாது. உற்பத்திக் கட்டத்திலும், வர்த்தகர்கள் கட்டத்திலும் விதிக்கப்படுவதால், வரியைக் கொடுக்காமல் சுலபமாக ஏமாற்ற முடியாது. இறுதியாக இவ்வரிகளைச் செலுத்தும் சாதாரண மக்கள் (உபயோகிப்பவர்கள்) இவ்வரிகளின் சுமையை உணருவதில்லை. வரித்தொகையும் சிறுகச் சிறுகவே செலுத்தப்படுவதால், வரி செலுத்தப்படுகிறது என்ற உணர்ச்சியே மக்களிடம் இருப்பதில்லை. வரி வசூல் செய்வதும் எளிது. வசூல் செலவும் குறைவு. இவ்வளவு அநுகூலங்களிருந்தாலும், இவ்வரி முறைகளில் பிரதிகூலங்களும் கூடவே உள்ளன. முதலாவதாக, இவ்வரிகள் கீழ்நிலையிலுள்ளவர்களுக்குப் படிப்படியாக இறங்கி வரியின் பளு அதிகரித்துக்கொண்டே போகும் தன்மையுடையவை. அதாவது

குறைந்த வருமானமுடைய வகுப்பினர் வரிகளின் சுமையை அதிகமாகத் தாங்கவேண்டி வரும். உயர் வருமானமுள்ள வர்கள் மீது இவ்வரிகளின் அழுத்தம் அதிகமாக இராது. தாங்கும் சக்தியுள்ளவர்கள் மீது சுமை குறைவாகவும் தாங்கச் சக்தியற்றவர்கள் மீது சுமை அதிகமாகவும் இருப்பது இம்மறைமுக வரிகளின் தன்மை. உதாரணமாக, அரிசி மீது விற்பனை வரி விதித்தால் அதன் சுமையை அதிகமாகத் தாங்குபவர்கள் பணக்காரர்கள் அல்ல; ஏழை மக்கள்தான். ஏனெனில், தங்களின் வருமானத்தில் பெரும் பகுதியை அரிசி வாங்குவதற்கே ஏழை மக்கள் செலவு செய்கின்றனர். பணக்காரர்களோ என்ருல் அவர்களுடைய மொத்த வருமானத்தில் அரிசிக்காகச் செலவு செய்வது ஒரு சிறிய பகுதியே. ஆனுல் இம்மாதிரி நிலையிலுள்ள அநீதியை ஓரளவுக்குப் போக்க, பணக்காரர்கள் உபயோகிக்கும் ஆடம்பரப் பொருள்கள் மீது வரிகளின் விகிதத்தை உயர்த்தி விடப்படுகிறது. மறைமுகவரியில் மற்ெருரு பிரதிகூலம் உண்டு. மறைமுக வரிகளினின்று கிடைக்கக் கூடிய வருமானத்தை நிகரமாக எதிர்பார்க்க முடியாது. இதற்காக இக்காலங்களில் மறைமுக வரிகள் பரவலாகப் பல்வேறு பொருள்கள் மீது விதிக்கப்படுவதால் ஏதாவது சில இனங்களில் குறைந்தாலும், இதர இனங்களில் கூடுதலாகக் கிடைத்து, மொத்த வருமானம் ஏறக்குறைய எதிர்பார்த்த அளவுக்குக் கிடைத்துவிடும்படி வகை செய்து கொள்ளப்படுகின்றன.

ஏற்றத்தாழ்வுகள் உள்ள வருமானப் பகுதிகளில் ஒவ்வொரு படியிலுள்ளவர்கள் மீது மறைமுக வரிகளின் சுமை எவ்வாறு இறுக்குகிறது என்பதைக் கண்டறிவது ஒவ்வொரு அரசாங்கத்துக்கும் எவ்வளவு முக்கியமோ, அவ்வாறே வெவ்வேறு வருமானம் உள்ளவர்களை நேர்முக வரியின் இறுக்கம் எப்படிப் பாதிக்கிறது என்பதைக்

கண்டறிவதும் அவசியமாகும். வருமான வரி விதிக்க ஆரம்பித்த முதற் காலத்தில் வரி விகிதம் எல்லா வருமான முள்ளவர்களுக்கும் ஒரே சமமாக இருந்தது. ஆனல் வெகு சீக்கிரத்திலேயே வரி முறைகளில் வருமானம் உயர உயர வரி விகிதமும் உயரும்படி அமைத்துக்கொள்ளப்பட்டது. இவ்வாறு வரி விகிதத்தை உயர்த்துவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கவே செய்தன. இதைச் சுலபமான ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கலாம். ரூ. 100 மாத வருமானம் உள்ள ஒருவன் ரூ. 10 நஷ்டமடைய நேர்ந் தால் அதனல் அவனுக்கு நேரும் கஷ்டம் ரூ. 1000 மாத வருமானம் உள்ள ஒருவனுக்கு ரூ. 200 நஷ்டம் ஏற்படின் அதனல் உண்டாகும் கஷ்டத்தைக் காட்டிலும் மிகவும் அதிகம். ஆகவே மாறுபட்ட வருமானம் உள்ள இருவர்க ளிடையே வரிச்சுமை சமமாகவே இருக்கும்படி வசூலிக்கப் படவேண்டுமானல், அதிக வருமானமுள்ளவர்கள் மீது விதிக்கப்படும் விகிதம், குறைந்த வருமானம் உள்ளவர்கள் மீது விதிக்கப்படும் விகிதத்தைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கவேண்டும். ஆகவே, வருமானம் உயர உயர, வரி விகிதமும் உயர்த்தப்படுகிறது. அதாவது அடித்தள வரு மானத்தில் வரி விகிதம் மூன்று சத விகிதம் என்ருல், மேல் தளத்திலுள்ளவர்களுக்கு வரி விகிதம் 75 அல்லது 80 சத விகிதம் என்று உயர்ந்துகொண்டே போகிறது. இந்த முறை உலகத்தில் எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது. காணப்படுவது மட்டுமல்ல. இந்தியா உள்பட பல நாடு களில், முற்காலங்களில் எந்த வரிவிகிதம் மிகவும் அதிக்ரம மான நிலே என்று கருதப்பட்டு வந்ததோ அதையெல்லாம் தாண்டிய உச்சநிலேயில் விகிதங்கள் தற்போது உள்ளன. உயர்த்தவேண்டியது அவசியந்தான் என்ருலும், அதை அளவுக்கு மீறி உயர்த்த நேர்ந்தால், உற்பத்தி செய்வ தற்கும் தொழிலில் சம்பாதிக்கவும் ஊக்கமும் உற்சாகமும்

குன்றிவிடும். மேலும் வரி கொடாமல் எப்படி ஏமாற்று வது என்பதில் அதிகக் கவனம் செலுத்தப்படும்.

### வரி இல்லாத வருமான வகைகள்

நவீன கால அரசாங்கங்கள் எல்லாவற்றுக்கும் வரி முறைகளைத் தவிர இதர வருமான வகைகளும் உண்டு. வியாபார ரீதியில் நடத்தப்படும் ஸ்தாபனங்கள் மூலமும் தொழில் ஸ்தாபனங்கள் மூலமும் கிடைக்கும் லாபம் இப் போதெல்லாம் ஒரு முக்கிய வருமான இனம். ருமேனியா, ருஷ்யா, சீனு போன்ற கம்யூனிஸ்டு நாடுகளில் தேசத்தின் பெரிய தொழில் ஸ்தாபனங்களை யெல்லாம் அரசாங்கமே தனது மேற்பார்வையில் நேரடியாக நடத்துகிறது. அங் கெல்லாம் நாட்டின் வருமானத்தில் பெரும் பகுதி இம் மாதிரித் தொழில் ஸ்தாபனங்களிலிருந்து கிடைக்கும் லாபத்திலிருந்து பெறப்படுகிறது. அல்லது இந்த ஸ்தாபனங் கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் மீது விதிக்கப்படும் விற்பனை வரிகள் மூலம் நாட்டிற்கு மிகுந்த வருவாய் கிடைக்கிறது. இந்தியாவில் அரசாங்கத்துக்கு வருமானம் அளிக்கக்கூடிய தேசியத் தொழில் ஸ்தாபனங்கள், ரெயில் வேக்கள், தபால் தந்தி இலாகா, ஸிந்திரியிலுள்ள ரசாயன உர உற்பத்திச்சாலை, மின்சார நிலையங்கள் விமானப் போக்குவரத்து ஸ்தாபனங்கள், தேசிய வர்த்தகக் கார்ப்ப ரேஷன் முதலியன. இந்தியாவின் தொழில் அபிவிருத்தியில் பரவலாகப் பல்வேறு தொழில் ஸ்தாபனங்களை நிறுவி நடத்துவதில் அரசாங்கம் அதிகமாகத் தலையிடுவதால், வருங்காலத்தில் இந்திய அரசாங்கத்திற்கு இம்மாதிரி தொழில் ஸ்தாபனங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் மிக உயர்ந்திருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

### அரசாங்கக் கடன்கள்

மற்றொருவகையிலும் அரசாங்கத்துக்கு வருமானம் கிடைக்கிறது. மற்ற இனங்களைக் குறிப்பிடுவதுபோல

இதை வருமானம என்று கூறுவது முற்றிலும் பொருந் தாது; என்ருலும் அரசாங்கத்தின் நிதி தேவை இந்த வழியிலும் பூர்த்தி செய்யப்படுவதால் வரவு இனங்களில் சேர்க்கப்படுகிறது. இதுதான் அரசாங்கம் அவ்வப்போது எழுப்பும் கடன்கள். இப்போதெல்லாம் ஒவ்வொரு நாட் டின் பட்ஜெட் கணக்கில் சர்க்கார் செலவுகளைச் சமாளிக்க மக்களிடம் கடன் எழுப்புவது என்ற முறை சாதாரணமா கவே கையாளப்படுகிறது. இரண்டுவித காரணங்களுக்காகச் சர்க்கார் கடன் எழுப்புகிறது. மாமூலமாக வரவேண்டிய வரிவசூல்கள் சில மாதங்களில் சுணக்க முறும். அம்மாதங் களில் அரசாங்கச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்காக மூன்று அல்லது ஆறுமாதத் தவணையில் குறுகிய காலக் கடன்களை சர்க்கார் எழுப்புவார்கள். இவை குறுகிய காலக் கடன்கன் எனப்படும். இவற்றை ரொக்க மார்க்கெட்டிலிருந்து நேராக எழுப்புவதும் உண்டு. அல்லது மத்திய பாங்கு மூலம் "கஜானு உண்டியல்கள்" **(Treasury Boills)** வழங்கிக் கடன் வாங்கிக் கொள்ளுவதும் உண்டு. வரிவசூல் பணம் சேர்ந்ததும் இக் கடன்கள் திருப்பிக் கொடுத்துவிடப்படும். இம்மாதிரி அப்போதைக் கப்போது வழங்கப்பட்ட கஜானு உண்டியல்கள் நடைமுறையில் பெருவாரியாகக் குவிந்து விடுவதும் உண்டு. அப்படிப் பட்ட சமயங்களில் இக் குறுகிய காலக் கடன்களை ஒன்று திரட்டி அவற்றையே ஒரு மத்திய காலக் கடனுகவோ, நீண்டகால கடனு கவோ மாற்றி விடுவது முண்டு, ஐந்திலிருந்து பத்துவருஷத் தவணைக் கடன்களை மத்திய காலக்கடன் என்றும் பதினைந்து ஆண்டுக் காலத் தவணைக் கடன்களை நீண்ட காலக் கடன் என றும் சொல்லப்படும்.

முன் காலங்களில் நாட்டில் நெருக்கடியான நிலைமை, (உதாரணமாக, யுத்த காலம்) ஏற்படும் போது மட்டுமே பெருவாரியாக அரசாங்கம் கடன் வாங்கி வந்தது. அப்

போதெல்லாம் வரி முறைகள் மூலம் வருமானம் திரட்டப் போதிய அவகாசம் இருக்காது. செலவுகளும் மிதமிஞ்சிச் செய்யப்படவேண்டியிருக்கும். இப்போது உலகத்தின் பல்வேறு நாடுகளில் காணப்படும் தேசியக் கடன்கள் எல்லாம் சென்ற யுத்தத்தின் விளைவுதான்.

சமீப காலங்களில் தேசியக் கடன்கள் எழுப்புவதற்கு மற்றொரு காரணம் தோன்றியுள்ளது. தேச நலனைப் பேணி வளர்ப்பதற்காகப் பல்வேறு திட்டங்களில் அரசாங்கம் செலவு செய்கிறது. பெருமளவில் நெடுஞ்சாலைகள் அமைத்தல், பெரிய நதிகளில் அணைக்கட்டுகள் கட்டுதல், நீரைத் தேக்கிக் கால்வாய்கள் வெட்டுதல், நீர் மின்சார உற்பத்தி செய்தல், தேசிய அபிவிருத்திக்கான இனங்கள்—இப்படிப் பல்வேறு திட்டங்களுக்கு ஏராளமான பணம் செலவு செய்யப்படுகிறது. இவை யனைத்தையும் மாமூலாக நாட்டிற்குக் கிடைக்கும் வரிப் பணத்திலிருந்தோ, இதர வருவாயிலிருந்தோ செலவு செய்ய முடியாது. இதற்காகக் கடன் வாங்கப்படுகிறது. 1930–34 வருஷங்களில் உலகத்தில் எல்லாப்பாகத்திலும் தொழில் மந்தம் ஏற்பட்டபோது அரசாங்கம் இம்மாதிரி இனங்களில் ஏராளமாகச் செலவு செய்து, மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிக்கவேண்டும் என்ற கருத்துத் தோன்றியது. இதைச் செயல் முறையிலும் எல்லா நாடுகளும் நடத்திக் காட்டின. இம்மாதிரி இனங்களுக்காக வாங்கப்படும் கடன்கள் காலப் போக்கில் லாபகரமாகக் கூட இருக்கும். ஆண்டு தோறும் கிடைக்கும் வருமானம் வட்டிக்கும் கொடுத்துச் சிறிது மிஞ்சவும் செய்யும்; எப்படி இருப்பினும் யுத்த காலக்கடன்களைப் போலில்லாமல், இம்மாதிரிக் கடன்களுக்கு ஈடாக ஏதாவது தேசீய சொத்துகள் கணிசமாகவே இருக்கும். ஆகவே இவை வியர்த்தக் கடன்களை அல்ல. இந்தியாவின் தேசீயக் கடன்களில் பெரும் பான்மை ரெயில்வே ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள், நீர்ப்பாசன அணைகள், மின் நிலையங்கள்

மற்றும் இம்மாதிரி தேசீய சொத்துக்களாகவே இருக்கின்றன.

கடன் எழுப்புவதில் எந்த நாடும் இரண்டு வகைகளைக் கையாளும். ஒன்று உள் நாட்டிலேயே கடன் எழுப்புவது. மற்றொன்று அயல்நாட்டில் கடன் எழுப்புவது. வெளிநாட்டில் எழுப்பும் கடன்களும் நேரடியாக மார்க்கெட்டிலிருந்தோ அல்லது அன்னிய அரசாங்கத்தினிடமிருந்தோ, அல்லது சர்வதேச பாங்கி போன்ற உலக ஸ்தாபனங்களிடமிருந்தோ இருக்கலாம். வெளி நாட்டுக் கடன்கள் எல்லாம் வட்டியும் அசலும் திருப்பிக்கொடுக்கும்போது அந்தந்த நாடடு நாணயங்களிலேயே கொடுக்கப்படவேண்டும். அதாவது, ஏற்றுமதி வியாபாரத்தைப் பெருக்கி, அதன் மூலம் அன்னியச் செலாவணி சம்பாதித்துப் பின்னரே இக்கடன்களைக் கொடுக்க வேண்டும். வேறு வழி இல்லை. உள் நாட்டுக் கடன் விஷயத்தில் இம்மாதிரி தொந்தரவுகள் கிடையாது. ஒரு கடன் திருப்பிக்கொடுக்கவேண்டிய காலம் வந்து விட்டால், அரசாங்கம் மற்றொரு கடன் எழுப்பிப் பழைய கடனைக் கொடுத்துவிடும். இப்படி அடிக்கடி நிகழுவதை நடை முறையில் காணலாம்.

அரசாங்கம் எந்த வட்டி விகிதத்தில் கடன் வாங்குகிறது என்பது பணமார்க்கெட்டின் அவ்வப்போதுள்ள நிலைமை, என்ன காரணத்திற்காகக் கடன் வாங்கப்படுகிறது. எப்போது திருப்பி அளிக்கப்படும் என்பது போன்ற விஷயங்களைப் பொறுத்தே இருக்கும். தொழில் அபிவிருத்தி நாட்டில் வேகமாக ஏற்பட்டுக்கொண்டு வரும் காலங்களில், மூலதனத்துக்கு அதிக கிராக்கி இருக்கும். அப்போது சர்க்காரும் கடன் எழுப்பினுல் வட்டி விகிதங்கள் அதிகமாகவே கொடுக்கவேண்டியிருக்கும். ஏனெனில் சாதாரணமாகவே இம்மாதிரி சமயங்களில் வட்டி விகிதங்கள் உயர்ந்தே இருக்கும். வியாபார மந்தம், தொழில் மந்தம்

நிலவும் காலங்களில் பாங்கிகளிடத்தில் ஏராளமான பணம் முடங்கிக் கிடக்கும்; வட்டி விகிதங்களும் குறைவாகவே இருக்கும். அரசாங்கம் எழுப்பும் கடன்கள் எல்லாம் தொழில் மந்த காலத்திலும் குறைந்த வட்டி நிலவும் போதும், எழுப்பும்படியாக அரசு முறையை அமைத்துக் கொள்ளவேண்டும்.

## சர்க்கார் செலவுகள்

தனது வருமானம் எந்தெந்த வகைகளிலிருந்து கிடைக்கிறது என்பது அரசாங்கத்திற்கு எவ்வளவு முக்கியமோ அது போலவே அவ்வருமானத்தை எந்தெந்த வகைகளில் செலவழிக்கவேண்டும் என்பதும் முக்கியம். இப்போதெல்லாம் ஒவ்வொரு நாட்டிலும் அரசாங்கத்தின் செலவுகள் ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே போவதைத்தான் நாம் காண்கிறோம். இக்காலத்தில் சர்க்கார் நிர்வாகத்தின் போக்கே அப்படித்தான் இருக்கிறது. மேலும், இக்காலத்தில் அரசாங்கங்கள் தங்கள் பொறுப்பென்று மேற்கொண்டு நிறைவேற்றும் தொழில்களும் அமோகமாகப் பெருகிவிட்டன. சுமார் நாற்பது அல்லது ஐம்பது வருஷங்களுக்கு முன்பு அரசாங்கம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் அல்ல என்று கருதப்பட்ட பல இனங்கள் தற்கால அரசியலில் சர்க்காரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவை என்று கருதப்படுகின்றன. க்ஷேமநல சர்க்கார், க்ஷேமநல ராஜ்யம் என்றெல்லாம் இப்போது அடிக்கடிக் கேள்விப்படுகிறோம். அரசாங்கத்திற்கு முதற்கடமையான அமைதியைப் பாதுகாப்பது, சட்டத்தை அமல்நடத்துவது முதலியதொழில்களை மட்டும் சர்க்கார் செய்தால் போதாது, மக்களின் பொதுநலனைப் போஷித்து வளர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எல்லாமே அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பது இப்போதெல்லாம் நிலவும் கருத்து. க்ஷேம-நல சர்க்கார் என்பதற்கு இதுதான் பொருள். இதன்

படி வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புகள் உண்டாக்கிக் கொடுத்தல், முதியவர்களுக்கு பென்ஷன் அளித்தல், எல்லா மக்களுக்கும், எல்லா மட்டத்திலும் இலவசமாகக் கல்வி கற்பித்தல், உழைப்பின் சோர்வு நீங்க உல்லாசமாக இருக்க வசதிகள், மற்றும் இவை போன்ற நடவடிக்கைகள் அரசாங்கத்தின் சாதாரணத் தொழில்கள் என்றே இப்போதெல்லாம் கருதப்படுகின்றன. இவற்றின் காரணமாக நவீன கால அரசாங்கங்களின் செலவுகளும் மிக விரிவாகப் பெருகிவிட்டன.

சர்க்கார் செய்யும் செலவுகளும் சில அடிப்படைத் தத்துவங்களை அனுசரித்தே இருக்கவேண்டும் என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவை கேவலம் லட்சியமாகவே இருக்க முடியும். இவைகளைக் குறிக்கோளாக மட்டிலும் அரசாங்கங்கள் கொள்ள முடியுமென்றாலும், நடைமுறையில் அரசாங்கத்தின் செலவினங்களைச் சீராக வைத்துக்கொள்ள உதவியாக இருக்கின்றன. சமுகத்துக்கு முடிந்தவரையில் அதிகமான நன்மையை அளிப்பனவாக அரசாங்கச் செலவு இருக்கவேண்டும் என்பது ஒரு தத்துவம். அதாவது, சர்க்கார் செலவுகள் சமுகத்தின் ஒரு பகுதிக்கோ, ஒரு சிறு கூட்டத்திற்கோ, ஒரு சாராருக்கு மட்டுமோ நன்மை பயப்பனவாக இருத்தல் கூடாது; சமுகத்தில் முடிந்தவரையில் எல்லாப் பகுதியினருக்கும் நன்மையளித்துப் பொது நலனை விருத்தி செய்வனவாக அவை இருத்தல்வேண்டும் என்பது இதன் பொருள். மற்றொரு தத்துவம் சிக்கனம்; அதாவது செலவு செய்வதில் பொதுப் பணம் வீண் விரயமாகக்கூடாது. குறைந்த செலவில் அதிக பலனை அடையும்படி செலவுகள் செய்யப்படவேண்டும்.

சாதாரணமாகத் திரும்பத் திரும்பச் செய்யப்படும் மாமூல் செலவுகள் எல்லாம் வரிப்பண வருமானத்தி

லிருந்தே செலவு செய்யப்படவேண்டும் என்பதும், இந்த விஷயத்தில் வருமானத்திற்கு அதிகமாகச் செலவுகள் சாதாரணமாக இருக்கக்கூடாது என்பதும் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள கருத்துகள். சர்க்கார் வருமானமும் செலவும் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வின்றிச் சரிக்கட்டிக்கொண்டு போகும்படியாகவே "பட்ஜெட்" (சர்க்காரின் வரவு–செலவுக் கணக்கு) அமைந்திருக்கவேண்டும்; அப்படிப்பட்ட நிலைமை நாட்டின் பொருளாதார நிலைமை சீராக இருப்பதைக் குறிக்கும்; என்று கருதப்பட்டு வந்த காலம் இருந்தது. நிர்வாகத்தின் திறமைக்கும் இத்தகைய பட்ஜெட் ஒரு அறிகுறி என்று முன்பெல்லாம் கருதப்பட்டு வந்தது. ஆனால் இப்போதெல்லாம் அக்கருத்து மாறி விட்டது. பற்றுக்குறைப் பட்ஜெட் தயாரிக்கப்படுவதை ஒரு குறையாகக் கருதுவதும், அதனால் நாட்டின் நிதி நிலைமை சீர்கேடுற்றுப் போய்விடும் என்ற பயமும் மறைந்துவிட்டன. பற்றுக்குறை பட்ஜெட் என்பது வருமானம் குறைவாகவும் செலவு அதிகமாகவும் இருக்கும் பட்ஜெட். இம்மாதிரி நிலைமை, பண வீக்கத்திற்கு வழி வகுக்காமலும், அதனால் உண்டாகும் தீங்குகளுக்கு வகை செய்யாமலும் இருக்கும் வரையில் பற்றுக்குறை பட்ஜெட்டினால் பயப்படவேண்டிய காரணம் இல்லை என்று இப்போதெல்லாம் கருதப்படுகிறது. தவிரவும் செலவினங்களும் நியாயமான வகைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன என்ற நிச்சயமுள்ள வரை அவை அவசியமானவை என்றே கருதப்படுகின்றன.

பல்வேறு திட்ட அம்சங்களிலும், பெரிய இனங்களிலும் இப்போதெல்லாம் பெருமளவில் செலவுகள் மேற்கொள்ளப்படுவதால், அரசாங்கச் செலவுகளை "நடைமுறைச் செலவுகள்" என்றும், "மூலதன முதலீட்டுச் செலவுகள்" என்றும் பாகுபாடு செய்வது சகஜமாக ஆகிவிட்டது. நடை

முறைச் செலவுகள் ஒவ்வொரு அரசாங்கமும் அதனதன் பல்வேறு இலாகாக்களின் நிர்வாகத்திற்காகவும், மாமூல் மராமத்துகளுக்காகவும், பொது நலன்களுக்காகவும் செய்யப்படுபவை. சாதாரண வைத்திய, சுகாதார இனங்களுக்காகவும், கல்விக்காகவும் செய்யப்படும் செலவும் நடைமுறை மாமூல் செலவினங்களில் அடங்கியதாகவே கருதப்படும். மூலதன முதலீட்டுச் செலவுகள் என்பவை அபிவிருத்தி இனங்கள், பொதுக் கட்டடங்கள், அணைக் கட்டுகள், கால்வாய் அமைப்புகள் முதலிய அம்சங்களுக்காகச் செலவு செய்யப்படுபவை. இவற்றிற்குச் செலவு பெருமளவில் பிடிக்கும். நடைமுறைச் செலவிற்கும் மூலதன முதலீட்டுச் செலவுக்கும் நிதி திரட்டும் முறைகள் மாறுபட்டவை; காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப முறைகளும் மாறும். வரி வருமானத்திலிருந்து சில சமயங்களில் மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டாலும், சாதாரணமாக இம்மாதிரி இனங்களுக்காகும் செலவுகளைக் கடன் எழுப்பியே அரசாங்கங்கள் சமாளிக்கும்.

நிதி திரட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் முறைகள் எதுவாக இருந்தாலும், செலவு விஷயத்தில் அரசாங்கம் செய்யும் ஒவ்வொரு செலவும் நாட்டின் பொருளாதார நிலைமையைப் பொதுவாக எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் சமூகத்தின் பல்வேறு பகுதியினரை நிதி திரட்டுவதற்கான முறைகள் எப்படிப் பாதிக்கின்றன என்பதையும் ஒவ்வொரு நிதி மந்திரியும் எப்போதும் கவனத்தில் கொண்டே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். அதிக வட்டி கொடுத்துப் பொது மக்களுடைய சேமிப்புத் தொகையைக் கடன் மூலம் அரசாங்கம் திரட்டிவிட்டால், தனியாக தொழில் வளர்ச்சிக்குத் தேவைபடும் நிதி மக்களிடமிருந்து கிடைக்காமல் போகலாம். அதனால் தொழில் வளர்ச்சி நாட்டில் தடைப்

படும், அதேபோல் அதிகப்படியாக நாணய நோட்டுக்களை அச்சிட்டுப் பணத்தைப் பெருக்கி அதைக்கொண்டு சர்க்கார் தங்கள் செலவினங்களைச் சமாளிக்கத் தொடங்கினுல், நாட்டில் பணவீக்கத்தினுல் விலைவாசிகள் உயர்ந்து மக்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படும். இந்தியாவில் பற்ருக்குறை நிதி நிர்வாகம் (Defict financing) என்று கடந்த சில ஆண்டுகளாக நாம் கேள்விப்படுகிருேம், இதுவும் ஒரு வகையில் பணவீக்கத்தைப் போன்றதே சர்க்கார் மேற்கொண்டுள்ள நடைமுறைச் செலவுகளுக்கும் மூலதன மூதலீட்டுச் செலவுகளுக்கும் வருமான இனங்களிலிருந்து கிடைக்கும் நிதி போதாமல் இருப்பதால், பற்ருக்குறையை ரிசர்வ் பாங்கியிலிருந்து அரசாங்கம் கடன் வாங்கித் தீர்த்துக்கொள்ளுகிறது. இந்தத் தேவையைச் சமாளிக்க ரிசர்ங் பாங்கி நோட்டு நாணயத்தைப் பெருக்கிக் கொள்ளுகிறது. நேரடியாக பணவீக்கம் என்று வெட்ட வெளிச்சமாகச் சொல்லாமல் 'பற்ருக்குறை நிதிநிர்வாகம்' என்ற ஆடம்பரமான பெயரால் இதுதான் விவரிக்கப்படுகிறது. இம்மாதிரி செலவு இனங்களைச் சமாளிப்பது உகந்த முறைதான், தவறு ஒன்றுமில்லை ஒன்று நியுணர்கள் இப்போதெல்லாம் வாதிக்கின்றனர். செலவழிக்கப்படும் இனங்கள் எல்லாம் தொழில் அபிவிருத்தி இனங்களாகையால், நாட்டின் பொளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படுமே தவிர கெடுதல் ஒன்றும் ஏற்படாது என்பது இக்கருத்தின் உட்பொருள். ஆனுலும் விலைவாசிகள் உயர்ந்துகொண்டே செல்வதைக் கண்டவர்கள் இம்முறையில் பொதிந்துள்ள பிரதிகூல பலன்களையும் உணர ஆரம்பித்திருக்கின்றனர். இம்முறையைத் தொடர்ந்து பின்பற்றிக் கொண்டே சென்ருல், நிலைமை கட்டுக்கடங்காமல் சென்றுவிடும், பணவிக்கம் நிலவும்: சர்க்கார் ஊழியர்களிடையேயும் இதர சிப்பந்திகளிடையேயும் விலைவாசிகள் ஏற்றத்தாலும் வாழ்க்கைச் செலவு உயர்வாலும் அதிருப்தி நிலவும் என்றெல்லாம் இப்

போது அனுபவ மூலம் தெரிவதால் இம்முறையில் தீமைகள் உள்ளன என்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர்; ஆகையால் இம்முறையைத் தவிர்ப்பது நல்லது. முற்றிலும் தவிர்க்க முடியாது என்னும் நிலைமையில் இதைக் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வைக்க முயல வேண்டியது அவசியம்,

## சமஷ்டி அரசாங்கத்தில் நிதி விஷயம்

இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலீ போன்ற நாடுகளில் ஏக ஆட்சி முறை **(unitary)** நடைபெறுகிறது. இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஐக்கிய ஆட்சிமுறை அல்லது சமஷ்டி ஆட்சிமுறை நடைபெறுகிறது. ஏக ஆட்சி முறை நாடுகளில் வரி முறைகளும் செலவு வகைகளும் உள்ளதைவிட சமஷ்டி ஆட்சி முறை நாடுகளில் இவை மிகவும் சிக்கலானவை. சமஷ்டி அரசியல் நாடுகளில் வரி விதிக்கும் அதிகாரி ஒரே அரசாங்கம் அன்று; சமஷ்டி அரசாங்கம் எனப்படும் மத்திய அதிகாரியும், சமஷ்டியில் இணைந்துள்ளப் பிரதேச, அல்லது, பிராந்திய, அல்லது ராஜ்ய அதிகாரிகளும் வரி விதிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார்கள். இம்மாதிரி அரசியல் நடக்கும் நாடுகளில் அரசியல் திட்டத்திலேயே மத்திய சர்க்காரின் அதிகாரங்களும் ராஜ்ய சர்க்கார்களில் அதிகாரங்களும் நிர்ணயமாக வரையறை செய்யப்பட்டிருக்கும். எனினும் சில சந்தர்ப்பங்களில் ஒன்றின் அதிகாரம் மற்றொன்றில் குறுக்கிடவும் செய்யும். உதாரணமாக, ஐக்கிய அமெரிக்க நாட்டில் மத்திய அரசாங்கம், ராஜ்ய அரசாங்கங்கள் இரண்டு படிவத்திலும் வருமானவரி விதிக்கப்படுகின்றன. இந்தியாவில் மத்திய சர்க்காரின் வரிவிதிப்பு அதிகாரமும் ராஜ்ய சர்க்கார்களின் வரி விதிப்பு அதிகாரங்களும் ஏறக்குறைய தனித்தனியாகவே வரையறை செய்யப்பட்டிருக்கின்றன. இங்கே ஒன்றோடொன்று உராய்தல்

ஏற்படுவதில்லை என்றே கூறலாம். எப்படியிருந்தாலும் எந்த அதிகாரி வரிகளை விதித்தாலும், வரிகளின் சுமை கடைசியாக அதே மனிதர்கள் மீதே தாங்குகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. ஒரே மனிதர்களோ ஒரே வகுப்பினர்களோ, ஒரே பகுதியினர்களோதான் வரிகளைத் தாங்க வேண்டியவர்களாக ஆகின்றனர். உதாரணமாக, இறக்குமதி வரிகளை மத்திய அரசாங்கம் விதிக்கிறது. இறக்குமதியான பிறகு அந்தப் பொருள்கள் வியாபாரிகள் மூலம் விற்பனை யாகும்போது ராஜ்ய அரசாங்கங்கள் அந்தந்த ராஜ்யங்களிலுள்ள சட்டப்படி விற்பனை வரிகள் விதிக்கின்றன. இந்த இரண்டு வரிகளின் தொகையும் அப்பொருளின் விலையில் சேர்க்கப்பட்டு, இறுதியில் அப்பொருளை வாங்கி உபயோகிப்பவர்கள்தான் கொடுக்க வேண்டி வருகிறது. இறக்குமதி வரி விற்பனை வரி இரண்டும் ஒரே மனிதர்கள் தான் செலுத்துகின்றனர். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் வரிச் சுமையின் பளுவைக் குறைப்பதற்காக இவ்விரு அரசாங்கங்களும் இணைந்து செயல்படுவது அவசியமாகும். இவ்வாறு இணக்கமான செயல்முறையை மேற்கொள்ளுவதற்காக அடிக்கடி மத்திய சர்க்காரும் ராஜ்ய அரசாங்கங்களும் கலந்து ஆலோசனைகள் நடத்துவதுமுண்டு. அதைத் தவிர, சுயேச்சையாகவே நிலைமையைப் பரிசீலனை செய்து ஆலோசனை கூற தனிக் கமிஷன்களும் வரி விசாரணைக்குழுக்களும் அவ்வப்போது ஏற்படுத்துவது முண்டு, இம்மாதிரி ஒரு கமிஷன் 1954ம் ஆண்டில் இந்தியாவில் செயல் புரிந்து விரிவான யாதாஸ்து ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

வரி முறைகளில் அதிகார மோதல்கள் ஏற்படுவது போலவே, செலவு இனங்களில் சில சமயங்களில் சிக்கல்கள் ஏற்படுவதும் உண்டு, அதிக செல்வாக்கும் அதிக வருவாய் தரக்கூடிய வருமான இனங்களையும் உடைய மத்திய அரசாங்கத்துக்கு நிதி வசதிகள் அதிகமாகவே இருக்கும்.

ராஜ்ய அரசாங்கங்களின் வசதிகள் மிகவும் குறைவாக இருக்கும். அம்மாதிரி நிலைமையில் ராஜ்யங்கள் தாங்களாகவே பல செலவினங்களை மேற்கொள்ள முடியாமலிருக்கும். அப்போதெல்லாம் மத்திய அரசாங்கம் பிரதேச ராஜ்யங்களின் உதவிக்கு வரும். இத்தகைய உதவி எந்த அடிப்படையில் இருக்கவேண்டும் என்ற கருத்துக்களை வகைப்படுத்துவதும் சமஷ்டி அரசியலில் காணப்படும் ஒரு சிக்கல். மத்திய அரசாங்கம் அளிக்கும் உதவி ஏற்றத்தாழ்வின்றியும் பட்சபாதமின்றியும் சம பலன் அளிக்கும்படியாகவும் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுவது நிதி நிர்வாகத்தில் ஒரு முக்கிய அம்சம். இந்தியாவில் மத்திய சர்க்கார் அளிக்கும் உதவியைப் பரிசீலனை செய்வதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு நிதிக் கமிஷன் ஏற்படுத்த வேண்டுமென்று அரசியல் அமைப்பிலேயே வகை செய்யப்பட்டிருக்கிறது.

## அத்தியாயம்—13

# பொருளியல் அமைப்பு முறைகளும் திட்டங்களும்

முன் அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ள பொருளியல் தத்துவங்களெல்லாம் சாதாரணமாக எவ்விதக் கட்டுப்பாடுகளும் இல்லாத ஒரு சமூகத்தில் இயங்குபவை. இத்தகைய சமூகத்தைப் பொருள் துறையில் சுதந்திரத்துடன் செயல்புரியும் சமூகம் என்பர். இம்மாதிரி சமூகத்தில் அரசாங்கத்தின் அதிகாரமும் தலையீடும் இல்லாமல் பொருளாதார நடவடிக்கைகளெல்லாம் அதனதன் சக்திகளின் வேகத்திற்கு ஏற்றவாறு நிகழும். ஏற்றத் தாழ்வுகளும், அவற்றால் விளையும் நன்மை தீமைகளும் பொருளாதார ரீதியில் ஒன்றையொன்று திருத்திக்கொண்டு சமூக நிலைமை சம நிலையை அடையும். இம்மாதிரி சமூகத்தில் காணப்படும் பொருளாதார விவகாரங்கள் எந்தத் தத்துவங்களின் அடிப்படையில் நிகழுகின்றன என்பதைப் பொதுவாக இதுவரையில் விவரித்தோம். ஆங்காங்கே அரசாங்கத்தின் தலையீடுகளைப் பற்றியும் சுருக்கமாக இடையிடையே கூறப்பட்டன. இதனின்று அரசாங்கத்தின் தலையீடு எந்தத் தத்துவங்களின் அடிப்படையில் ஏற்படுகிறது, எந்த அளவுக்கு அது தீமையின்றி இருக்க முடியும், இதை வரையறை செய்வது எப்படி என்ற கேள்விகள் எழுகின்றன. இவற்றை இந்த அத்தியாயத்தில் கவனிக்கலாம்.

மேல் நாடுகளில் பல ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் சமூகத்தின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம்

தலையிடக கூடாது; அவற்றைப் பொருளாதார ரீதியில் அதனதன் நியதிகளின்படித் தானுக இயங்கும்படி விட்டு விடவேண்டும்; அவ்வாறு செய்தால் அந்த நியதிகளின் வேகங்களுக் கேற்ப சமுகப் பொருளாதார நிலைமை சீரா கவே இருக்கும்; என்ற கருத்து நிலவி வந்தது. இக் கருத்தை "லெஸெஃபெர்" (Laissez Faire) (தன் போக்கிலே போகவிடல்) என்று பொருளாதார நூல்கள் விவரிக்கும். இதற்குத் தலையிடாமை, தன் போக்குப்படி நடவடிக்கைகளை நிகழும்படிவிடுதல், என்று பொருள். இக்கருத்திற்கு ஆதார மாக உள்ள தத்துவங்கள் இரண்டு. விற்பனை செய்பவர் களும் வாங்குபவர்களும் தங்களுக்கு எது நல்லது, லாபகர மானது என்பதை நன்கு உணர்ந்தவர்கள்; ஆகவே இரு சாராாகளுக்கு மிடையே போட்டி நிலவுமே யானுல் உற்பத்தியாளர்களுக்கும் உபயோகிப்பவர்களுக்கும் எந்தக் கட்டத்தில் விலைவாசிகள் ஸ்திரமாக நின்ருல் அநுகூலமாக இருக்குமோ அந்தக் கட்டத்தில் விலைகள் சம நிலையை அடைந்துவிடும் என்பதுஒன்று. அரசாங்காத்தின் தலையீட் டினுல் இயற்கைக்கு விரோதமான பலன்கள் உண்டாகும், அவற்ருல் சமுகத்தின் நன்மை, நீண்ட காலப் போக்கில், உண்டாகாது என்பது இரண்டாவது. இந்தக் கருத்துக் காலப்போக்கில் பல மாறுதல்கள் அடைந்து தற்காலம் உலக நாடுகளில் அநேகமாக மறைந்தே போய் விட்டது என்று சொல்லலாம். புத்தகங்களில் மட்டுமே இதை இப்போதெல்லாம் காணலாம்.

## முதலாளித்வம் அல்லது மூலதனத்வம்

சாதாரணமாக முதலாளித்வம் என்று பேசப்படும் போதெல்லாம் உண்மையில் மூலதனத்வம் தான் பேசப் படுகிறது. பொருளாதார அமைப்பில் மூலதனத்வம் ஒரு முறை. இதன் பொதுப் படைக் கருத்துக்களையும் இம் முறையைக் கண்டனம் செய்பவர்கள் எடுத்துக்காட்டும்

குறைபாடுகளையும் புரிந்து கொள்வது அவசியம். எந்த அமைப்பில் பொருளாதார நடவடிக்கைகளெல்லாம் மூல தனத்தைப் படைத்தத் தனி முதலாளிகளின் ஆதிக்கத்தில், அவர்களுடைய கட்டுப்பாடுகளின்படி கூலிக்கு அமர்த்தப் பட்ட வேலையாட்களைக் கொண்டு அரசாங்கத்தின் பாது காப்பு என்ற போர்வையின் கீழ் நடைபெறுகின்றனவோ, அத்தகைய அமைப்பை முதலாளித்வ முறை என்பார்கள். இந்த அமைப்பிற்கு ஆதாரமாக உள்ள அடிப்படை முறை கள் பல. போட்டா போட்டி இருக்கவேண்டும் என்பது ஒன்று. லாபத்தில் நாட்ட முடைமை இரண்டாவது. தனி யார் சொத்துரிமை அங்கீகரிக்கப்படுவது மூன்ருவது. தனி மனிதர்களின் ஊக்கம், உற்சாகம், தன்னம்பிக்கை, முதலிய குணங்களின்படி செயலாற்றும் வாய்ப்புக்கள் நான்காவது. சுயேச்சையுடன் செயலாற்றுவதும், சுயேச்சை யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுதலும் ஐந்தாவது. தொழில் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் சீரிய முறையில் தூண்டு கோலாக இருப்பவை தனி மனிதனின் ஊக்கமும் உற்சாகமும், சுதந்திரமும் என்பது முதலா ளித்வ முறையின் சித்தாந்தம். இந்த முறையில் தாங்கள் எந்தத் துறையில் வேலை செய்வது, தாங்கள் மூலதனத்தை எந்தத் தொழிலில் முதலீடு செயவது, தாங்கள் உற்சா கத்தை எந்தத் திசையில் செலுத்துவது என்ற விஷயங் களில் ஒவ்வொருவனுக்கும் பூரண சுதந்திரம் உண்டு. பொருள் உற்பத்தி செய்வதும் தொழில் புரிவதும் ஒவ் வொருவனுடைய சாமர்த்தியத்தையும் விருப்பத்தையும் பொறுத்தது. அதாவது தொழில் வகைகளை ஒரு முகப் படுத்தி ஆரம்பிப்பவர்கள், மார்க்கெட்டில் எந்தெந்தப் பொருள்களுக்குக் கிராக்கி இருக்கிறதோ, எந்தெந்தப் பொருள்களுக்குத் தேவை இருக்கிறதோ, அவ்வப் பொருள் களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வழிகளை வகுத்து, அத் தொழில்களைத் தங்களுடைய முயற்சியால் நடத்து

வார்கள். இம் முறையில் பொருள்களை இறுதியில் வாங்கு பவர்கள் தான் உற்பத்தி வகைகளின் போக்கை நிர்ணயம் செய்பவர்கள் என்று கருதப்படுகிறது. "வாடிக்கைக்காரர் கள் தாம் எங்கள் எஜமானர்கள்" என்று அச்சடித்த பலகை சில கடைகளில் காணப்படும். இதில் அடங்கி யுள்ள கருத்தும், உபயோகிப்பவர்களே தொழில் முறையை நிர்ணயிப்பவர்கள் என்பதில் பொதிந்துள்ள கருத்தும் ஒன்றே. உபயோகிப்பவர்களின் தேவைகள் தான் கிராக்கி என்பதன் மூலம் மார்க்கெட்டில் அவ்வப் போது அறியப்படுகின்றன. இவை தான் உற்பத்தியாளர் களுக்கு எந்தப் பொருள்களை உற்பத்தி செய்வது என்பதில் வழிகாட்டியாக விளங்குகின்றன. தேவைக்குத் தக்கவாறு எந்தப் பொருளாவது கிடைக்க வில்லையானால் அதன் விலை உயர ஆரம்பிக்கும். அதனால் அந்தப் பொருள் உற்பத்தி யில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அபரிமிதமாக லாபம் கிடைக் கும். இம்மாதிரி அதிக விலையும் அபரிமிதமான லாபமும் சிறிது காலம் நீடித்து நின்றால், ஏற்கனவே அத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதுடன், இத ரத் துறையிலுள்ளவர்களையும், இந்தத் துறை ஈர்க்க ஆரம் பித்து, அவர்களும் கிராக்கி அதிகமாக உள்ள இப்பொருளை உற்பத்திசெய்வதில் ஈடுபடுவார்கள். இப்படி அப்பொருளின் உற்பத்தி அதிகரிக்கும், இவ்வாறு அதிகரித்த உற்பத்தியி னால்தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டு, முதலில் காணப்பட்ட கிராக்கிக் குறையும். கிராக்கிக் குறையக்குறைய விலையும் குறைந்து முதலில் கிடைத்துக் கொண்டிருந்த அபரிமித மான லாபமும் குறையும். அதிகரித்த கிராக்கியின் விளை வாகப் பழைய உற்பத்தியாளரும் புது உற்பத்தியாளர்களும் உற்பத்திப் பெருக்கில் ஈடுபடுவது போலவே, சில சமயங் களில் அபரிமிதமான உற்பத்தியினால், தேவைக்கு அதிக மான பொருள்கள் மலிந்து, கிராக்கிக் குறைந்து, விலை சரிந்து, லாபம் குறைந்து, உற்பத்தியாளர்கள் இத்துறையி

லிருந்து விலகிவிடவோ, அல்லது உற்பத்தியைக்குறைத்துக் கொள்ளவோ கூடும். இவ்வாருக மார்க்கெட்டில் கிராக்கி சப்ளை நிலவரங்களுக்கு ஏற்ப அதனதன் சக்திகளின் வேகத்திஞல் கட்டுப்பாடின்றி செயல் புரியும் ஒரு பொருளாதார சமூகத்தில் சம நிலைதாஞகவே ஏற்பட்டுக்கொண்டிருக்கும். இத்தத்துவம்தான் முதலாளித்துவ முறையின் முக்கிய அம்சம்,

இந்த நூற்ருண்டின் ஆரம்ப காலத்தில் உலகத்தில் எல்லா பாகங்களிலும் முதலாளித்துவ முறைதான் நிலவி யிருந்தது. இம்முறையின் கீழ் பல நாடுகள் பொருளாதாரத் துறையில் பிரமிக்சத் தக்கவாறு முன்னேற்றங்கள் அடைந்திருக்கின்றன, இக்காலத்தில் அமெரிக்கா போன்ற நாடுகளில் காணப்படும் அபரிமிதமான அபிவிருத்திக்கும் பொருளாதார சக்திக்கும் முதலாளித்துவ முறையின் வன்மையைக் காரணமாகக் காட்டி இம்முறையைப் புகழ்வோர்கள் உண்டு. லாபத்தில் நோக்குடைய தனியார்களின் உற்சாகத்திஞல் உற்பத்தி முறைகளில் அபரிமிதமான அபிவிருத்தியும் நுட்பமுறையில் வேகமான அபிவிருத்திகளும் முதலாளித்துவ முறையில் காணப்படுகின்றன என்பதும் அடிக்கடி எடுத்துக் காட்டப்படுகின்றன.

## முதலாளித்துவ முறையில் குறைகள்

முதலாளித்துவ முறையில் காணும் குறைபாடுகள் யாவை? பல நாடுகளில் முதலாளித்துவ முறை வெற்றி கரமாகச் செயலாற்றிக் கொண்டிருந்தபோதிலும், இம்முறை சிறிய முறை அல்ல. இதில் குறைகள் பல இருக்கின்றன என்று பல அறிஞர்கள் சொல்லிக்கொண்டுதா னிருந்தனர். பல குறைகளும் குறிப்பாகச் சுட்டிக் காட்டப்பட்டன. முதலாவது குறைபாடு அபிவிருத்தி ஒரே சீராக ஏற்படாமல், துண்டித்துத் துண்டித்து காணப்படுகிறது என்பது.

தொழில் மந்தம் அடிக்கடி இம்முறையில் காணப்படுவது சகஜம். அப்போதெல்லாம் சமூகப் பொருளாதார முன்னேற்றம் தடைபடும். மேலும், தொழிலாளிக்குக் கிடைக்கும் ஊதியம் அதிகரித்துக்கொண்டே போனாலும், தொழிலாளிகளின் வாழ்க்கை நிலைமையும் உயர்ந்துகொண்டே சென்றாலும், இவ்வபிவிருத்தி எல்லா நிலையிலுமுள்ள தொழிலாளிக்குப் பரவலாக ஒரே சமமாக ஏற்படாமல், சிற்சில பகுதியினரிடையேமட்டும் உண்டாகிறது. தொழில் நிலைமையிலும், வியாபார நிலைமையிலும், ஒரே சீரான நிலைமையில்லாமல், ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதால், அடிக்கடி வேலையில்லாத் திண்டாட்டமும், கஷ்டங்களும் சாதனவிரயங்களும் அனுவசியமாக ஏற்படுகின்றன. இவை இரண்டாவது குறை, 1920ம் ஆண்டுக்குப் பிறகு மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இம்முறையின் கீழ் பொருளாதார விருத்தி வேகமாக நடைபெறவில்லை என்பதும் கடுமையான வேலையில்லாத் திண்டாட்டம் முதலாளித்துவ அமைப்பு முறையில் நிரந்தரமாகக் காணப்படும் ஒரு அம்சம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றன. தவிரவும், முதலாளித்வ அமைப்பில் செல்வம் சமூகத்தின் பல பகுதியினர்களுக்கும் சமமாக வினியோகப்படுவதில்லை என்பதும் எடுத்துக் காட்டப்படுகிறது. செல்வம் கொழிப்பதில் ஒரு குறைவுமில்லை என்றாலும், இச்செல்வத்தினால் மிகுந்த பயன் அடைபவர்கள் ஏற்கனவே அதிக செல்வம் படைத்தவர்கள் தான். சமூகத்தில் உச்ச அந்தஸ்தில் உள்ள சில தனிகர்கள் தங்கள் அபரிமிதமான செல்வத்தினால், நாட்டின் அரசியல் பொருளாதாரத் துறைகளில் மிகுந்த செல்வாக்குள்ளவர்களாக இருக்கின்றனர்; மறு கோடியில், சாதாரண வசதிகளுடன் கவலையற்ற தினசரி வாழ்க்கை நடத்தவும் போதிய வருமானமோ, செல்வமோ இல்லாது நஷ்டப்படுபவர்கள் மிகுதியாக இருக்கின்றனர். இவ்விரு கோடிகளுக்குமிடையேயுள்ள தாரதம்மியத்தை ஒரு குறையாகச் சொல்லப்படுகிறது.

முதலாளித்துவ முறையைக் கண்டிப்பவர்கள் முக்கியமாக அம்முறையில் சொத்துரிமைக்கு உயர்ந்த மதிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒரு கண்டனமாகக் கூறுகின்றனர். சொத்துரிமையைத்தான் மிகவும் முக்கியமானதாக இம்முறை கருதுகிறதே தவிர, மனித உரிமையை உயர்வாக மதிப்பதில்லை என்றும் லாபம் சம்பாதிக்கவேண்டுமென்ற ஆர்வத்தில் மனித உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு மிதிபட்டுப் போகின்றன என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

## முதலாளித்வத்தின் எதிர் காலம்

முதலாளித்வத்தின் எதிர்காலம் பற்றிய விவாதங்களில் வெவ்வேறான மூன்று கருத்துக்கள் நிலவுகின்றன. ஒவ்வொரு கருத்தையும் ஆதரிக்கும் அறிஞர்களும் அபிமானிகளும் பலர் இருக்கின்றனர்,

முதலாவது கருத்து முதலாளித்வ முறை நீடித்து நிலைத்து செயல்புரியும், அவ்வாறு செயல்புரிவதற்குப் போதிய வலிமை இம்முறையிருக்கிறது என்பது. இக் கருத்தை ஆதரிப்பவர்களெல்லாம் சுயேச்சைவாதிகள். தன்னுடைய பொருளாதார லட்சியத்தை அடைவதற்கு எந்தப் பாதை தகுதியானதென்று ஒருவன் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறானோ அந்தப் பாதையில் செயல்புரிய அவனுக்கு வாய்ப்புகள் இருக்க வேண்டும் என்று இக்கருத்தை ஆதரிப்பவர்கள் எண்ணுகின்றனர். போட்டாபோட்டி நிலவும் மார்க்கெட் என்ற இயக்கம் மிகவும் உன்னதமானது, ஆகவே இதை அழியவிடாமல் போஷித்து வர வேண்டியது அவசியம் என்று இவர்களெல்லோரும் வாதிப்பார்கள். இவர்களுடைய கருத்தில் 'திட்டமிட்ட பொருளாதார சமூகம்' என்பது மறுக்கப்படுகிறது. திட்டமும் பொருளாதார ஜனநாயக

மும் ஒன்றுக்கொன்று முரணானவை என்று இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். திட்டமிட்டுச் செயல் புரியும் ஒரு சமூகத்தில், விலைவாசிகள், ஊதியம், வட்டி, வேலை அளவு, முதலிய நிலைமைகள் உற்பத்தியாளர்களுக்குத் தொழில் முறையில் அளவுகோல்களாக இராமல், திட்ட அதிகாரிகளின் கண்டிப்பான உத்தரவுகளும் தீர்மானங்களுமே தொழில் முன்னேற்றத்தை நிர்ணயிக்கின்றன. இது கொடுங்கோன்மையே ஆகும். இதைக் கண்டித்தாலும், சிற்சில சமயங்களில், முக்கியமாக ஏகபோக உரிமை ஸ்தாபனங்கள் அத்து மீறிப்போனால், அரசாங்கம்தலையிட்டு, நிலைமையைச் சீராக்கலாம் என்று இவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர். இம்மாதிரி தலையீடுகளைத்தவிர, இதரவிதமான அரசாங்கத் தலையீடுகளை இவ்வாதிகள் ஒப்புக்கொள்வதில்லை.

முதலாளித்வ முறை நீடித்து செயல்புரிய வேண்டியது தான்; அவ்வாறு அது செயல்புரியவும் முடியும்; ஆனால் அதைத் திருத்தி அமைத்துக் கொண்ட பிறகே அது நீடிக்க வேண்டும், என்பது மற்றொரு கருத்து. இந்தக் கருத்தை ஆமோதிப்பவர்களை தனியார் சுதந்திரத்தைப் பற்றி மித வாதிகள் வாதிப்பதைப் போல வாதிப்பவர்கள் என்று கொள்ளலாம். தனியார் தொழிலுக்கு அவர்கள் அளிக்கும் ஆதரவு பூரண ஆதரவு அல்ல; தயக்கத்துடனே அளிக்கும் ஆதரவு. ஓரளவுக்கு அரசாங்கக் கட்டுப்பாட்டையும் 'கண்ட்ரோல்'களையும் இவ்வாதிகள் அவசியம் என்று ஒப்புக்கொள்ளுகின்றனர். உதாரணமாக, அமெரிக்காவிலேயே ஒரு வகுப்பினர் விலைவாசிகள் வகை தொகையின்று உயர்வதும் தாழ்வதும் விரும்பத்தக்கதல்ல, அம்மாதிரி சந்தர்ப்பங்களில் அரசாங்கம் தலையிடுதல் அவசியம் என்று வற்புறுத்துக்கின்றனர். தேசியப் பொருளாதாரத்தில் தனியார்கள் ஏகபோக உரிமை கொண்டாடுவது தற்காலப் பொக்குக்கு உகந்தது அல்லவென்றும், தனித்தொழிலதிபர்கள் கூட அவ்

வாறு தங்களுக்குத் தனி உரிமை கோருவது விவேகமல்ல என்றும் இக்கருத்தை ஆதரிப்பவர்கள் வாதிக்கின்றனர்.

மூன்ருவது கருத்துகொண்டவர்கள் முதலாளித்வ முறை நீடித்துச் செயல்புரியக் கூடாது; அவ்வாறு அது செயல்புரிவதற்கு ஏற்றதல்ல என்று வாதிக்கின்றனர். இவர்களெல்லாம் "சோஷலிஸ்டு"கள் அல்லது சமுகநல வாதிகள். சோஷலிஸ்டுகளில் பலபிரிவுகள் உண்டு. எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், முதலாளித்வ முறையைக் கண்டிப்பதில் அவர்களெல்லாம் ஒன்றே, முதலாளித்வ முறை கலப்பற்ற ஒரு தீமை, மற்றும், சமுகமக்களின் பொதுநலனுக்கு முற்றிலும் மாறுபட்டது, பெரும் பகுதியான மக்களின் நீதி, நெறி உணர்ச்சிகளுக்கு ஒவ்வாதது என்று சோஷலிஸ்டுகள் நிச்சயமாக உணருகின்றனர். முதலாளித்வ முறை நீண்ட காலத்திற்கு சீரான முறையில் செயல்புரியாதென்று எல்லா சோஷலிஸ்டுகளும் நிச்சயமாக நம்புகின்றனர்.

## சோஷலிஸம்

முதலாளித்வ முறைக்கு நேர்மாருன அமைப்பு சோஷலிஸ முறை. ஆகவே அதற்கு மாற்று முறையாகவே சோஷலிஸத்தை அதன் ஆதரவாளர்கள் விளம்பரப்படுத்துகின்றனர். சோஷலிஸம் என்ருல் என்ன என்று திட்டவட்டமாக லட்சணம் வகுத்துப் பார்க்கவேண்டுமாஞல் பல்வேறு பிரிவினர்களுக்குள்ளே ஒற்றுமையே காணப்படாது. ஒவ்வொருவரும் அணிந்து அணிந்து பல தலைகளின் மாறுபட்ட தன்மைகளால் தனது சுய உருவத்தை இழந்துவிட்ட தொப்பிக்கு எடுத்துக்காட்டாக சோஷலிஸத்தைச் சொல்லுவார்கள்.

ஆஞல் ஒன்றுமட்டும் சந்தேகமின்றிக் கூறலாம், "மூலதனம்" **(Das Kapital)** என்று பிரசித்தி பெற்ற நூலை

இயற்றிய கார்ல் மார்க்ஸ் அவர்களின் நூல்களிலிருந்துதான் சோஷலிஸ்டுகள் தங்கள் கருத்துக்களுக்கு ஆதாரம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிருர்கள். சோஷலிஸக் கருத்தை விஞ்ஞான ரீதியில் முதன் முதலாக அமைத்துத் தந்தவர்களில் கார்ல் மார்க்ஸ் முக்கியமானவர். அவருடைய ஆதாரக் கருத்துக்கள் சிலவற்றைக் கவனிப்போம். சரித்திர வரலாற்றில் எந்த சம்பவமும், பொருளாதர அம்சங்களேயே ஆதாரமாகக் கொண்டுள்ளது. மனித சமுக நடவடிக்கைகளெல்லாம் பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. அதேபோல் ஒவ்வொரு நாட்டின் அரசியல் அமைப்பும் அந்தந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி எந்தநிலேயிலிருக்கிறதோ அதற்கு ஏற்பஇருக்கும். உதாரணமாக,முதலாளித்வப் பொருளாதாரமுறை நிலவும் நாடுகளில் சொத்துரிமையைப்பாதுகாக்கும் ஒரு அரசாங்கம்தான் ஆட்சிசெலுத்தும். இது இரண்டாவது கருத்து. சமுகத்தின் பொருளாதார பரிணமத்தில் முதலாளித்துவ முறை ஒரு கட்டம். இந்தக் கட்டம் இறுதியில் சோஷலிஸ முறையினுல் கவ்வப்பட்டு மறைந்துவிடும். சோஷலிஸ முறைதான் இறுதியில் நிலேத்து நிற்கும். இது ஒரு கருத்து. ஒவ்வொரு பொருளுக்கும் உபரி மதிப்பு என்று தனி மதிப்பு உண்டு. விற்பனே செய்யப்படும்போது கிடைக்கும் விலேயிலுள்ளலாப அம்சம் உண்மையில் தொழிலாளிகளின் உழைப்பினுல் ஏற்பட்டது; எனவே அந்தப் பாகம் முதலாளிக்கு இம்போது கிடைத்துக் கொண்டிருக்கிறது, அது உண்மையில் தொழிலாளிகளுக்குக் கிடைக்கவேண்டியது. இதுதான் சோஷலிஸ்டுகளின் உபரி மதிப்புக் கொள்கை. முதலாளித்வ முறை செயல்படும் விதங்களே வெகு விரிவாகவும் நுட்பமாகவும் ஆராய்ந்து, அதனுல் நாட்டின் உற்பத்தி சாதனங்களனேத்தும் படிப்படியாக ஒரு சில தனிநபர்களிடமே குவிந்துவிடுகிற தென்றும், அதன் விளேவாகத் தொழிலாளிகளின் வறுமைப் படிப்படியாக அதிகரிக்கவே செய்யும் என்றும் இந்தப் போக்கு

நீடித்து சென்ருல் இறுதியில் "சுரண்டல்காரர்கள் எல்லாம் அடியோடு சுரண்டப்பட்டு ஒழிந்துவிடுவார்கள்" என்றும் கார்ல் மார்க்ஸ் தமது நூலில் முடிவு கூறினர்.

கார்ல் மார்க்ஸின் கருத்துக்கள்தான் கம்யூனிஸ்டு களின் கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் முக்கிய மாக உற்சாகம் அளிப்பவை. மார்க்ஸின் பிற்காலத்தில் அவர் கூறிய பல கருத்துக்கள் உண்மையென நிரூபிக்கப் பட்டபோதிலும், பல ஹேஷ்யங்கள் அவர் எதிர்பார்த்த படி பலிக்கவில்லை என்பதையும் இங்கே சொல்லவேண்டும்.

1917–ம் ஆண்டில் நடந்த ருஷ்யப் புரட்சிக்குப் பின் பல நாடுகளில் சோஷலிஸக் கருத்துக்கள் நடை முறை யில் எவ்வாறு செயல் படுகின்றன என்பதை நாம் நேரில் காண முடிகிறது. அதுபோலவே, அமெரிக்க முதலாளித்வ முறையிலும் இம் முறை நிலவும் இதர நாடுகளிலும் என்னென்ன மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன என்பதையும் காண முடிகிறது.

சோஷலிஸ்டுப் பொருளாதார அமைப்பின் முக்கிய அம்சங்களாவன:—(1) உற்பத்தி சாதனங்கள் எல்லாம் அரசாங்கத்துக்கே சொந்தம். தனி மனிதனுக்குச் சொந்த மல்ல. (2) பொருளாதார அபிவிருத்திக்குத் திட்டம் வகுக்கப்பட்டு அத்திட்டத்தின்படியே நடவடிக்கைகள் நிகழும். (3) முதலாளித்வ அமைப்பில் முக்கிய தூண்டு கோலாக இருக்கும் "லாப நோக்கு" சோஷலிஸ முறை யில் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விடுகிறது. தனியார்களுக்கு உற்பத்தி சாதனங்கள்மீது எப்போது ஆதிக்கம் இல்லையோ அவற்றைத் தங்களுடைய லாபத்திற்காகப் பயன் படுத்திக் கொள்ளுவதென்பதும் அப்போதே மறைந்து விடுகிறது. (4) தொழில் செய்பவர்களெல்லாம் ஏதாவது ஒரு அர சாங்கத் தொழில் ஸ்தாபனத்திலோ அல்லது அரசாங்கத்

தின் மேற் பார்வையில் நடக்கும் ஒரு ஸ்தாபனத்திலோ வேலை செய்வார்கள். அவர்களுக்கு வருமானம் என்று கூலி மட்டுமே கிடைக்கும். விலை வாசிகள் என்ற முறையும் சோஷலிஸத்தில் உண்டு. ஆனால் முதலாளித்வ அமைப்பில் விலைவாசிகளுக்கு உள்ள முக்கியத்வம் சோஷலிஸ நாடுகளில் இருக்காது. பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் தான் முக்கிய இடம் பெறுமே தவிர, விலைவாசிகள் அல்ல. சோஷலிஸப் பொருளாதாரத்திற்குத் திட்டங்கள் தான் மையம்.

## சோஷலிஸத்தின் சிறப்புகள்

உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் எல்லாம் லாபத்திற்கு அல்லாது உபயோகத்திற்காகவே இருக்குமாதலால், சோஷலிஸ உற்பத்தி முறையில் எவ்வளவு உற்பத்தி செய்வது என்னும் விஷயத்தில் எவ்வித வரம்பும் இருக்காது என்று எதிர் பார்க்கலாம். எந்தப் பொருளும் தாராளமாகக் கிடைக்கக்கூடும் என்று சோஷலிஸ்டுகள் சிலாகித்துச் சொல்லுகிறார்கள். இது ஒரு சிறப்பு. உபயோகிப்பவர்களைச் சுரண்டிப் பிழைக்கவேண்டிய அவசியமில்லாததால் பொருள்கள் நியாயமான விலைக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம். இது மற்றொரு சிறப்பு. மனித சமுகத்தின் தேவைகளையே முக்கியமாகக் கருத்தில் கொண்டு உற்பத்தித் தொழில்கள் இயங்குமாகையால் வேண்டாத சாமான்களை உற்பத்தி செய்து பின்னால் அவற்றைத் தூர எறியவேண்டிய கட்டாயமும் வீண் விரயமும் ஏற்படாது என்று எதிர்பார்க்கலாம். இது மேலும் ஒரு சிறப்பு. நுட்பமான கண்டு பிடிப்புகளும் அவற்றின் பலன்களும் முதலாளித்வ முறையில் காணப்படுவது போல அவற்றைக் கண்டு பிடித்து உரிமை எற்படுத்திக் கொண்ட ஒரு சில நபர்களுக்கு மட்டும் கிடைக்காமல், உற்பத்தித் தொழிலில்

ஈடுபட்டுள்ள எல்லாத் தொழில் ஸ்தாபனங்களுக்கும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம். இதுவும் ஒரு சிறப்பு. போட்டா போட்டியில் முதலாளித்வமுறையில் காணப் படும் வீண் விரயங்கள் சோஷலிஸ்டு முறையில் தவிர்க் கப்படுகின்றன. இதையும் ஒரு சிறப்பாக எடுத்துக் கூறப் படுகிறது. பொருளாதார ரீதியில் ஸ்திரத் தன்மை சோஷ லிஸ முறையில் சமுகத்தில் நிலவும். முதலாளித்வ முறை யில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளும், மந்தமும் சுபிட்ச மும் வேலையின்மையும் மாறி மாறி சோஷலிஸ முறையில் காணப்படாது. எல்லாம் ஒரே நிதானத்துடன் இயங்கும். மற்றெல்லாவற்றையும் விட இதை முக்கிய சிறப்பாக சோஷஸ்டுகள் எடுத்துக் காட்டுகின்றனர், வேலையின்மை சோஷலிஸ நாடுகளில் அறவே ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை மிக முக்கியமாக எடுத்துச் சொல்லப்படுகிறது. உற்பத்தி மட்டும் திட்டமிட்டு நடைபெறுவதுடன் சேமிப்பு அளவும், முதலீட்டுத் தொகையும். இவ்விரண்டும் எந்த விகிதத்தில் இருக்கவேண்டு மென்ற விஷயங்கள்கூட சொஷலிஸ முறையில் திட்டமிடப்படுகின்றன. கடைசி யாக, உண்மையான பொருளாதார சுதந்திரம் சோஷலிஸ சமுதாயத்தில் தான் காணப்படும், ஏனெனில் வருமானத் திலும் செல்வத்திலும் சமூகத்தினரிடையே அதிகமான ஏற்றத்தாழ்வுகள் இருப்பதில்லை என்பதும் ஒரு சிறப்பாகக் கூறப்படுகிறது.

## சோஷலிஸத்தில் காணும் குறைகள்

சோஷலிஸ முறையைக் குறை கூறுபவர்களெல்லாம் அம் முறையில் மேற் கொள்ளப்படும் திட்ட முறைகளைப் பிரதானமாகச் சுட்டிக் காட்டி அதனின்றும் எழும் பல பிரச்னைகளை முக்கிய குறைபாடாக எடுத்துக் காட்டுகின் றனர். சோஷலிஸத்தில் பல முக்கியமான தீர்மானங்களைத்

திட்ட அதிகாரிகள் செய்கின்றனர். உதாரணமாக, எங்கெந்தப் பொருள்கள் உற்பத்தி செய்யவேண்டும், ஒவ்வொன்றிலும் எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டும், நாட்டின் உற்பத்தி சாதனங்கள் எங்கெந்தத் தொழில்களுக்கு எந்த அளவில் பகிர்ந்தளிக்கவேண்டும். இப்படிப் பல முடிவுகளைத் திட்ட அதிகாரிகள் செய்கிறார்கள். இத் தீர்மானங்களைச் செய்யும் போது பொருள்களின் அடக்க விலை, விற்பனை விலை முதலிய முக்கியமான விஷயங்கள் முதலாளித்வ முறையில் இருப்பது போல சோஷலிஸ முறையில் முக்கிய மில்லாது போய் விடுவதால், திட்ட அதிகாரிகளின் முடிவுகள் யதேச்சாதிகாரிகளின் முடிவு போல ஆகிவிடக் கூடும். எந்த ஒரு முடிவாவது தவறான முடிவாக இருந்தாலும், அதனால் விளையும் தீங்கு சமுகத்தினரை முழுவதும் பாதிக்கும். இத்தகைய ஒரு அபாயம் சோஷலிஸத் திட்ட முறையில் எப்போதும் இருக்கிறது.

தவிரவும். விரிவான முறையில் பொருளாதாரத்துறையில் திட்டமிடுவது அரசியல் ஜனநாயகத்திற்கு முறணானதல்லவா என்ற ஆட்சேபமும் செய்யப்படுகிறது. இவ்விரண்டும் ஒன்றுக் கொன்று ஒவ்வாதவை. விரிவாக நாட்டின் சமூக முன்னேற்றத்திற்குத் திட்டங்கள் வகுக்க வேண்டுமானால், அமோகமான அதிகாரம் திட்ட அதிகாரிகளிடம் குவியத்தான் செய்யும். ஒரு சிறு கும்பல் இவ்வளவு அதிகாரத்தைத் தன்னிடம் தேக்கி வைத்துக்கொள்ளும் நிலைமையில், அவர்கள் போடும் திட்டங்களும் முக்கியமாக தங்களைப் பதவியில் வைத்துக்கொள்ளும் கருத்துடனேயே இருக்கும் என்பதை வலியுறுத்தத் தேவையில்லை.

முதலாளித்துவ முறையில் பண்டங்களை உபயோகிப்பவர்கள் தான் முக்கியம். அவர்கள்தான் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதாரம். தங்களுக்கு எந்தமாதிரிப் பொருள்கள் தேவை, எந்தமாதிரிப் பொருள்கள் தங்கள்

தேவையைப் பூர்த்தி செய்யும் அன்று நிர்ணயம் செய்பவர் களும் அவர்களே. அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்ப வும், ஏகபோக உரிமைகளுக்கேற்பவும், இந்த உரிமை ஓரளவுக்குக்கட்டுப்படுத்தப்படுகிறதென்பது உண்மையே. எனினும் மார்க்கெட்டில் கிடைக்கும் பொருள்கள் பலதரப் பட்டவையாக இருப்பதால் அவற்றிலிருந்து தனக்கு வேண் டியதைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமை அவர்களுக்கு எப்போதும் உண்டு. ஆனால் சோஷலிஸ சமுதாயத்தில் அவர்கள் இவ்வுரிமையை முற்றிலும் இழந்துவிடுகின்றனர். ஏற்கெனவே திட்ட அதிகாரிகளால் வகுக்கப்பட்ட தொழில் உற்பத்திக்குத் தக்கவாறு தங்களுடைய தேவை களை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத் தில் உபயோகிப்பவர்கள் இருக்கின்றனர், இத்தகைய நஷ்டம் உண்மையிலேயே மகத்தான நஷ்டம். தான்செய்யும் செலவிற்குத் தக்க திருப்தி அவர்களுக்கு ஏற்படுவதில்லை. ஆகவே சோஷலிஸம் என்றால் சாதாரண மக்களுக்கு கஷ் டங்கள், தியாகம், வீண்செலவு முதலியவை கூடவே காணப் படும். மேலும், போட்டி என்கிற அம்சமே ஒழிக்கப்பட்டுப் போவதால் ஒரே சீரான விலைவாசிகள்தான் மார்க்கெட்டில் நிலவும். அந்த விலைகளைத்தான் மக்கள் கொடுக்கவேண்டும். அவை அதிகமா, குறைவா, நியாயமா, அநியாயமா என்ற பரிசீலனைக்கு இடமே இல்லை. விலை கொடுக்க இஷ்ட மில்லை என்றால் அந்தப் பொருளை வாங்காமல் இருந்துவிட லாம். இத்தகைய நிர்ப்பந்த நிலைமை சோஷலிஸத்தில் உண்டு.

தவிரவும், தனியாரின் உற்சாகத்திற்கும் தொழில் திற னுக்கும் வாய்ப்பில்லாமல் போய்விடுவதால் சோஷலிஸத் தில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தான் இஷ்டப்பட்ட வேலையைச் செய்யும் உரிமை இல்லாதுபோகிறது. தொழி லாளிகளுக்கெல்லாம் குறிப்பிட்ட வேலைகள் கொடுக்கப் படும். அல்லது குறிப்பிட்ட தொழில் ஸ்தாபனங்களுக்கு

அவர்கள் அனுப்பிவைக்கப் படுவார்கள், இதை மாற்றிக் கொள்ள அவர்களுக்கு உரிமைகிடையாது, திட்ட அதிகாரிகளின் அங்கீகாரம் பெற்ற பின்னரே மாற்றிக்கொள்ள முடியும். மனிதசுதந்திரத் தன்மைக்குச் சின்னமாகவிளங்கும் தன் தொழிலைத் தான் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை சோஷலிஸத்தில் மறுக்கப்படுகிறது, மேலும், சமூக மக்களிடையே வருமானம், செல்வம் இவ்விரண்டிலும் அதிகமான வித்தியாசங்கள் காணப்படாது, இறுதியில் வர்க்கப் பாகுபாடுகளே இல்லாத ஒரே சமுதாயம் நிலவும் என்று சோஷலிஸ்டுகள் பறைசாற்றிக் கொள்ளும் லட்சியம் இன்னமும் ஒரு சோஷலிஸ்டு நாட்டிலும் கைகூடியதாகத் தெரியவில்லை. கம்யூனிஸ நாடான ருஷ்யாவின் அனுபவத்திலிருந்து பார்த்தால் பல்வேறு பகுதியினரிடையே செல்வ வருமான வித்தியாசங்கள் அதிகமாக இருப்பதும், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களிடத்திலும் அரசாங்க சிப்பந்திகளிடத்திலும் அமோகமான அதிகாரம் குவிந்து கிடப்பதும் நன்கு தெரியவருகின்றன.

ஆரம்ப காலத்தில் சோஷலிஸ்டுகள் ஆதரித்து வந்த கருத்துக்கள் இப்போதெல்லாம் மாறிக்கொண்டு வருகின்றன. நாட்டின் உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் தேசீயமயமாக்கப்பட வேண்டும், அல்லது அரசாங்கத்தின் ஆதரவிலேயே இருக்க வேண்டுமென்ற ஆரம்பகாலக் கருத்து சோவியத் ருஷ்யாவில் சென்ற நாற்பதாண்டு அனுபவத்தின் விளைவாக, தற்காலத்தில் அவசியமானது அல்ல, என்றே ஜனநாயக நாடுகளிலுள்ள சோஷலிஸ்டுகள் எண்ணுகின்றனர். இந்த லட்சியம் கூட விரும்பத்தக்க குறிக்கோள் தானா என்னும் விஷயத்திலேயே இக்காலத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது, அரசாங்கத்தின் ஆதிக்கமும் கட்டுப்பாடும் நாட்டின் அதிகாரத் தொழில்கள் என்று கருதப்படும் சில தொழில்களுக்கு மட்டும் பரவியிருந்தால் போதுமானது, அவ்வாறு செய்வதன் மூலம்

சமூக நலனைப் பேணி வளர்க்க முடியும் என்று எண்ணப் படுகிறது.

## கலப்புப் பொருளாதாரம்

தற்காலத்தில் முதிலாளித்வத்திற்கும் சோஷலிஸத்திற்கும் பொதுவாக ஒரு கலப்புப் பொருளாதாரக் கொள்கையைப் பலர் ஆதரிக்கின்றனர். முதலாளித்வமும் சோஷலிஸமும் ஒன்றுக்கொன்று நேர்மாறுனதாகையாலும், இவ்விரண்டிலும் நன்மை தீமைகள் கலந்து காணப்படுவதாலும், இரண்டிலுமுள்ள விரும்பத்தக்க அம்சங்களைமட்டும் கைக்கொள்ளுவதுதான் இக்கலப்புப் பொருளாதாரத்தின் கோட்பாடு. தனியார் தொழில் துறையில் காணும் ஊக்கம், உற்சாகம், தனி மனிதனின் சுதந்திரம் முதலியவற்றுடன் பொது நலனுக்காக மட்டும் அவசியமான தொழில்களில் அரசாங்கம் ஆதிக்கம் செலுத்தும் முறையும் சேர்ந்து நடைமுறையில் பல நாடுகளில் செயல்படுகின்றன. தனியாரின் ஊக்கமும் அரசாங்கக் கட்டுப்பாடும் இணைந்து நாட்டின் பொருளாதாரத்திற்கு வகை செய்யும் நாடுகள் பல இருக்கின்றன. இவற்றிற்கு உதாரணமாக இக்காலத்தில் காணப்படும் அமெரிக்கப் பொருளாதாரத்தைக் கூறலாம், இந்தியாவில் இம்மாதிரி கலப்புப் பொருளாதாரத்தையே மக்கள் விரும்ப முற்பட்டிருக்கின்றனர்.

கலப்புப் பொருளாதாரத்தின் முக்கியமான லட்சணங்கள் என்ன என்பதைக் கவனிக்கலாம், இந்த முறையில் ஒவ்வொருவனுக்கும் தான் எந்தப்பொருளை உற்பத்தி செய்வது, எந்தப் பொருளை உபயோகிப்பது என்பதை நிர்ணயம் செய்துகொள்ளும் உரிமை உண்டு. ஆனல் இந்த உரிமையை அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே செயல்படுத்த முடியும், நாட்டின் நலனுக்கு உகந்தது என்று குறிப்பிட்ட ஒரு நடவடிக்கையோ போக்கோ தொழிலில்

உண்டாக்க வேண்டுமென்று அரசாங்கம் எண்ணினால், அத்தகைய போக்கை அமைப்பதற்கு நாணயக் கட்டுப்பாடு வரிவிகித மாறுபாடுகள், வர்த்தக விதி மாற்றங்கள் மூலம் சர்க்கார் சட்டங்கள் இயற்றுவார்கள். இச்சட்டங்கள் தனியார் தொழிலதிபர்களுக்கு எந்தத் திசையில் அவர்களுடைய ஊக்கமும் திறனும் செயல்பட வேண்டும் என்பதை உணர்த்திவைக்கும். அத்திசையில் அவர்கள் செயலாற்றலாம். இம்முறையில் விலைவாதிகள் அவர்களுடைய தொழில் அபிவிருத்தியின் வேகத்தை முதலாளித்வ முறையிலுள்ளதேபோல் நிர்ணயிக்கும். ஆனால் விலைவாசிகளின் போக்கில் குறிப்பிட்ட மூலப்பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவோ, அல்லது தொழிலாளிகள் ஊதியத்தையும், தொழிலின் லாபத்தையும் கட்டுப்படுத்துவதன் மூலமோ அரசாங்கம் தலையிடும்.

இந்தியாவில் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகிறோம். ஆனால் கலப்புப் பொருளாதாரத்தின் பாணியிலேயே இத்திட்டங்களை அமுல் நடத்துகிறோம். நமது திட்டங்களின் நோக்கங்கள் முக்கியமாக இரண்டு. வாழ்க்கைத் தரம் படிப்படியாக உயர்ந்துகொண்டே போகுமாறு நமது பொருளாதார சூழ்நிலையை அமைத்துக்கொள்ளுவது ஒன்று, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தனது தன்மைக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு பூரணமாக வளர்ந்து வாழ்வதற்குத் தேவையான வாய்ப்புகளும் சேவைகளும் ஏற்படுத்துக் கொள்ளுவது இரண்டாவது. இந்த லட்சியங்களைத் திருப்திகரமாக நிறைவேற்றிவைக்க வேண்டுமானால் அரசாங்கம் முக்கியமான பாகம் வகிக்க வேண்டும் என்று ஆரம்பத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்டது. இதைப்பற்றி முதல் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை, "இதனால் தேசத்திலுள்ள உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் தேசீயமயமாக்கப்பட

வேண்டும். தனியார் தொழில்கள் எல்லாம் ஒழித்துவிட வேண்டும் என்று அர்த்தமல்ல. ஆனால், சர்க்கார் தொழில்கள் சிறுகச்சிறுக விரிவடைந்துகொண்டே செல்லும், தனியார்த்துறைத் தொழில்களும் திட்மிடப்பட்ட பொருளாதார முன்னேற்றத்துக்கு ஏற்றவாறு தங்கள் போக்குகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பது கருத்து" என்று கூறியுள்ளது. இந்தக் கொள்கைகளை அடிப்படை யாகக் கொண்டு இந்திய சர்க்கார் 1948ம் ஆண்டிலும் 1955-ம் ஆண்டிலும் தொழிற் கொள்கை அறிக்கைகள் விடுத்துள்ளார்கள். இக்கொள்கை அறிக்கையில் தனியார்த் துறைத்தொழில்கள் எவை, சர்க்கார்த் தொழில் துறைகள் எவை, என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக, ராணுவ தளவாடங்கள் உற்பத்தி, பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட சாமான்கள், அணுசக்தி உற்பத்தி, ரெயில்வே நிர்வாகம், முதலிய துறைகளில் அரசாங்கத்தின் உரிமையும், கட்டுப்பாடுகளும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆதாரத் தொழில்களான, நிலக்கரி, இரும்பு, எஃகு உற்பத்தி, விமான உற்பத்தி, கப்பல் தளங்கள் முதலிய துறைகளில் தேசீய அபிவிருத்தியை முன்னிட்டு, முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகளில் தனியார்த் துறையின் ஒத்துழைப்பும் கோரப்படுகிறது. இதர தொழில்களின் முழு அபிவிருத்தியை தனியார்த் தொழிலதிபர்களுக்கும் உற்பத்தியாளர்களும் பூரண சுதந்திரத்துடன் அளிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி தொழில் வளர்ச்சியிலும் உற்பத்தியிலும் சர்க்காரும் தனியார்களும் இணைந்து செயல்படுவது தான் கலப்புப்பொருளாதாரத்தின் முக்கிய அம்சம். இதைச் சுருக்கமாக விளக்கவேண்டுமானால், "சர்க்கார் தொகுதிக்கும் தனியார்த் தொகுதிக்குமுள்ள வித்தியாசம் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்வத்தைப் பொறுத்தது.

இதில் ஒரு நிச்சயமான எல்லைக்கோடு கிழிக்க முடியாது. தனியார்த் தொழில்களும் பொது நன்மைக்காகவே செயல் பட வேண்டும். எவ்விதக் கட்டுப்பாடுமில்லாச் சுதந்திரப் பொருளாதாரம் என்று தற்போது நிலவும் சூழ்நிலையில் பேசுவது ஒவ்வாதது. அரசாங்கத்தாரால் உண்டாக்கப் பட்ட சூழ்நிலையில்தான் தனியார்த் தொழில்கள் இயங்க வேண்டும். தனியார்த் தொகுதியும் சர்க்கார்த் தொகுதியும் வெவ்வேறான, ஒன்றுக்கொன்று முறன்பட்ட பகுதிகள் அல்ல, ஒரே பொருளாதாரத்தில் இவ்விரண்டும் ஒரே பொருளாதாரத்தின் இருஅம்சங்கள். இரண்டும் இணைந்தே செயலாற்ற வேண்டும்,'' என்று விளக்கலாம்.

## பொருளாதாரத் திட்டங்கள் வகுத்தல்

ஜனநாயகம் நிலவும் நாட்டில் பொருளாதாரத் திட்டங் களினால் ஏற்படும் நன்மை தீமைகளைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். நன்மை தீமைகளைப் புரிந்து கொள்ள ஆதாரமாக உள்ளப் பிரச்னைகளைப் புரிந்து கொண்டு அவற்றை அநுசரித்துத் திட்டங்களின் நன்மை தீமைகளை அறியவேண்டும். ஒரு நாட்டின் பிரஜை தான் செய்ய விரும்பும் தொழிலிலும், தான் சேமித்து வைக்கும் சொத்திலும் தான் சம்பாதித்தபணத்தைச் செலவுசெய்வதி லும் தன்னுடைய உரிமையை இழக்காமல் எவ்வளவு வரை யில் ஜனநாயக நாட்டில் அரசாங்கம் தனது ஆதிக்கத்தைத் திட்டங்கள் மூலம் விரிவுபடுத்த முடியும் என்பதுதான் பிரச்னை. கட்டுப்பாடுகளும் சுதந்திரமும் ஒன்றுக்கொன்று முரணானவை. ஒன்றை இழக்காமலும் மற்றொன்றுக்கு உட் படாமலும் எவ்வளவு தூரம் செல்லமுடியும்? சோவியத் ருஷியாவில் அமுல்நடத்தப்படும் திட்டங்களைக்கண்டிப்பவர் கள் அங்கே தனிப்பிரஜையின் உரிமைகள் முற்றிலும் பறி போய்விட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்கள். பிர மாண்டமான ஒரு யந்திரத்தின் ஒரு சிறு பாகம் என்ற

நிலைமையில்தான் ஒவ்வொரு ருஷ்யப் பிரஜையும் இருக்கிறன்; அவனுக்குத் தான் செய்யும் தொழிலில் சுதந்திரம் கிடையாது; தனது வருமானத்தில்கூட முழு உரிமை இல்லை என்று எடுத்துக்காட்டப்படுகிறது. நாட்டின் பொருளாதாரம் முழுதும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக் குட்பட்டுப்போனல், அந்த நாடு "டோடலிடேரியன்" **(Totalitarian)** நாடாக மாறிவிடுகிறது. அரசாங்கத்தின் பூரண கட்டுப் பாட்டுக்குட்பட்ட நாட்டில், ஜனநாயகம் என்பது துளியும் இருக்காது.

ஆகவே ஜனநாயக நாட்டில் திட்டங்கள் வகுக்க வேண்டுமானுல் அவை கலப்புப் பொருளாதார ரீதியில்தான் அமையும். அரசாங்கத்தின் ஆதிபத்யம் விஸ்தரிக்கப்பட வேண்டிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய விஸ்தரிப்பு சமூக நலனுக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் அவசியமானது என்பதை நிதர்சனமாக நிரூபிக்கவேண்டும். அதேபோல, ஏற்கனவே இயங்கிக்கொண்டு வந்த ஒரு தொழிலைத் தேசிய மயமாக்கவேண்டுமானுல் தனியார்கள் நடத்தியதைக் காட்டிலும் திறமையுடனும் சிக்கனமாகவும் சர்க்காரால் அதை நடத்த முடியும் என்று தெளிவாக்க வேண்டும்.

கலப்புப் பொருளாதாரத்தில் தனியார்த் தொகுதி, சர்க்கார்த் தொகுதி என்று இரண்டு பிரிவுகளும் ஒரே காலத்தில் செயல்படுவதால், இவ்விரு பிரிவுகளுக்குமிடையே ஒத்துழைப்பு இருத்தல் அவசியம். இதற்கு அரசாங்கம் வகுக்கும் கொள்கைகள் இணக்கமானவையாக இருக்க வேண்டும். சர்க்கார்த் தொகுதிக்குச் சலுகை அளித்துத் தனியார்த் தொகுதிக்குக் கஷ்டங்கள் விளைவிக்கும்படி இருக்கக்கூடாது. இது மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய அம்சம். சேமிப்புக்கும் மூலதனம் சேருவதற்கும் இத்தகைய இணக்கமான கொள்கைகள் அவசியம்.

ஏனெனில் சமுகத்தில் கிடைக்கக்கூடிய சேமிப்புத் தொகைகளை யெல்லாம் சர்க்கார்த் துறைத் தொழில்களுக்காக முதலீடு செய்து விட்டால் தனியார்த் தொகுதிக்கு மூலதனத்துக்குச் சேமிப்பே இல்லாது போய்விடும். வரி முறைகளும் தனியார்த் தொழில்களின் உற்சாகத்தைக் கட்டுப்படுத்தும்படி இருக்கக்கூடாது.

ஜனநாயக நாட்டில் திட்டங்கள் வகுக்கவேண்டுமானால், அவைகளின் லட்சியங்கள் நிச்சயமாகவும், தெளிவாகவும் இருக்கவேண்டும். அந்த லட்சியங்கள் நிறைவேறப் போதிய அளவுக்கு மட்டும் திட்டங்கள் அமைய வேண்டும். திட்டங்களினுல் எங்கெந்தப் பகுதியினர் பாதிக்கப்படுகிருர்களோ அவர்களுடன் முன்னதாகவே கலந்து ஆலோசித்து அவர்களுடைய பூரண ஒத்துழைப்பின்பேரில் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். அதிகாரம் சில இடங்களிலும் சிலரிடத்திலும் தேங்கிப் போகாமலிருக்கும்படிப் பார்த்துக்கொள்ளத்தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளும் அவ்வப்போது எடுத்துக்கொள்ளப்படவேண்டும். பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக அடித்தளங்கள் வரையில் பரவி நிகழவேண்டும். மேல்படிவங்களில் மட்டும் குவிந்துவிடக்கூடாது.

மேலும் சர்க்கார்த் தொகுதித் தொழில்கள் செயலாற்றும் தன்மையைப் பற்றி அவ்வப்போது தணிக்கைகள் இருக்கவேண்டியதும் அவசியம். அப்போதுதான் அவையெல்லாம் திறமையுடனும் சிக்கனமாகவும் நடைபெறுகின்றனவா என்று அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும். சீரிய முறையில் உச்சபட்ச பலனை அளிப்பதற்கு அவ்வப்போது பரிசோதனைகள் நடத்திப் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் திறமையை உயர்த்திக்கொண்டே செல்ல முடியும். இந்தியாவில் இவ்வாறு பரிட்சைகள் நடத்திப் பார்க்க வாய்ப்புகள் பல

இருக்கின்றன. உதாரணமாக சர்க்கார்த் துறைத் தொழில் களில் நான்கு-வெவ்வேருன முறைகளில் நிர்வாகம் நடை பெறுகிறது. சட்டப்படி நியமிக்கப்பட்ட கார்ப்பரேஷ ஞல் நிர்வாகம் நடைபெறுவது தாமோதர் பள்ளத்தாக்குக் கார்ப்பரேஷன்; சர்க்கார் இலாக்காக்கள் மூலமே நேரடி நிர்வாகம் நடப்பது தபால், தந்தி இலாகா; தனிப் போர்டு கள் மூலம் தனி அமைச்சரின் மேற்பார்வையில் நடை பெறும் நிர்வாகம் ரெயில்வே இலாக்கா; தனிக் கம்பெனிகள் அமைக்கப்பட்டு அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட நிர்வாகஸ்தர்களைக்கொண்டு நடத்தப்படும் தொழில்கள் பல இருக்கின்றன. இப்படி வெவ்வேறு நிர்வாக முறைகள் மேற்கொள்ளப்பட்டாலும், நிர்வாகம் நன்முறையில் நடை பெறுகிறதா என்று கவனிப்பதுடன் அதனதன் நடவடிக்கை களுக்கு அரசாங்கத்திற்குப் பொறுப்புடன் யாதாஸ்துகளைத் தருவித்துக்கொள்ளவும், மக்கட் சபைக்கு இவற்றைப்பற்றி யெல்லாம் தெரிந்துகொள்ளவும், வாய்ப்புகள் அளிப்ப தோடு, இவ்வித நிர்ப்பந்தங்களினுல் நிர்வாகத்தில் ஊக்கம் உற்சாகம் குன்ருது தினசரி நடவடிக்கைகள் நடைபெறும் படியும் கவனித்துக்கொள்ளுதல் அவசியம்.

# பிழை திருத்தம்

| அத்தியாயம் | பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | 1 | சர | சா |
| | | 15 | கிடைட் | கிடை_ |
| | 3 | 13 | பன்னிரண்டு | பதிமூன்று |
| | 6 | 17 | லும் | வம் |
| | | 18 | உபகாரணங் | உபகரணங் |
| | | 24 | வுபகாரண | உபகரண |
| | 9 | 12 | என்றும் | என்னும் |
| | | 13 | சத்திரத்தின் | சாத்திரத்தின் |
| 2 | 11 | 12 | நிர்ப்பந்தமும் | நிர்ப்பந்தம் |
| | 16 | 21 | சாதானங்கள் | சாதனங்கள் |
| 4 | 28 | | அத்தியாயம் 3 | அத்தியாயம் 4 |
| 5 | 43 | 12 | அளளில் | அளவில் |
| | 44 | 10 & 11 & 12 | Law Dimini shing Returns | Law of Dimiinshing Returns |
| | 45 | 25 | உபகாரண | உபகரண |
| | 46 | 4 | ஒன்றுகவே | ஒன்றுகவோ |
| | 47 | 25 | ஏகபோ | ஏகபோக |
| | 48 | 16 | வாங்குவார்களோ | வாங்குவார் களோ |
| | | 19 | கிநாக்கியின் | கிராக்கியின் |
| | 49 | 3 | நிகழ்ச்சி | நெகிழ்ச்சி |
| | 50 | 8 | Margnial | Marginal |

| அத்தியாயம் | பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| | 54 | 17 | செலவிக்கு | செய்விக்கு |
| 6 | 58 | 10 | வேண்டுவது | வேண்டியது |
| | | 24 | Medum | Medium |
| | 60 | 14 | கின்றன | கின்றது. |
| | 63 | 20 | 1500 | 1800 |
| | 84 | 18 | மெருமளவில் | பெருமளவில் |
| 8 | 9 | 20 | விரு ½ து | விருந்து |
| 9 | 112 | 18 | டைமுறை | நடைமுறை |
| | 117 | 17 | டிப்பாசிட் | டிபாசிட் |
| 10 | 130 | 26 | Leans | Loans |
| | 137 | 19 | Cleairng | Clearing |
| | 142 | 9 | கிராகி | கிராக்கி |
| 11 | 150 | 15 | Comparaltive | Comparative |
| | | 16 | Law | Law of |
| | 155 | 17 | Vissible | Visible |
| 12 | 179 | 16 | Boils | Bills |

# A LAY MAN'S INTRODUCTION TO ECONOMICS

[Translated Version - Tamil]

பொருளாதார தத்துவத்தைப்பற்றியும் நம் தேசத்தில் அதன் அமைப்பைப் பற்றியும் எளிய நடையில் எல்லோரும் தெரிந்து கொள்ள விரும்பி வெளியிடப் பட்டுள்ளது.

PUBLISHERS

OUR INDIA DIRECTORIES &

PUBLICATIONS PRIVATE LTD

53 WALLAJAH ROAD MADRAS 2

பொதுமக்களும் பொருளாதாரமும் விலை ரூ. 1.95